சங்ககால வரலாற்று ஆய்வுகள்

2

லை சீனி.வேங்கடசாமி

031,1N:9
P06.
227313

சங்க கால
வரலாற்று ஆய்வுகள்

இரண்டாம் தொகுப்பு

ஆசிரியர்
ஆராய்ச்சிப் பேரறிஞர்
மயிலை சீனி.வேங்கடசாமி

பதிப்பாசிரியர்
புலவர் கோ. தேவராசன், எம்.ஏ., பி.எட்.,
செயலாளர், தமிழ் வளர்ச்சிப் பேரவை, சென்னை

வெளியிடுவோர்
எம். வெற்றியரசி
மனை எண்-9, கதவு எண்-26, குறுக்குத் தெரு
சோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம்
சென்னை - 600 088, பேசி : 22530954

நூல் விளக்கக் குறிப்பு

நூலின் பெயர்	:	சங்ககால வரலாற்று ஆய்வுகள் (இரண்டாம் தொகுப்பு)
ஆசிரியர்	:	ஆராய்ச்சிப் பேறறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி
பதிப்பாசிரியர்	:	புலவர் கோ. தேவராசன், எம்.ஏ., பி.எட் செயலாளர், தமிழ் வளர்ச்சிப் பேரவை சென்னை
முகப்பு அட்டை	:	ஓவிய அரசு சுப்பு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு, 2001 இரண்டாம் பதிப்பு, 2006 திருவள்ளுவர் ஆண்டு 2037
தாள்	:	வெள்ளைத் தாள்
நூலின் அளவு	:	கிரவுன் 12.5 X 18 செ.மீ
அச்சு	:	11 புள்ளி
பக்கம்	:	344
படிகள்	:	1000
ஒளியச்சு	:	கேலக்ஸி கம்ப்யூட்டர் சிஸ்டம் சென்னை
அச்சிட்டோர்	:	ரேவதி ஆப்செட் பிரிண்டர்டஸ் சென்னை - 14
பொருள்	:	வரலாறு
விலை	:	ரூ.85/-



மயிலை சீனிவேங்கடசாமி
1900 - 1980

நன்றி உரை

தமிழர் தலைநிமிர்ந்து வாழ்ந்த சங்ககாலம் இன்று நினைத்தாலும் மகிழ்ச்சி அளிக்கிறது. அன்று வாழ்ந்த சேரன் செங்குட்டுவனின் வீரமும் வெற்றியும் என்றும் பெருமை தரும். சங்க காலத்துக் கல்வெட்டுகள் தமிழரின் சிறப்பினை உலகுக்கு அறிவிக்கின்றன.

ஆராய்ச்சி பேரறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் சங்க காலத்தினைத் தம் புலமையினால் படம் பிடித்துக் காட்டும் பாங்கினை இந்நூலின் கட்டுரைகள் மூலம் அறியலாம். எளிமையாக வாழ்ந்த அவர் தமிழர் வரலாற்றுக்கு வலிவும் பொலிவும் சேர்த்துள்ளார்.

சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள் பற்றிய செய்திகள் ஆராய்ச்சி உலகுக்கு ஒளியூட்டக் கூடியன. தமிழறிஞர்களுக்கு மிகழ்ச்சி தருவன. தமிழ் மக்களுக்கு எழுச்சி அளிப்பதாகும். மயிலையார் என்றும் தமிழ் மக்களின் நன்றிக்கு உரியவர் ஆவார். அவர் நூல்களை நாட்டுடைமை ஆக்கிய தமிழக அரசுக்குப் பாராட்டும் நன்றியும் உரியன.

இந்நூலுக்குப் பதிப்பாசிரியராக விளங்கும் மாண்புநிறை புலவர் தேவராசனார் அவர்களின் தமிழ்த்தொண்டு மிகப்பெரியது. தமிழர் தலை வணங்கும் கடமை உடையவராவார். அப்பெருமகனார்க்கு நன்றி. இந்நூலுக்கு மெய்ப்புத்திருத்திய சான்றோர் புலவர் சி. தனபால், எம்.ஏ., பி.டி. அவர்களுக்கும் நன்றி. தமிழ் மக்கள் இம்முயற்சியை ஆதரிக்க வேண்டுகிறேன்.

பதிப்பாளர்

பதிப்புரை

வணக்கத்திற்குரிய அறிஞர், மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் இயற்றிய ''சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்'' என்ற நூலும் ''சேரன் செங்குட்டுவன்'' என்ற நூலும் சேர்ந்து சங்க கால வரலாற்று ஆய்வுகள் முதல் தொகுப்பாக வெளி வந்தது. அந்த வரிசையில் இது இரண்டாவது தொகுப்பு. இத்தொகுப்பில் ''சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள்'' என்ற நூலும் ''சாசனச் செய்யுள் மஞ்சரி'' என்ற நூலும் இணைந்துள்ளன.

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலையார் எழுதிய ''சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள்'' எனும் நூல் தமிழ் மொழிக்குக் கிடைத்த புதிய வரவாகும். மயிலையாருடைய மறைவுக்குப் பின் வெளிவந்த நூல் இது.

வரிவடிவ வரலாறு:-

தொடக்க காலத்தில் தமிழர்கள் பழந்தமிழ் எழுத்தைப் பயன்படுத்தி வந்தனர். பௌத்தரும், சமணரும் தமிழகத்தில் நுழைந்தபோது அவர்கள் மூலமாகப் பிராமி எழுத்தும் தமிழகத்தில் நுழைந்தது. கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பிராமி எழுத்தே வழங்கி வந்தது. பின்னர் பிராமி எழுத்தின் திரிபடைந்த உருவமாக வட்டெழுத்துத் தோன்றியது. இவ்வட்டெழுத்து கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் வழங்கிற்று. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழர்கள் வட்டெழுத்து முறையை மாற்றி இக்காலத்துத் தமிழ் எழுத்தைப் புகுத்தினார்கள். அன்று முதல் தமிழ்நாடு முழுவதும் சோழர்கள் புகுத்திய எழுத்து முறையே வழங்கி வருகிறது.

இடையில் பல்லவர் காலத்தில் பௌத்தரும், சமணரும் பிராமி எழுத்திலிருந்து கிரந்த எழுத்தை உருவாக்கினார்கள். கிரந்த எழுத்தைப் பிராகிருத நூல்கள் எழுதவும் சமஸ்கிருத நூல்களை எழுதவும் அவர்கள் பயன்படுத்தினர். தொல்காப்பியம் முதலான பழையஇலக்கண இலக்கிய நூல்கள் பழைய தமிழ் எழுத்தினால் எழுதப் பட்டவையாகும். தமிழ்நாட்டில் சங்கப் புலவர் பயின்ற பழந்தமிழ் எழுத்து வேறாகவும், பௌத்த சமணர் எழுதிய பிராமி எழுத்து வேறாகவும் இருந்தன.

பழந்தமிழ் எழுத்துச் சுவடிகளும், பிராமி எழுத்துச் சுவடிகளும் மறைந்து போயின. ஆனால் பிராமி எழுத்தின் வரிவடிவமும், வட்டெழுத்தின் வரிவடிவமும் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது.

கி.பி. 4ஆம் நூற்றாண்டில் மறைந்து போன பிராமி எழுத்து கி.பி. 20ஆம் நூற்றாண்டில் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

பழங்காலத்து பௌத்த சமணத் துறவிகள் மலைக் குகைகளில் தங்கியிருந்தனர். அவர்கள் மீது பற்றுக் கொண்டவர்கள் அவர்களுக்காகக் கற்றரைகளைச் சமப்படுத்திச் செம்மையான கற்படுக்கைகளை அமைத்துக் கொடுத்தார்கள். அவ்வாறு அமைத்துக் கொடுத்தவர்கள் தங்கள் பெயர் களைக் கற்படுக்கைகளிலும், குகை வாயில்களிலும் செதுக்கி வைத்தனர். அவ்வாறு செதுக்கப்பட்ட எழுத்துக்கள் பிராமி எழுத்துக்கள் ஆகும்.

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலையார் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் கள ஆய்வு செய்திருக்கிறார். ஏறுதற்கு அரிய மலைக் குகைகளுக்கெல்லாம் ஏறிச் சென்று ஆய்வு செய்திருக்கிறார். 18 ஊர்களில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகளைக் கொண்டு ''சங்ககாலத்துப் பிராமிக் கல்வெட்டுகள்'' எனும் நூலை உருவாக்கியுள்ளார். அனைத்துக் கல்வெட்டுகளையும் மூல வரிவடி வத்துடன் கொடுத்து, அதன் உண்மைப் பொருளையும் விளக்கியுள்ளார்.

பிராமிக் கல்வெட்டுகளைப் படித்துப் பொருள் காண்பதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. படித்துப் பொருள் காண அறிஞர் பலர் முயன்றுள்ளனர். குறிப்பிடத்தக்கவர்கள் திரு. கிருட்டிண சாத்திரியார், கே.வி. சுப்பிரமணிய ஐயர், சி. நாரா்யண ராவ், ஐராவதம் மகாதேவன், டி.வி. மகாலிங்கம் போன்றோர் ஆவர். பிராமிக் கல்வெட்டு எழுத்துக்களைப் படிப்பதற்கு வெறும் சாசன அறிவு மட்டும் போதாது. கடைச் சங்க கால இலக்கிய அறிவும், அக்கால நாகரிக, பண்பாட்டு அறிவும் மிகவும் தேவை. இத்தகைய அறிவு நிரம்பப் பெற்றவர் மயிலையார் என்பதால் கல்வெட்டு களின் உண்மைப் பொருளைத் துல்லியமாக அவரால் காணமுடிந்தது. இந்நூலில் மற்ற கல்வெட்டு அறிஞர்கள் கூறிய பொருள்களில் உள்ள குறைகளையும், நிறைவுகளையும், எடுத்துக்காட்டியுள்ளார். தமது முடிபான கருத்தையும் மிக நுட்பமாக வெளிப்படுத்தியிருக்கிறார். மயிலையாருடைய கடுமையான உழைப்பினை இந்நூலில் காணலாம்.

இக்கல்வெட்டுகளில் காணப்படுகிற பல சொற்கள் சங்க கால இலக்கியங்களில் பயின்று வருவதைத் தக்க எடுத்துக் காட்டுகள் தந்து விளக்கியுள்ளார். அவரது சங்க இலக்கியப் பயிற்சி ஆழமானது. விரிவானது. வியக்கத்தக்கது.

அரிட்டாபட்டி குகைக் கோயில் கல்வெட்டு தனிச்சிறப்பு வாய்ந்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இக்கல்வெட்டில் பாண்டியன் நெடுஞ்செழியன்

பெயர் குறிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பாண்டியன் பெயரைக் கூறுகிற மிகப் பழைய கல்வெட்டு இதுவேயென மயிலையார் குறிப்பிடுகிறார்.

மயிலையாருடைய மறைவுக்குப் பின் வெளிவந்த நூல் இது. இந்நூலில் ''அதிகமான நெடுமான் அஞ்சியின் கல்வெட்டு'' பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டுக் கட்டுரை டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் தின மணி 12.10.81 இதழில் எழுதிய கட்டுரையினின்று தொகுக்கப் பெற்றது. இக்கட்டுரை மயிலையார் எழுதியது அன்று. டாக்டர் இரா. நாகசாமி எழுதிய இக் கட்டுரையில் அசோகன் கூறும் சத்ய புத்திரர் என்போர் அதியமான்களே என்று குறிப்பிடுகிறார். இது நாகசாமி அவர்களின் கருத்து. மயிலையாருடைய கருத்து வேறு. சங்க காலத்தில் ''வாய்மொழிக் கோசர்'' வாழ்ந்த துளு நாடே அசோகன் குறிப்பிடும் சத்திய புத்திரர் நாடு என்பது மயிலையாருடைய கருத்தாகும். மேலும் விளக்கம் வேண்டுவோர் மயிலையார் எழுதிய ''துளு நாட்டு வரலாறு என்னும் நூலில் 84 ஆம் பக்கத்தில் காண்க.

சாசனச் செய்யுள் மஞ்சரி

மயிலையார் தமதுநூல் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''பழைய சாசன வெளியீடுகளைப் படித்துக் கொண்டிருந்தபோது அவற்றின் இடையிடையே சில சாசனங்கள் செய்யுளாக அமைந்திருப்பதைக் கண்டேன். கண்டபோது அவர் செய்யுட்களைத் தொகுத்து வைப்பது நலம் என்று தோன்றியது'' வெவ்வேறு ஊர்களிலே, வெவ்வேறு காலத்தில் சாசனங்களில் எழுதப்பட்ட செய்யுள்களைத் தொகுத்து வெளியிட்டால் அது தமிழிலக்கிய 'வரலாற்றினை ஆராய்வதற்கும். அக்காலத்து அரசியல் சமூக இயல் வரலாறுகளைத் தெரிந்து கொள்வதற்கும் பெரிதும் துணையாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகவே சாசனங்களில் கூறப்படும் செய்யுள்களைத் தொகுத்துச் சாசனச் செய்யுள் மஞ்சரி என்று பெயரிட்டு அமைத்தேன்'' என்று குறிப்பிடுகின்றார்.

மறைந்து போன தமிழ் நூல்கள் என்று மயிலையார் எழுதிய நூல் மிகவும் அருமைப்பாடு உடையது. அந்நூலில் மறைந்துபோன தமிழ் நூல்களில் மறைந்தன போக எஞ்சியிருந்த செய்யுட் பகுதிகளையெல்லாம் மயிலையார் அரும்பாடு பட்டுத் தொகுத்துத் தந்துள்ளார். அது போன்ற ஒரு முயற்சிதான் இந்நூலிலும் காணப்படுகிறது. சாசனங்களில் காணப்பட்ட செய்யுட் பகுதிகளை அரசர்களின் மெய்கீர்த்தி தவிர ஏனைய சாசனச்

செய்யுட்களைத் தொகுத்துத் தந்துள்ளார். இரு நூல்களுமே 1959ஆம் ஆண்டு வெளிவந்தவை என்பது குறிப்பிடத் தகுந்தது.

மயிலையார் சாசனச் செய்யுட்களைப் படிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளையும், துன்பங்களையும் நூலில் விளக்கமாகக் குறிப்பிடுகிறார் அதனை நூல் முன்னுரையில் காண்க. அனைத்துத் துன்பங்களையும், தாங்கிக் கொண்டு சாசனச் செய்யுள் மஞ்சரி என்னும் நூலை மயிலையார் தமிழகத்துக்கு வழங்கியிருக்கிறார்.

சாசனத்தில் உள்ள செய்யுட்களை அடி பிரிந்து அமைத்திருக்கிறார். தக்கவாறு சொற்களை ஆராய்ந்து எளிமைப்படுத்தியிருக்கிறார். முள் நீக்கியபலாச்சுளையினை நமக்கு வழங்கியிருக்கிறார். சாசனச் செய்யுட்சளைத் தருவதோடு அமையாமல் ஒவ்வொரு செய்யுளுக்கும் விளக்கமும் குறிப்பும் தந்துள்ளார். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போன்று சில சாசனச் செய்யுட்களைக் காண்போம்.

தில்லை நடராசர் கோயிலில் உள்ள ஒரு சாசனச் செய்யுள், இராசராச சோழன் மகள் குந்தவையார், தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்த செய்தியினையும், அக்கோயிலுக்கு அவர் வழங்கிய தானங்களையும் அழகாகக் குறிப்பிடுகிறது.

திருச்சிராப்பள்ளி மலைமேல் மகேந்திரவர்மன் அமைத்த குகைக் கோயிலின் சுவரில் மிக நீண்ட சாசனச் செய்யுள் காணப்படுகிறது. இச் செய்யுட்கள் சிராமலைச் சிவபெருமான் மீது பாடப்பட்டவை. அவை அருமையான அந்தாதிச் செய்யுட்கள் ஆகும். 104 அருமையான கலித்துறைப் பாடல்கள் கொண்டவை. புலவர் நாராயணன் என்பவரால் பாடப்பட்டவை. இவர் கி.பி. 9 அல்லது 10 ஆம் நூற்றாடில் வாழ்ந்தவர். இக்கலித்துறைப் பாடல்கள் தனி நூலாக வெளியிடத் தகுந்தவையாகும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே 12 கல் தொலைவில் உள்ள திருவெள்ளறைக் கிராமத்தில் காணப்படும் சாசனச் செய்யுள் நம் நெஞ்சை நெகிழச் செய்கிறது.

மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் மேல் படையெடுத்துச் சென்று, சோழ அரசரின் கட்டடங்களையெல்லாம் தகர்த்து அழித்தான்.

பட்டினப்பாலை என்னும் சங்கச் செய்யுளைப் பாடியவர் உருத்திரங்கண்ணார் என்னும் புலவர், இவர் கரிகாற் சோழன் மீது இந்நூலைப் பாடினார். இவ்வாறு பாடியதன் நினைவுக் குறியாகச் சோழ நாட்டில் பதினாறு

கால் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. மற்றக் கட்டடங்களையெல்லாம் அழித்த பாண்டியன் பதினாறு கால் மண்டபத்தை மட்டும் அழிக்காமல் விட்டு வைத்தான் என்று இச்செய்யுள் கூறுகிறது.

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி, விசுவாத சுவாமி கோவிலின் முன்புறம் இடிந்துள்ள கோபுரச் சுவரில் 13 சாசனச் செய்யுள்கள் காணப்படுகின்றன. அரிகேசரி பராக்கிரம பாண்டியன் இக்கோயிலைக் கட்டியதையும் பிறகு இக்கோயிலின் கோபுரத்தைக் கட்டத் தொடங்கியதையும் அவனுடைய சிறப்புக்களையும் இச்செய்யுள்கள் கூறுகின்றன. அவை பின்வருமாறு:

இக்கோயிலை மேலும் விரிவு செய்பவர் எவராயினும் அவர்தம் பாதங்களில் வீழ்ந்து பணிவேன். அவர்தம் பாதங்களை என் தலைமீது தரித்துக் கொள்வேன். அவர்களுக்கு எப்பொழுதும் ஏவல் செய்து பணிவேன் என்று பராக்கிரம பாண்டியன் என்னும் அரசன் கூறுவதாக அமைந்த செய்யுள்கள் கல்மனத்தையும் உருக வைக்க வல்லன. இவை போன்று வரலாற்றுச் சிறப்புடைய சாசனச் செய்யுட்களை எல்லாம் இந்நூலில் விரிவாகக் காணலாம். மயிலையாருடைய பேருழைப்பை எண்ணி எண்ணிப் பெருமிதம் கொள்ளலாம்.

இத்தொகுதியில் உள்ள வரலாற்று நூல்கள் மயிலையார் தமிழுக்குத் தந்த அரிய வரலாற்றுக் கருவூலங்கள் ஆகும். அரிய புதையல்களும் ஆகும். அந்த அரும் புதையல்களை இன்று தமிழ் மக்களுக்கு வழங்க முயற்சி செய்தவர் எனது அரிய நண்பர், முத்தமிழ்க் கவிஞர். முனைவர் ஆலந்தூர் **கோ. மோகனரங்கன்** ஆவார். அவரது தமிழ்த்தொண்டு வெல்க என வாழ்த்துகிறேன். இந்நூலை வெளியிடும் அவர் தம் திருமகளர்ர் வெற்றி யரசிக்கும் என் வாழ்த்துக்கள்.

அன்பன்
கோ. தேவராசன்

ஆராய்ச்சிப் பேரறிஞர்

மயிலை. சீனி வேங்கடசாமி அவர்களுக்குப்

பாவேந்தர் பாரதிதாசன் வாழ்த்து

தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்கெட லாற்றா அண்ணல்
வேங்கட சாமி என்பேன்!
விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டோன்!
வீங்கிட மாட்டான்! கல்வி
விளம்பரம் விழைதல் இல்லான்!

தமிழுக்குத் தொண்டு செய்வோர்
தலைச்சங்க முதலாய் இன்றும்
தமிழுக்குத் தொண்டர் யார்க்கும்
தலைத்தொண்டன்; அடிமை அல்லன்;
குமிழ்பகுத் தறிவியக்கக்
கொள்கையில் அசைக் கொணாத
இமயமும் தோற்கும் அண்ணல்!
ஈடிலாத் திறமை ஆற்றல்!

ஒன்றினும் திரியா துள்ளம்
ஒண்டமிழ்க் குழைப்ப தொன்றே
நன்றினும் நன்று என்று
துறவினை நயந்த மேலோன்.
நன்றிகெட் டதிகாரத்தை

நாடும் எவ்வரசும் அன்னார்
குன்றினும் மிகுந்த சீர்த்தி
கொண்டுயர் வளித்தார் இல்லை.

தமிழையே வணிக மாக்கித்
தன்வீடும் மக்கள் சுற்றம்
தமிழிலே பிழைப்ப தற்கும்
தலைமுறை தலைமுறைக்குத்
தமிழ்முத லாக்கிக் கொண்ட
பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்.!

அஞ்சுதல் அறியா நெஞ்சன்
அகல்வர லாறனைத்தும்
மிஞ்சுதல் இன்றிக் கற்றோன்.
மேம்படும் நூலாராய்ச்சி
கெஞ்சிடும் தனைத்துலக்க
கேண்மையோ டுயர்வு செய்வான்.
எஞ்சுவ துமக்கொன்றுண்டோ
இவனைநீர் மறந்து விட்டால்?

-தமிழ்நிலம் (14-10-52)

ஆராய்ச்சிப் பேரறிஞர்
மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் வாழ்வும் தொண்டும்.

-புலவர். கோ. தேவராசன், எம்.ஏ.,பிஎட்.,

தோற்றுவாய்:-

தனித்தமிழ்த் தந்தை என்றால் மறைமலை அடிகளாரைத்தான் குறிக்கும். தமிழ்த் தென்றல் என்றால் திரு.வி.க அவர்களைத்தான் நினைவூட்டும். மொழி ஞாயிறு என்றால் பாவாணர்தான். அதுபோல் ஆராய்ச்சிப் பேரறிஞர் என்றால் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களைத்தான் குறிக்கும். அவர்தான் ஆய்வுலகின் முன்னோடி. ஆய்வுக்கு இலக்கணம் வகுத்த அறிஞர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வுப் பணியினைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர்.

குடும்பம்:-

சீனி வேங்கடசாமி அவர்கள் ஒரு நல்ல தமிழ்க் குடும்பத்தில் பிறந்தவர். தந்தையார் சீனிவாச நாயகர். பரம்பரை சித்த வைத்தியர். தமிழ்ப் புலமை மிக்கவர். மயிலாப்பூரில் காரனீசுவரர் கோவில் தெருவில் புகழுடன் வாழ்ந்து வந்தார். அவரது இல்லத்தில் சிறந்த நூலகம் ஒன்று இருந்தது. அதில் ஏராளமான ஓலைச் சுவடிகளும், சித்த மருத்துவ நூல்களும் தமிழிலக்கிய நூல்களும் இருந்தன.

சீனிவாச நாயகருக்கு மூன்று ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் பிறந்தனர். முதல் மகன் முத்துசாமி என்பவர். இளமையிலேயே இயற்கை எய்தினார். இரண்டாம் மகன் கோவிந்தராசன். பெரும் புலவராய்த் திகழ்ந்தார். மூன்றாம் மகன்தான் ஆய்வுலகம் போற்றும் மயிலை சீனி. வேங்கடசாமி. இவர் 16.12.1900 இல் பிறந்தார்.

சீனி கோவிந்தராசனாரும், தமிழ்க்கடல் கா. நமச்சிவாய முதலியாரும், ஒருசாலை மாணவர்கள். இருவரும் மகாவித்துவான். மயிலை சண்முகம்

பிள்ளையிடம் மரபு வழி தமிழ் கற்றவர்கள். சீனி. கோவிந்தராசனார் அக்காலத்தில் பெரும் புலவர் என மதிக்கப்பட்டார். அவர் 1920 இல் திருக்குறள் காமத்துப்பாலை நாடகமாக எழுதிப் புகழ் பெற்றார். திரு மயிலை நான் மணி மாலை எனும் சீரிய சிற்றிலக்கியத்தையும் படைத்தவர்.

மயிலை சீனி. வேங்கடசாமி தமையனாரின் மேற்பார்வையில் உயர் நெறிகளோடு வளர்ந்தார். அவரிடம் முறையாகத் தமிழ்க் கல்வி பயின்றார். பதினாறு அகவை நிரம்பிய அளவிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். மயிலாப்பூரில் உள்ள புனித சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் பயின்று பள்ளி இறுதி வகுப்பில் தேர்ந்தார். பின்னர் ஓவியக் கல்லூரியில் சேர்ந்து ஓராண்டு பயின்றார். ஓவியப் பயிற்சியால் அவர் இல்லம் ஒரு கலைக்கூடமாய்த் திகழ்ந்தது.

அகவை இருபத்தி மூன்றில் சீனியின் குடும்பத்தில் புயல் வீசத் தொடங்கியது. தந்தையும், தமையனாரும் அடுத்தடுத்து இயற்கை எய்தினர். குடும்பச் சுமை முழுவதும் அவர் மீது விழுந்தது. தமக்கையாரைக் காப்பாற்றும் பொறுப்பும், தமக்கையாரின் இரு பேத்திகளை வளர்த்துக் காப்பாற்றும் பொறுப்பும் அவருக்கு ஏற்பட்டது.

தொழில்:-

எனவே மோட்டார் உதிரிப்பாகம் விற்கும் கடையொன்றில் எழுத்தராக வேலைக்குச் சென்றார். நிறைய படிக்கவேண்டும், எழுத வேண்டும் என்ற வேட்கை சீனிக்கு இருந்தது. அவர் செய்து வந்த வேலை அதற்கு ஒத்து வரவில்லை. எனவே வேலையை விடுத்தார்.

தமிழகத்தில் நீதிக்கட்சியினர் ஆட்சி புரிந்த காலம் அது. அவர்கள் நடத்தி வந்த திராவிடன் இதழில் 1925இல் ஆசிரியர் குழுவில் ஒருவராய்ச் சேர்ந்து பணியாற்றினார். பத்திரிகைத் துறையில் பல புதிய அனுபவங்களைப் பெற்றார். எந்தக் கருத்தையும் எளிமையாகவும், தெளிவாகவும், சுவையாக வும் வெளியிடும் திறன் அவருக்கு ஏற்பட்டது.

நாளடைவில் இதழ்ப் பணியிலும் அருக்கு மனநிறைவு ஏற்படவில்லை. தமிழ் ஆய்வுப் பணியில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்ற வேட்கையே மிகுதியாயிற்று. அதிக அளவில் ஓய்வு கிடைக்கக் கூடிய ஆசிரியர் பணியை அவர் மனம் நாடியது. ஆதலால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயின்று ஆசிரியரானார். தமது இல்லம் இருந்த தெருவில் அமைந்திருந்த நகராண்மைக் கழக இடைநிலைப் பள்ளியொன்றில்

ஆசிரியராக அமர்ந்தார். இறுதிவரை இடைநிலை ஆசிரியராகவே பணியாற்றி ஓய்வு பெற்றார்.

தமிழ்த்தேனீ:-

மயிலை சீனி ஒரு தமிழ்த் தேனீ. அறிவின் வாயில்களை நோக்கி அவரது கால்கள் எப்போதும் நடந்த வண்ணம் இருந்தன.

சென்னைப் பல்கலைக் கழக நூலகமும், கன்னிமரா நூலகமும், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி ஏட்டு நூலகமும் அவரது அறிவை விரிவு செய்தன. அகண்டமாக்கின. அல்லும், பகலும் நூற்கடலுள் மூழ்கி அரிய முத்துக்களைக் கொணர்ந்தார்.

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதர் ஏட்டுச் சுவடிகளைத் தேடும் பணியில் ஊர் ஊராகக் கால் கடுக்க நடந்து சென்றார். அவர் போன்று மயிலையாரும் ஊர்தோறும் சென்று கல்வெட்டு ஆய்வினைச் செய்தார். கல்வெட்டுகளைத் துல்லியமாகப் படித்துப் பொருள் உணர்ந்தார். பழைய ஏட்டுச் சுவடிகளைத் தெளிவாகப் படித்தறிந்தார். தொன்மையான சாசனங்களை எல்லாம் தேடித் தேடிச் சேகரித்தார். அவைகளில் கூறப்படும் நுட்பமான வரலாற்றுச் செய்திகளை ஐயமின்றி அறிந்தார்.

கோவில்கள், கோபுரங்கள், கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள், சிலைகள் முதலியவற்றைக் கண்டு மகிழ்வதில் பெரு விருப்பங்கொண்டார் மயிலையார். ஒரு கோயிலைப் பார்த்தவுடன் அதைக் கட்டிய மன்னன் யார்? எந்தக் காலத்தில் அது கட்டப்பட்டது? அக்கோயில் எவ்வகையான அமைப்பை உடையது? அக்கோயில் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் எவை? என்பன போன்ற விவரங்களைத் துல்லியமாகக் கூறக்கூடியவர். கோயில் கற்கள் ஒவ்வொன்றும் அவருக்கு ஒவ்வொரு கதையைக் கூறியது. கல்லில் வடிக்கப்பட்ட சிற்பங்கள் அவரிடம் காவியம் பாடியது.

மயிலையார் ஒரு நுண்கலை வாணர். தமிழர் வளர்த்த கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நாடகக்கலை அனைத்தையும் மிக நுட்பமாக ஆய்வு செய்தவர். நம் மூதாதையர் வளர்த்த அழகுக் கலைகள் அழிந்து கொண்டும், அழிக்கப்பட்டுக் கொண்டும் வருவதை அறிந்து கண்ணீர் வடித்தார்.

தமிழ்நாட்டில் நிலவிய சமயங்களை எல்லாம் வெகு நுட்பமாக ஆய்வு செய்தார். தமிழ் மொழியின் வரலாறும், தமிழ் இலக்கிய வரலாறும் சமய

வரலாற்றைச் சார்ந்தே உள்ளதால் விருப்பு வெறுப்பின்றி ஆய்வு செய்தார். அறிவுக் கண்கொண்டு ஆய்வு செய்தார்.

தமிழ் எழுத்தியல் வளர்ச்சியை நன்கு அறிந்தவர் மயிலையார். தமிழுடன் தொடர்புடைய கோலெழுத்து, கிரந்த எழுத்து, பல்லவர் எழுத்து, பிராமி எழுத்து எனப் பல்வகையான எழுத்து முறை களையும் நன்கு அறிந்தவர். அவர் ஒரு பன்மொழி அறிஞருங்கூட. தமிழ், வடமொழி, ஆங்கிலம், திராவிட மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்.

எந்தப் பேராசிரியரின் துணையும் இல்லாமல் எந்தப் பல்கலைக் கழகத்தின் அரவணைப்பும் இல்லாமல் ஆய்வின் பொருட்டு மயிலையார் சென்ற இடங்கள் பல. ஆய்ந்த கல்வெட்டுகள், செப்பேடுகள் மிகப் பல. கண்ட அருங்காட்சியகங்களும் மிகப் பல.

கடுமையான உழைப்பாலும், ஊக்கத்தாலும், வாழ்நாள் முழுவதும் பல்வேறு துறைகளில் தமது அறிவெல்லைகளை விரித்துக் கொண்டே சென்றார். அறிவின் வாயில்களைத் தேடித் தேடிச் செல்லும் தேனீயாக விளங்கியவர் மயிலை சீனி.

பல்கலை வாணர்:-

சுருங்கச் சொன்னால் மயிலையார் ஒரு பல்கலை வாணர். இலக்கியக் கடல், வரலாற்றறிஞர், மொழிநூற் புலவர், சமயநூல் வித்தகர், நுண்கலை வாணர், வரிவடிவ வரலாற்று வல்லுநர், சொல்லாய்வுச் செம்மல், கல்வெட்டு, சாசனம், தொல்லியல் துறைகளில் தனி முத்திரை பதித்தவர். பன்மொழிப் புலவர், மானிடவியல், சமூகவியல் அறிஞர் எனப் பல்வேறு பரிமாணங் களின் பெட்டகமாகத் திகழ்ந்தார்.

பாவேந்தர் பாராட்டு:-

மயிலையார் தமிழ் மொழியில் தொடாத ஆய்வுத்துறை என்று எதுவும் இல்லை. தொட்டுத் துலக்காத பகுதி என்று எதுவும் இல்லை. அவர் இடைநிலைப் பள்ளி ஆசிரியர் என்றாலும், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தொடாத பகுதிகளை, தொடுவதற்கு அஞ்சும் பகுதிகளை எல்லாம் தேடித் தேடி எடுத்துத் துலக்கினார்.

''அகல் வரலாறு அனைத்தும்
மிஞ்சுதல் இன்றி கற்றோன்
மேம்படும் நூலாராய்ச்சி
கெஞ்சிடும் தனைத் துலக்க
கேண்மையோடு உயர்வு செய்வான்''

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் மயிலையாருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

தொடர்பு:-

மயிலையார் பரந்துபட்ட கல்வியறிவோடு விரிந்துபட்ட அறிஞர் பெருமக்களின் தொடர்புகளையும் பெற்றிருந்தார்.

மயிலையார் வாழ்க்கையில் மிகப் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியவர் கிறித்துவக் கல்லூரியில் பேராசிரியராக விளங்கிய ச.த. சற்குணர் என்பவர் ஆவர். அவர் தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய மூன்று துறைகளிலும் பேரறிஞராய் விளங்கியவர். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மொ.சு. துரையரங்கனார், அ.கி. பரந்தாமனார் போன்ற அறிஞர்கள் சற்குணரிடம் தமிழ் பயின்றவர்கள். மயிலையாரும் சற்குணரிடமே ஆங்கிலமும், தமிழும் பயின்றார். கிறித்துவ சமய இலக்கியங்கள் குறித்தும், வாழ்க்கை நெறிமுறைகள் பற்றியும் அறிந்தார். அஞ்சாமை என்னும் அருங்குணத்தையும் அவரிடமிருந்து பெற்றதாக மயிலையாரே ஒரு பேட்டியில் கூறியுள்ளார். சற்குணரிடம் கொண்ட தொடர்பு மயிலையார் வாழ்க்கையில் ஒளிவிளக்கை ஏற்றிவைத்தது.

தொடக்கத்தில் மயிலையார் நீதிக் கட்சியினர் நடத்திய திராவிடன் இதழில் துணையாசிரியராய்ப் பணிபுரிந்தார். பின்னர் தந்தை பெரியாரின் குடியரசு இதழில் கட்டுரைகள் எழுதினார். அதன் விளைவாகப் பெரியாரின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. மனத்திற்குச் சரி என்று பட்டதைத் துணிந்து கூறவேண்டும் என்ற உணர்வு தந்தை பெரியாரிடமிருந்து தாம் பெற்றதாக மயிலையாரே ஒரு பேட்டியில் கூறியுள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரிடமும், குத்தூசி குருசாமியிடமும் மயிலையார் நெருங்கிப் பழகினார். அதன் விளைவாகச் சுயமரியாதைச் சுடரொளியாய் திகழ்ந்தார்.

மறைமலையடிகளார், திரு.வி.க., நாவலர் பாரதியார், கா.சு. பிள்ளை போன்றவர்களுடன் அடிக்கடி உறவு கொண்டு அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்றார்.

சுவாமி விபுலானந்தரின் தொடர்பு மயிலையாருக்குக் கிடைத்தது. சுவாமிகள் மயிலாப்பூர் இராமகிருட்டிணா மடத்திற்கு வரும்பொழுதெல்லாம், இருவரும் சந்தித்து உரையாடி மகிழ்வர். சிலப்பதிகாரம், தமிழிசை, நடனம், நாடகம் குறித்துப் பல செய்திகளை மயிலையார் சுவாமிகள் வாயிலாக அறிந்து பயன் பெற்றார். தமிழறிஞர்

தெ.பொ.மீ அவர்களிடமும் மயிலையார் தமிழிலக் கியங்களைக் கற்றார். தெ.பொ.மீ அவர்கள் சிந்தாதிரிப்பேட்டையில் நடத்தி வந்த வேதாந்த சங்கத்தில் அவ்வப்போது கருத்தரங்குகள் நடைபெறுவது வழக்கம். ஓர் அமயம் ''சமயமும் தமிழும்'' என்ற பொருளில் ஆறு பொழிவுகள் நடைபெற்றன. மயிலையார் அவைகளைக் கேட்டுப் பயன்பெற்றார். அதன் விளைவாக் கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும் என மூன்று அரிய நூல்களை எழுதினார்.

1937இல் நடந்த இந்தி எதிர்ப்பின்போது முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களுடன் ஒத்துழைத்துத் தமிழ் காத்தவர் மயிலை சீனி.

வரலாறு, கல்வெட்டு, சாசனத் துறைகளில் மயிலையாருடைய உற்ற நண்பர்களாகத் திரு. சதாசிவப் பண்டாரத்தார், கே.கே. பிள்ளை, மா. இராசமாணிக்கனார் போன்றோர் விளங்கினார்.

சமணப் பேரறிஞர்கள் ஜீவபந்து ஸ்ரீபால், அ. சக்கரவர்த்தி நயனார் போன்றோருடன் தொடர்பு கொண்டு சமண சமய நுட்பங்களை எல்லாம் அறிந்தார். அவர்களுடன் பலமுறை சைன சின்னங்கள் உள்ள ஊர்களுக்குச் சென்று கள ஆய்வு செய்தார்.

சென்னை மகாபோதி சங்கத்தின் தலைவர் நந்தீஸ்வர தேரோ, இலங்கை பௌத்த மதத் துறவி தருமரத்தின தேரோ போன்றோர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டு பௌத்த மதத் தத்துவங்களை எல்லாம் நன்கு அறிந்தார்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவர் கா. சுப்பையா பிள்ளை, கா. அப்பாத்துரையார், அ. சிதம்பரநாதன், மீ.ப. சோமு, அழ. வள்ளியப்பா, பொருளியல் அறிஞர் பா. நடராசன் போன்றோர் மயிலையாரின் அருமை பெருமைகளை எல்லாம் உணர்ந்து போற்றினர். அவருக்கு உற்ற தோழராக விளங்கினர்.

செக்கோஸ்லாவிய தமிழறிஞர் கபிலசுவலபில் மயிலையாரைத் தமது குருவாகவே மதித்துப் போற்றினார்

குணக்குன்று:-

பரந்துபட்ட கல்வியறிவினால் மயிலையார் நுண்மாண் நுழைபுலம் மிக்க மாமேதையாகத் திகழ்ந்தார். விரிந்துபட்ட அறிஞர்கள் தொடர்பால் ஆய்வுலகில் பொலிவு பெற்றார். தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் தமிழ்ச்

சான்றோனாய் விளங்கினார். குணக்குன்றாய், நிறை குடமாய், எளிமை, இனிமை, அடக்கம் ஆகிய உயர் பண்புகளுக்கு உறைவிடமாய்த் திகழ்ந்தார். பெரும் புலமையும், பொறுமையும், விடா முயற்சியும், சலியாத உழைப்புமே அவர் அணிந்த அணிகலன்கள். கடல் போன்ற ஆழமான கல்வி, நிலவுலகம் போல் பரந்து விரிந்த அறிவு, வானம் போல் உயர்ந்த பண்புகள் இம்மூன்றின் சங்கமம்தான் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்.

தோற்றம்:-

மயிலை சீனி எங்ஙனம் தோற்றமளிப்பார் என்பது குறித்து அறிஞர் நாரண துரைக்கண்ணன் கீழ்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்.

''ஐந்தடிக்கு உட்பட்ட குறள் வடிவம். பளபளக்கும் வழுக்கைத் தலை. வெண்மை படர்ந்த புருவங்களை எடுத்துக் காட்டும் அகன்ற நெற்றி. கனவு காணும் கண்ணிமைகளைக் கொண்ட வட்டமுகம். எடுப்பான மூக்கு. படபடவெனப் பேசத் துடிக்கும் மெல்லுதடுகள். கணுக்கால் தெரியக் கட்டி இருக்கும் நான்கு முழு வெள்ளை வேட்டி. காலர் இல்லாத முழுக்கை சட்டை. சட்டைப் பையில் மூக்குக் கண்ணாடி. பவுண்டன் பேனா. கழுத்தைச் சுற்றி மார்பின் இருபுறமும் தொங்கும் மேல் உத்தரீயம். இடது கையில் தொங்கிக் கொண்டிருக்கும் புத்தகப்பை. இப்படியான தோற்றத்துடன் கன்னிமரா நூலகத்தை விட்டு வேகமாக நடந்து வெளியே வருகிறாரே! அவர்தான் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்''

மூன்று செய்திகள்:-

மயிலையார் குறித்து ஆய்வு செய்யும்போது மூன்று செய்திகளை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

ஒன்று மயிலையார் பத்தாம் வகுப்புக்கு மேல் படிக்காதவர். இடைநிலைப் பள்ளி ஆசிரியர். என்றாலும் பல்கலைக் கழகங்கள் போற்றும் வண்ணம் உயர்ந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற் கொண்டார். ஏன்? பல்கலைக்கழகங்கள் செய்யாத ஆய்வுகளையும் தன்னந்தனி மனிதராய்ப் பிறர் உதவியின்றிச் செய்து முடித்தார். அவர் படைத்த பல நூல்கள் பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாகத் திகழ்கின்றன.

இரண்டு, அவர் திருமணம் செய்து கொள்ளாமல், வாழ்நாள் முழுவதும் ஆறுமுக நாவலர் போன்று தமிழுக்குத் தொண்டு செய்தார். தமது இன்பங்களை அறவே துறந்து சமண பௌத்த துறவிகளைப் போல் வாழ்ந்தார். புகழ் நாடாது, பொருள் விரும்பாது தன்னை வருத்திக் கொண்டு தமிழுக்காகவே தவம் செய்தார்.

மூன்று, மயிலையார் தனித் தன்மை வாய்ந்த ஆராய்ச்சியாளர். ஆராய்ச்சி செய்வதே வாழ்வாகவும், வாழ்க்கை முழுவதுமே ஆராய்ச்சிப் பணிக்கெனவும் அமைத்துக் கொண்டு வாழ்ந்தவர். அவரது ஆய்வுப் பணியில் சில சிறப்புக் கூறுகள் உள்ளன.

1. ஆராய்ச்சி உலகில் எவரையும் பின்பற்றாது தனக்கெனத் தனி மரபை வகுத்துக் கொண்டார்.

2. அவரது ஆராய்ச்சியானது செய்திகளின் தொகுப்பன்று. சுரங்கத்திலிருந்து தங்கத்தை வெட்டியெடுப்பது போன்ற கடினமான பணி அவருடையது. ஆழ் கடலில் இருந்து மூச்சினை அடக்கி முத்தெடுப்பது போன்றது. தமிழ்க் கடலுள் மூழ்கி புதிய புதிய உண்மைகளை வெளிக் கொணர்ந்தார். எவருக்கும் அஞ்சாது தன் முடிவுகளைத் துணிவோடு எடுத்துரைத்தார்.

3. காய்தல், உவத்தல் இன்றி நடுநிலைமையோடு ஆராய்ச்சி செய்தார். எதனையும் தகுந்த சான்று காட்டி நிறுவினார்.

4. மானிடவியல், சமூகவியல் அறிவுடன் தமிழர் பண்பாட்டு வரலாற்றை முதன் முறையாக ஆய்வு செய்தவர் மயிலையாரே.

5. தமிழருடைய கலை, பண்பாடு, சமயம் ஆகிய துறைகளில் கருத்து வடிவங்களுக்கு விளக்கம் தேவைப்படுகிறது. அத்துறையில் முதன் முதலாக ஆராய்ச்சி செய்தவர் மயிலையாரே.

மூன்று தமிழ் மரபுகள்:-

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் மூவகை தமிழ் மரபுகள் நிலவி வந்தன. அம் மரபுகள் இலக்கிய உலகிலும், வரலாற்று உலகிலும் தோற்றுவித்த ஆய்வுக் களங்கள், இலக்கியப் போர்கள் மிகப் பலவாகும்.

ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபு:-

இம்மரபுகளில் ஒன்று ஆரியஞ் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபினர் தமிழின் தனித் தன்மையை ஏற்க மறுத்தனர். சமஸ்கிருத மொழியின் மீது இவர்களுக்குத் தணியாத தாகம் உண்டு. மூட பக்தியும் உண்டு. தமிழ் இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு அனைத்துமே தமிழ் மக்களுக்குச் சமஸ்கிருதம் அளித்த நன்கொடை என்பது இவர்கள் கருத்து. தமிழின் தொன்மைக்கும், தனித் தன்மைக்கும் எதிரான கருத்துக்களை வெளியிடுவதே

இவர்களது முழுநேர இலக்கியப் பணியாக இருந்தது. வடமொழி நூல்களுக்கு முதன்மை தருவதற்காகத் தமிழ் இலக்கியக் காலத்தைப் பின்னுக்குத் தள்ளினர்.

இந்திய தேசியம் சார்ந்த தமிழ் மரபு:-

மற்றொரு மரபு இந்திய தேசியஞ் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபினர் இந்திய தேசியத்தை முன்னிறுத்தினர். தமிழ்த் தேசியத்தைப் பின்னுக்குத் தள்ளினர். தமிழரின் தனித்தன்மையை இந்திய தேசிய நீரோட்டத்தில் கரைத்து விட்டனர். தமிழின் தனித்தன்மையை வலியுறுத்துவது இந்திய தேசியத்திற்கு எதிரானது என்ற கருத்தோட்டம் இவர்களுக்கு உண்டு. இந்திய தேசியத்தால் தமிழ்த் தேசியம் நலிவுற்றபோது எதிர்ப்புக்குரல் எழுப்பாது மௌனம் காத்தனர்.

தமிழ்த் தேசியம் சார்ந்த தமிழ் மரபு:-

மூன்றாவது மரபு தமிழ்த் தேசியம் சார்ந்த தமிழ் மரபாகும். இம்மரபின் அடித்தளம் தமிழின் தனித்தன்மையைக் காப்பதும் வளர்ப்பதும் ஆகும் மொழி, வரலாறு, கலை, பண்பாட்டுத் துறையில் தமிழின் தொன்மையைப் பேணிக்காப்பதும், மீட்டுருவாக்கம் செய்வதும் ஆகும். இந்த மரபின் முன்னணி வீரர்களாகத் திகழ்ந்த தமிழறிஞர்கள் பலர். அவருள் குறிப்பிடத் தகுந்தவர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் ஆவார். மயிலையார் இந்திய தேசியத்திற்கு எதிரானவர் அல்லர். ஆயினும் தமிழின் தொன்மையை மீட்டுருவாக்கம் செய்வதை முதன்மைப் பணியாக மேற்கொண்டார்.

மயிலையாருடைய நூல்களும், கட்டுரைகளும், மீட்டுரு வாக்கத்தின் வாயில்கள். அவர் கடந்த கால வளங்களை நினைவூட்டினார். நாம் தாழ்ந்து போனதற்கான காரணங்களைத் தேடினார். நம் பெருமைகளை விரிவாக விளக்கினார். நம் மீட்சிக்கான வழி வகைகளை ஆய்வு செய்தார். அவருடைய நூல்கள் ஆரியஞ்சார்ந்த தமிழ் மரபினருக்கு எதிரான படைக்கலன்கள். இந்தப் படைக்கலன்களை ஆரவாரம் இல்லாமல், மேடை முழக்கம் இல்லாமல், ஆராய்ச்சி பூர்வமாக அசைக்க முடியாத ஆதாரங்களோடு வடித்துக் கொடுத்தார். பண்டைத் தமிழ் மரபை நாம் எளிதில் உணரும் வண்ணம் மீட்டுருவாக்கம் செய்தார்.

மயிலையாரின் இதழ் படைப்புகள்:-

மயிலையார் தமிழுக்கு அளித்த நன்கொடைகள் மிகப் பலவாகும். பல் வேறு தமிழ் இதழ்களில் 200 க்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வழங்கி

யுள்ளார். அவற்றுள் 150க்கு மேற்பட்டவை நூல்வடிவம் பெறாதவை. மயிலையார் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிய இதழ்களில் சில பின்வருமாறு:

குடியரசு, திராவிடன், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தமிழ்ப் பொழில், ஆராய்ச்சி, திருக்கோயில், நண்பன், கல்வி, இலட்சுமி, ஆனந்த போதினி, தமிழ்நாடு, சௌபாக்கியம், ஈழகேசரி முதலியனவாகும்.

இவருடைய ஆய்வுகள் பல திறத்தன. சங்க கால ஆய்வுகள், சிலப்பதிகார ஆய்வுகள், திருக்குறள் ஆய்வுகள், இலக்கிய ஆய்வுகள், சமணம் பௌத்தம் பற்றிய ஆய்வுகள், வரலாறு, சமயம் பற்றிய ஆய்வுகள், கல்வெட்டு சாசனம், நாணயம் பற்றிய ஆய்வுகள், சிற்பங்கள் பற்றிய ஆய்வுகள், சொல்லாய்வுகள், இலக்கண ஆய்வுகள் எனப்பல துறைகளில் ஆய்வு செய்து கட்டுரைகள் வழங்கியிருக்கிறார். இவருடைய கட்டுரைகள் திட்பமும், நுட்பமும் கொண்டு விளங்கும் அரிய ஆராய்ச்சிக் கருவூலங்கள் ஆகும்.

நூல்கள்:-

மயிலையார் தமிழன்னைக்கு அணிகலன்களாக முப்பது நூல்களைப் படைத்துள்ளார். அவர் படைத்துள்ள நூல்களின் பெயர்களைப் பார்த்தாலே அவரது பரந்து விரிந்த கல்விப் பரப்பும், கடுமையான உழைப்பும் புலனாகும்.

மயிலை சீனி அவர்களின் பெரும் பங்களிப்பு வரலாற்றுத் துறைக்கு அவர் ஆற்றியுள்ள பெரும் பணியேயாகும். வரலாற்று ஆய்வுக்கென்று ஒன்பது அரிய நூல்களை வழங்கியிருக்கிறார். அவர் தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு உறுப்பினராகவும் பணி புரிந்திருக்கிறார். தமிழக அரசு வெளியிட்ட ''சங்க கால அரசியல்'' என்ற நூலில் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவரசர்களைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார். வரலாற்றுக்குத் துணைபுரியும் கல்வெட்டுகளை ஆய்வு செய்துள்ளார். இலங்கைத் தமிழர் குறித்து வரலாற்று நோக்குடன் விரிவாக ஆராய்ந்திருக்கிறார். ஏறத்தாழ 350 பக்கங்களில் ஐந்து கட்டுரைகளை எழுதியுள்ளார். இவைகளேயன்றிப் பல்வேறு இதழ்களில் வரலாற்றுத் தொடர்பாக நாற்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளை வரைந்துள்ளார். வரலாற்றுத் துறைக்கு மயிலையார் ஆற்றிய பணி மகத்தானது என்பதில் ஐயமில்லை.

மயிலையார் இலக்கிய ஆய்வு நூல்கள் என்ற வகையில் ஆறு நூல்களை எழுதியுள்ளார். ''19-ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்'', ''மறைந்து போன தமிழ் நூல்கள்'' எனும் இரு நூல்களும் காலத்தால் அழியாமல் என்றும்

நிலைத்து நிற்கக் கூடியன. ''தொல்காப்பியத்தில் ஆய்வுரைகள்'' என்ற சொற்பொழிவு நூல் குறிப்பிடத்தக்க நூலாகும். ''அஞ்சிறைத்தும்பி''- அருமையான சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் கொண்டது.

மயிலையார் சமய ஆய்வு நூல்கள் என்ற வகையில் நான்கு நூல்களை எழுதியுள்ளார். சமணர்களும், பௌத்தர்களும், கிறித்தவர்களும், இசுலாமியர்களும் தமிழுக்கு ஆற்றிய பெருந்தொண்டுகளை நினைவுகூர்ந்து போற்றுகிறார். சமயக் காழ்ப்பின்றி, விருப்பு வெறுப்பு இன்றி ஆய்வு செய்திருக்கிறார். தமிழிலக்கிய வரலாற்றில் சமயங்களின் தாக்கத்தைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

மயிலையார் கலையியல் ஆய்வு நூல்கள் என்ற வகையில் ஐந்து நூல்களைப் படைத்துள்ளார். தமிழர் வளர்த்த அழகுக் கலைகளான கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, கூத்து, காவியம், நாடகம் போன்ற கலைகளை ஆய்வு செய்திருக்கிறார். இத்துறை நூல்கள் மிகவும் அரியன. புதியன.

இதுபோன்றே கல்வெட்டு, சாசனம் என்ற வகையில் இரு நூல்களும், பொது நூல்கள் என்ற வகையில் நான்கு நூல்களும் ஆக முப்பது நூல்கள் தமிழன்னைக்குக் காணிக்கையாக வழங்கி யிருக்கிறார்.

மயிலையார் எழுதி அச்சில் வராமல் கையெழுத்துப் பிரதியாக நின்றுவிட்ட நூல்கள் சிலவும் உள்ளன. அவை: 1. இந்து மதமும் தமிழும் 2. இஸ்லாமும் தமிழும் 3. சமணமும் தமிழும் பாகம் 2 4. 18-ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் 5. யானைக் கோயில் வரலாறு 6. தமிழ்நாட்டுச் சிற்பக் கலை என்பவை ஆகும்.

மயிலையாருடைய ஆய்வு நூல்களுக்கு என்று சில தனிச் சிறப்புகள் உள்ளன.

1. அவரது ஆய்வு நூல்களில் பெரும்பாலானவை தமிழுலகிற்கு அவரால் முதன் முதலாக வழங்கப்பட்டவையாகும்.

2. அவருடைய ஆய்வு நூல்கள் அனைத்தும் அறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் ஒரு சேர விருந்தளிப்பவையாகும். எளிமை, இனிமை, வெளியீட்டு நுட்பம் காரணமாக இரு திறத்தாரையும் ஈர்க்கக்கூடியது.

3. அவரது ஆய்வு நூல்களில் வேண்டாத நூல் என்று எதனையும் ஒதுக்கமுடியாது. அன்றியும் ஒரு நூலில் எந்த ஒரு சிறு பகுதியையும் வேண்டாதவை என்று ஒதுக்க முடியாது.

4. அவரது ஆய்வு நூல்கள் பல்வேறு ஆய்வு நூல்கள் தோன்றுவதற்கு வழி வகுத்துள்ளன.

5. மயிலையார் தமது நூல்களுக்குத் தாமே படம் போட்டு விளக்குவார். சங்ககால மதுரையையும், காவிரிப்பூம் பட்டினத்தையும், வஞ்சி மாநகரத்தையும், காஞ்சி மாநகரத்தையும் படம் வரைந்து விளக்கியுள்ளார். ஏராளமான வரைபடங்களையும் ஒளிப்படங்களையும் அவரது நூல்களில் காணலாம். மயிலையாருடைய 30 நூல்களைப் பற்றியும் சிறு குறிப்புகளேனும் தரவேண்டும். ஆயினும் 3 நூல்களுக்கு மட்டுமே இங்கே சில குறிப்புகள் தரப்படுகின்றன.

19-ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்:-

மயிலையாருடைய 19ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் ஓர் அரிய கலைக் களஞ்சியம். தகவல் களஞ்சியம் எனலாம். ''இந்நூல் எழுதுவதற்குப் பல நூற்றுக்கணக்கான புத்தகங்கள் எனக்குத் துணையாக இருந்தன'' என்று மயிலையார் தமது நூலின் முன்னுரையில் கூறியுள்ளார். இம்மாதிரியான நூல்களை மயிலை சீனி அவர்கள்தான் இயற்ற முடியும் என்று செக்கோஸ்லாவியா அறிஞர் கபிலசுவலபில் புகழாரம் சூட்டியுள்ளார். இந்நூலில் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 226 தமிழ்ப் புலவர்களைப் பற்றிய அரிய குறிப்புகள் உள்ளன. 19ஆம் நூற்றாண்டில் அச்சான இலக்கிய நூல்கள், உரைநடை நூல்கள், நாடக நூல்கள் என 625 நூல்களைப் பற்றிய பதிவுகள் உள்ளன. 113 இதழ்கள் பற்றிய பட்டியல் தரப்பட்டுள்ளது. அச்சகங்களின் வரலாறு, எகர, ஒகர எழுத்துக்களின் வரிவடிவ வரலாறு, தமிழ் எண்கள் மாற்றம் பெற்ற வரலாறு, கீழ்க்கணக்கு நூலாராய்ச்சி, ஆசிரியர் மாணவர் பரம்பரையெனப் பல செய்திகள், நுட்பமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. கிறித்தவர்கள், இசுலாமியர்கள், ஆங்கிலேயர்கள் வருகையால் தமிழிலக்கியம் செழித்த வரலாறு சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூற்றாண்டைப் பற்றியும் இதுபோன்ற ஆராய்ச்சி நூல்கள் வெளிவர வேண்டுமென்று டாக்டர் அ. சிதம்பரநாதன் அணிந்துரையில் குறிப்பிடுகிறார்.

மறைந்து போன தமிழ் நூல்கள்:-

இந்நூல் மற்றுமொரு அரிய படைப்பாகும். மயிலையாருடைய குடும்பத்தில் இளம் வயதில் இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டனர். அந்தத் துயரம் அவரால் தாங்க முடியவில்லை. அந்நிகழ்ச்சியின் விளைவால் தமிழ்

இலக்கியக் குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இறந்து போயின என்று கணக்கெடுத்தார். அதன் விளைவாகத் தோன்றியதுதான் 'மறைந்து போன தமிழ் நூல்கள்' உரை யாசிரியர்களின் உரைகளையெல்லாம் ஊன்றிப் படித்து மறைந்து போன தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புகளையெல்லாம் ஒன்று விடாமல் தேடித்தொகுத்துத் தந்தப் பெருமை மயிலையாருக்கு உரியதாகும். இந்நூலில் மறைந்து போன 195 தமிழ் நூல்களைப் பற்றிய அரிய குறிப்புகளையும், இறந்தன போக எஞ்சி நின்ற செய்யுட் பகுதிகளையும், ஒரு சேரத் தொகுத்துத் தந்துள்ளார். இது அரிதினும் அரிய மீட்டுருவாக்கப் பணியாகும். நாம் இழந்துவிட்ட நூல்களைத் தேடிய முதல் அறிஞர் இவரே. மறைந்த மாநகரங்களை அகழ்ந்து எடுப்பது போலத் தமிழ்ப் பெருங்கடலுள் புதையுண்டுபோன புதையல்களைத் தேடிஎடுத்தார். மிக நுண்ணிய தடயங்களைக் கொண்டே நூல்களை அடையாளங்கொண்டு, சிதைந்து போன உருவத்தைச் செப்பம் செய்து உயிரூட்டி உலவவிட்டவர் மயிலையார். தமது முன்னுரையில் மயிலையார் எழுதுகிறார், ''மறைந்துபோன நூல்களின் முழுத் தொகுப்பு அல்ல இந்நூல். விடுபட்ட நூல்களும் உள்ளன. அவற்றைப் பிறகு எழுதித் தொகுக்கும் எண்ணம் உடையேன்'' என்று. இந்நூல் 1959ல் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து இத்துறையில் இன்னொரு நூல் வெளிவரவில்லை. தமிழ் நூல் கடலுள் இன்னும் எத்தனை எத்தனை நூல்கள் புதையுண்டு கிடக்கின்றனவோ? அவைகளில் என்னென்ன செய்திகள் மறைந்து கிடக்கின்றனவோ? அவைகளை வெளிப்படுத்த இன்னொரு மயிலையார் எப்பொழுது தோன்றுவாரோ? யார் அறிவார்?

கருவி நூல்கள் இல்லாத காலத்தில், தகவல்களைத் திரட்டும் வாய்ப்புகள் குறைவான காலத்தில் பல்கலைக் கழகங்கள்கூட செய்ய முடியாத பணியினைத் தன்னந்தனி மனிதராய் இருந்து செய்திருக்கிறார் என்று எண்ணும் போது வியப்பு மேலிடுகிறது.

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்:-

நுண்கலைகள் பற்றிய சிறந்த ஆய்வு நூல் இது. கலைகள் குறித்து முழுமையான செய்திக் களஞ்சியம் எனலாம். தமிழகமே கலைகளின் தாயகம் என்பதனை மயிலையார் வலியுறுத்துகிறார். சங்கக் காலந்தொட்டு கட்டடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை, நாடகக்கலை யாவும் தமிழகத்தில் செழித்து வளர்ந்து வந்துள்ள பரிணாம வளர்ச்சியை இந்நூலில் படம் பிடித்துக் காட்டுகிறார். இடைக்காலத்தில் இக்கலைகள் அழிந்து போயின. இக்கலைகள் யாவும் மீண்டும் மீட்டுருவாக்கம்

செய்யப்படவேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட அற்புதமான நூல் இது. இத்துறையில் தமிழில் வெளிவந்த முதல் நூல். தமிழக அரசின் முதற் பரிசு பெற்ற நூல். தமிழகம் முழுவதும் உள்ள கோவில்களுக்குச் சென்று கலை ஆய்வு செய்து எழுதப்பட்ட கலைப்பெட்டகம் இந்நூல். நமது முன்னோர் போற்றி வளர்த்த கலைகள் யாவும் அழிந்து கொண்டும், அழிக்கப்பட்டுக் கொண்டும் வருகிறதே என்று மயிலையார் கண் கலங்கினார். பொறுப்பற்ற தமிழ் மக்களை எண்ணி எண்ணிப் பெருமூச்சு விட்டார். இந்நூலில் ''கலைகளைப் போற்றுக'' எனும் பகுதி உள்ளது. இப்பகுதியை மயிலையார் மையினால் அன்று, கண்ணீரால் தான் எழுதியிருக்கக்கூடும்.

ஆய்வு வகைகள்:-

மயிலையாருடைய ஆய்வு நெறிகளை நான்கு வகையாகப் பகுக்கலாம். அவை:

1. புதிய செய்திகளைத் தருவது 2. புதிய விளக்கங்களைத் தருவது 3. இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டுவது 4. தவறான கருத்துகளை மறுத்து உண்மையை நிலை நாட்டுவது என்பதாகும்.

1. புதிய செய்திகளைத் தருதல்:-

''பாண்டியர் வரலாற்றில் ஓர் அரிய புதிய செய்தி'' என்றொரு கட்டுரையை மயிலையார் வரைந்துள்ளார். சங்க காலத்தில் மூவேந்தர் கொடியில் பொறிக்கப்பட்டிருந்த சின்னங்கள் பற்றிய ஓர் ஆய்வு இது.

சோழன் கொடியில் புலிச்சின்னம், சேரன் கொடியில் வில் சின்னம், பாண்டியன் கொடியில் மீன் சின்னம் பொறிக்கப் பட்டிருப்பது வழி வழி மரபாகும். ஆனால் சங்க காலத்தில் பசும்பூண் பாண்டியன் கொடியில் மட்டும் யானைச் சின்னம் பொறிக்கப் பட்டிருந்தது. இவ்வரிய செய்தியைச் சங்கப் பாடல் ஒன்றின் வழியாக விளக்குகிறார். ஏறத்தாழ மூவாயிரம் பாடல்கள் கொண்ட சங்கச் செய்யுட்களில் ஒரே ஒரு பாட்டில் ஒரே ஒரு வரியில் இக்குறிப்பு வருகிறது. அகநானூற்றில் 162 ஆம் செய்யுளில் பரணர் இக்குறிப்பைத் தருகிறார். இதை விளக்குவதுதான் இக்கட்டுரை. இதுபோல எண்ணற்ற புதிய செய்திகளைத் தந்தவர் மயிலையார்.

2. புதிய விளக்கம் தருதல்:-

''மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள்'' என்றொரு நூல் மயிலையார் எழுதியது. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் அருச்சுனன் தவசு அல்லது பகீரதன்

தவசு என்பதைக் குறிப்பன என்று பலரும் எழுதி வந்தனர். ஆனால் மயிலையார் இதனை மறுத்து மாமல்லபுரத்துச் சிற்பங்கள் சமணர்களின் அஜீத நாதர் புராணத்தில் கூறப்படுகிற சகரசாகரர்களின் கதையென ஆராய்ந்து விளக்கினார். மகாபலிபுரம் என்று தவறாக வழங்கப்பட்ட பெயரை மாமல்லபுரம் என்று அறிமுகப்படுத்திய பெருமையும் மயிலையாரையே சேரும். இதுபோன்று எத்தனையோ புதிய விளக்கங்களைத் தந்தவர் மயிலையார்.

3. இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டுதல்:-

மயிலையார் வரலாற்றின் இருண்ட பகுதிகளுக்கு ஒளியூட்டினார். துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த வரலாற்றுத் துணுக்குகளை எல்லாம் தமது மதி நுட்பத்தால் இணைத்து ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்தி முழுமையான வரலாற்றை உருவாக்கியவர். ''களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'' என்ற நூலே இதற்குப் போதுமான சான்றாகும்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தை வரலாற்றாசிரியர்கள் இருண்ட காலம் என்று ஒரே வரியில் எழுதி முடித்துவிட்டார்கள். அந்த இருண்ட காலத்திற்கு 69 நூல்களைச் சான்று காட்டி 175 பக்கங்கள் எழுதி ஒளியூட்டியவர் மயிலையார்.

4. தவறான கருத்துக்களை மறுத்து உண்மையை நிலை நாட்டுதல்:-

திரு. வையாபுரிப்பிள்ளை, கே.ஏ. நீலகண்ட சாத்திரியார், இராமசந்திர தீட்சிதர், மு. இராகவையங்கார், பி.எஸ். சுப்பிரமணிய சாத்திரியார் போன்ற பேராசிரியர்கள் எழுதிய தவறான பல கருத்துக்களைச் சான்று காட்டி மறுத்தவர் மயிலையார். மறுத்து அவர் எழுதிய நூல்கள் சில. கட்டுரைகள் மிகப் பல. நூல்களுள் ''தொல்காப்பிய ஆய்வுரை'' சிறப்புடையது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவு அந்நூல். அந்நூலில் கூறப்பட்ட சில மறுப்புரைகள் பின் வருமாறு:-

1. வச்சிரநந்தி என்னும் சமணன் சமண சமய வளர்ச்சிக்காகக் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தினான். அதனை ''பாண்டியர்கள் தோற்றுவித்த தமிழ்ச்சங்கம்'' என்று வையாபுரியார் தவறாக உணர்ந்தார். அதன் அடிப்படையில் தமிழிலக்கியக் காலத்தைப் பின்னுக்குத் தள்ளினார்.

வையாபுரியாரும் மேற்கண்ட பேராசிரியர்களும் தொல்காப்பியமும், திருக்குறளும் கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றின என்றனர். சிலப்பதிகாரம் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்றனர்.

மயிலையார் அதனை மறுத்தார். தொல்காப்பியம் கி.மு. எட்டாம் நூற்றாண்டிலும், திருக்குறள் கி.மு. முதல் நூற்றாண்டிலும், சிலப்பதிகாரம் கி.பி. 2ஆம் நூற்றாண்டிலும் தோன்றியது எனச் சான்று காட்டி நிறுவினார்.

2. வடமொழியில் எழுதப்பட்ட மனுநீதி, அர்த்த சாத்திரம், காம சூத்திரம், பரத நாட்டிய சாத்திரம் போன்ற நூல்களிலிருந்து கருத்துக்களைப் பெற்றே தொல் காப்பியமும், திருக்குறளும் எழுதப்பட்டன என்ற அவர்களின் கருத்தையும் மறுத்தார். அவர்களின் சமஸ்கிருத மூட பக்தியையும் கண்டித்தார். இவை போன்று பலர் கூறிய தவறான கருத்துக்களை எல்லாம் மறுத்தார்.

மயிலையாரின் ஆராய்ச்சி வண்மையை உணர்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

''பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்'' என்று புகழாரம் சூட்டினார்.

மயிலையாரும் வாழ்க்கைப் போராட்டங்களும்:-

மயிலையார் தமது வாழ்நாள் முழுவதும் பல்வேறு இன்னல்களுக்கு இடையே வாழ்ந்தவர். இதனைத் தாம் எழுதிய முன்னுரைகளில் இலைமறை காயாக வெளிப்படுத்தியுள்ளார்.

1940-ல் வெளிவந்த ''பௌத்தமும் தமிழும்'' என்ற நூலின் முன்னுரையில் மயிலையார் பின்வருமாறு கூறுகிறார்,

''பல இன்னல்களுக்கு இடையே இதனை எழுத வேண்டியிருந்தது''.

1954 இல் வெளிவந்த ''சமணமும் தமிழும்'' என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்,

''வாழ்க்கைப் போருக்கு இடையே பல இன்னல்களுக்கு இடையே சிறுசிறு ஓய்வுக் காலத்தைப் பயன்படுத்தி இந்நூல் எழுதி முடிக்கப்பட்டது.''

1974இல் வெளிவந்த ''களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'' என்ற நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்,

''வாழ்க்கையில் ஏற்பட்ட மனக்கவலையும் துன்பமும் நோயும் தொடர்ந்து வருத்துகிற காலத்தில் இந்நூலை எழுதினேன்.''

இங்ஙனம் 1940இல் தொடங்கிய இன்னல் 1976 வரைகூட விடுபடாமல் வாழ்ந்திருக்கிறார் என்பதை அறியும்போது நெஞ்சு நெகிழ்கிறது.

''சமணமும் தமிழும்'' என்ற நூலில் மனம் வெதும்பிக் கூறுகிறார்,

''ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன், உண்மையாக உழைத்து ஆராய்ச்சி நூல் எழுதும் உழைப்பாளர்களுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை'' என்று.

பொதுவாக மயிலையார் தமது இன்னல்களை வெளிப்படையாகக் கூறமாட்டார். தமது உழைப்புக்கு ஏற்ற பொருளும், புகழும், அங்கீகாரமும் கிடைக்கவில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். அந்த உணர்ச்சி அவரது அடிமனத்தின் ஒரு மூலையில் இருக்கத்தான் செய்தது. இருந்தாலும் வெளிப்படையாகக் கூறிச் சலித்துக் கொண்டதில்லை. ஒரோர் அமயம் ஓரிரண்டு வார்த்தைகளில் மட்டுமே தம் மனத் துயரத்தை வெளிப்படுத்தி யிருக்கிறார். வாழ்நாள் முழுவதும் மனத்துயரங்களை உள்ளடக்கிப் பொது நன்மைக் கருதி அயராது உழைத்த பெருந்தகையவர்.

மயிலையார் தாம் வாழ்ந்த காலத்தில் போற்றப்பட வேண்டிய அளவிற்குப் போற்றப்படவில்லை என்பதை உணர்ந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் மனம் வருந்தியிருக்கிறார். அவரது உள்ளத்தில் இந்த ஏக்கம் மிகுதியாக இருந்திருக்கிறது. இதனைக் கீழ்வருமாறு வெளிப்படுத்தினார்:-

''நன்றி கெட்டு அதிகாரத்தை
நாடும் எவ்வரசும் அன்னார்
குன்றினும் மிகுந்த சீர்த்தி
கொண்டுயர் வளித்தார் இல்லை'' என்று.

சில சிறப்புகள்:-

பாலைவனத்தில் பசுஞ்சோலை போன்று மயிலையார் ஓரிரு சிறப்புக்களையேனும் பெற்றிருக்கிறார்.

1961இல் மயிலையாருக்கு மணிவிழா நடைபெற்றது. சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற அவ்விழாவில் நீதியரசர் கணபதியா பிள்ளை, மயிலையாருக்கு ''ஆராய்ச்சிப் பேரறிஞர்'' என்ற பட்டத்தை நல்கிச் சிறப்பித்தார்.

1961ஆம் ஆண்டில் தமிழ் எழுத்தாளர் சங்கம் மயிலை யாருக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தது.

1963-1964ஆம் ஆண்டுகளில் மயிலையார் தமிழக எழுத் தாளர் சங்கத் தலைவராக வீற்றிருந்து சிறப்பித்தார்.

1970ஆம் ஆண்டு தமிழக அரசு தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு உறுப்பினராக மயிலையாரை நியமனம் செய்தது.

1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் மதுரைப் பல்கலைக் கழகம் மயிலையாருக்குத் ''தமிழ்ப் பேரவைச் செம்மல்'' என்ற பட்டத்தினை அளித்துச் சிறப்பித்தது.

பல்லாண்டு காலம் தமிழகப்புலவர் குழுவில் அங்கம் வகித்தார். மயிலையார் மறைந்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தொண்டுக்கு உரிய சிறப்புக் கிடைத்தது. ஆம். கி.பி. 2001இல் தமிழக அரசு அவரது நூல்களை நாட்டுடமையாக்கியது. அவரது குடும்பத்தினருக்குப் பத்து இலட்சம் ரூபாய் நன்கொடையாக அளித்தது. இது மயிலையார் தொண்டுக்குக் கிடைத்த மாபெரும் நன்றிக் காணிக்கையாகும்.

மறைவு:-

மயிலையார் தமது இறுதிக் காலத்தில் கடைசி பத்து நாட்கள், மூளை நரம்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் செயல்பாடு அற்று இருந்தார். இராயப்பேட்டை மருத்துவ மனையில் 8.5.1980ஆம் நாள் இரவு 8.30 மணி அளவில் மறைந்தார். மறைந்தார் என்பதை விடத் தமது மாபெரும் ஆராய்ச்சிப் பணியை நிறுத்திக் கொண்டு ஓய்வெடுத்துக்கொண்டார் என்பது சாலப் பொருந்தும். உண்மையில் அவர் மறையவில்லை. அவருடைய நூல்களே நிலை பெற்ற சின்னங்களாய் விளங்கி அம்மேதையை நமக்கு நினைவூட்டிக் கொண்டேயிருக்கும். ஆய்வுலகில் என்றென்றும் புகழுடம்பு தாங்கிய வண்ணம் உலா வருபவர் அவர். மயிலை சீனி வேங்கடசாமியின் மாண்புகழ் நீடு வாழ்க.

ஆராய்ச்சிப் பேரறிஞர்
மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்
எழுதிய நூல்கள்

முதற்பதிப்பு

வரலாற்று ஆய்வு நூல்கள் (9)

1.	சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்	1970
2.	பழங்காலத் தமிழர் வாணிகம்	1974
3.	களப்பிரர் ஆட்சியில் தமிழகம்	1976
4.	சேரன் செங்குட்டுவன்	1966
5.	மகேந்திரவர்மன்	1955
6.	நரசிம்மவர்மன்	1957
7.	மூன்றாம் நந்திவர்மன்	1958
8.	கொங்கு நாட்டு வரலாறு	1974
9.	துளுநாட்டு வரலாறு	1966

இலக்கிய ஆய்வு நூல்கள் (6)

1.	தொல்காப்பியத்தில் சில ஆய்வுரைகள்	1970
2.	இறையனார் களவியல் ஆராய்ச்சி	1943
3.	19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்	1962
4.	மறைந்து போன தமிழ் நூல்கள்	1959
5.	மனோன்மணீயம் - பதிப்பும் குறிப்புரையும்	1961
6.	அஞ்சிறைத்தும்பி	1958

சமயமும் தமிழும் ஆய்வு நூல்கள் (4)

1.	பௌத்தமும் தமிழும்	1940
2.	கிறித்துவமும் தமிழும்	1936
3.	சமணமும் தமிழும்	1954
4.	சமயங்கள் வளர்த்த தமிழ்	1966

கலையியல் ஆய்வு நூல்கள் (5)

1.	தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்	1956
2.	நுண்கலைகள்	1967
3.	இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்	1948
4.	மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள்	1950
5.	இசைவாணர் கதைகள்	1970

கல்வெட்டு, சாசனம் ஆய்வுநூல்கள் (2)

1.	சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள்	1981
2.	சாசனச் செய்யுள் மஞ்சரி	1959

பொது நூல்கள் (4)

1.	உணவு நூல்	1965
2.	புத்தர் ஜாதகக் கதைகள்	1960
3.	பௌத்தக் கதைகள்	1952
4.	கௌதம புத்தர்	1956

மேலும் 200க்கு மேற்பட்ட அரிய ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

பொருளடக்கம்

சங்ககாலத்துப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள்

முன்னுரை 37

1. அரசலூர் பிராமி எழுத்துக்கள் 65
2. கொங்கர் புளியங்குளம் பிராமி எழுத்து 68
3. குன்னக்குடி (குன்றக்குடி) பிராமி எழுத்து 75
4. மாலகொண்ட பிராமி எழுத்து 77
5. முத்துப்பட்டி பிராமி எழுத்து 80
6. அழகர்மலைப் பிராமி எழுத்துக்கள் 81
7. ஆண்டிப்பட்டி பிராமி எழுத்து 97
8. விக்கிரம மங்கலம் பிராமிக் கல்வெட்டு 98
9. அரிட்டாபட்டி 103
10. ஆனைமலை பிராமி எழுத்து 125
11. கருங்காலக்குடி பிராமி எழுத்து 131
12. மேட்டுப்பட்டி (சித்தர்மலை) 134
13. கீழைவளவு பிராமி எழுத்து 141
14. மறுகால் தலை பிராமி எழுத்து 145
15. அரிக்கமேடு பிராமி எழுத்து 151
16. திருப்பரங்குன்றத்துப் பிராமி எழுத்து 154
17. புகழூர் பிராமி எழுத்து 162
18. ஐயர்மலை பிராமி எழுத்துக்கள் 172

பின்னிணைப்பு:

ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான் கல்வெட்டு 175

சாசனச் செய்யுள் மஞ்சரி

செங்கற்பட்டு மாவட்டம்:

சுந்தரபாண்டியன் 189

கோதண்டராமன் 190

மணியன் பெருங்கன் 190

திருமால் மாவலிவாணன் 192

சண்டேசுவரர் 193

வடஆர்க்காடு மாவட்டம்:

மகதைப் பெருமாள் 195

மகதைப் பெருமாள் 200

ஆட்கொண்டான் 200

கோப்பெருஞ்சிங்கனும் ஆட்கொண்ட தேவனும் 201

காடவராயர் 207

விடுகாதழகிய பெருமாள் 209

குணவீர முனிவர் 211

கோப்பெருஞ் சிங்கன் 212

வீரவீர ஜினாலயம் 215

ஆலத்தூர் திவாகரன் 217

குராமரம் 218

தென்ஆர்க்காடு மாவட்டம்:

சுந்தரபாண்டியன் 219

சுந்தரபாண்டியன் 220

சுந்தரபாண்டியன் 221

சோழகுலவல்லி 222

விக்கிரம பாண்டியன் 222

சுந்தரபாண்டியன் 223

நரலோக வீரன் 224
விக்கிரம பாண்டியன் 231
விக்கிரம பாண்டியன் 232
பல்லவர் கோன் 233
குந்தவை யாழ்வார் 234
கம்பன் மூவேந்த வேளான் 236
அரும்பாக்க எல்லை 246
கம்பன் வீதிவிடங்கன் 246
காடவர்கோன் பாவை 248
புத்தன் இராசசிங்கன் 248
நரேந்திரப் போத்தரையன் 249
காடவராயர்கள் 250
அடையவளைந்தான் வீரர் 253

திருச்சிராப்பள்ளி மாவட்டம்:

அறவுரை 254
குருகூர் நம்பி 255
சிராமலையந்தாதி 256
நக்கன் திருவேகம்பன் 278
பத்மநாப நாராயணன் 279
பட்டினப்பாலை மண்டபம் 279

தஞ்சாவூர் மாவட்டம்:

சுவரன் மாறன் 281
சிவலோகநாதன் 286
கச்சியர்கோன் 286
கந்தன் மாதவன் 287

புதுக்கோட்டை:

வேதனமுடையான் 289

உமையாள் நகைப்பு 290

பங்களராயர் 291

மாதைவீரன் 292

ஆதி வானவதரையன் 292

சொக்கநாத இலக்கயன் 293

இளங்கோமான் வாணன் 294

சோளிவீரராயன் 294

மாவலிவாணன் 295

மாவலிவாணன் 295

மாவலிவாணன் 296

பாண்டியன் புகழ் 296

பாண்டியன் வெற்றி 297

கோனார் குறிச்சி 298

மாகதன் பொன் பரப்பினான் 298

சேதுபதி தானம் 299

இராமநாதபுர மாவட்டம்:

இராமநாத முனிவர் 300

இராமநாத முனிவர் 301

இராமநாத முனிவர் 301

திருநெல்வேலி மாவட்டம்:

அதிவீரராமனின் தருமம் 302

குலசேகர பாண்டியன் 303

குலசேகர பாண்டியன் 304

ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் 305

பராக்கிரம பாண்டியன் 305

கன்னியாகுமரி மாவட்டம்:

அய்யனம்பி 308

ஐயனம்பி 309

திருவாங்கூர்:

திருவிக்கிரமன் 309

தாமோதரன் 311

சித்தூர் மாவட்டம்:

இராசகண்ட கோபாலன் 312

ஔளநாதன் 313

புடோலி அரசன் 313

நம்பி அப்பி 314

காமவில்லி 315

ஆந்திர நாடு:

நின்றாடுவான் 316

பஞ்சநதி முடிகொண்டான் 316

மைசூர் நாடு:

கங்கப் பெருமாள் 317

பிரமராயன் 319

பெரியான் 322

செட்டிதேவன் 324

இலங்கை:

ஆரியச் சக்கரவர்த்தி 327

தன்மபாலன் 328

இணைப்பு: பராந்தகன் வீரநாராயணன் 329

BIBLIOGRAPHY 344

முன்னுரை

தமிழ்மொழி மிகப் பழைமையானது. மிகப் பழங் காலத்தி லேயே தமிழர் தமிழை வளர்த்தனர். அவர்கள் தமிழ்நூல்களைச் சுவடி களில் எழுதினார்கள். நூல்களை எழுதுவதற்கு எழுத்து வேண்டும். எழுத்துக்களையும் அமைத்து நூல் எழுதினார்கள். ஏறத்தாழ மூவா யிரம் ஆண்டுகளாகத் தமிழில் நூல்கள் எழுதப்படுகின்றன. தமிழ் எழுத்துக்கள் காலத்துக்குக் காலம் மாறிமாறி வந்துள்ளன. எழுத்துக்க ளின் வரிவடிவம் மாறிக்கொண்டு இருந்தபடியால், பண்டைக்காலத் தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்தின் வரிவடிவம் இன்னதென்று இப் போது தெரியவில்லை. பண்டைக் காலத்துத் தமிழ் எழுத்து மறைந்து போயிற்று.

கி.மு.3ஆம் நூற்றாண்டில், அசோக மாமன்னர் பாரத நாட்டை அரசாண்ட காலத்தில், தென்னிந்தியாவிலும் தமிழகத்திலும் இலங்கையிலும் பௌத்த மதம் வந்து பரவிற்று. அசோக மாமன்னரின் பாட்டனான சந்திரகுப்த மௌரியன் ஆட்சிக் காலத்தில் சமண சமயம் தென்னிந்தியாவிலும் தமிழகத்திலும் வந்து பரவிற்று. சமணம் பௌத்தம் என்னும் இரண்டு மதங்களும் பரவுவதற்குக் காரணமாக இருந்தவர் அந்த மதங்களின் துறவிகளே. பௌத்த மதத்தோர்களும் சமண சமய முனிவர்களும் ஊர்களிலும் நகரங்களிலும் போய்த் தங்கள் தங்களுடைய மதங்களைப் பரப்பினார்கள். அசோக மாமன்னன் பொறித்துள்ள கல்வெட்டுக்களில் இரண்டு, மாமன்னனாகிய அவர் தமிழகத்திலும் இலங்கையிலும் பௌத்த மதப் பிக்குகளை அனுப்பித் தர்ம விஜயம் (அறவெற்றி) பெற்றதாகக் கூறுகின்றன. அஃதாவது பௌத்த மதத்தைத் பரவச் செய்ததைக் கூறுகின்றன. அசோக மாமன்னருடைய இரண்டாம் எண்ணுள்ள பாறைக் கல்வெட்டும் பதின்மூன்றாம் எண்ணுள்ள பாறைக் கல்வெட்டும் இந்தச் செய்திகளைக் கூறுகின்றன. தென்னிந்தி யாவிலும் தமிழகத்திலும் பௌத்த மதத்தைக் கொண்டுவந்து பரவச் செய்த பௌத்த பிக்குகள் பிராமி எழுத்தையுங் கொண்டுவந்து பரவச் செய்தார்கள். அந்தக் காலத்திலேயே சமண சமயத்தைப் பரப்பி வந்த ஆருகத மதத்து முனிவர்களும் பிராமி எழுத்தையும் பரப்பினர்.

தமிழகத்திலும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பௌத்த சமண மதங்கள் விரைவாகப் பரவியதற்குக் காரணம் என்னவென்றால், அந்த மதப் பரப்புநர்கள் அந்தந்த நாட்டுத் தாய்மொழியிலேயே தங்கள் மதங்களைப் பரப்பியதுதான். சமயப் பரப்புப்பணியை, நாட்டு மக்களுக்குத் தெரியாத மொழிகள் மூலம் செய்யக் கூடாது என்பதும், அந்தந்த நாட்டுத் தாய்மொழியிலேயே மதம் பரப்புதல் செய்யவேண்டும் என்பதும் பௌத்த சமண சமயங்களின் முக்கியமான கொள்கை. ஆகவே, தமிழகத்துக்கு வந்து பௌத்த சமண சமயங்களைப் பரவச் செய்த தேரர்களும் முனிவர்களும், தங்கள் மதக் கொள்கைகளைப் பாலி, அர்த்தமாகதி (பிராகிருத) மொழிகள் வாயிலாக வளர்க்காமல், தமிழ்மொழி வாயிலாகவே வளர்த்தார்கள். ஆகவே, பௌத்த சமண சமயங்கள் அக்காலத்தில் தமிழகத்தில் விரைவாகப் பரவின.

பிராமி எழுத்து

ஆனால், அவர்களுடைய மத நூல்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருந்தபடியாலும், அந்த நூல்களில் எழுதப்பட்டிருந்த எழுத்து பிராமி எழுத்தாக இருந்தபடியாலும் அவர்கள் மூலமாகப் பிராமி எழுத்து தமிழகத்தில் நுழைந்தது. இவ்வாறு பௌத்த சமண சமயங்களோடு பிராமி எழுத்தும் தமிழ் நாட்டில் கால் ஊன்றியது. இவ்வாறு கடைச்சங்க காலத்தில், கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பிராமி எழுத்து புகுந்தது. அக்காலத்தில் வட இந்தியா முழுவதும் பிராமி எழுத்து வழங்கிவந்தது. அந்தப் பிராமி எழுத்தைத்தான் அவர்கள் தமிழகத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

அவர்கள் வருவதற்கு முன்னே தமிழகத்தில் தமிழர் ஒருவகையான தமிழ் எழுத்தை எழுதி வந்தனர். அந்தத் தமிழ் எழுத்து, பிராமி எழுத்து வந்த உடனே மறைந்துவிடவில்லை. புதிதாக வந்த பிராமி எழுத்து தமிழகத்தில் பரவுவதற்குச் சில காலஞ் சென்றது. பிராமி எழுத்து தமிழகத்தில் பரவுவதற்கு ஒரு நூற்றாண்டாவது சென்றிருக்க வேண்டும்.

பௌத்த சமண சமயங்களை வளர்த்த பௌத்த பிக்குகளும் சமண முனிவர்களும் தங்கியிருந்த இடங்களுக்குப் பள்ளி என்பது பெயர். அவர்கள், ஊர்ச் சிறுவர்களைத் தம்முடைய பள்ளிகளுக்கு அழைத்து அவர்களுக்குக் கல்விகற்பித்தார்கள்; பள்ளிகளில் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்தபடியால் பாடசாலைகளுக்குப் 'பள்ளிக் கூடம்' என்று புதிய பெயர் ஏற்பட்டது. அப்பெயர் இன்றளவும் வழங்கி வருகிறது. பள்ளிக்கூடங்களில் அவர்கள் பழைய தமிழ் எழுத்தைக் கற்பித்தார்கள். மத நூல்களைப் படிப்பதற்காகச் சிறுவர்களுக்குப் பிராமி எழுத்தையும் கற்பித்தார்கள். காலப் போக்கில் பழைய தமிழ் எழுத்து பையப்பைய மறைந்து போய்ப் புதிய பிராமி எழுத்து பரவத் தொடங்கியது. பழைய தமிழ் எழுத்து மறைந்துவிடவே புதிய பிராமி எழுத்து நாட்டில் பயிலப்பட்டது. தமிழ்நூல்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டன. பிராமி எழுத்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் வழங்கி வந்தது.

வட்டெழுத்து

அதன் பிறகு பிராமி எழுத்து வரி வடிவத்தில் மாறுதல் அடையத் தொடங்கி வட்டெழுத்தாக உருவடைந்தது. பிராமி எழுத்து திரிபடைந்த உருவமே வட்டெழுத்தாகும். வட்டெழுத்து ஏறத்தாழ கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரையில் தமிழகத்தில் வழங்கிற்று. அப்போது சுவடிகளும் கல்வெட்டுக்களும் வட்டெழுத்திலும் எழுதப்பட்டன. பல்லவ அரசர் காலத்தில் தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலும் வட்டெழுத்து மறைந்து வேறுவகையான பல்லவர் எழுத்து வழங்கி வந்தது. ஆனால், வட்டெழுத்து பாண்டி நாட்டிலும் சேர நாட்டிலும் தொடர்ந்து வழங்கி வந்தது. கி.பி. 10ஆம் நூற்றாண்டில், சோழர் பாண்டியரை வென்று அரசாண்ட காலத்தில் பாண்டி நாட்டில் வழங்கி வந்த வட்டெழுத்தை மாற்றிச் சோழர் இக்காலத்துத் தமிழெழுத்தைப் புகுத்தினார்கள். ஆகவே 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பாண்டி நாட்டில் வட்டெழுத்து மறைந்து போயிற்று. சேர நாட்டில் வழங்கி வந்த வட்டெழுத்து பிற்காலத்தில் மாறுதல் அடைந்து கோலெழுத்தாக

உருவம் பெற்றது. அண்மைக் காலத்தில் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் மலையாள மொழியின் தந்தை என்று கூறப்படுகிற துஞ்சத்து இராமானுசன் எழுத்தச்சன், கிரந்த எழுத்திலிருந்து[1] இப்போதைய மலையாள எழுத்தை உண்டாக்கினார். அதன் பிறகு மலையாள நாட்டில் கோலெழுத்தும் மறைந்து போயிற்று.

நான்குவகை எழுத்துக்கள்

தொடக்க காலத்திலிருந்து இன்று வரையில் தமிழர் நான்கு வகையான எழுத்துக்களை எழுதி வந்தனர் என்பதை அறிகிறோம் சங்ககாலத்தில் வழங்கி வந்த பழந்தமிழ் எழுத்து, பிறகு வந்த பிராமி எழுத்து, பிராமியிலிருந்து உருவம் பெற்ற வட்டெழுத்து, தற்காலச் சோழர் எழுத்து என்பவை அவை. பழந்தமிழ் எழுத்துச் சுவடிகளும், பிராமி எழுத்துச் சுவடிகளும் வட்டெழுத்துச் சுவடிகளும் இக்காலத்தில் அடியோடு மறைந்துபோய்விட்டன.

ஏனென்றால் ஓலைச் சுவடிகள் இரண்டு நூற்றாண்டுக்கு மேல் நிலைத்திருப்பதில்லை. ஆகவே அந்த எழுத்துச் சுவடிகள் இப்போது முழுவதும் மறைந்துவிட்டன. ஆனால் வட்டெழுத்தின் வரிவடிவம் இப்போதும் நமக்குக் கிடைத்திருக்கிறது. மலைக் குகைகளிலும் குன்றுப் பாறைகளிலும் செப்பேடுகளிலும் எழுதப்பட்ட வட்டெழுத்துச்சாசனங்கள் அழியாமல் கிடைத்துள்ளன. வட்டெழுத்துக்கு முன்பு வழங்கிவந்த பிராமி எழுத்துக்கு முன்பு வழங்கப்பட்ட பழைய தமிழ் எழுத்தின் வரிவடிவம் இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை. சங்ககாலத்தில் எழுதப்பட்ட பழைய நடுகற்கள் கண்டு பிடிக்கப் பட்டால் ஒருவேளை அந் நடுகற்களில் பழைய தமிழ் எழுத்து

[1] கிரந்த எழுத்து என்பது தென் இந்தியாவில் வழங்கிவந்த ஒரு வகையான எழுத்து. இந்த எழுத்தைப் பௌத்தரும், சமணரும், தென்னிந்தியாவில் புதிதாக அமைத்தார்கள். கிரந்த எழுத்தை அவர்கள் பிராமி எழுத்திலிருந்து உருவாக்கினார்கள். கிரந்த எழுத்தைப் பிராகிருத நூல்களை எழுதவும் சமஸ்கிருத நூல்களை எழுதவும் பயன்படுத்தினார்கள். கிரந்த எழுத்து குமரிமுனையிலிருந்து வடக்கே விந்திய மலை வரையில் நெடுங்காலம் வழங்கிவந்தது.

வடிவத்தைக் காணக்கூடும். (இப்போது கிடைத்துள்ள நடுகற்கள் கி.பி.8ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நடுகற்கள்.)

பிராமி எழுத்தின் கரந்துறை வாழ்க்கை. (அஞ்ஞாதவாசம்)

நம்முடைய இப்போதைய ஆய்வு பிராமி எழுத்தைப் பற்றியதாதலால் இதைத் தொடர்ந்து ஆராய்வோம். தமிழகத்தில் வழங்கி வந்த பிராமி எழுத்து ஏறத்தாழ கி.பி.3ஆம் நூற்றாண்டில் மறைந்துவிட்டது என்று கூறினோம். ஆனால் மலைக்குகைகளிலும் பாறைக் குன்றுகளிலும் அந்தக் காலத்தில் எழுதப்பட்டபிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் அழியாமல் இன்றளவும் நிலை பெற்றிருக்கின்றன. பதினேழு நூற்றாண்டுகள் மறைந்து கிடந்த அந்த எழுத்துக்கள் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டன. 1700 ஆண்டுகள் மறைந்து கிடந்த பிராமி எழுத்துக்கள், மலைக்குகைகளிலே ஒளிந்து கிடந்த அந்த எழுத்துக்கள் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன அது வரையில் அவை மறக்கப்பட்டு மறைந்து கிடந்தன. மறக்கப்பட்டு மறைந்து கிடந்ததற்குக் காரணம், இடைக் காலத்திலே புதிய புதிய எழுத்துக்கள் தோன்றி வழங்கி வந்ததுதான்.

என்ன மொழி?

கி.பி. 4ஆம் நூற்றாண்டில் மறைந்துபோன பிராமி எழுத்து 20ஆம் நூற்றாண்டில் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தைச் சேர்ந்த ஆங்கிலேயர் ஒருவர் 1906ஆம் ஆண்டு பாளையங்கோட்டைக்கு அடுத்த மருகால்தலை என்னும் ஊருக்குச் சென்றவர், அவ்வூருக்கு அருகில் உள்ள குன்றுகளுக்குச் சென்றார். அங்கு ஒரு குன்றில் இயற்கையாக அமைந்துள்ள குகையின் வாயிலின் அருகில் சென்ற போது குகைவாயிலின் மேற்பாறையில் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருப்பதைக் கண்டார். பிறகு அவர், அந்த எழுத்துக்களைப் பற்றித் தொல்பொருள் - ஆய்வுத்துறை மேலாளருக்குத் தெரிவித்தார். தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலர் மருகால் தலைக்குன்றுக்குப் போய் அங்கிருந்த எழுத்துக்களைப் படி எடுத்து வந்தனர். பிறகு இந்தச் செய்தியை 1907ஆம் ஆண்டு எபிகிராபி ஆண்டு அறிக்கை

யில் வெளியிட்டார்கள். இந்த எழுத்துக்களை அவர்கள் அப்போது படிக்கத் தெரியாமல் இருந்தார்கள். இந்தக் கல்வெட்டெழுத்து, பிராமி எழுத்தாக இருக்கிறபடியால் இந்தக் கல்வெட்டின் வாசகம் பாலி மொழியில் எழுதப்பட்டதாக இருக்கவேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். இதற்கு முன்பே வட இந்தியாவிலும் இலங்கையிலும் பிராமி எழுத்துச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. அவை பாலி (பிராகிருத) மொழியில் எழுதப்பட்ட பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள். மருகால்தலை பிராமி கல்வெட்டும் பாலிமொழியில் எழுதப்பட்டதென்று அவர்கள் ஊகித்தார்கள். அவர்கள் தங்களுடைய அறிக்கையில் ''அசோக மாமன்னருடைய சாசன எழுத்துக்களைப் போன்ற எழுத்தினால் இந்தப் பாலிமொழிச் சாசனம் எழுதப்பட்டிருக்கிறது. பாலி மொழியில் எழுதப்பட்டிருக்கிறபடியால், அந்தப் பழங்காலத்தில் பாண்டி நாட்டில் பாலிமொழி தெரிந்திருந்தது என்பது தெரிகிறது'' என்று எழுதினார்கள்.[1] இது பிராமி எழுத்தினால் எழுதப்பட்ட தமிழ்மொழி வாசகம் என்பதை அறியாமல் அவர்கள் பாலி மொழி வாசகம் என்று கூறினார்கள்.

மருகால்தலை பிராமி கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்ட பிறகு வேறு பல பிராமிக் கல்வெட்டுக்கள் பாண்டி நாட்டிலும் மற்ற இடங்களிலும் புதியவாகக் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனைமலை, திருப்பரங்குன்றம், மாங்குளம் (அரிட்டாபட்டி), முத்துப்பட்டி, வரிச்சியூர் அழகர்மலை, கருங்காலக்குடி, கீழவளவு, மேட்டுப்பட்டி (சித்தர் மலை), விக்கிரமமங்கலம் (உண்டான்கல்லு), கொங்கர் புளியங் குளம், சித்தன்னவாசல், புகழூர், அரசலூர், மாமண்டூர், மால கொண்டா முதலான இடங்களில் பழைய பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் புதிதாகக் கண்டபிடிக்கப்பட்டு அவ்வப்போது எபிகிராபி ஆண்டு அறிக்கையில் வெளியிடப்பட்டன.

பிராமிக்கு முந்திய எழுத்து

தமிழ் இலக்கியங்களின் பழைமையை அறியாதவர்கள், தமிழ் இலக்கியங்கள் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு, 10ஆம் நூற்றாண்டுகளில்

[1] Madras Epigraphy Report, 1907, Part II, Para 1. P. 60.

தோன்றியவை என்று அக்காலத்தில் எழுதியும் பேசியும் வந்தனர். பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அவர்கள் தங்களுடைய கருத்து தவறு என்பதைக் கண்டார்கள். பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டிற்கும், கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தவை யாகையால், தமிழ் இலக்கியங்கள் அக்காலத்திலேயே தோன்றிவிட்டன என்று அவர்கள் ஒப்புக்கொண்டனர். ஆனால், பிராமி எழுத்து தமிழகத்துக்கு வருவதற்கு முன்னமே, வேறு பழையதமிழ் எழுத்து இருந்தது என்பதையும் அறியாமல், பிராமி எழுத்தும் தமிழகத்துக்கு வந்தபிறகு தான் தமிழருக்கு எழுத்துகிடைத்தது என்றும் பிராமி எழுத்தினால் அவர்கள் இலக்கியங்களை எழுதினார்கள் என்றும் சிலர்சொல்லத் தொடங்கினார்கள். அஃதாவது கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முன்பு தமிழில் எழுத்தும் இல்லை; இலக்கியமும் இல்லை என்பது இவர்கள் கருத்து.

அரிட்டாபட்டி கழுகுமலைக் குகையில் கண்டு பிடிக்கப்பட்ட கற்படுக்கைகள் பிராமி எழுத்துக்கள் இவற்றைப்பற்றி 1907 ஆம் ஆண்டு கல்வெட்டுத்துறை, இந்தப் பிராமிக் கல்வெட்டெழுத்து. தமிழ் எழுத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றியும் வட்டெழுத்தின் தோற்றம் வளர்ச்சியைப்பற்றியும் விளக்கந் தருகிற அரிய சான்றாக இருக்கிறது என்று எழுதியமை முன்னமே காட்டினோம்.

'தமிழ் நாட்டின் தெற்கு வட்டாரங்களில் பாறைகளிலும் குகைகளிலும் எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரையில் எழுதப்பட்டவை. அந்தக் கல்வெட்டுக்கள், தமிழ் எழுத்தும் தமிழ்மொழியும் உருவடைந்துகொண்டிருந்த காலத்தைத் தெரிவிக்கின்றன. தமிழரின் வட இந்தியக் கலாசாரத் தொடர்பு வளர்ச்சிக் காலத்தை இவை தெரிவிக்கின்றன' என்று திரு. கே. ஏ. நீலகண்ட சாத்திரி எழுதியுள்ளார்.[1] (கி.மு. 3ஆம் நூற்றாண்டிலேயே

---

1. Sangam literature: its cults and cultures. K.A. Nilakanta Sastri. 1962, P. 4.

பிராமி எழுத்து தமிழகம் வந்துவிட்டது. சாத்திரி கி.மு. முதல் நூற்றாண்டு என்று காலத்தைக் குறைத்துக் கூறுகிறார்.)

தமிழ்நாட்டு வரலாற்றைப் பொறுத்தவரையில் பல தவறான கருத்துக்களை வெளியிட்ட திரு நீலகண்ட சாத்திரி பிராமி எழுத்தைப் பற்றியும் தவறாகக் கூறியுள்ளார்.

திரு நீலகண்ட சாத்திரியின் இந்தத் தவறான கருத்தை ஐரோப்பியத் தமிழறிஞராகிய டாக்டர் கமல் சுவலபில் அவர்களும் ஆராயமல் இவரைப் பின்பற்றுவது வியப்பாக இருக்கிறது. இந்த அறிஞர், சாத்திரி கூறிய தவறான கருத்தையே பொன்போலப் போற்றி எழுதியுள்ளார்.

அசோகருடைய காலத்தில் அல்லது அவருடைய காலத்துக்குச் சற்றுப் பிறகு தமிழ் எழுத்து தமிழருக்குத் தெரிந்திருந்தது. கி.மு. 2ஆம் நூற்றாண்டளவில் தமிழ் மொழிக்குத் தமிழ் - பிராமி எழுத்து அமைத்துக் கொள்ளப்பட்டது. அமைத்துக் கொண்ட நெடுங் காலத் துக்குப் பிறகு அவ்வெழுத்து இலக்கியம் எழுதப் பயன்படுத்தப் பட்டது என்னும் கருத்துப்பட டாக்டர் சுவலபில் எழுதுகிறார்.[1] இந்தத் தவறான கருத்தையே அவர் மீண்டும் இன்னோர் இடத்தில் எழுதுகி றார்: கி.மு. 250ல் அல்லது அதற்குச் சற்றுப் பின்னர் அசோகன் (கி.மு. 272 - 232) உடைய தெற்குப் பிராமி எழுத்து தமிழ் ஒலியமைதிக்குப் பொருந்தத் தமிழில் அமைத்துக் கொள்ளப்பட்டது. கி.மு. 200-100க்கு இடையில் பௌத்த - சைனத் துறவிகள் இருந்த இயற்கைக் குகைகளில் தமிழ் - பிராமி எழுத்துக்கள் எழுதப்பட்டன என்று கூறுகிறார்.[2]

இவை ஆழ்ந்து ஆராயாமல் மேற்போக்காகக் கூறப்படுகிற கருத்துக்கள். தமிழின் பழைமையை யறிந்தவர், பிராமி எழுத்து வருவதற்கு முன்பு தமிழில் எழுத்து இல்லை, நூல்கள் இல்லை என்று கூறமாட்டார். தொடக்ககாலத்தில் தமிழில் ஏதோ ஒருவகையான தமிழ் எழுத்து வழங்கி வந்தது. பிராமி எழுத்து தமிழகத்துக்குப்

---

[1] The smile of Murugan. Dr. Kamil Zvelebil. 1973. P. 25.

[2] The smile of Murugan. Dr. Kamil Zvelabil. 1973. p. 140.

புதிதாக வந்த பிறகு, அதற்கு முன்பு வழங்கிவந்த பழைய தமிழ் எழுத்து மறைந்துபோய், பிராமி எழுத்து நிலைத்துவிட்டது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே' என்பது எழுத்து மாறுதல்களுக்கும் பொருந்தும். பழைய எழுத்தை மாற்றிப் புதிய எழுத்தை மேற்கொண்டதைத் துருக்கி நாட்டிலும் காண்கிறோம். துருக்கி மொழியின் பழைய எழுத்து அரபி எழுத்து. அரபி எழுத்தில் பழைய துருக்கி மொழி இலக்கியங்கள் எழுதப்பட்டன. அண்மைக் காலத்தில் துருக்கி நாட்டில் சீர்திருத்தங் களை உண்டாக்கிய துருக்கியின் தந்தை எனப்படும் ஆட்டா டர்க் என்பவர் பழைய அரபி எழுத்தை மாற்றிப் புதிதாக இலத்தீன் எழுத்தை (ஆங்கில எழுத்தை) அமைத்து விட்டார். இப்போது துருக்கியர் துருக்கி மொழி இலக்கியங்களைப் புதிய இலத்தீன் எழுத்தினால் எழுதி வருகிறார்கள். இப்போது இலத்தீன் எழுத்தினால் எழுதி வருவதனால், இலத்தீன் எழுத்து தான் துருக்கி மொழியின் ஆதி எழுத்து, இலத்தீன் எழுத்து வந்த பிறகுதான் துருக்கி இலக்கியம் உண்டாயிற்று என்று கூறுவது பொருந்துமா? அப்படிக் கூறுவது தவறு அல்லவா? இதுபற்றி விரிவாக எழுதுவதற்கு இஃது இடம் அன்று.

பிராமி எழுத்து வந்தபிறகுதான் தமிழர் இலக்கியம் வளர்த்தனர் என்று இவர்கள் கூறுவது தவறு. பிராமி எழுத்து வருவதற்கு முன்பே கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழில் இலக்கியங்களும் நூல்களும் எழுதப்பட்டிருந்தன. கி.மு. 8ஆம் நூற்றாண்டிலே தொல்காப்பியம் எழுதப்பட்டது. இவற்றையறியாமல் பிராமி எழுத்து வந்த பிறகுதான் தமிழில் இலக்கியம் தோன்றியது என்று இவர்கள் கூறுவது தவறு. பிராமி எழுத்து வருவதற்கு முன்பு பழைய தமிழ் எழுத்து தமிழகத்தில் வழங்கி வந்தது. பிராமி எழுத்து வந்த பிறகு பழைய தமிழ் எழுத்து மறைந்துவிட்டது என்பதுதான் தமிழின் பழைமைக்கும் வரலாற்றுக்கும் பொருத்தமானது.

வடக்குப் பிராமியும் தெற்குப் பிராமியும்

பிராமி எழுத்து வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் அக்காலத்தில் வழங்கிவந்தது. ஆனால் தென்னிந்திய பிராமிக்கும் வட இந்திய பிராமிக்கும் வரி வடிவில் சிறு வேறுபாடுகள் உண்டு.

இந்த வேறுபாடுகளை யறியாத காலத்தில் இவை சரியாகப் படிக்கப்படவில்லை. பிறகு தென்னிந்திய பிராமி எழுத்தைச் சரியாகப் படிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது. ஆந்திர நாட்டிலே கிருஷ்ணா வட்டாரத்தில் பட்டிப்ரோலு என்னும் ஊரில் பழங்காலப் பௌத்தத் தூபி ஒன்று உண்டு. அந்தத் தூபியைத் திறந்து தொல்பொருள் ஆய்வாளர் ஆராய்ந்து பார்த்தபோது அந்தத் தூபிக்குள் வட்ட வடிவமான கல் பேழை காணப்பட்டது. அந்தப் பேழையின் விளிம்பைச் சுற்றிலும் பிராமி எழுத்து வாசகம் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பிராமி எழுத்துக்கும் வட இந்தியப் பிராமி எழுத்துக்கும் சிறு வேற்றுமை காணப்பட்டது. பட்டிப்ரோலு பிராமி எழுத்து தென் இந்திய பிராமி எழுத்துக்களைச் சரியாகப் படிப்பதற்கு உதவியாக அமைந்தது. தென் இந்தியப் பிராமி எழுத்து திராவிடி என்று கூறினார்கள். பட்டிப்ரோலு பிராமி எழுத்து எபிகிராபியா இண்டிகா என்னும் வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.[1]

தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக்களில் தமிழுக்கே தனி சிறப்பாக உள்ள ழ, ற, ன என்னும் எழுத்துக்களும் காணப்படுகின்றன. இந்தச் சிறப்பு எழுத்துக்களைப் பிராமி எழுத்து வருவதற்கு முன்னே தமிழகத்தில் வழங்கிவந்த பழைய தமிழ் எழுத்திலிருந்து எடுத்துப் பிராமி எழுத்துக்களோடு அமைத்துக் கொண்டனர் என்று தோன்றுகிறது.

பிராமி எழுத்தின் ஒலி வடிவம்

பழங்காலத்தில் பாரத நாடு முழுவதும் வழங்கிவந்த பிராமி எழுத்து பிற்காலத்தில், வேறு எழுத்துக்கள் தோன்றிவிட்ட காரணத்தினால், மறக்கப்பட்டு மறைந்துபோயிற்று. நெடுங் காலத்துக்கு முன்பே பிராமி எழுத்துச் சுவடிகள் மறைந்து விட்டன. ஆனால், மலைப் பாறைகளிலும் குகைகளிலும் எழுதி வைக்கப்பட்ட பிராமி எழுத்துச் சாசனங்கள் அழியாமல் வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் அங்கங்கே இருக்கின்றன. இவற்றையெல்லாம் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் பல ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்தனர். பிராமி எழுத்தின் வரி வடிவங்களே காணப்

[1] P. 323, Epigraphia Indica, Vol.II

பட்டவை யெல்லாம். அவற்றின் ஒலி வடிவங்களே காணப்பட்டவை யெல்லாம். அவற்றின் ஒலி வடிவங்கள் மறைந்து போயின. அவற்றின் ஒலி வடிவங்கள் ஒருவருக்கும் தெரியவில்லை. அசோக மாமன்னரின் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களும் மற்றும் வேறு பல பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களும், அவ்வெழுத்துக்களின் ஒலி வடிவம் தெரியாத படியால், படிக்கப்படாமலே கிடந்தன. இந்தக் கல்வெட்டுக்களைப் படிக்க, திறவுகோல் கிடைக்காமல் இருந்தது.

கடைசியாக கி.பி. 18ஆம் நூற்றாண்டில் பிரின்ஸிப் என்னும் பெயருள்ள ஆங்கிலேயர் பல காலம் முயன்று பிராமி எழுத்துக் கல் வெட்டுக்களைப் படித்துத் திறவுகோலைக் கண்டுபிடித்தார். அஃதா வது பிராமி எழுத்தில் மறைந்துபோன ஒலி வடிவத்தைக் கண்டு பிடித்தார். அக்காலத்தில் ஆங்கிலேய தளபதிக்கு அங்குப் பழங் காசுகள் கிடைத்தன. அந்தக் காசுகளை அவர் வங்காள நாட்டுக்கு அனுப்பினார். பழம்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த பிரின்ஸிப் அந்தப் பழங்காசுகளை ஆராய்ந்தார். அந்தப் பழங்காசு கள் சிலவற்றில் அசோக மன்னர் காலத்து எழுத்துக்கள் (பிராமி எழுத் துக்கள்) பொறிக்கப்பட்டிருந்தன. அக் காசுகளின் மறுபக்கத்தில் பழைய கிரேக்க எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன. கிரேக்க எழுத்துச் சொற்களே பிராமி எழுத்திலும் எழுதப்பட்டிருந்தது என் பதை யறிந்த இவர் கிரேக்க ஒலியைக் கொண்டு பிராமி எழுத் துக்களின் ஒலியைக் கண்டுபிடித்தார். இப்படிப் பல காலம் உழைத் ததன் விளைவாகப் பழைய பிராமி எழுத்துக்களின் மறைந்துபோன ஒலி வடிவத்தைக் கண்டறிந்தார். பிராமி எழுத்தின் வரி வடிவத்துக்கு ஒலி வடிவம் கண்டபிடிக்கப்பட்டதனால் பழைய பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் வாசிக்கப்பட்டன. பல நூற்றாண்டுகளாக மறைந்து கிடந்த பிராமி எழுத்து வாசகம் 18 ஆம் நூற்றாண்டில் படிக்கப்பட்டது.

தமிழ்ப் பிராமியின் வாசகம்

1906 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது தமிழ்நாட்டில் ஆங்காங்கிருந்த பிராமி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் அந்த எழுத்துக்கள் நெடுங்காலம் படிக்கப்படவில்லை. பழம்பொருள்

ஆய்வுத் துறையினர், இவ்வெழுத்துக்கள் பாலி மொழி அல்லது பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருப்பதாகக் கருதினார்கள். இந்தக் கருத்து பல ஆண்டுகள் நிலவியிருந்தது. இந்தப் பிராமி எழுத்துக்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டன என்பதைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு அறிந்தனர். பிறகு இவ்வெழுத்துக்களைப் படித்த சிலர் தமிழராக இருந்தும் இக் கல்வெட்டுகளின் கருத்தைச் சரியாக அறியவில்லை. காரணம் என்னவென்றால் இந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட காலத்தில் (கடைச் சங்க காலத்தில்), தமிழ் நாட்டில் இருந்த இலக்கியங்களையும் பழக்க வழக்கங்களையும் நாகரிகங் களையும் அறியாததுதான். மற்றும், வடஇந்திய (ஆரிய) தொடர்பு களை இந்தக் கல்வெட்டுக்களோடு இணைக்கவேண்டும் என்னும் கருத்துடன் இவர்கள் ஆராய்ந்தனர். இதனால் இவர்களுடைய ஆராய்ச்சிகள் பிழைபட்டுள்ளன. இவர்கள் வெவ்வேறு கருத்துக் களை வெளியிட்டனர். தவறு இல்லாமல் சரியாக வாசிக்கப்பட்ட வாசகங்கள் மிகச் சிலவே.

வடமொழி வெறி

தமிழ்நாட்டிலுள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களை ஆராய்ந்து படித்துப் பொருள் காண்பவர் நடுநிலையுள்ளவராக இருக்கவேண்டும். அந்த எழுத்துக்கள் எழுதப்பட்ட காலத்துப் பழக்க வழக்கம் முதலியவற்றையும் அறிந்திருக்க வேண்டும். விருப்பு வெறுப்பு இல்லாமல் உண்மை காணும் கருத்து உள்ளவராகவும் நேர்மையாளராகவும் இருக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக வெறுப்பு உணர்வு உள்ளவராக இருத்தல் கூடாது.

தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களை ஆராய்ந்த ஒருவர் அளவுகடந்த சமற்கிருத வெறியுள்ள்வராக இருக்கிறார். அதுபற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால் அவர் தமிழ்மொழிமீதும் தமிழர் மீதும் வெறுப்புள்ளவராகவும் தவறான எண்ணமுள்ளவராகவும் இருக்கிறார். அவர் அவற்றைத் தம் இடத்திலேயே வைத்துக் கொண்டால் தவறு இல்லை. ஆனால் தமிழ் மொழியைப் பற்றித் தாக்கி எழுதியிருக்கிறார். ஆகவே அதை இங்கு எடுத்துக்காட்ட

வேண்டியிருக்கிறது. திரு. சி. கிருட்டிணராவ் என்பவர் வெறுப்புணர் வுடன் எழுதியுள்ளதை இங்குக் காட்டவேண்டியிருக்கிறது.

தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்களை முதல் முதலாகப் படித்தவர் எபிகிராபி இலாகாவில் இருந்த ராவ்சாகிப் எச். கிருட்டிண சாத்திரியும், திரு கே.வி. சுப்பிரமணிய அய்யரும் ஆவர். இவர்கள் தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களை சமற்கிருத - பிராகிருத மொழிக் கண்ணோட்டத்தோடு படித்து அரை குறையான கருத்துக்களைக் கூறினார்கள். இவர்கள் தங்கள் ஆராய்ச்சியில், இந்தக் கல்வெட்டுக்களில் தமிழ்ச் சொற்களும் இருக்கின்றன என்று கூறினார்கள். இவர்களுக்குப் பிறகு இந்த கல்வெட்டெழுத்துக்களை ஆராய்ந்த நாராயண ராவ், இவர்கள் கூறியதை முழுவதும் மறுத்துக் கல்வெட்டுக்களுக்குத் தொடர்பில்லாதவற்றைக் கூறித் தமக்குள்ள தமிழ் வெறுப்பையும் சமற்கிருத வெறியையும் காட்டியுள்ளார். இவர் எழுதியுள்ளதன் சுருக்கம் இது:

எபிகிராபி இலாகாவிலிருந்த ராவ் சாகிப், எச். கிருட்டிண சாத்திரி 1919ஆம் ஆண்டில் புனாவில் நடைபெற்ற அகில இந்திய முதலாவது ஓரியண்டல் மாநாட்டில், தமிழ்நாட்டுப் பிராமி கல்வெட்டெழுத்துக்களைப் பற்றி ஒரு கட்டுரை படித்தார். திரு.கே.வி. சுப்பிரமணிய அய்யர் 1924 ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த அகில இந்திய மூன்றாவது ஓரியண்டல் மாநாட்டில் அதே பொருள் பற்றி ஒரு கட்டுரை படித்தார். இந்த இரண்டு கட்டுரைகளும் இந்தப் பிராமி எழுத்துக்களின் பொருளை ஒருவாறு கூற முயன்றுள்ளன. இவர்களுடைய இந்த முயற்சிகள் இரண்டுவகையான கேடுகளுக்குக் காரணமாக உள்ளன. 1. இந்தப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களிலே, வேறு பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களில் காணப்படாத எழுத்துக்கள் காணப்படுவதால், அந்த எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்க முடியாதது ஒன்று. 2. இவர்கள் இருவரும் இந்தக் கல்வெட்டுக்களில் சில தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன என்பதை ஒத்துக்கொண்டிருப்பது இன்னொன்று.

திரு. சுப்பிரமணிய அய்யர், இந்தப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டவை என்று முன்னமேயே முடிவு செய்துகொண்டு இக்கல்வெட்டுக்களில் உள்ள சில எழுத்துக்களுக்கு முன்பின் அறியாத ஒலிகளைக் கற்பித்துக் கொண்டு படித்து அதிகக் குழப்பத்தை உண்டாக்கிவிட்டார். இந்தப் பிராமி சொற்றொடர்களைத் தமிழ்மொழிச் சொற்றொடர்கள்தாம் என்ற நிலைநிறுத்த முடியாத இவருடைய கற்பனைகள், இவரை இவைபற்றி ஆராய்ச்சி செய்யத்தூண்டி, இவருடைய கருத்துக்களுக்கு ஒப்பப் பல வகையான மாற்றங்களைச் செய்துவிட்டது. கிருட்டிண சாத்திரியும் கூட இவை தமிழ்மொழிக் கல்வெட்டுகள் என்பதை ஒப்புக்கொண்டு இவற்றில் தமிழ்ச் சொற்களையும் பிராகிருத மொழிச் சொற்களையும் கலந்து வாசகங்களைத் தாறுமாறாக்கிவிட்டார்.

இந்தக் கல்வெட்டுக்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டவை என்று எனக்குத் தோன்றுகிறது. மிகப் பழைய காலமாகிய கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இவற்றைத் தமிழ்மொழி என்று கூறித் தமிழுக்குப் பழைமை கொடுப்பது கூடாது. கி.மு 3ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களைத் தற்காலத் தமிழுடன் பொருத்தி உருமாற்றுவது விழிப்புணர்வு இன்றித் தவறான வழியில் செலுத்துவதாகும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கல்வெட்டுக்களைப் படித்த கிருட்டிண சாத்திரி, சுப்பிரமணிய அய்யர் போன்றவர்களே அதிகமாக மாறுபடுகிறபோது நான் மட்டும் சரியாகப் படித்துப் பொருள் காண்பேன் என்று நான் சொல்லவில்லை. அப்படிக் கூறுவது அறியாமையாகும். இந்தக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தினால் எழுதப்பட்டிருப்பதனாலும், ஏனைய (வடநாட்டுப்) பிராமி எழுத்துக்கல்வெட்டுக்கள் எல்லாம் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருப்பதானாலும், இந்தப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களும் பிராகிருத மொழியில் எழுதப் பட்டவையே என்று கருதி இவற்றிற்குப் பொருள் காண முயல்கிறேன்.

இந்தக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தினால் எழுதப் பட்டுள்ளன என்பதை நினைவில் வைக்க வேண்டும். இதுவரையில்

கண்டு பிடிக்கப்பட்ட பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் எல்லாம் பிராகிருத மொழியில்தான் எழுதப்பட்டுள்ளன. கல்வெட்டுக்களில் இரண்டொரு எழுத்துக்கள் தவிர மற்ற எழுத்துக்கள் எல்லாம் தெளிவாகத் தெரிகின்றன. இவற்றைக் கிருட்டிண சாத்திரி திறமை யாகப் படித்திருக்கிறார். இந்தப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களில் புதுமையாகக் காணப்படுகிற இரண்டொரு எழுத்துக்களைக் கொண்டு இந்தக் கல்வெட்டுக்கள் பிராகிருதம் அல்லாத மொழி (தமிழ்மொழி) என்று கருதுவது கூடாது. இந்தப் பிராமிக் கல்வெட்டுக்களில், ஏனைய பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களில் காணப்படாத எழுத்துக்கள் காணப்படுகின்றன. சில எழுத்துக்கள் வியப்பான புதிய உருவத்தைப் பெற்றுள்ளன.

இந்தக் கல்வெட்டுக்களின் வியப்பான அமைப்பு என்னவென்றால், இவை பிராகிருத மொழியைச் சேர்ந்த பைசாச மொழி என்பதே. பிராகிருத மொழி இலக்கண ஆசிரியர் கருத்துப்படி, பாண்டி நாட்டிலே பேசப்பட்ட மொழி பைசாச மொழியாகும். அவர்களுடைய இந்தக் கருத்தை இந்தக் கல்வெட்டுக்கள் மிகப் பொருத்தமாக உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாறு திரு. நாராயண ராவ் தமக்குள்ள அளவு கடந்த தமிழ் வெறுப்பினையும் அளவு கடந்த சமற்கிருத வெறியையும் வெளிப்படையாகக் காட்டியுள்ளார்.[1] இந்த சமற்கிருத வெறியருடைய கோமாளித்தனமான ஆராய்ச்சியை, பிராமி எழுத்து ஆராய்ச்சியில் பிறகு பார்ப்போம்.

இந்தியாவில் வழங்கி வருகிற மொழிகளில் தமிழ்மொழி மிகப் பழைமையானது என்பதையும் அது சமற்கிருதத்தைவிட, தொன்மையானது என்பதையும் செம்மை மனம் படைத்த அவர்கள் அறிவார்கள். வெறுப்பும் மொழிவெறியுங் கொண்ட நாராயணராவ் போன்றவர்கள் உண்மையை அறியமாட்டார்கள்.

---

[1] 'The Brahmi Inscription of South India. C. Narayana Rao. PP. 362 - 376. The New Indian Antiquary, Vol I. 1938 - 39.

என்ன மொழி?

தமிழ் நாட்டுப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது, கல்வெட்டு ஆராய்ச்சிக்காரருக்குக் குழப்பத்தை உண்டாக்கிவிட்டது. இலங்கையிலும் வட இந்தி யாவிலும் காணப்படுகிற பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் எல்லா பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்கிறபடியால், தமிழ் நாட்டில் காணப்படுகிற பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். அவ்வாறே கல்வெட்டு இலாகா ஆண்டு அறிக்கையிலும் இவை பாலி மொழியில் எழுதப்பட்டவை என்று எழுதினார்கள். ஆனால் படிக்க முயன்றபோது பிராகிருத மொழிக்கு மாறுபாடான வாக்கியங்களும் சொற்களும் காணப்பட்டன. கடைசியில் இந்த எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளது தமிழ் மொழி என்று அறிந்தனர். ஆனால், பாலி, அர்த்தமாகதி போன்ற பிராகிருத மொழிச் சொற்களும் இக் கல்வெட்டுக்களின் இடையிடையே காணப்படுகின்றன. இந்தச் சொற்களைச் சமற்கிருத மொழிச் சொற்கள் என்று அவர்கள் கருதினார்கள். ஆனால் அவர்களுடைய கருத்து தவறானது. அவை சமற்கிருத மொழிச் சொற்கள் அல்ல; பிராகிருத மொழி சொற்கள். இந்தக் கல்வெட்டெழுத்துக்களை எழுதியவர் பௌத்த சைன சமயத்தவர். இவர்கள் பிராகிருத மொழியைப் பயின்றவர். ஆகவே இந்தக் கல்வெட்டு வாக்கியங்களில் பிராகிருத மொழிச் சொற்களைச் சேர்த்து எழுதினார்கள். சங்க காலத்திலே தமிழில் வட இந்திய மொழியான பிராகிருதச் சொற்களே முதலில் கலந்தன. ஏனென்றால், பிராகிருத மொழியைப் பயின்றவர் பௌத்த சமண சமயத்தார்களே. தமிழ்நாட்டில் எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் எல்லாம் தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. அவை கடைச்சங்க காலத்தில் கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை. அவை பிராகிருத மொழி பயின்ற

பௌத்த சமணர்களால் எழுதப்பட்டவையாகையால் இத்தமிழ் மொழித் தொடரின் இடையிடையே பிராகிருத மொழிச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. பிராகிருத மொழிச் சொற்கள் கலவாத தமிழ் மொழித் தொடர்களும் இந்தக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

இடர்ப்பாடுகள்

பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களைப் படிப்பதில் இடர்ப் பாடுகள் உள்ளன. இவ்வெழுத்துக்கள் கற்பாறைகளில் எழுதப் பட்டுள்ளபடியால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப் பட்ட இந்த எழுத்துக்கள் காலப் பழைமையினாலுந் தட்பவெப்பக் கால நிலைகளினாலும் தேய்ந்தும் மழுங்கியும் உருமாறியும் உள்ளன. கற்பாறைகளில் உள்ள கீறல், பிளவு, வெடிப்பு, புள்ளி புரைசல்கள் முதலானவற்றினால் கல்வெட்டெழுத்துக்களின் சரியான வடிவம் தெரிவதில்லை. சில இடங்களிலே இன்ன எழுத்துதான் என்று அறிய முடியாதபடி சிதைந்துள்ளன. அவற்றின் சரியான வடிவத்தைக் கண்டுபிடித்துப் படிப்பது சங்கடமாக இருக்கிறது.

எழுத்தைப் பொறித்த கற்றச்சர் சில சமயங்களில் இடையே எழுத்துக்களைப் பொறிக்காமல் விட்டுவிடுவதும் உண்டு. இந்தப் பிழை பெரும்பாலும் ஒற்றெழுத்து இரட்டித்து வரும் இடங்களில் காணப்படுகின்றது. பளி, கொடுபிதவன், குறு, குன்றது, தசன், உபு, இயகன் என்று ஒற்றெழுத்து இரட்டிக்காமல் விடுபட்டிருக்கும். இவற்றை முறையே பள்ளி, கொடுப்பித்தவன், குன்று, குன்றத்து, தச்சன், உப்பு, இயக்கன் என்று இடமறிந்து படிக்க வேண்டும்.

புள்ளி இடப்பட வேண்டிய எழுத்துக்கள் பெரும்பாலும் புள்ளி இல்லாமலே பொறிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் கூறுகிறோம். பெருங்கடுங்கொன, தமமம, அதிடடானம, கிரன, ஊர, ஆதன என்று பொறிக்கப்பட்டிருக்கும். இவற்றைப் புள்ளியிட்டு முறையே பெருங்கடுங்கோன், தம்மம், அதிட்டானம், கீரன், ஊர், ஆதன் என்று படிக்க வேண்டும்.

இகர ஈற்றுச் சொற்களும் ஐகார ஈற்றுச் சொற்களும் சில இடங்களில் யகரமெய் சேர்த்து எழுதப்பட்டுள்ளன. மனிய், ஆந்தைய், மதிரைய், கனிய், பாளிய், வழுத்திய் என்று எழுதப் பட்டவை முறையே மனி, ஆந்தை, மதிரை, கனி, பாளி, வழுத்தி என்று படிக்கப்பட வேண்டும். சில இடங்களில் இகர ஈற்றுச் சொற் களின் கடைசியில் இகரமும் யகர மெய்யும் சேர்த்து எழுதப்பட்டிருப் பதும் உண்டு. நெல்வெளி இய், பாளிஇய் என்பவற்றை நெல்வெளி, பாளி என்று படிக்க வேண்டும். இவ்வாறு எழுதுவது அக்காலத்து முறை.

குறியீடுகள்

பிராமி எழுத்து வாக்கியங்களின் இறுதியில் சில குறிகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. கொங்கர் புளியங்குளம், அழகர்மலை இவ்விரண்டு இடங்களில் உள்ள பிராமி எழுத்துச் சொற்றொடர்களின் கடைசியில் இக்குறிகள் காணப்படுகின்றன. மற்ற இடங்களில் இக்குறிகள் காணப்படவில்லை. அந்தக் குறிகள் இவை.



இந்தக் குறியீடுகளும் வேறுசில குறியீடுகளும் இலங்கையில் உள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன.

இந்தக் குறியீடுகள், வாக்கியத்தின் முடிவைக் காட்டுகின்றன என்று அறிஞர் சிலர் கருதுகிறார்கள். கிருட்டிணசாத்திரி, கே.வி. சுப்பிரமணிய அய்யர், ஐ. மகாதேவன், டி.வி. மகாலிங்கம் ஆகியோர் இவ்வாறு கருதுகின்றனர். இவர்களுடைய கருத்து தவறானது என்று தோன்றுகிறது. இந்தக் குறிகள் வேறு ஏதோ பொருளைத் தெரிவிக்கின்றன.

卐 இந்தக் குறியைச் 卍 சுவஸ்திகம் என்றும் இது மங்கலத்தைக் குறிக்கிறது என்றும் திரு. கிருட்டிண சாத்திரி கருதுகிறார். இவர்

கூறுவது தவறு என்று தோன்றுகிறது. சுவஸ்திகத்தின் குறி 卐 இப்படி இருக்கும். நாற்சதுரமாக அமைந்த இந்தக் குறி வேறு எதையோ குறிக்கிறது என்று தோன்றுகிறது.

மேலே காட்டப்பட்ட குறிகள் ஏதோ எண்ணின் அளவை (பொன் அல்லது நாணயத்தின் மதிப்பைத்) தெரிவிக்கின்றன என்று தோன்றுகிறது. கொங்கர் புளியங்குளத்துக் கல்வெட்டில்.

'பாகலூர் போத்தன் பிட்டன் ஈந்தவை பொன்'

'குட்டு கொடங்கு ஈத்தவன் சிறு ஆதன் பொன்'

என்று எழுதப்பட்டுள்ளன. இந்தச் சொற்றொடர்களின் இறுதியில் உள்ள குறிகள், இவர்கள் செலவு செய்த பொன்னின் மதிப்பைத் தெரிவிக்கின்றன என்பது இந்தக் குறியீடுகளின் முன் உள்ள 'பொன்' என்னும் சொல்லினால் அறிகிறோம். எனவே இந்த அடையாளங்கள் இவர்கள் இக் குகைகளில் கற்படுக்கைகளை அமைப்பதற்குச் செலவு செய்த பொன்னின் அளவை (மதிப்பைத்) தெரிவிக்கின்றன என்பது ஐயமில்லாமல் தெரிகிறது.

அழகர் மலைப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களிலும் குறியீடுகள் காணப்படுகின்றன. ஆனால், குறியீடுகளின் முன்பு 'பொன்' என்னும் சொல் இல்லை. இல்லாமற்போனாலும் இக் குறியீடுகள் செலவு செய்யப்பட்ட பொன்னின் மதிப்பைக் குறிக்கின்றன என்று கருதலாம். அக் குறியீடுகள் இவை:

'மதுரை பொன் கொல்லன் ஆதன் ஆதன்'

'மதுரை உப்பு வாணிகன்'

'பணித வாணிகன் நெடுமூலன்'

'அணிகன்'

'கொழுவாணிகன் இளஞ்சேந்தன்'

இந்தப் பெயர்களின் இறுதியில் உள்ள குறியீடுகள் இப்பெயருள்ளவர் இக்குகையில் கற்படுக்கைகளை அமைப்பதற் காகச் செலவு செய்த தொகையைக் குறிக்கின்றன என்பது நன்றாகத் தெரிகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வழங்கிவந்த

இந்தக் குறியீடுகள் குறிப்பிடுகிற பொன்னின் அளவு (மதிப்பு) இன்னதென்று இப்போது தெரியவில்லை.

கற்படுக்கைகள் ஏன்?

அந்தப் பழங்காலத்திலே பௌத்த சமயத்துத் தேரர்களும் சைன சமயத்துத் துறவிகளும் ஊர்களில் தங்காமல் ஊருக்கப்பால் காடுகளில் மலைக்குகைகளில் இருந்து தவம் செய்தார்கள். பாயில் படுக்காமல் தரையில் படுப்பது அவர்களுடைய நோன்பு. அவர்கள் இருந்த குகைகளின் கற்றரைகள் இயற்கையாகக் கரடுமுரடாகவும் மேடுபள்ளமாகவும் இருந்தன. ஆகவே, அவர்களுடைய சாவகர்கள் (சாவகர் - சிராவக இல்லறத்தார்) கற்றரைகளைச் சமப்படுத்திச் செம்மையாக்கி வழவழப்புள்ள கற்படுக்கைகளை அமைத்துக் கொடுத்தார்கள்.

மழை பெய்தால் பாறைகளின் மேலிருந்து வழிந்து வருகிற மழைநீர், குகை வாயிலின் மேற்பாறை வழியாக விழுந்து குகையின் உட்புறத்தை நனைத்து ஈரமாக்கிவிடும். குகை வாயிலின் மேற்புறப் பாறையிலிருந்து விழுகிற நீர் காற்றினால் உந்தப்பட்டுக் குகை முழுவதும் பாய்ந்து நனைத்துவிடும். அதனால் குகைக்குள் இருக்கும் துறவிகளின் உடம்பு நனைந்து ஈரமாகிக் குளிரும் காய்ச்சலும் ஏற்படும். இவ்வாறு நேராதபடி, குகை வாயிலின் மேற்பாறை யிலிருந்து மழைநீர் வாயிற்புறத்தில் விழாதபடி தடுத்து மழைநீர் பாறைகளின் இருபுறமும் பக்கவாட்டமாக வழிந்து போகும்படி உளியினால் மேற்புறப் பாறையைச் செதுக்கித் தூம்புபோல அமைத்தனர். இவற்றை யெல்லாம் கற்றச்சரைக் கொண்டு செய்விக்க வேண்டும். கற்றச்சருக்குக் கூலியாகப் பொருள் தரவேண்டும்.

பொருள் செலவு செய்து மலைக்குகைகளில் கற்படுக்கைகளை அமைத்தும் மழைநீர் உள்ளே விழாதபடி தடுத்துப் பக்கங்களில் வழிந்து போகும்படி தூம்புகளைச் செதுக்கியும் கொடுத்தனர். தாங்கள் அளித்த கொடைகளைப் பற்றி ஏடுகளில் தங்கள் பெயர்களை எழுதிவைப்பது உலக இயற்கை. இவற்றை அமைத்துக் கொடுத்தவர்

தங்கள் பெயர்களைக் கற்படுக்கைகளிலும் குகைவாயில்களின் மேலும் செதுக்கி வைத்தனர். குகைகளில் இருந்த துறவிகள் பௌத்த - சைன மதத்தவர் ஆகையாலும் அவர்களுக்காகப் படுக்கைகளை அமைத்துக் கொடுத்தவரும் அந்த மதங்களைச் சேர்ந்தவர் ஆகையினாலும் அந்த மதத்தார் கையாண்டு வந்த பிராமி எழுத்தினால் இதை எழுதி வைத்தார்கள். (சைவ வைணவ மதத்துத் துறவிகள் காடுகளிலும் குகைகளிலும் வசிக்கவில்லை. ஆகவே அவர்களுக்குக் குகைகளில் கற்படுக்கைகள் அமைக்கப்பட வில்லை.)

சங்கச் செய்யுட்கள் ஏன் கூறவில்லை?

கடைச் சங்க காலத்திலே (கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையில்) எழுதப்பட்ட சங்கச் செய்யுட்களிலே இந்தக் குகைகளைப் பற்றியும் இங்கு இருந்த முனிவர்களைப் பற்றியும் ஏன் கூறப்படவில்லை என்று கேள்வி எழுகிறது. சங்கச் செய்யுட்களை எழுதினவர் பெரும்பாலும் பௌத்த - சமணர்அல்லாத சைவ - வைணவர்கள். மேலும் அவர்கள் அகப்பொருள் புறப்பொருள்களைப் பற்றி, செய்யுட்களைச் செய்தனர். காதலையும் வீரத்தையும் பற்றிப் பாடின. செய்யுட்களில் துறவிகள் (சமண - பௌத்தத் துறவிகள்) இடம்பெற வேண்டிய வாய்ப்பு இல்லை. ஆகவே இவற்றைப் பற்றிய செய்திகள் சங்கச் செய்யுட்களில் இடம் பெறவில்லை.

ஆனால், சங்கச் செய்யுட்களிலே காடுகளில் குகைகளில் வசித்த முனிவர்களைப் பற்றிய குறிப்புகள் குறிப்பாகக் காணப்படுகின்றன. சல்லியங்குமரனார் நற்றிணை 141 ஆம் செய்யுள் 'குன்றுறை தவசியரை'க் குறிப்பிடுகிறார்.[1]

---

[1] "பொரியரை ஞெமிர்த்த புழற் காய்க் கொன்றை
நீடிய சடையோடு ஆடா மேனிக்
குன்றுறை தவசியர் போல"

(நற். 141: 3 - 5)

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், சமண மதத்துத் துறவிகள் மலைப்பக்கங்களில் இருந்ததைக் குறிப்பாகக் கூறுகிறார்.[1]

கலித்தொகை மருதக்கலி 28ஆம் செய்யுள் 'கடவுட் பாட்டு' என்று கூறப்படுகிறது. (கடவுள் - முனிவர், துறவிகள்). இந்தச் செய்யுளிலும் சமண சமயத்துத் துறவிகள் மலையில் இருந்தது குறிப்பாகக் கூறப்படுகிறது. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் சமண சமயத் துறவிகள் மலைகளில் இருந்து தவஞ் செய்தனர். இதைத் திருஞான சம்பந்தர் 'ஆனைமாமலை ஆதியாய இடங்களில்' சமண சமயத் துறவிகள் இருந்ததைக் கூறுகிறார்.

பிராமிக் கல்வெட்டுக்களினால் அறியப்படுபவை

தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையில் எழுதப்பட்டவை. இதே காலத்தில்தான் சங்கச் செய்யுட்கள் (கடைச் சங்கச் செய்யுட்கள்) பாடப்பட்டன. சங்கச் செய்யுட்கள் பெரும்பாலும் தனித் தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. அச் செய்யுட்களில் பிராகிருத மொழி வடமொழிச் சொற்களின் கலப்பு மிகச் சிலவே.

(ஆடாமேனித் தவசியர் - அசையாமல் தியானத்தில் இருக்கும் உடம்பையுடைய தவசியர் என்று இதற்குப் பொருள் கொள்வது கூடாது. ஆடாமேனி என்பதற்கு, நீராடாத உடம்பையுடையவர் என்பது பொருள் சைன முனிவர் நீராடுவது கூடாது என்பது அந்த மதக் கொள்கை.)

1. **''உண்ணாமையின் உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத்து ஆன்றோர் போல
வரைசெறி சிறுநெறி நிரையுடன் செல்லும்
கானயானை கவினழி குன்றம்.''** **(அகநா. 132: 1-4)**

(மலைகள் நெருங்கிய இடுக்கான காட்டுவழியில், உணவு கொள்ளாமல் பட்டினியிருப்பதனால் வாடிய தோற்றத்தையும் நீராடாத விரதத்தையும் உடைய சமண முனிவர் செய்வது போல, மலையிடுக்கு வழியில் யானைகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றன என்பது இதன் பொருள்.)

ஆனால், அக்காலத்தில் வேற்றுமொழி (முக்கியமாக பிராகிருத மொழியும் சமக்கிருத மொழியும்) கலப்பு ஏற்படவில்லை என்று கருதுவது வரலாற்றுக்குப் பொருந்தாது. பிராகிருத மொழிச் சொற்கள் கடைச்சங்க காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கி வந்ததைப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்குகின்றன. அச் சொற்களைக் காட்டுவோம். தம்மமன் (தருமம்), ஸாலகன், நிகமம், உபாசன், விஸுவன் (ஓர் ஆளின் பெயர்) அதிட்டானம், காஞ்சணம், பணிதம், கரஸபன் (ஆளின் பெயர்) காயிபன் (ஆளின் பெயர்) குவிரன், கோயிபன் (கோசிபன்) குலஸ, ஸெட்டி முதலியன.

கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையில் கிரேக்க - உரோம நாடுகளிலிருந்து தமிழகத்துக்கு வந்து வாணிகஞ் செய்த யவனர் வாயிலாக, சில கிரேக்க மொழிச் சொற்கள் சங்க காலத் தமிழில் கலந்துவிட்டதைக் காண்கிறோம். அவை, சுருங்கை, மத்திகை, கலம் (மரக்கலம்), கன்னல் முதலியன. வாணிகத்துக்காக வந்துபோன யவனரின் கிரேக்க மொழிச்சொற்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன என்றால், மதச் சார்பாகத் தமிழகத்துக்கு வந்து ஏறத்தாழ 500 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்து வந்த பௌத்த - சமண சமயத்தவர்கள் மூலமாகப் பாலி, சூரசேனி என்னும் பிராகிருத மொழிச் சொற்கள் தமிழோடு கலக்காமல் இருக்குமோ? கி.மு. 3ஆம் நூற்றாண்டில் வந்து தமிழகத்தோடு கலந்துபோன பௌத்த சமண சமயங்களின் 'தெய்வ' மொழியாகிய பாலி சூரசேனி மொழிச் சொற்கள் சமயச் சார்பாகத் தமிழரிடையே கலக்காமல் இருந்திருக்க முடியுமா? பௌத்த - சமண சமயங்களை மேற்கொண்ட தமிழர் பிராகிருத மொழிகளைக் கற்றனர். வடமொழியையும் கற்றனர். அதனால் அவர்கள் சமயநூல் எழுதினபோது அந் நூல்களில் பிராகிருத மொழிச் சொற்களைக் கலந்து எழுதினார்கள். சீத்தலைச் சாத்தனர் தமிழை நன்கு கற்றவர். அதனோடமையாமல், பௌத்தர் என்னும் முறையில் பாலி மொழியையும் நன்கு கற்றவர். ஆகவே, அவருடைய

மணிமேகலையில் தாராளமாகப் பாலி மொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவர் காலத்தவரான இளங்கோ அடிகள் தாய்மொழியாகிய தமிழ்மொழியை நன்றாகக் கற்றவர். அதனோடு அமையாமல், சமணர் என்னும் முறையில் பிராகிருத மொழியையும் நன்கு கற்றவர். அவர் இயற்றிய சிலப்பதிகாரத்தில் பல பிராகிருத மொழிச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. அதே காலத்திலிருந்த சங்கப் புலவர்கள் தனித் தமிழ் கற்றவர்கள். அவர்கள் அயல்மொழிகளைக் கற்றவர் அல்லர். அவர்கள் தனித் தமிழ் மொழியில் தமிழ் மரபுப்படி அகப்புறப் பொருள் பற்றிய செய்யுட்களை இயற்றினார்கள். அதனால் அவர்களின் செய்யுட்கள் தனித் தமிழாக உள்ளன. அவர்கள் காலத்தில் வேற்றுமொழிகள் தமிழில் கலக்கவில்லை என்று கூறுவது வரலாற்றுக்கும் உண்மைக்கும்பொருந்தாது. தனித்தமிழ்ப் புலவர்களான சங்கப் புலவர் காலத்திலேயே பிராகிருதச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன என்பதற்குப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களும் மணிமேகலை சிலப்பதிகாரக் காவியங்களும் சான்று பகர்கின்றன. இந்த வரலாற்று உண்மையை யறியாத சிலர், கடைச் சங்க காலத்தில் வேறு மொழிச் சொற்கள் கலக்கவில்லை என்றும் தனித் தமிழ் வழங்கிற்று என்றும் கூறுவதும், மணிமேகலை சிலப்பதிகாரக் காவியங்கள் சங்க காலத்துக்குப் பிறகு சில நூற்றாண்டு கழித்து எழுதப்பட்டன என்று கூறுவதும், வரலாற்றுக்கும் உண்மைக்கும் பொருந்தாத சான்றுகளாகும். கி.மு. 3ஆம் நூற்றாண்டில் தமிழகத்துக்கு (பௌத்த, சமண மதங்களோடு) வந்த பாலி சூரசேனி முதலான பிராகிருத மொழிச் சொற்கள் கலவாமல், கடைச் சங்கம் முடிகிற வரையில் காத்துக்கொண்டிருந்து, கி.பி. 3ஆம் நூற்றாண்டில் கடைச் சங்கம் முடிந்த பிறகு தமிழில் கலந்தது என்று கூறுவது மொழியின் இயற்கையும் வரலாற்று உண்மையும் அறியாதவர் கூறும் கூற்றாகும்.

சங்க காலத்திலேயே பிராகிருதம் போன்ற வடமொழிச் சொற்கள் பௌத்தத் தமிழரிடையே புகுந்து பொதுமக்களிடையேயும் பரவிவிட்டது என்பதே வரலாற்று உண்மை. அதற்குச் சான்றாக

இருப்பது பிராமிக் கல்வெட்டெழுத்துக்களில் காணப்படுகிற பிராகிருத மொழிச் சொற்கள்.

தமிழ்மொழி உயிருள்ள மொழி. நெடுங்காலமாக வழங்கி வருகிற மொழி. உலகத்திலே, வழங்கி வருகிற உயிருள்ள மொழிகள் எல்லாம் வாணிகம், சமயம், அரசாட்சி, கலை முதலியவற்றின் தொடர்பாக வேற்றுமொழிச் சொற்களையும் பெற்றுக் கொள்வது இயல்பு. இந்த இயல்புப்படி சங்க காலத்திலேயும் சமயத் தொடர்பு பற்றி (பௌத்தம் சமணம்) பிராகிருத மொழிச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. இந்த வரலாற்று உண்மையை மறுக்க முடியாது. சங்க காலத்திலே அயல்மொழிச் சொற்கள் கலவாமல் தூய தமிழ் மட்டும் இருந்தது என்று கூறுவது பொருந்தாது. வடநாட்டுப் பௌத்தமும் சமணமும் வந்தபோதே அவர்களோடு பிராகிருத மொழியும் வந்துவிட்டது. அவர்கள் வருவதற்கு முன்பு. வேறு மொழித் தொடர்பு இல்லாத காலத்தில், தூய தமிழ் வழங்கியது உண்மை. ஆனால், வேறு மொழிகளைச் சமய மொழியாகக் கொண்ட பௌத்தமும் சமணமும் தமிழகத்திலே வந்து (கி.மு. 3ஆம் நூற்றாண்டு வரை) 500 ஆண்டுகளாகத் தமிழரோடு உறவாடிக் கொண்டிருந்த காலத்தில் வேறு மொழிச்சொற்கள் கலவாமல் தூய தமிழ்மொழிதான் வழங்கிற்று என்று கூறுவது பொருந்தாது. சங்க இலக்கியங்களில் தூய தமிழாக இருக்கின்றன என்றால், அவை தமிழ் மரபுப்படி இயற்றப்பட்டவை. அகப்பெருள் புறப் பொருள்களைப் பற்றிப் பாடப்பட்டவை. ஆகவே பழந்தமிழ் மரபு அவற்றில் காணப் படுகின்றன. ஆனால் அந்தக் காலத்திலேயே தமிழ்மொழியில் வேறு மொழிச் சொற்களும் கலந்துவிட்டன. அந்தத் தமிழ் இலக்கியங் கள்தாம் சிலப்பதிகாரமும் மணிமேகலையும்.

பிராமிக்கு முன்பு

பிராமி எழுத்து பௌத்த - சைன மதங்களின் சார்பாகத் தமிழகத்துக்கு வந்தது. பிராமி எழுத்து வருவதற்கு முன்பு தமிழில் வேறுவகையான எழுத்து நடைமுறையில் இருந்தது. தொல்காப்பியம்

முதலான பழைய இலக்கண இலக்கிய நூல்கள் பழைய தமிழ் எழுத்தினால் எழுதப்பட்டன. பிராமி எழுத்து தமிழகத்தில் நுழைந்த பிறகு, பழைய தமிழ் எழுத்து மெல்ல மெல்ல ஒதுக்கப்பட்டுப் புதிய பிராமி எழுத்து மெல்ல மெல்ல முதன்மை பெற்றது. இந்த எழுத்து மாறுதல் திடீரென்று ஏற்படவில்லை. பழைய எழுத்து மறைவதற்கும் புதிய எழுத்து இடம் பெறவும் பலகாலம் சென்றிருக்க வேண்டும். இரண்டு நூற்றாண்டுகளாவது சென்றிருக்க வேண்டும். பௌத்த - சைன மதங்களின் கொள்கை பரப்புதலினாலே பிராமி எழுத்து தமிழகத்தில் விளக்கமடைந்தது.

அறிஞர் சிலர் பிராமி எழுத்து வந்தபிறகுதான் தமிழ் மொழியில் இலக்கியங்கள் ஏற்பட்டன என்றும் அதற்கு முன்பு தமிழில் இலக்கிய நூல்கள் எழுதப்படவில்லை என்றும் கூறுகின்றனர். 'அவர்கள் கூற்று தவறானது. பிராமி எழுத்து தமிழகத்தில் புகுவதற்கு முன்பே தமிழருக்கு உரிய தமிழ் எழுத்தும் நூல்களும் இருந்தன.

தமிழ்நாட்டில் பிராமி கல்வெட்டுக்களை எழுதியவர் நன்றாகத் தமிழ் கற்காதவர். அவர்கள் பிராகிருதச் சொற்களையும் சேர்த்துப் பேச்சு நடையில் எழுதியுள்ளனர். அந்தச் சொற்களையும் பிழையாக பாமரர் பேச்சுநடையில் எழுதியுள்ளனர். மணிய் (மணி), கணிய் (கணி), பண அன் (பணயன்) வழுத்தி (வழுதி), ஆந்தைய் (ஆந்தை), மத்திரை (மதுரை), பளி (பள்ளி), காவிதி இய் (காவிதி) கொட்டு பிதோன் (கொடுப்பித்தோன்) முதலான கொச்சைச் சொற்களைக் காண்க. சில பிராமி எழுத்து வாக்கியங்கள் வினைச்சொல் (பயனிலை) இல்லாமலே எழுதப்பட்டுள்ளன. யானைமலை, குன்றக் குடி அழகர்மலை என்னும் இடங்களில் உள்ள கல்வெட்டுக்கள் நன்றாகப் படிக்காதவர்களால் கொச்சைத் தமிழில் எழுதப்பட்டுள்ளன. அதே சமயத்தில் சங்கப் புலவர்களின் உயர்ந்த, சிறந்த செந்தமிழ் நடைச் செய்யுள்களும் வழங்கி வந்துள்ளன். இவ்வாறு, ஒரே சமயத்தில் உயர் தனிச் செம்மொழி நடையும் பிராகிருதம் கலந்த கொச்சைத் தமிழ் நடையும் வழங்கின என்பதைப் பிராமி எழுத்து வாசகங்களினால் அறிகிறோம். இதற்குக் காரணம் பழைய தமிழ்

எழுத்தைப் பயின்று வந்ததும் அதே சமயத்தில் புதிய பிராமி பயிலப்பட்டு வந்ததும் என்பது தெரிகிறது. யூபிரிதிஸ் தைகிரிஸ் ஆறுகள் பாயும் மொசபடோமியாவில், பழங்காலத்தில் இருந்த கால்டியா தேசத்தில் ஒரே சமயத்தில் இரண்டு வகையான எழுத்துக்கள் வழங்கி வந்ததை வரலாற்றில் அறிகிறோம். அந் நாட்டு மதகுருமார் தங்களுக்கென்று ஒருவகை எழுத்தை எழுதினார்களாம். அதே சமயத்தில் பாமரக் குடிமக்கள் இன்னொரு வகையான எழுத்தை எழுதினார்களாம். அதுபோலவே, தமிழ்நாட்டில் சங்கப் புலவர் பயின்ற பழந்தமிழ் எழுத்து ஒன்றாகவும், பௌத்த சமண மதத்தவர் எழுதிய புதிய பிராமி எழுத்து வேறாகவும் இருந்தன. இந்த நிலை ஒன்றிரண்டு நூற்றாண்டு இருந்திருக்க வேண்டும். பிறகு பிராமி எழுத்து மிகப்பரவி வளர்ந்ததனால் பழைய தமிழ் வரி வடிவம் மறைந்து போயிற்று.

இதை அறியாமல் சிலர், பிராமி எழுத்து தமிழகத்துக்கு வருவதற்கு முன்பு தமிழில் இலக்கியமும் இலக்கணமும் இல்லை என்றும், பிராமி வந்த பிறகுதான் அந்த எழுத்தைக் கொண்டு தமிழ்நூல்கள் எழுதப்பட்டன என்றும் கூறுவது ஏற்கத்தக்கதன்று. அவர்கள் கூற்று தவறு. இதுபற்றி விளக்கமாக எழுதினால் இடம் விரியும் என்று அஞ்சி இதனோடு நிறுத்துகிறோம். தமிழ் நாட்டுப் பிராமி எழுத்துக் கல்வெட்டு எழுத்து மொழிகள் பௌத்த சமண முனிவர்கள் வாழ்ந்த குகைகளில் எழுதப்பட்டுள்ளன. அவற்றை எழுதினவர் பௌத்த - சமண சாவகர்கள். அவர்கள் பிராகிருதம், தமிழ் இரண்டையும் கலந்த கொச்சைத் தமிழில் பிழையாக எழுதினவைதாம்,பிராமியக் கல்வெட்டுக்கள். செந்தமிழ் நடைக்கும் அவர்களுடைய கொச்சை நடைக்கும் தொடர்பு இல்லை. இந்தச் கொச்சை நடையைத்தான் தமிழர் எல்லோரும் வழங்கினார்கள் என்று கூறுவது வரலாறு அறியாதவர் கூற்றாகும்.

துருக்கி மொழியின் பழைய எழுத்து அரபி எழுத்து. அரபி எழுத்தினாலே துருக்கி மொழியின் இலக்கண இலக்கியங்கள் தொன்று தொட்டு எழுதப்பட்டன. அண்மையில் துருக்கி நாட்டில்

ஏற்பட்ட சீர்திருத்தப் புரட்சி காரணமாக, பழைய அரபி எழுத்து மாற்றப்பட்டுப் புதிதாக இலத்தின் (ஆங்கில) எழுத்து அங்கு எழுதப்படுகிறது. துருக்கி மொழி நூல்களும் இலக்கியங்களும் இக் காலத்தில் இலத்தின் எழுத்தினால் எழுதப்பட்டு வருகின்றன. இலத்தின் எழுத்துக்களால் துருக்கி மொழி இலக்கியங்கள் எழுதப்படுவதனால், இலத்தின் எழுத்து வந்த பிறகுதான் துருக்கி மொழியின் இலக்கிய இலக்கணங்கள் உருவடைந்தன என்று எந்த அறிஞரும் கூறமாட்டார். துருக்கி மொழியில் எழுத்து மாறிற்றே தவிர, இலத்தின் எழுத்து வந்தபிறகுதான் துருக்கி மொழி இலக்கியங்கள் தோன்றின என்பது தவறு. இது யாவரும் அறிந்ததே.

இதுபோலவே, சங்ககாலத்தில், பழந்தமிழ் எழுத்துக்குப் பதில், பிராமி எழுத்து எழுதப்பட்டபோது, எழுத்து மாறிற்றே தவிர, பிராமி எழுத்து வந்தபிறகுதான் தமிழ் இலக்கியம் தோன்றிற்று என்பதும் தவறு. தமிழ் மரபும் தமிழ்மொழி வரலாறும் அறியாதவரே தவறான கருத்தைக் கூறுவர்.

படித்த முடிவுகள்

தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் கடைச் சங்ககாலத்தில் எழுதப்பட்டவை என்று கூறினோம். அதாவது கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையில் எழுதப்பட்டவை என்று சொன்னோம். இந்த எழுத்துக்களைப் படித்துப் பொருள் காண அறிஞர் சிலர் முயன்றனர். இராவ்சாகிப் எச். கிருட்டிண சாத்திரி, கே.வி. சுப்பிரமணிய அய்யர். சி. நாராயணராவ், ஐராவதம் மகாதேவன், டி.வி. மகாலிங்கம் ஆகியோர் இந்தக் கல்வெட்டுக்களைப் படித்துப் பொருள் கூறினார்கள் ஆனால், அவர்கள் எல்லோரும் ஒரே முடிவுக்கு வரவில்லை. வெவ்வேறு கருத்துக்களைக் கூறிச் சென்றனர். இதற்குக் காரணம் சில எழுத்துக் களை வெவ்வேறு எழுத்தாகக் கொண்டு படித்தது ஒன்று. எழுத்துக் களைச் சேர்த்து, சொல் சொல்லாகப் பிரித்தபோது ஏற்பட்ட மாறுபாடு இன்னொன்று. ஆரியத் தொடர்பைப் புகுத்திக் கூறவேண்டும் என்று

கருதித் தங்களுடைய சொந்தக் கருத்தைப் புகுத்தியது வேறொன்று. இக் கல்வெட்டெழுத்துக்கள் எழுதப்பட்ட காலத்தில் இருந்த தமிழக மரபையும் தமிழர் பழக்க வழக்கங்களையும் அறிந்து அதற்கேற்பப் பொருள் காணாதது மற்றொன்று. இந்தக் காரணங்களினாலே தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக்கள் சரியாகப் படிக்கப்படாமல் உள்ளன. ஆகவே இவற்றைப் புதிதாக ஆராய்ந்து முடிவு காண வேண்டியிருக்கிறது. அவற்றைக் காண்போம்.

1. அரசலூர் பிராமி எழுத்துக்கள்

கோயமுத்தூர் மாவட்டம் ஈரோடு தாலுகாவில், ஈரோடு காங்கேயம் நெடுஞ்சாலையில் ஈரோடு நகரத்திலிருந்து பன்னிரண்டு கல் தொலைவில் அரசலூர் இருக்கிறது. புகழூருக்கும் அரசலூருக்கும் முப்பது கல் தொலைவு இருக்கும். அரசலூர் நாக மலைமேல் ஏறத்தாழ அறுபது அடி உயரத்தில் இயற்கையாக அமைந்துள்ள குகையை இவ்வூரார் ஆண்டிப்பாறை என்று கூறு கிறார்கள். இந்தக் குகையில் கற்படுக்கைகளும் பிராமி எழுத்துக்களும் உள்ளன. 1961ஆம் ஆண்டு மயிலை சீனி வேங்கட சாமி, ஈரோடு புலவர் இராசு மற்றும் சில நண்பர்கள் இந்தக் குகைக்குச் சென்று இங்குள்ள பிராமி எழுத்தை மைப்படி எடுத்து சுதேசமித்திரன், செந்தமிழ்ச் செல்வி இதழ்களில் வெளியிட்டார்கள்.[1] பிறகு தொல் பொருள் துறையினர் அங்குச் சென்று இவ் வெழுத்துக்களைப் பார்த்தனர். இதனுடைய வரிவடிவம் இது:



இந்த பிராமி எழுத்துக் காலததால பிற்பட்டது. இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

[1] சுதேசமித்திரன் 1961 சூன் 4ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை வெளியீடு, 'ஈரோடு அருகே பிராமி எழுத்துச் சாசனம் என்னும் தலைப்பு 'ஈரோடுக்குப் பக்கத்தில் அரசலூர் மலையில் மே 26 ஆம் நாள் பிராமி எழுத்துச் சாசனம்

இது இருபத்தேழு எழுத்துக்களைக் கொண்ட ஒரே சொற்றொடராக அமைந்திருக்கிறது.

எபிகிராபி இலாகாவின் 1961 - 62 ஆம் ஆண்டு அறிக்கையில் இந்த எழுத்துக்களைப் பற்றி அறிமுகப்படுத்தி, தற்காலிகமாக இதைப் படித்துள்ளனர்.[2] அதில் இவ்வாறு படித்திருக்கிறார்கள்.

எழுத்துப் புணர்(ரு)த்தான் மா(லை)ய்

வண்ணக்கன் (தேவ)ன் சா(த்த)ன்.

திரு. ஐ. மகாதேவன் இதை இவ்வாறு படித்துள்ளார்.[3]

ஏழு தானம் பண் வித்தான் மணிய்

வண்ணக்கன் தே(வ)ன் சா(த்த)ன்

மணிக்கல் வாணிகனான தேவன் சாத்தன் (இந்த) ஏழு படுக்கைகளை (இருக்கைகளை) பண்ணுவித்தான் என்று பொருள் கூறியுள்ளார்.

திரு. டி.வி. மகாலிங்கம் இவ்வாறு படித்துப் பொருள் கூறியுள்ளார்.[4] இவ்வெழுத்துக்களின் தொடக்கத்தில் உள்ள வட்டமும் அதனுள் உள்ள புள்ளியும் 'சித்தம்' என்னும் சொல்லைக் குறிக்கிற அடையாளம் என்று கருதுகிறார்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அரசலூர் மலையிலே ஆண்டிப்பாறை என்னும் குகையிலே இந்தச் சாசனம் எழுதப்பட்டிருக்கிறது. மயிலை சீனி வேங்டசாமியும் அவருடைய நண்பர்களான ஸ்ரீபால், வித்துவான்கள் இராசு, பச்சையப்பன், சென்னியப்பனும் இந்தச் சாசனத்தைத் தற்செயலாகக் கண்டுபிடித்தார்கள்.

2. Annual Report on Indian Epigraphy 1961 - 62 P. 10

3. P. 67. Seminar on Inscriptions 1966.

4. Early South Indian Palaeography, P. 293 - 298.

'(சித்தம்)' தித்தம் பூணதத்தான் மாறைய வண்ணக்கன் தேவன் சாத்தன்'. தித்தம் என்பது தீர்த்தம். புனிதம் என்னும் பொருள் உள்ளது. தத்தான் என்றிருப்பது தந்தான் என்றிருக்க வேண்டும். 'மாறைய' என்பது ஓர் ஊரின் பெயரைக் குறிக்கிறது. இது மாறை நாட்டைச் சேர்ந்த ஊர் என்பது ஓர் பொருள். வண்ணக்கன் என்பது நாணயப் பரிசோதகன் என்னும் பொருள் உள்ளது. கடைசிச் சொற்கள், தேவன் சாத்தன் என்பவை.

மாறநாட்டு நாணயப் பரிசோதகனாகிய தேவன் சாத்தன் தூய்மை பெறுவதற்குத் தவம் செய்ய (இந்தப் படுக்கைகளைக்) கொடுத்தான் என்பது பொருள். இதை நாம் படித்துப் பொருள் காண்போம்.

முதலில் உள்ள வட்டமும் அதனுள் உள்ள புள்ளியும் எ என்னும் எழுத்தாகும். சாதாரணமாகப் புள்ளியிடப்படவேண்டிய எழுத்துக்கள் கல்வெட்டில் புள்ளியிடப்படுவது இல்லை. இந்த எகர எழுத்தில் புள்ளியிடப்பட்டிருக்கிறது. 'எகர ஒகர மெய் புள்ளி பெறும்' என்பது பழைய எழுத்திலக்கணம். இதில் புள்ளி யிட்டிருப்பதனால் இது எகரக் குற்றெழுத்து என்பது நன்றாகத் தெரிகிறது. பிராமி எகர எழுத்து முக்கோண வடிவமாக எழுதப்படுவது வழக்கம். முக்கோண வடிவம் காலப் போக்கில் வட்டவடிவமாக மாறிவிட்டது. இந்த எழுத்துக்களைக் கீழ்க் கண்டவாறு படிக்கலாம்:

எழுத்தும் புணருத்தான் மணிய்
வணக்கன் தேவன் சாத்தன்

எழுதுதும் என்றிருப்பது எழுத்தும் என்றிருக்கவேண்டும். புணருத்தான் என்பது பொருந்தினான் சேர்ந்தான் என்னும் பொருள் உள்ள சொல். இது புணர்த்தான் என்றிருக்கவேண்டும். எழுத்தும் புணர்த்தான் என்பதன் பொருள். எழுத்தையும் சேர்த்தவன் (எழுதினவன்) என்பது. மணிய் என்பது மணி. மணிக்கற்கள். இகர ஈற்றுச் சொல்லில் யகர மெய் சேர்ந்துள்ளது. வண்ணக்கன் வாணிகன்

என்னும் பொருள் உள்ள சொல். மணி வண்ணக்கன் என்றால் மணிக்கல் (இரத்தினக்கல்) வாணிகன் என்பது பொருள். தேவன் சாத்தன் - இது மணி வாணிகனுடைய பெயர். வண்ணக்கன் என்பது பொன்னையும் மணிகளையும் பரிசோதிக்கிறவன். புதுக்கயத்து வண்ணக்கன் சம்பூர் கிழான், வடம வண்ணக்கன் தாமோதரன், வண்ணக்கன் சோமருங்குமரனார் என்னும் பெயர்களைச் சங்கச் செய்யுட்களில் காண்கிறோம்.

மணிக்கல் வாணிகனாகிய தேவன் சாத்தன் (இந்தக் கல்வெட்டின்)எழுத்துக்களையும் எழுதினான் என்பது பொருள் எழுத்தும் என்பதில் உள்ள 'உம்' இவன் இன்னும் எதையோ செய்தான் என்று கூறுகிறது. அது என்ன? குகையில் முனிவர் இருப்பதற்குக் கற்படுக்கையை அமைத்ததோடு அல்லாமல் அவனே இந்தக் கல்வெட்டின் எழுத்துக்களையும் எழுதினான் என்பது பொருள்.

2. கொங்கர் புளியங்குளப் பிராமி எழுத்து

மதுரைக்குத் தென்மேற்கே ஒன்பதரைக் கல் தொலைவில் திருமங்கலம் சாலையில் கொங்கர் புளியங்குளம் என்னும் ஊர் இருக்கின்றது. இவ்வூரின் வடகிழக்கே தாழ்வான பாறைக்குன்றுகள் இருக்கின்றன. இக் குன்றுகள் ஒன்றில் இயற்கையாக அமைந்த ஒரு பொடலில் ஆறு சிறு குகைகள் உள்ளன. இந்தக் குகைகளிலே 33 கற்படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு குகையிலே மூன்று பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இக் கல்வெட்டுகள் 1910ஆம் ஆண்டு கல்வெட்டுத் தொகுப்பில் 55, 56, 57 ஆம் எண்ணுள்ளவையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

அவற்றைப் படித்த அறிஞர்கள் வெவ்வேறு வகையாகப் படித்துப் பொருள் கூறியுள்ளனர். அவற்றைக் கூறுவோம். திரு.கிருட்டிண சாத்திரி இவ்வாறு படித்துள்ளார்.[1]

---

[1] Ist Oriental Conference.



1. குட்டு கொ ட்டு பி நா வா னா ஊ பா சா அ னா (ஊ) பா (ட்டு) வ

2. (கு) ட் (ஊ) கொ ட்டா லகு (ஈ) த தா வினா சே ட்டு அ த (ஆ) னா லே னா.

3. பாக னா ஊ ர பே த (ஆ) த (ஆ) னா பிட்டா னா ஈத தா வெ போ னா

குட்டு என்பது திருப்பரங்குன்றத்துக் கல்வெட்டில் வருகிற 'குட்டு' என்பதாகும். இது கொடு என்னுஞ் சொல்லின் திரிபு. பாகனூர் என்பது மதுரைக்கு வடக்கே உள்ள பாகனூர்க் கூற்றம். லேனா என்பது பாலிமொழிச் சொல். லேனா என்பதன் பொருள் குகை என்பது. திரு. கே. வி. சுப்பிரமணிய அய்யர் படித்து விளக்கங் கூறுவது வருமாறு; [1]

1. குட்டு கொட்டுபிதாவான் உபாசா அன் உபாருவான்

2. குட்டு கொட்டால கு இதா தாவின் சேட்டு அதான் லேன்

3. பாகனூர் போதாதான் பிட்டான் இதாதாவெ லேன்

---

[1] Third Oriental Conference.

முதல் வாக்கியத்தில் உள்ள உபாருவான் என்பது ஓர் ஆளினுடைய பெயர். உபாசகனான (பக்தனான) உபாருவான் இந்தக் குகையை வெட்டுவித்தான் என்பது இந்த வாக்கியத்தின் பொருள். அடுத்த வாக்கியத்தில் உள்ள 'கொட்டு கொட்டாலகு' என்பது குகையை வெட்டி அமைக்கிறவன் என்னும் பொருள் உள்ளது. இதாதாவின் சேட்டு அதான் என்பது ஓர் ஆளின் பெயர். கொத்திக் குகையை உண்டாக்குகிறவானகிய இதாதாவின் என்பனுடைய குகை என்பது இதன் பொருள். அடுத்த வாக்கியத்தில் உள்ள பாகனூர் என்பது பாண்டி நாட்டுப் பாகனூர்க் கூற்றத்தில் ஓர் ஊர். போதாதான் என்பதன் பொருள் தெரியவில்லை. பிட்டான் இதாதாவெ(ன்) என்பது ஓர் ஆளின் பெயர். பிட்டான் என்பது பட்டாரன் என்பதன் திரிபு. வேன் என்பதன் பொருள் குகை. பாகனூரில் இருக்கும் பிடான் இத்தாவெ என்பவனுடைய குகை என்பது இந்த வாக்கியத்தின் பொருள்.

பின் இரண்டு சொற்றொடர்களின் கடைசியில் இரண்டு குறிகள் உள்ளன. முதல் குறி சிறு வட்டமும் வட்டத்தின் மேலும் கீழும் இரண்டு கைகளும் உள்ளன. இஃது ஓம் என்பதைக் குறிக்கிறது. அதை அடுத்துச் சதுரமும் அதற்குள் குறுக்கு நெடுக்காக இரண்டு கோடுகளும் காணப்படுகின்றன. இவை சுவஸ்திகத்தின் அடையாளமாகும்.[1]

திரு. சி நாராயணராவ் வழக்கப்படி இவற்றைப் பிராகிருத மாக்கிப் பிறகு சமஸ்கிருதப்படுத்தியும் பொருள் கூறுகிறார்.[2]

1. குட்டு கொட்டு பிதா வானா உபாசா அவுவா ஊ பாட்டுவ' (பிராகிருதம்)

'உபாட்டு - அ குட்டு கொட்டாபிதவான் உபாத்யா யானாம்' (சமஸ்கிருதம்)

---

[1] Third Oriental Conference.

[2] New Indian Antiquary.

'ஊபாட்டு' அ என்பவன் பொக்கிஷத்துக்காக இதை வெட்டினான் என்பது இதன் பொருள்.

2. 'குட்டு கொடாலகு இதாதாவி நா சேட்ட அ தானா லோனா' (பிராகிருதம்)

'கோஷ்ட்டம் கோஷ்ட்டாகா - க்ருதே ஹிதார்த்தாய;

ஞான - ஸ்ரேஷ்ட்யஸ்ஸ தானம் லயனம்' (சமற்கிருதம்)

நூல் நிலையத்தின் ஆக்கத்துக்கான இடம்; ஞான சிரேஷ்டன் தானமாகக் கொடுத்த குகை என்பது பொருள்.

3. 'பாகானா - ஊரா பேத் (ஆ) தானா பிட்டானா இதாதாவே போனா' (பிராகிருதம்)

'பாகானா' ஊரா வ்ருத்தானாம் தானம் பிட்டாகானாம் ஹிதார் தாய போ (ப்ரோ) தானாம்' (சமற்கிருதம்) முன்பின்னாக மாறிப்போன (பௌத்த மதத்தின்) பிடகப் புத்தகங்களை மாணவர் நன்மைக்காகப் பாகனூர்ப் பெரியவர்கள் கொடுத்த தானம் என்பது இதன் பொருள்:

திரு. ஐ. மகாதேவன் இவற்றை இவ்வாறு படிக்கிறார்.[1]

1. 'குற கொடுபிதவன் உபாசன் ஊறுபறுவ்...''உபாசகனாகி உ(ய்)பறுவ(ன்) இந்தக் கூறையைக் கொடுப்பித்தான். (இவன் முதல் சொல்லைக் 'குற' என்று படித்துக் கூறை என்று பொருள் கூறுகிறார்.)

2. 'குற கொடல கு - ஈத்தவன் சேற அதன் என்? சேறு அதன் (மேல்கட்டு) கூறையை வேய்ந்தான்.

3. 'பாகன் - ஊர் பேதாதன் பிடன் ஈத்த வேபொன் பா(க்)கனூர் பேராதன் பி(ட்)டன் இந்தக் கூறையை வேய்ந்தான்.

திரு. தி.வி. மகாலிங்கம் இவ்வாறு படித்துப் பொருள் கூறுகிறார்.[2]

---

[1] P. 61. Seminar on Inscriptions 1966.

[2] 228 - 231 Early South indian Palaeography.

1. 'குறு கொடுபிதவன் உபசஅன் உபறுவ'

குறு என்பது கூறு என்னும் சொல். இங்கு இது கற் படுக்கைகளின் ஒரு பகுதியைக் குறிக்கின்றது. கொடுபிதவன் என்பது சொல். உபசன் என்பது உபாசகன். குறுகோடுவைச் சேர்ந்த உபாசகனான உபறுவன் இதைக் கொடுப்பித்தான் என்பது இதன் பொருள். இதை வேறு வகையாக இப்படியும் படிக்கலாம்:

'குறு கோடு பிதவான் ஊ பச - அன் ஊபறுவ'

குறுகோடு என்பதை ஓர் ஊர் அல்லது சிறு குன்று என்று பொருள் கொள்ளலாம். பிதவான் என்பது பிதா அல்லது பிதுர் என்னும் சொற்களுடன் சம்பந்தப்பட்ட சொல். இதன் பொருள் தந்தை என்பது. இது தூய்மையான துறவியைச் சுட்டுகின்றது.

உபசன் என்பது உபாசகன். உபறுவ என்பது ஓர் ஆளினுடைய பெயர். குறுகோட்டுத் தூய துறவியின் பக்தனான உபாசகன் உபாறுவன் என்பது இதன் திரண்ட பொருள்.

2. 'குறு கொடல்கு ஈத துவின் செறு அதன் போன்'

குறு என்பது கூ. இங்குக் கற்படுக்கையின் ஒரு கூறைக் குறிக்கிறது. ஈத என்பதன் பொருள் இந்திரன். தூவின் என்பது மயில் இறகுக் கத்தை. செறு அதன் என்பது ஓர் ஆளின் பெயர்.

3. 'பாகன் ஊர் பொத்தன் பிடன் ஈத தூ வே போன்'

பாகனூர் என்பது ஓர் ஊரின் பெயர். பிடன் என்பது ஓர் ஆளின் பெயர். தூ வெ என்பது மயில் இறகுக் கத்தை. போன் என்பது பொன். பொன் என்பதன் பொருள் மலை (மேருமலை, பொன்மலை) மலைக்குகை என்பது.

இந்த மூன்று கல்வெட்டுழுத்துக்களை நாம் படிப்போம்

1. குட்டு கொடுபிதவன் உபாசா அன் ஊபட்டுவ்

'குட்டு கொடுப்பித்தவன் உபாசான் ஊபட்டுவ(ன்) என்பது இதன் வாசகம். குட்டு என்பது குன்று. கொடுபிதவன் என்பது கொச்சைச் சொல். இது கொடுப்பித்தவன் என்று இருக்க வேண்டும். உபாசாஅன் என்பதும் கொச்சைச் சொல். இஃது உபாசகன் என்றிருக்க வேண்டும். ஊபட்டுவன் என்பது உபாசனுடைய பெயர்.

2. குட்டு கொடாலகு ஈத்தவன் சொறு அதன் பொன்.

இந்த வாக்கியத்திலும் குட்டு என்னும் சொல் வருகிறது. குட்டு என்பதற்குக் குன்று என்று பொருள் கூறினோம். குன்று என்பதைப் பேச்சு வழக்கில் குட்டு என்று கூறுகிறார்கள். மதுரை வட்டத்து மேலூருக்கு வடக்கே எட்டுக் கல் தொலைவிலுள்ள கருங்காலக் குடியில் இருக்கிற குன்றுகளை அவ்வூரார் குட்டு என்று கூறுகிறார்கள். அவர்கள் குன்றுகளைப் பஞ்ச பாண்டவர் குட்டு' என்று கூறுகிறார்கள். இது 1911ஆம் ஆண்டு எபிகிராபி அறிக்கை 57ஆம் பக்கத்தில் கூறப்படுகிறது. குன்று என்னுஞ் சொல் குன்று என்றாகிப் பிறகு குட்டு என்றாயிற்று.

இரண்டாவது சொல் 'கொடாலகு' என்று இருக்கிறது இதன் பொருள் தெரியவில்லை. 'குட்டு கொடாலகு' என்று இருப்பதைக் கொண்டு, இது, பொடவு ஆக இருக்கலாம் என்று தோன்றுகின்றது. குடங்கு என்பதைத் தவறாகக் கொடலகு என்று எழுதியிருப்பதாகத் தோன்றுகிறது. ஈத்தவன் - கொடுத்தவன் மூன்றாவது சொல் சொறு. சிறு என்று எழுதப்பட வேண்டியதைச் 'சொறு' என்று பிழையாக எழுதியிருக்கின்றான் கற்றச்சன். ஆதன் என்பதை அதன் என்று எழுதியிருக்கிறான். சிறு ஆதன் என்பது ஓர் ஆளினுடைய பெயர். 'சொறு அதன் பொன்' என்பது சிறு ஆதன் கொடுத்த பொன். அவன் குகையின் கற்படுக்கையை அமைக்கப் பொன் கொடுத்தான். அதன் மதிப்பு இரண்டு குறியீடுகளில் காட்டப்பட்டுள்ளது.

3. பாகன் ஊர் பேத்தன் பிடான் ஈத்தவெ பொன்

பாகனூர் என்பது 'பாகன் ஊர்' என்று பிரித்து எழுதப்பட்டுள்ளது. பாகனூர் பாண்டி நாட்டில் மதுரைக்கு வடக்கே இருந்த ஓர் ஊரின் பெயர். இது பாகனூர்க் கூற்றத்தின் தலை நகரமாக இருந்தது. பிற்காலத்து வேள்விக்குடிச் செப்பேட்டில் பாகனூர் கூற்றம் கூறப்படுகிறது. 'பாகனூர்க் கூற்றமென்னும் பழனக கிடக்கை நீர் நாடு'[1] வேள்விக்குடி என்னும் ஊர் பாகனூர்க் கூற்றத்தில் இருந்தது என்று வேள்விக்குடி செப்பேடு கூறுகிறது. மாகந்தோய் மலர்ச் சோலைப் பாகனூர்க் கூற்றத்துப்படுவது, ஆள்வதானை ஆடல் வேந்தேய்! வேள்விக்குடி என்னும் பெயர் உடையது. ஒங்காத வேற்றானையோ டோதவேல உடன் காத்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பரமேச்வரனால் வேள்விக் குடி என்னப்பட்டது.[2]

பேத்தன் பிடான் என்பதும் தவறாக எழுதப்பட்டிருக்கின்றது. போத்தன் பிட்டன் என்று இஃது எழுதப்படவேண்டும். பேத்தன் என்றும் பிடான் என்றும் பெயர் இல்லை. போத்தன், பிட்டன் என்னும் பெயர்கள் சங்க காலத்தில் வழங்கி வந்தன. நாகன் போத்தனார், மதுரைப் போத்தனார், மதுரை மருதங்கிழார் மகனார் இளம் போத்தனார் என்று போத்தன் என்னும் பெயரைச் சங்க இலக்கியங்களில் பார்க்கின்றோம். பிட்டன், பிட்டங்கொற்றன் என்னும் பெயர்களையும் சங்க இலக்கியங்களில் பார்க்கின்றோம். பிட்டன் கொற்றனைப் பாடிய செய்யுள்கள் புறநானூற்றில் உள்ளன.[3] இந்தச் சான்றுகளைக் கொண்டு இந்தப் பிராமிக் கல்வெட்டில் 'பேத்தன் பிடான்' என்றிருப்பது தவறு என்றும் அது போத்தன் பிட்டன் என்றிருக்க வேண்டும் என்பது உறுதியாகத் தெரிகின்றது.

---

1. வேள்விக்குடிச் செப்பேடு, மூன்றாம் ஏடு, பின் பக்கம் 33 - 34 ம் வரி.
2. வேள்விக்குடிச் செப்பேடு, ஏழாம் ஏடு பின்புறம் வரி 107 - 110.
3. புறநா. 120, 168, 169, 172.

'ஈத்தவெ' என்றிருப்பதும் கொச்சைச் சொல். இஃது ஈத்தவை என்று இருக்கவேண்டும். ஈத்தவை என்பது ஈந்தவை என்பதன் வலித்தல் விகாரம். ஈந்தவை - ஈத்தவை - கொடுத்தவை. பொன் என்பதன் பக்கத்தில் இரண்டு குறியீடுகள் உள்ளன. அவை பொன்னின் அளவை (மதிப்பைத்) தெரிவிக்கின்றன. அந்த அளவு இன்னதென்பது தெரியவில்லை.

பாகனூரில் இருந்த போத்தன் பிட்டன் என்பவர் இந்தக் குகையில் கற்படுக்கை அமைப்பதற்காகச் செலவிட்ட பொன் இவ்வளவு என்பதை இந்தக் கல்வெட்டு மொழிகள் கூறுகின்றன.

3. குன்னக்குடி (குன்றக்குடி) பிராமி எழுத்து

இராமநாதபுர வட்டத்து, திருப்பத்தூர் தாலுக்காவில் குன்னக்குடி (குன்றக்குடி) இருக்கிறது. காரைக்குடியிலிருந்து ஐந்துகல் தொலைவில் உள்ளது இங்குள்ள குன்றின் பெயரே இவ்வூரின் பெயராக அமைந்திருக்கின்றது. குன்றின்மேல் முருகப் பெருமானுக்குக் கோயில் இருக்கின்றது. குன்றின் அடிவாரத்தில் மூன்று குடைவரை (குகைக்) கோயில்கள் இருக்கின்றன. மலை மேல் உள்ள முருகன் கோயிலுக்கு மேற்கே இயற்கையாக அமைந்த பொடவு இருக்கிறது. இந்தப் பொடவு இப்போது ஞானியார் மடம் என்று பெயர் கூறப்படுகிறது. இந்தப் பொடவின் மேற்புறப் பாதையின் உட்பக்கத்தில் நம்முடைய ஆராய்ச்சிக்குரிய பிராமி எழுத்துக் கல்வெட்டு இருக்கின்றது. 1909ஆம் ஆண்டில் இந்த எழுத்து கண்டுபிடிக்கப்பட்டது. 1910ஆம் ஆண்டு கல்வெட்டுத் துறை அறிக்கையில் இதுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.[1] இந்த எழுத்து 1909 ஆம் ஆண்டு கல்வெட்டுத் தொகுப்பின் 44ஆம் எண்ணாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.[2]

குகை வாயிலின் மேற்புறத்துப் பாறையில், உட்புறமாகப் பொறிக்கப்பட்டுள்ள இந்த எழுத்துக்கள் ஒரே வரியில் பதினொரு எழுத்துக்களைக் கொண்டிருக்கிறது. இந்த எழுத்துக்களைப்

1. Madras Epigraphy Report, 1910 Pt. II Para 5.
2. Epi. Call. 44 of 1909.

பொறித்த கற்றச்சன் தவறு செய்துவிட்டான். வழக்கப்படி இடப்புறத்தி லிருந்து வலப் புறமாக எழுதாமல், வலப் பக்கத்திலிருந்து இடப் பக்கமாகப் பொறித்திருக்கின்றன். இந்த நிலையில் இவ்வெழுத்துக் களைப் படிப்பது கடினமாக இருக்கின்றது. இந்த எழுத்துக்களின் வரிவடிவம் இது.



இதை இடப் புறத்திலிருந்து தொடங்கி வலப் புறமாக எழுதினால் இதன் உருவம் இப்படி அமையும்.



இதுதான் சரியான வடிவம்.



திரு. கிருட்டிண சாத்திரியும், திரு. சுப்பிரமணிய அய்யரும் இதைப் படிக்காமல் விட்டனர். திரு. டி.வி. மகாலிங்கம் இதை இவ்வாறு படித்துள்ளார். 'உர ஊர அதன் சாத்தன்' என்று படித்துள்ளார். உபிஊர் ஆதன் சாத்தன் என்று அமைத்து விளக்கங் கூறுகிறார். அதன் என்பது ஆதன். ஆதன் என்பதன் பொருள் ஆட்தன் ஆப்தன் என்பதும் அர்ஹத் என்பதும் ஒன்றே. அர்ஹத் என்னுஞ் சொல்லைப் பெளத்தர், சைனர், ஆசீவகர் பயன் படுத்தியுள்ளனர் என்று கூறுகின்றனர்.[1]

இதை இவர் 'உபிஊர் ஆதன் சாச்சன்' என்று படித்தது சரியே. ஆனால் ஆதன் என்பதற்கு இவர் கூறும் விளக்கம் தவறாகவும்

[1] Journal of madras University Vol XXX No.I. (Page - 5-7) P. 285 - 287 Early South Indian Palaeography 1967.

குத்திரயுக்தியாகவும் இருக்கின்றது. ஆதன் என்னும் பெயர் சங்க காலத்தில் மக்கள் பெயராக வழங்கி வந்துள்ளது.

திரு. ஐ. மகாதேவன் இதைப் படித்ததில் முதல் எழுத்து புரைசல் இடையே சரியாகத் தெரியாமலிருப்பதனால் அந்த எழுத்தை விட்டுவிட்டு மற்ற எழுத்துக்களைப் படித்துள்ளார். '...பிஊர் ஆதன் சாத்தன்' என்று படிக்கின்றார்.[1] இவர்கள் இருவரும் இந்த எழுத்துக்களைச் சரியாகவே படித்திருக்கின்றார்கள்.

முதல் எழுத்தாகிய உ புரைசலும் சேர்த்து இருக்கின்றது. அதை உ என்றே படிக்கலாம். மூன்றாவது எழுத்தை டி.வி. மகாலிங்கம் ஃ இவ்வாறு வரைந்து இஊ என்று படித்துள்ளார். தமிழில் இவ்வாறு எழுதுவது மரபு இல்லை. இதை ஊன்றிப் பார்த்தால் (ஊ) என்று தெரிகின்றது. ஊபிஊர் என்பது உப்பூர் அதன் என்பது ஆதன் என்பதன் கொச்சை வாசகம். சே என்று தவறாக எழுதப்பட்டிருக் கின்றது. இது **சா** என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். பிராமி எழுத்து சகரத்தின் உச்சியில் இடப்பக்கமாகக் கோடு இட்டால் செ ஆகிறது. அந்தக் கோட்டை வலப்பக்கமாக இட்டால் **சா** ஆகின்றது. வலப் பக்கமாக இடவேண்டிய கோட்டை இடப்பக்கமாக இட்டிருக்கிற படியால் சேத்தன் என்று படிக்கவேண்டியிருக்கிறது. அதைச் சாத்தன் என்று படிப்பதே சரியாகும். உப்பூர் ஆதன் சாத்தன் குன்றக்குடி மலைப்பொடவில் கற்படுக்கைகளைத் தன்னுடைய செலவில் அமைத்தான் என்பது இதன் பொருள்.

4. மால கொண்ட பிராமிய எழுத்து

நெல்லூர் மாவட்டத்து கண்டுகூர் தாலுகாவில் மாலகொண்ட என்னும் மலை இருக்கிறது. கொண்ட என்றால் தெலுங்கு மொழியில் மலை என்பது பொருள். இந்த மலையில் ஒரு குகையும் அதன் அரு கில் பிராமி எழுத்தும் காணப்படுகின்றன. இவை 1937ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டன. தென் இந்தியக் கல்வெட்டுத் துறையின் 1937 - 38ஆம் ஆண்டு அறிக்கையில் இது கூறப்பட்டிருக்கின்றது.[2]

---

1. P. 67. Seminar on Inscription 1966.
2. Annual Report on South Indian Epigraphy 1937 - 38 Part II. Para. 1





இந்தப் பிராமி எழுத்தின் மொழித் தொடர்கள் பிராகிருத மொழித் தொடர்கள். இப்போது ஆந்திர நாட்டில் சேர்ந்துள்ள இந்த இடம் சங்க காலத்தில் தமிழகத்தின் வட எல்லையைச் சேர்ந்திருந்தது. தமிழகத்தின் வட எல்லை பொதுவாக வேங்கடமலை என்று கூறப்பட்டாலும் அதன் சரியான எல்லை வடபெண்ணை ஆறு. பழைய காலத்துத் தொண்டை நாடு இருபத்து நான்கு கோட்டங் களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அக் கோட்டங்களின் முதல் கோட்டம் வடபெண்ணை ஆற்றின் தென் கரையில் இருந்தது. பழந்தமிழகத்தின் வட எல்லையில் இருந்த மாலகொண்ட மலையில் உள்ள பிராமி எழுத்தின் வரிவடிவம் இது. (படம் : முன்பக்கம் பார்க்க)

இதன் சொற்றொடர் இது. அர சாள குலஸ தத ஸெடி புதஸ ஸிரி வீரி செ ட்டி நோ தான.

அருவாள குலத்து (ந(ந்)த செட்டி மகனான ஸிரி வீரி செட்டியினுடைய தானம் என்று இதன் பொருள்.

விளக்கம். **அரவாள** என்பது அருவாள என்னும் சொல். அருவா நாடு அல்லது அருவாள நாடு என்பது தொண்டை மண்ட லத்தின் பழைய பெயர். தொண்டை நாடான அருவா நாடு பழங் காலத்தில் திருவேங்கட நாட்டை (திருவேங்கடக் கோட்டத்தை)த் தன்னுடன் கொண்டிருந்தது. அதன் வட எல்லை வடபெண்ணையாறு. தொண்டை மண்டலமான அருவா நாட்டைத் தாலமி என்னும் கிரேக்கர் அருவர்னொய் (*Aruvarnoi*) என்று கூறு கின்றார். அருவா நாட்டுக்கு அடுத்து வடக்கேயிருந்த தெலுங்கர் தமிழரை அரவர் என்றும் தமிழ் மொழியை அரவபாஷை என்றும் கூறுவர். அருவா நாட்டவர் அருவா நாட்டு மொழி என்பது இதன் பொருள்.

குலஸ என்பது குலத்தினுடைய கலத்தைச் சேர்ந்த என்னும் பொருள் உள்ள சொல். ஸ என்பது பிராகிருத மொழி எழுத்து. அரு வாள குலஸ என்பதன் பொருள் அருவாள குலத்தைச் சார்ந்த என்பது. எனவே இந்தக் குகையைத் தானஞ் செய்தவர் அருவா நாட்டவர் (தொண்டை நாட்டைச் சேர்ந்தவர்) என்று தெரிகின்றார். **நதசெடி** என்பது நந்த செட்டி என்பதாகும். செட்டி என்பது வாணிகன் என்னும் பொருள் உள்ள சொல். நந்தசெட்டி என்பது வாணிகத் தொழில் செய்த

நந்தன் என்று பொருள் உள்ளது. **புதஸ** என்பது புத்திரனுடைய என்னும் பொருள் உள்ள பிராகிருத மொழிச் சொல். **ஸிரி** என்பது ஸ்ரீ என்பது. **வீரிசெட்டி** நோ என்பதன் பொருள் வீரி செட்டியினால் என்பது. இதிலுள்ள **ட்டி** என்னும் எழுத்து வடமொழி எழுத்து. தான என்பது தானம் என்னும் சொல். **தா** என்னும் எழுத்து வடமொழி 3ஆம் தகர எழுத்து. அருவாள குலத்தைச் சேர்ந்த வணிகனான நந்தன் என்பவருடைய மகனும் வாணிகனுமான ஸ்ரீவீரி என்பவன் இந்தத் தானத்தைக் கொடுத்தான் என்பது இதன் திரண்ட பொருள்.

5. முத்துப்பட்டி பிராமி எழுத்து

மதுரையிலிருந்து திருமங்கலத்துக்குப் போகின்ற சாலையில் பத்துக் கல் தொலையில் முத்துப்பட்டி இருக்கின்றது. இந்தச் சிற்றூரின் சாலையில் இடப் பக்கமாக உம்மணாமலை என்னும் குன்றுகள் இருக்கின்றன. கடைசிக் குன்றிலே இவ்வூருக்கருகில் பெரிய குகை ஒன்று இருக்கிறது. கிழக்கு மேற்காக அமைந்திருக்கிற இந்தக் குகையின் நீளம் 43அடி, உயரம் 5அடி. இங்கு முப்பத்துக்கு மேற்பட்ட கற்படுக்கைகள் இருக்கின்றன. இங்கு ஐந்து இடங்களில் பிராமி எழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளன. இரண்டு கல்வெட்டெழுத்துக்கள் படிக்க முடியாதபடி அதிகமாகச் சிதைந்து உள்ளன. இவை 1910 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு 1910 ஆம் ஆண்டு சாசனத் தொகுதியில் 58, 59, 60 ஆம் எண்ணுள்ளவையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் வரிவடிவம் இது:





திரு. கிருட்டிண சாத்திரி இவற்றை 1. 'விநதை ஊர, 2. சைய அளனா, 3 கா விய' என்று படித்துள்ளார்.[1] திரு. கே.வி. சுப்பிரமணிய அய்யர் இவ்வாறு கூறுகின்றார்.[2]

'சைய அளன் விநதை ஊர கவிய்'. கவிய் - காவி - குகை. இந்தக் குகையில் வசித்தவர் பெயர் சையளன் விந்தை ஊரன் என்று பொருள் கூறுகின்றார்.

திரு. சி. நாராயணராவ், 'விநதை' ஊர 'சைய அலேன காவிய' என்று படித்து, 'விநதை ஊர என்பவருடைய குடைவான குகை ஆசிரமம்' என்று பொருள் கூறுகின்றார்.[3]

திரு. டி.வி. மகாலிங்கம். 'விந்தை ஊர் சையளன் கவிய்' என்று படித்து 'விந்தை ஊர' சையளனுடைய குகை' என்று பொருள் கூறியுள்ளார்.[4] திரு. ஐ. மகாதேவன் கூறுவது இது.[5]

'சையளன் விந்தை ஊர் காவிய்' என்று படித்து, சையளன் (இலங்கையைச் சேர்ந்தவன்) ஆன விந்தை என்பவருடைய காவிய் (குகை) என்று பொருள் கூறுகின்றார்.

இதை. 'விந்தை ஊர் சையளன் காவய்' என்று படிக்கலாம் விந்தையூர் சையளன் காவய் என்பவர் இக் கற்படுக்கையை அமைத்தார் என்பது பொருள்.

6. அழகர் மலைப் பிராமி எழுத்துக்கள்

மதுரையிலிருந்து பதின் மூன்று கல் தொலைவில் அழகர் மலை இருக்கிறது: இஃது இப்போது பேர்போன வைணவத் திருப்பதியாக இருக்கின்றது. சங்க காலத்தில் இந்த மலைக்குச் சோலைமலை பழமுதிர்சோலை, திருமாலிருஞ்சோலைமலை, இருங்குன்று என்று பல பெயர்கள் இருந்தன. சிலப்பதிகாரம் காடுகாண் காதையில்

[1] Ist All India Oriental Conference 1919.

[2] 3rd All India Oriental Conference.

[3] New Indian Antiquary Vol, I.

[4] P. 268 - 271 Early South Indian Palaeography.

[5] P. 65. Seminar on Inscriptions 1960.

கூறப்படுகின்ற திருமால் குன்றம் என்பது இந்த மலையே. இடை காலத்தில் இந்த மலை இடபகிரி என்று பெயர் பெற்றிருந்தது. கடைச்சங்க காலத்தில் இந்த மலையில் கண்ணன் - பலராமன் என்னும் இரு பெருந்தெய்வங்களுக்குக் கோயில் இருந்தது. இந்தத் தெய்வங்களை இளம்பெரு வழுதி (கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி) என்னும் பாண்டியன் பாடித் துதித்தார். அந்த பாடல் பரிபாடலில் 15ஆம் பாட்டாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றது. மதுரையைச் சூழ்ந்திருந்த எண்பெரும் சமணக் குன்றுகளில் அழகர் மலையும் ஒன்று. சங்க காலத்தில் இந்த மலையின் ஒரு பக்கத்தில், சமண முனிவர்கள் இருந்தனர். அவர்கள் இருந்த குகையும் அதிலுள்ள கற்படுக்கைகளும் பிராமி எழுத்துக்களும் 1910ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. இந்தப் பிராமி எழுத்துக்கள் ஒன்பது தொடர் மொழிகளாக உள்ளன. இவை 1910ஆம் ஆண்டு கல்வெட்டுத் தொகுப்பில் 70 முதல் 79 எண்ணுள்ளவையாகத் தொகுக்கப் பட்டுள்ளன. இந்தக் குகை கிடாரிப் பட்டி என்னும் ஊருக்கு அருகில் மலைமேல் அமைந்திருக்கிறது. இந்தக் குகையில் ஒரு பக்கத்தில் சுனை நீர் இருக்கிறது. இங்குள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களை ஒவ்வொன்றாய்ப் பார்ப்போம்.



இதன் தொடர் மொழிகளை அறிஞர் சிலர் படித்துள்ளனர். அவர்கள் படித்ததையும் பொருள் கூறுவதையும் பார்ப்போம் (இதன் வரிவடிவத்தைத் திரு. ஐ. மகாதேவன் காட்டியுள்ளார். திரு. கிருட்டிண சாத்திரி இதை இவ்வாறு படித்துள்ளார்.[1]

'மா(த) தி(ரை)ய் போ நா குல வானா அ(த)னா அ த (ஆ) ன'

திரு.சி. நாராயணராவ், இதைப் பிராகிருதமாகப் படித்துப் பிறகு சமற்கிருதம் ஆக்குகிறார்.[2]

[1] Ist Oriental Conference 1919.

[2] Proceedings and Transaction of the 10th All India Oriental Conference, Tirupati 1940, New Indian Antiquary Vol. I page 362 - 76.

'மாத்திரைய் - போநா குலவானா அதனா'அ தானா? (பிராகிருதம்)

''மாட்டர கீ - புத்ராணாம் (பௌத்ராணாம்(?) போதாதரம்(?) (குலபாநாம்)

ஆகாநாய(அஸ்தானாய(?) ஆஸ்தாதஸ்ய (?) தாநானி' (சமற்கிருதம்) 'மாட்டரகீ என்பவருடைய மக்கள் (பேரர்கள்?) குலத்தலைவர்கள் (குலத்தவருக்கு?) உணவுக்காகக் கொடுத்த தானம்' என்று பொருள் கூறுகிறார்.

திரு. டி.வி.மகாலிங்கம் படித்துப் பொருள் கூறுவது இது.[1] 'மத்திரை பொன் புலவன் அதன் அதன்' பொன்குலவன் என்பதன் பொருள் பொன் வாணிகன். அதன் அதன் என்பது ஆதனுடைய மகன் அதன். மதிரை (மதுரை)யில் இருந்த பொன் வாணிகன் அதன் உடைய மகன் அதன் இதைச் செய்தான்.

திரு. ஐ. மகாதேவன் இவ்வாறு படிக்கிறார்.[2]

'மத்திரை பொன் கொலவன் ஆதன் அ தான்'. ம(த்) திரையிலிருந்த பொற்கொல்லன் ஆதன் கொடுத்த தானம். நாம் இதைப் படிப்போம். பிராமி எழுத்தின் வாசகம் இவ்வாறு இருக்கிறது.

'மத்திரைய் பொன் கொல்லன் அதான் அதான்'

'மத்திரைய்' என்பது கொச்சைச் சொல்லாகத் தெரிகிறது. இது 'மதுரை' நகரத்தைக் குறிக்கிறது. இதன் இறுதியில் உள்ள யகரமெய், ஐகார ஈற்றுச் சொல்லுடன் சேர்த்து எழுதப்படுகிற அக்காலத்து வழக்கப்படி எழுதப்பட்டுள்ளது. 'கொல்வன்' என்பதும் கொச்சைச் சொல். இது கொல்லன் என்றிருக்க வேண்டும். 'பொன் கொல்லன்' என்று படித்துப் பொன் வேலை செய்பவன் என்று பொருள் கொள்ளலாம். அதான் அதான் என்பதும் கொச்சைச் சொல். இது

---

[1] P. 240 - 41 Early South Indian palaeography.

[2] P. 63 Seminar on Inscriptions 1966.

ஆதன் ஆதன் என்றிருக்க வேண்டும். ஆதன் ஆதன் என்பது பொற் கொல்லனுடைய பெயர். கடைசியில் உள்ள குறி அவன் தானம் செய்த பொன்னின் அளவைக் குறிக்கிறது. மதுரைப் பொன் வாணிகனான ஆதன் ஆதன் கற்படுக்கையை அமைக்கக் கொடுத்த பொன்னின் மதிப்பு இவ்வளவு என்பது இதன் கருத்து.

இனி, அடுத்த சொற்றொடரைப் பார்ப்போம். இது 1910 ஆம் ஆண்டில் கல்வெட்டுத் தொகுப்பின் 71ஆம் எண்ணுள்ளது.



திரு. கிருட்டிண சாத்திரி இவ்வாறு படித்துள்ளார்.[1]

'ம (ஆ) த தி ரை கொ (பா) பு வ ணி க னா'

திரு. நாராயண ராவ் பிராகிருதமாக்கிப் பிறகு சமற்கிருதம் ஆக்குகிறார்.[2]

'மாத்திரை - கொ - பாபு - வாணி கானா?' (பிராகிருதம்)

'மாட்டாக் - கிருதே - பாபு - வணிஜாம்?' (சமற்கிருதம்)

கிராமங்களின் வாணிகர்களின் தலைவர்களால் மாட்டாகி சாத்துக்கு (வணிகக்குழுவுக்கு)க் கொடுத்த தானம் என்பது பொருள்.

திரு. டி.வி. மகாலிங்கம் படித்ததும் கூறும் பொருளும் இவை.[3]

'மாத்திரை கொபு புவணிகன்' மதிரை கொப்பு (பெண்கள் காதில் அணிகிற கொப்பு என்னும் நகை) வாணிகன் என்பது பொருள்.

[1] Proceedings of the AllIndia Oriental Conference 1919.

[2] New Indian Antiquary Vol I.

[3] P. 241. Early South Indian Palaeography.

இதை நாம் படித்துப் பொருள் காண்போம். இதன் மொழிகள் 'மத்திரை கெ ஊபு வணிகன்' என்பது. மத்திரை என்பது முன் வாக்கியத்தில் கூறப்பட்டது போலக் கொள்க. அதாவது மதுரை என்பதன் கொச்சைச் சொல். இதை மதுரை என்று படிக்கவேண்டும் ஐந்தாவது எழுத்து **கெ**. இதை **கொ** என்றும் படித்துள்ளனர். இந்த எழுத்து இங்குத் தேவையற்றுக் காணப்படுகிறது. ஐகார ஈற்றுச் சொல்லின் இறுதியில் ஈகாரம் இட்டு எழுதுவது அக்காலத்து மரபு. இவ்வாறு எழுதப்பட்டுள்ளதை வேறு பிராமி வாசகத்திலும் பார்க்கிறோம். மதுரை என்னும் சொல்லின் கடைசியில் எழுத வேண்டிய ஈகார எழுத்துக்கு ஈடாக இந்த கெ எழுத்தைக் கற்றச்சன் தவறாக எழுதியிருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. ஊபு என்பது உப்பு என்று படிக்கவேண்டும். இதுவும் கொச்சையாக எழுதப்பட்டிருக்கிறது. வாணிகன் என்பதன் பொருள் தெளிவாகத் தெரிகிறது. மதுரை உப்பு வாணிகன் இக் குகையில் கற்படுக்கை அமைப்பதற்காகப் பொன் கொடுத்தான். அப் பொன்னின் மதிப்பு இதன் கடைசியில் உள்ள குறியினால் குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த தொடர்மொழியைப் பார்ப்போம். அடுத்த கல் வெட்டெழுத்தைப் பார்ப்போம்.



திரு. கிருட்டிண சாத்திரி இவ்வாறு படித்துள்ளார்.[1]

'ய கா னா கோ ணா தி கா னா'

திரு. நாராயணராவ் வழக்கம் போலப் பிராகிருதமாக்கிச் சமற்கிருதம் ஆக்குகிறார்.[2]

'ய கானா கொணதி கானா' (பிராகிருதம்) 'யக்ஷாணாம் கொணர்தி கானம்' (சமற்கிருதம்) கொணரத குன்றுகளிலிருந்து

---

[1] First All India Oriental conference 1919.

[2] New Indian Antiquary Vol. I.

வந்தவரும் கொணரத குழுவைச் சேர்ந்தவரும்) எருது வாணிகம் செய்தவருமான வணிகருடைய (யக்ஷருடைய) தானம் என்று பொருள் கூறுகிறார். திரு. டி.வி. மகாலிங்கம் கூறுவது இது. [1] 'வியன் கணதிகன்' என்பது இதன் மொழிகள். வியகன் என்பது ஒருவருடைய பெயர். கனத்தி என்பது ஒருவகை மரத்தின் பெயர். மர வாணிகம் செய்கிற வியக்கன் என்பது பொருள்.

திரு. ஐராவதம் மகாதேவன் முன்பு கூறப்பட்ட சொற்றொடரை இந்தத் சொற்றொடருடன் இணைத்து ஒன்றாகப் படிக்கிறார். [2]

'மா தவிரை கெ ஊபு வாணிகன் வியகன் கணதிகன்' என்று படித்து, 'பெரிய தவிரைக்கு (ஸ்தவிரைக்கு) உப்பு வாணிகனான வியாசன கணதிகன் கொடுத்த தானம்' என்று பொருள் கூறியுள்ளார்.

இவர், மத்திரை என்பதை மா தவிரை என்று படித்துள்ளார். இவர் இரண்டு தனித்தனி சொற்றொடரை ஒன்றாகச் சேர்த்து படிப்பது தவறு. இரண்டும் தனித்தனியே வெவ்வேறு தொடர்கள்.

கிருட்டிணசாத்திரியும் டி.வி. மகாலிங்கமும் ஐ. மகாதேவனும் ஒரு தவறு செய்துள்ளனர். முன் தொடரில் உள்ள 'மதிரை கெ ஊபு வாணிகன்' என்பதன் இறுதியிலும் அடுத்துள்ள இடகன் கணதிகன் என்பதன் தொடக்கத்திலும் இடைநடுவே ஒரு குறி உள்ளது. இந்தக் குறியை இவர்கள் எல்லோரும் பிராமி எழுத்து **வி** என்று தவறாகப் படித்துள்ளனர். **வி** என்று தவறாகக் கருதியதை அடுத்து, தொடரின் முதல் எழுத்தாகக் கொண்டு 'வயகன்' என்றுபடித்துள்ளனர். அது வி என்னும் எழுத்து அன்று. பொன்னின் அளவைக் குறிக்கும் குறியீடு, குறியீடுக்கு அருகில் மூன்று புள்ளி இருப்பதை இவர்கள் ஆழ்ந்து காணவில்லை.

இனி இதை நாம் படித்துப் பொருள் காண்போம்.

---

1. P. 241 Early South Indian Palaeography.
2. P. 63. Seminar on Inscriptions 1966.

''இயகன் கணதிகன்'' என்பது இதன் மொழித் தொடர். இதில் முதற் சொல்லாகிய 'இயகன்' என்பது ககர ஒற்றெழுத்து விடுபட்டுள்ளது. இதன் சரியான தொடர் 'இயக்கன்' என்பது. இயக்கன் என்று ஒருவகை இனத்தார் சங்ககாலத்தில் தமிழ் நாட்டில் இருந்தார்கள். (இயக்க இனத்தார் இலங்கையிலும் இருந்தார்கள்) இயக்கன் என்பது யக்ஷன் என்றும் கூறப்படும். 'ஒல்லையூர் தந்த பூதப்பாண்டின்' தன்னுடைய நண்பர்களில் இயக்கன் என்பவனையும் கூறுகிறான்.[1] இந்தக் கல்வெட்டில் கூறப்படுகிற இயக்கன், இயக்கர் இனத்தைத் சேர்ந்தவன் என்று தெரிகிறான். இவனுடைய பெயரைக் கண்திகன் என்று கல்வெட்டு கூறுகிறது. கண்திகன் என்பதைக் கண்திகள் என்றும் படிக்கலாம்.)

(அழகர் மலைக்குகையில் முனிவர்கள் இருப்பதற்கு அமைக் கப்பட்ட கற்படுக்கைகளை அமைத்துக் கொடுத்தவர்களில்) இயக்கன் கண்திகனும் ஒருவன். அவன் அதற்காகச் செலவிட்ட பொன்னின் அளவை இறுதியில் உள்ள குறியினால் அறிகிறோம். இதன் மதிப்பு இவ்வளவு என்பது இப்போது தெரியவில்லை.

அடுத்துக் கல்வெட்டைப் பார்ப்போம்.[2] இதனுடைய வரி வடிவம் எனக்குக் கிடைக்கவில்லை. இதைக் கிருட்டிண சாத்திரி இவ்வாறு படித்துள்ளார்.[3]

1. 'கா ண க அ த (ஆ) னா ம (ஓ) கனா அதனா அதானா' திரு.நாராயணராவ்,[4]

---

[1] 'பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனும், மன்னெயில் ஆந்தையும் உரைசால்
அந்துவஞ் சாத்தனும், ஆதன் அழிசியும்
வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பிற் கேளிரொடு'

-புறநா. 71: 11-15

[2] 73 of 1910

[3] First All India oriental Conference, Poona 1919.

[4] New Indian Antiquary Vol I.

'காணக' அ தானா (பிராகிருதம்) 'கணகஸ்ய தானானீ' (சமற்கிருதம்) கணக்கனுடைய தானம் என்பது பொருள்.

2. 'மோகனா அதனா' அ தானா (பிராகிருதம்) 'மோக்ஷாணாம் ஆஸ்தானாய தானானீ'

(சமற்கிருதம்) 'நோய்(துன்பம்) நீக்கும் நிலையத்துக்குக் கொடுக்கப்பட்ட தானங்கள்' என்பது பொருள்.

திரு. மகாலிங்கம் கூறுவது[1]

'கணக அதன் மகன் அதன்' கணக என்பது கணக்கர் அதாவது தத்துவ சாத்திரம் அறிந்தவர். (சாஸ்திரம்) கணக்கர் அறிந்த ஆதன் மகன் ஆதன் என்பது பொருள்.

திரு. ஐ. மகாதேவன் படித்துப் பொருள் கூறுவது.[2]

'கணக அதன் முகன் அதன அதன' கணக்கன் அதனுடைய மகன் அதனுடைய தானம் என்பது பொருள்.

இதன் வரி வடிவம் கிடைக்காதபடியால் இதுபற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை.

அடுத்த பிராமி எழுத்தைப் பார்ப்போம். இதன் வரிவடிவம் இது.



திரு. கிருட்டிண சாத்திரி [3]

'ஸா (ம) மி ஸி னா மி த தி'

[1] P. 241 Early South Indian Palaeography.

[2] P. 63. Seminar on Inscriptions 1966.

[3] Ist All India Oriental Conference 1919.

திரு. நாராயணராவ் இந்தத் தொடரையும் இதற்கு அடுத்த இன்னொரு தொடரையும் ஒன்றாக இணைத்து ஒரே மொழித் தொடராக்கிப் பிராகிருதமாகவும் சமற்கிருதமாகவும் கூறுகிறார்.[1]

'ஸாம மிஸினா மிததிருபா ணிதீ வாணிகனா ணட்ட மலானா (பிராகிருதம்)

'மைய. மிஸ்ரேண மைத்ரீ - ரூபா நிய்நிஹ் வணிஜாம் நஷ்டமலானாம்' (சமற்கிருதம்)

பௌத்த மத நம்பிக்கையுடனும் மைத்தீ (நட்பு)யுடனும் இருப்பவரும் ஆன்மாவிலிருந்து மலத்தை (அழுக்கை) நீக்கியவருமான வாணிகர் தேர்ந்து கொண்ட தர்மம் என்பது இதன் பொருள்.

திரு. டி.வி. மகாலிங்கம் கூறுவது.[2]

'பைமிஸின் மித்தி' இதை ஸம்மிஸின் என்றும் படிக்கலாம். மித்தி என்பது உறக்கம் என்னும் பொருள் உள்ளது. சைனருடைய சிறு தெய்வங்களில் ஒன்றான ஸங்க்ஈர் அல்லது மிதியா என்னும் தெய்வத்தின் பெயராகவும் இருக்கலாம். இஃது ஓர் ஆளின் பெயரைக் குறிக்கிறது. திரு. ஐ. மகாதேவன்[3]

'ஸாப மிதா ஈன்... பாமித்தி' பிக்குணி.... ஸாபமித்தாவினுடைய என்பது பொருள். இதன் மொழித்தொடரைப் பார்ப்போம்.

இது பௌத்தமதப் பெண்ணின் பெயர்போல் தோன்றுகிறது. ஸபமிதி என்பது சுபமிதி ஆக இருக்கலாமோ. சுதமதி என்னும் பௌத்தப் பெண் பெயர் மணிமேகலைக் காப்பியத்தில் கூறப்படுகிறது. இந்தப் பெயரின் சரியான வடிவம் தெரியவில்லை.

---

[1] New Indian Antiquary Vol. I

[2] P. 242 Early South Indian Palaeography.

[3] P. 63 Seminar on Inscriptions 1966.

இந்தப் பெயருடையவர் கற்படுக்கை அமைக்கப் பொன் கொடுத்திருக்கிறார் என்பது தெரிகிறது.

அடுத்த கல்வெட்டு இது.



திரு.கே.வி. சுப்பிரமணிய அய்யர் இதன் முதல் மூன்று எழுத்துக்களை விட்டுவிட்டு மற்ற எழுத்துக்களைப் படித்து 'வாணிகன் நெடுமலன்' என்று கூறுகிறார். இந்தப் பெயர் இந்த குகையில் வசித்திருந்த ஒருவருடைய பெயரைக் கூறுகிறது என்று எழுதுகிறார்.[1] திரு.டி.வி. மகாலிங்கம் இதை 'பணிதி வணிகன் நெடுமலன்' என்று படித்து, 'அழகுப் பொருள்களை விற்கும் வாணிகனாகிய நெடுமூலன்' என்று பொருள் கூறுகிறார்.[2]

திரு. ஐராவதம் மகாதேவன் இதை 'பானித வாணிகன் நெடுமலன்' என்று படித்து சர்க்கரை வாணிகன் நெடும(ல்)லன்' என்று பொருள் கூறுகிறார்.[3]

இதற்கு நாம் பொருள் காண்போம்.

'பணித வணிகன் நெட்டு மூலன்' என்பது இதன் தொடர். பணித வணிகன் என்பதற்கு அழகுப் பொருள் விற்பவன் என்றும் சர்க்கரை வாணிகன் என்றும் டி.வி. மகாலிங்கமும் ஐ. மகாதேவனும் பொருள் கூறுகிறார்கள். சங்க காலத்தில் இந்தச் சொற்கள் வழங்கவில்லை. ஆனால், பளிதம் என்னும் சொல் வழங்கிவந்தது. ஆகவே இது 'பளிதவணிகன்' என்பதாக இருக்கக்கூடும். பளிதம் என்னும் சொல் பணிதம் என்று பேச்சு வழக்கில் இருந்திருக்கலாம் பேச்சு வழக்கில்

[1] Third All India Orintal Conference 1924.

[2] P. 242 - 243 Early South Indiand Palaeography.

[3] P. 63 Seminar Inscriptions 1966.

இருந்தபடியே கல்வெட்டில் எழுதப்பட்டது போலும். பளிதம் என்பது பச்சைக் கர்ப்பூரம். இதை வெற்றிலை அடைக்காயோடு சேர்த்து அக்காலத்தில் அருந்தினார்கள்.

''பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து'' என்று மணிமேகலைக் காவியம் (கச்சிமாநகர் புக்ககாதை அடி 243) கூறுகிறது. பாசிலைத் திரையல் - வெற்றிலை, பளிதம் - பச்சைக் கர்ப்பூரம். பௌத்த பிக்குகள் வெற்றிலை யருந்துவது வழக்கம். கர்ப்பூரத்தில் சிலவகை உண்டு. ஒருவகைக் கர்ப்பூரத்தைக் குங்குமம், அகில், சந்தனம் இவற்றை இழைத்த குழம்புடன் சேர்த்து உடம்பில் பூசினார்கள். கர்ப்பூரத்தில் சிலவகை உண்டு என்று இதனால் தெரிகிறது. பத்தாம் பரிபாடலில் 'செங்குங்குமச் செழுஞ்சேறு, பக்கஞ் செய்யகில் பலபளிதம்'' [1] **பலபளிதம்** - பலவாகிய கருப்பூரம் என்று இதற்குப் பரிமேலழகர் உரை எழுதியுள்ளார். பரிபாடல் பலபளிதம் என்று கூறுவதைச் சிலப்பதிகாரம் 'தொகுகருப்பூரம்' என்று கூறுகிறது. [2] இந்தப் பளிதங்கள் தமிழ் நாட்டுப் பொருளும் அன்று. பாரத நாட்டுப் பொருளும் அன்று. அவை சாவக நாட்டிலிருந்து (கிழக்கிந்தியத் தீவுகள்) கப்பலில் கொண்டுவரப்பட்டவை.

இந்தப் பிராமி எழுத்துக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள பணிதம் என்பது பளிதமாக (கர்ப்பூர வகை) இருக்கக்கூடும். எனவே பணித வணிகன் என்பது பளிதவணிகன் ஆக இருக்கலாம். நெடுமூலன் என்பது 'நெட்டு மூலன்' என்று தவறாக எழுதப்பட்டிருக்கிறது.

பளித (பணித) வாணிகனாகிய நெடுமூலன் இந்த மலைக் குகையில் கற்படுக்கைகளை அமைப்பதற்காகப் பொன் கொடுத்தான். என்பது இந்தத் தொடரின் பொருள். அவன் கொடுத்த பொன்னின் மதிப்பு இந்தக் குறியினால் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் குறியின் மதிப்பெண் என்ன என்பது தெரியவில்லை.

---

1. பரிபாடல் 10ஆம் பாடல் அடி 81 - 82

2. சிலப்: ஊர்காண்காதை, வரி 109.

அடுத்த கல்வெட்டு இது



திரு. கிருட்டிண சாத்திரி இதன் முதல் இரண்டு எழுத்துக்களை விட்டுவிட்டு, 'வாணி கனா யள னாதன்' என்று படித்துள்ளார்.[1] திரு. கே.வி. சுப்பிரமணிய அய்யரும் முதல் இரண்டு எழுத்துக்களை விட்டுவிட்டு, மற்ற எழுத்துக்களை ''வாணிகன் யுளநாதன்'' என்று படித்துள்ளார்.[2] திரு. நாராயணராவும் முதல் இரண்டு எழுத்துக்களை விட்டு விட்டுப் படிக்கிறார். அவர் இந்தத் தொடரோடு அடுத்துக் கூறப்போகிற தொடரையும் ஒன்றாக இணைத்துப் பிராகிருதமாக்கிப் பிறகு சமக்கிருதமாக்குகிறார்.

'வாணி கானா யுள நாதனா சிகட்ட - மாதன தானா' (பிராகிருதம்)

'வணிஜரம் யூ த (-யுவ -) - நாதானாம் ஸ்ரீ கண்ட (சிகட்ட) மாத்ருணாம் - தானானி' (சமக்கிருதம்)

ஸ்ரீ கண்ட மாத்ருகண (சிகட்ட மாத்ருகண)த்தைச் சேர்ந்த தலைமைச் சாத்து (யுலசாத்து) வாணிகத் தலைவர்களின் தானம் என்று இதற்குப் பொருள் கூறுகிறார்.[3]

திரு.டி.வி. மகாலிங்கம், 'கொழு வாணிகன் யுளா சாந்தன்' என்று படித்து, 'தொழுதைலான இரும்புச் சாமான்களை விற்கிற உரைசேந்தன்' என்று பொருள் கூறுகிறார்.[4]

---

[1] Ist All India Oriental Conference.

[2] Third All India Oriental Conference.

[3] New Indian Antiquary Vol. I.

[4] P. 243 Early South Indian Palaeography.

திரு. ஐ. மகாதேவன் 'கொழு வாணிகன்' என சந்தன் என்று படித்து, இரும்பு வாணிகன் என சந்தன் என்று பொருள் கூறுகிறார். [1]

இவர்கள் இருவரும், 'கொழு வாணிகன்....சந்தன்' என்று படித்திருப்பது சரியே. ஆனால் இடையில் உள்ள இரண்டு எழுத்துக்களை 'யுள' என்றும் 'எளி' என்றும் படித்ததில் தவறு காணப்படுகிறது. இது 'இள' என்னுஞ் சொல்லாகும். இள என்னும் சொல் கொச்சைத் தமிழில் 'எள' என்று எழுதப்பட்டிருக்கிறது. இளஞ் சந்தன் என்னும் பெயருள்ள கொழு வாணிகன் மலைக்குகையில் கற்படுக்கை அமைப்பதற்குப் பொன்னைக் கொடுத்தார். அந்தப் பொன்னின் மதிப்புத் தெரியவில்லை.

இதற்கு அடுத்த கல்வெட்டைப் பார்ப்போம். இதன் வரி வடிவம் இது.



திரு. கே.வி. சுப்பிரமணியம் இதை இவ்வாறு படிக்கிறார். [2]

'சிகற மாறன் தான்' என்று படித்து, சிகற மாறன் என்பவன் புகழ் பெற்ற தச்சன் என்று கூறுகிறார். இவர் மூன்றாம் எழுத்தையும் 5ஆம் எழுத்தையும் வல்லின'ற என்று படிக்கிறார்.

திரு. கிருட்டிண சாத்திரியும், திரு. டி.வி. மகாலிங்கமும் இந்தத் தொடரோடு அடுத்துக் கூறப்போகிற தொடரையும் ஒன்றாக்கிப் படிக்கின்றனர். அவர்கள் ஒன்றாக்குவது தவறு. இந்தத் தொடர் இதனோடு முடிகிறது. அந்தத் தொடருடன் தொடர்புள்ளது அன்று.

---

[1] P. 64 Seminar or Inscriptions 1966.

[2] Third All india Oriental Conference.

திரு. ஐ. மகாதேவன் இந்த எழுத்துக்களை வேறு முறையாக வரைந்து காட்டுகிறார்.

இதில் இவர் முதல் எழுத்தாகக் காட்டுங்குறி முந்திய தொடரின் இறுதியைச் சேர்ந்தது. இவர் இந்தக் குறியில் மேற்பகுதியை வைத்துக்கொண்டு அதை ஞ் என்று படிக்கிறார். இது தவறு. இவர் படிப்பது இது.[1]

'ஞ்சி கழு மாறன் தான்' ஞ்சி என்னும் இடத்தில் இருந்த கழுமாறன் கொடுத்த தானம் என்று பொருள் கூறுகிறார்.

இரண்டு வரிவடிவங்களிலும் எழுத்து மாறுபாடுகள் காணப்படுகின்றன. ஐ. மகாதேவன் **ஞ்** என்று தவறாகக் காட்டுகிற எழுத்து முதல் வரிவடிவத்தில் இல்லை. அது **ஞ்** அன்று, ஒரு வகைக் குறியீடு என்று முன்னமே கூறினோம். முன் வரிவடிவத்தில் மூன்றாவது எழுத்து வல்லின ற போன்று இருக்கிறது. மகாதேவனு டைய வரி வடிவத்தில் இந்த எழுத்து **ம** என்று காட்டப்பட்டிருக்கிறது. முந்திய வடிவத்தில் ஆறாவது எழுத்து **அ** போன்று இருக்கிறது. மகாதேவனுடைய வரிவடிவத்தில் அந்த எழுத்து (7-வது எழுத்து) **ன** போல இருக்கிறது. கல்வெட்டு எழுத்தில் மைப்படி ஒற்றி எடுத் திருந்தால் ஒரே மாதிரிதான் இருக்கும். ஐ. மகாதேவன்மை ஒற்றி எடுக்காமல் கண்ணால் பார்த்து எழுதினார் என்று தோன்றுகிறது. ஆகவே வரிவடிவில் வேறுபாடு காணப்படுகிறது. ஆகவே இந்தக் கல்வெட்டின் சரியான வரி வடிவம் தெரிகிற வரையில் இதைப் படிக்காமல் விடுகிறோம்.

இதற்குப் பிறகுள்ள பிராமி எழுத்துக்களை எபிகிறாபி இலா காவும் ஐ. மகாதேவனும் வேறு வேறு விதமாகக் காட்டுகின்றனர்.

இதிலிருந்து இக் கல்வெட்டுக்களை முழுவதும் படி எடுக்க வில்லை என்பதும், ஐராவதம் மகாதேவன் ஏறக்குறைய முழுவதும்

---

[1] P. 64 Seminar on Inscriptions 1966.



படி எடுத்துள்ளார் என்பதும் தெரிகின்றன. முதலில் கொடுக்கப்பட்ட தொடரில் 'அணிய் கொடுபித்தவள் அணகன்' என்று முடிகிறது. ஐ. மகாதேவன் கொடுக்கும் தொடர். ''தார அணிய் கொடுபித அவன் கஸபன் அத்விரஅ வரு (ஊ?) ம் குடு பி தோ'' என்று இருக்கிறது. முதலில் காட்டப்பட்டதில் 'அணகன்' என்னுஞ் சொல் இரண்டாவது தொடரில் இல்லை. இரண்டாவதில் உள்ள கஸபன் என்னும் பெயர் முதல் தொடரில் இல்லை.

அழகர்மலைக் குகையில் கற்படுக்கைகளை அமைக்கப் பலர் பொருளுதவி செய்துள்ளனர். இன்னின்னார் இவ்வளவு இவ்வளவு பொருள் உதவினார்கள் என்பதும் அவர்களின் பெயர்கள் இன்னின்ன என்பதும் இந்தக் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளன. அழகர் மலையில் உள்ள இன்னொரு பிராமிக் கல்வெட்டின் வரிவடித்தினை [1] திரு. ஐ. மகாதேவன் இவ்வாறு படிக்கிறார்.

---

[1] No. 43 Corpus of the Tamil Brahmi Inscriptions 1157 - 73 Seminar on Inscriptions 1966. R. Nagaswamy (Edited by).

'வேண் பளி ஈ அறுவை வணிகன் என அ அடன்' என்று படித்து வேண் பள்ளி துணி வாணிகன் என(வ) ஆதன் என்று பொருள் கூறுகிறார். இதை நாம் படிப்போம். இதை வேண்பனி அல்லது வெண்பனி என்று படிக்கலாம். பள்ளி என்பது பனி என்று எழுதப்பட்டுள்ளது. ஈகார எழுத்து இகர ஈற்றில் முடிகிற பள்ளி (பளி)யுடன் இணைத்து அக்காலத்து முறைப்படி எழுதப் பட்டிருக்கின்றது. இதற்குப் பொருள் இல்லை. வேண்பள்ளி அல்லது வெண்பள்ளி ஓர் ஊரின் பெயர். அறுவை என்பது துணிக்குப் பெயர். இச் சொல் சங்க காலத்தில் வழங்கப்பட்டது. அறுவை வாணிகன் என்பது துணி வாணிகன். (இளவேட்டனார் என்னும் புலவர் மதுரையில் அறுவை வாணிகம் செய்தவர். அவர் பாடிய பாடல்கள் சங்கத் தொகை நூல்களில் தொகுக்கப்பட்டுள்ளன).[1] 'எள அ' என்பது எளைய என்பது. இளைய என்னும் சொல் எளய என்று கொச்சையாக எழுதப்பட்டுள்ளது அடன் என்பது வாணிகனுடைய பெயர். எளய அடன் என்பது இவருடைய முழுப் பெயர். அடன் என்பது ஆட்டன் என்னும் பெயர். இது கொச்சையாக அடன் என்று எழுதப்பட்டுள்ளது 'ஆட்டன் ஆத்தி' என்னும் பெயர் சங்க காலத்தில் வழங்கி வந்தது. இளம் ஆட்டன் என்பது ஆட்டனு டைய தம்பி என்னும் பொருளில் வழங்கிற்று. இளங்கண்ணன். இளநாகன், இளங்கௌசிகன், இளவேட்டன், இளங்கடுங்கோ, இள எயினி, இளங்குட்டுவன் முதலான பெயர்களைக் காண்க.

வெண்பள்ளி ஊரில் இருந்த அறுவை வாணிகனான இள ஆட்டன் இந்தக் குகையில் கற்படுக்கை அமைக்கும் செலவுக்காக பொன் கொடுத்தான். அந்தப் பொன்னின் மதிப்பு இந்தப் பெயரின் இறுதியில் ஒரு குறியினால் காட்டப்பட்டுள்ளது.

---

[1] அகநா 59, 126, 230, 254, 272, 302. குறுந் 185 நற்றிணை 33, 157, 221, 344; புறநா. 329.

7. ஆண்டிப்பட்டி பிராமி எழுத்து

தொண்டை நாட்டிலே வட ஆர்க்காடு மாவட்டத்துச் செய்யாறு தாலுகாவில் ஆண்டிப்பட்டி என்னும் ஊர் இருக்கிறது. இந்த ஊரிலே 1967ஆம் ஆண்டு பழங்காசுப் புதையல் கிடைத்தது. அந்தப் புதையலில் 143 ஈயக்காசுகள் இருந்தன. இக் காசுகள் தேய்ந்து அதிலுள்ள எழுத்துக்கள் மழுங்கிக் காணப்பட்டன. இக் காசுகள் சென்னை நகரப் பொருள் காட்சிச் சாலையில், பழங்காசுப் பிரிவில் இப்போது உள்ளன. இந்தப் புதையலைப் பற்றி 'ஸண்டே ஸ்டாண்டர்டு' பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது.[1] பொருட்காட்சிச் சாலையின் பழைய காசு இலாகாவினர் இந்த எழுத்துக்களைத் தற்காலிகமாக 'அதினன் எதிரான் சேந்தன்' என்று படித்துள்ளனர்.

இந்த நாணயங்களிலுள்ள எழுத்துக்கள் சங்க காலத்தில் வழங்கிவந்த பிராமி எழுத்துக்கள். எனவே இந்தக் காசுகள் கடைச் சங்க காலத்தில் கி.பி. முதல் நூற்றாண்டில் வெளியிடப்பட்டவை.

இந்தக் காசுகளில் ஐந்தாறு காசுகளின் நிழற்படத்தை நான் பார்த்தேன். அவற்றில் இந்த எழுத்துக்களின் முழுச் சொற்கள் கிடைக்கவில்லை. சில எழுத்துக்கள் தெரிந்தும் சில எழுத்துக்கள் மழுங்கியும் சில எழுத்துக்கள் மறைந்தும் உள்ளன. அவற்றில் காணப்பட்ட பிராமி எழுத்துக்களைக் கீழே தருகிறேன்.

....சேந்தன் ஆதி....
.....எதிரான் சே.....
......எதிரா
.....எதினன்?

இவற்றிலிருந்து சேந்தன், எதிரான் என்னும் சொற்கள் மட்டும் நன்றாகத் தெரிகின்றன.

---

[1] First finds of Sangam age Coins. The Sunday Standard 16-7-1967.

இந்த எழுத்துக்களின் எகர எழுத்தைக் கவனிக்க வேண்டும். இந்த எழுத்து வட்டவடிவமாக நடுவில் புள்ளி பெற்றுள்ளது. பிராமி எழுத்துக்களில் எகர எழுத்து முக்கோண வடிவமாக இருப்பது வழக்கம். முக்கோண வடிவம் வட்டவடிவமாக மாறிப் போய் இப்படியும் எழுதப்பட்டது. இதன் உட்பக்கத்தில் உள்ள புள்ளி, இது குற்றெழுத்து என்பதைத் தெரிவிக்கின்றது. 'எகர ஒகர மெய்புள்ளி பெறும்' என்பது தமிழ் எழுத்திலக்கணம். ஏகர ஒகர எழுத்திலும் மெய் எழுத்திலும் புள்ளி இடவேண்டும் என்பது இந்த நூற்பாவின் கருத்து. புள்ளியிடாமற் போனால் ஏ என்றும் ஓ என்றும் வாசிக்கவேண்டும். மெய் எழுத்துக்களின்மேல் புள்ளி இடாவிட்டால் அவை உயிர்மெய் எழுத்தாகப் படிக்கப்படும். இந்த எகர எழுத்தில் புள்ளியிட் டிருப்பதனால் இது எ(குறில்) என்பது தெரிகிறது. புகழியூர் கல்வெட்டு ஒன்றில் இதுபோன்று வட்டவடிவமும் நடுவில் புள்ளி பெற்றதுமான எகர எழுத்து காணப்படுவதை முன்பு கண்டோம்.

இந்தத் தமிழ்நாட்டுக் காசுகளில் பிராமி எழுத்து எழுதப் பட்டிருப்பதுபோலவே சாதவாகன அரசருடைய நாணயங்களில் பிராமி எழுத்து எழுதப்பட்டிருப்பதை இந்நூலில் வேறு இடத்தில் காண்க.

8. விக்கிரம மங்கலம் பிராமிக் கல்வெட்டு

மதுரை வட்டத்துச் சோழவந்தானுக்கு அருகில் விக்கிரம மங்கலம் என்னும் ஊர் இருக்கிறது. இந்த ஊருக்குத் தெற்கே ஒரு கல் தொலைவில் நாக மலைத்தொடரைச் சார்ந்த 'உண்டான் கல்' என்னுமிடத்தில் சிறு குன்று இருக்கிறது. இந்தக் குன்றிலே தெற்கு நோக்கி குகை ஒன்று இருக்கிறது. இயற்கையாக அமைந்துள்ள இந்தக் குகையின் வாயிற்புறம் உட்புறம் குறுகிச் சரிவாகவும் இருக்கிறது. குகையில் உட்புறத்தில் பாறைச் சுவரின் ஓரமாக இரு பக்கத்திலும் கற்படுக்கைகள் செதுக்கப்பட்டடுள்ள. ஒரு பக்கத்தில் நான்கு படுக்கைகளும் இன்னொரு பக்கத்தில் எட்டுப் படுக்கைகளும் காணப்படுகின்றன. இந்தப் படுக்கைகளுக்குத் தலையணை அமைப்பு

இல்லை. இந்தப் படுக்கைகளில் மூன்று படுக்கைகளின் தலைப் பக்கத்தில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

1926ஆம் ஆண்டில் இங்குள்ள படுக்கைகளும் பிராமி எழுத்துக்களும் கண்டுபிடிக்கப்பட்டன. சென்னை எபிகிராபி இலாகாவில் 1926-27ஆம் ஆண்டு அறிக்கையில் இவைபற்றிய அறிக்கை வெளியிடப்பட்டது.[1] இந்தக் கல்வெட்டுடெழுத்துக்கள் 1926ஆம் ஆண்டின் தொகுப்பில் 621, 622, 623 எண் உள்ளவை யாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆண்டு அறிக்கையில் 74ஆம் பக்கத்தில் இவ்வெழுத்துக்களைப் பற்றி இவ்வாறு எழுதப்பட் டுள்ளது; இந்த எழுத்துக்கள் கி.மு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை என்று கருதப்படுகின்றன. அந்தை பிகானி மகன் வேண். பொதிலை குவிரான் என்னும் பெயருள்ள பௌத்த பிக்குகளின் பெயரை இவ்வெழுத்துக்கள் கூறுகின்றன.

இந்த அறிக்கை கூறுகிறபடி, இப்பெயர்கள் இங்குத் தங்கியிருந்த பௌ்ள பிக்குளின் பெயரைக் கூறவில்லை. இப் பெயர்கள் கற்படுக்கைகளை அமைத்துக் கொடுத்தவர்களின் பெயரைக் கூறுகின்றன.



இவ்வெழுத்துக்களைப் படித்தவர் இவை பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதைப் பார்ப்போம். திரு.கே.வி. சுப்பிரமணிய அய்யர் கூறுவது.

1. "அந்தை பிகான் மாகன் வேண் தான".

பிகான் மகனான வேண் இந்த அந்தையைத் தானஞ் செய்தான். (அந்தை - படுக்கை), அந்தை, பிகான் இரண்டையும்

---

[1] Annual Report on South Indian Epigraphy 1926-27 Pt. II Para 8.

ஒன்று சேர்த்து அந்தை பிகான் என்று படித்து, இஃது ஓர் ஆவின் பெயர் என்று கொண்டால், அந்தை பிகான் இந்தக் குகையின் இருந்த துறவியின் பெயர் என்று கூறலாம்.

2, 3. ''பொதிலை குவீரன் வேண் குவீர் கொட்டு பிதான்''.

பொதிலை குவீரன் என்பது இக் குகையில் இருந்தவருடைய பெயர். வேன் குவீரன் கொத்துவித்தான். அதாவது வேன்குவீரன் கற்படுக்கையைக் கொத்தி அமைத்தான்.

திரு நாராயண ராவ் கீழ்வருமாறு படிக்கிறார்.[1]

1. அந்தை பிகானா மாகனாவே னா தான

2. பொதிலை குவீரனா குவிரனா கொ ட்டுபிதா (பிராகிருதம்)

1. 'அந்யத்தேயம் பிக்ஷுணாம் மஹதாம் வைஸ்யானாம் தானானி.

2. புத்ரஹ் குபேரானாம் வைஸ்யானாம் குபேரானாம் கொட்டபித(வா)(சமற்கிருதம்).

இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துப் பொருள் கூறுகிறார். பிக்குகளுக்கு இன்னொரு தானம். பெரிய குடும்பத்தார், வாணிகர்கள், குபேரர்களுடைய மக்கள், வாணிகக் குடும்ப குபேரர்கள் இவற்றை அமைத்தார்கள்.[2]

திரு.டி.வி. மகாலிங்கம் இவ்வாறு படித்துள்ளார்.[3]

1. அந்தைய் பிகன் வேநா அதன்.

அந்தை பிகனுடைய மகன் வேண் அதன் என்பது இதன் பொருள். ஆப்தன் என்னும் பிராகிருத மொழிச் சொல் ஆதன் என்றாகிப் பிறகு அதன் என்றாயிற்று.

---

[1] New Indian Antiquary Vol I.

[2] P. 385 The Brahmi Inscriptions of South India, New Indian Antiquary Vol.I.

[3] P. 233-235 Early South Indian Palaeography.

2. பொதிலை குவிர(ன்)

பொதிலை என்பது ஓர் இடத்தின் பெயர். பொதிகைமலை பொதியில், பொதிகை, பொதியம் என்பது போலப் பொதிலை என்பதும் பொதிகை மலையாக இருக்கலாம். குவிரான் என்பது ஒருவர் பெயர். இப் பெயர் சித்தர்மலை எழுத்திலும் காணப் படுகிறது.

3. செங்கு விரன்.

செம் - செம்மையான, நேர்மையான. குவிரன் - குபேரன்.

திரு. ஐராவதம் மகாதேவன் கூறுவது இது.[1]

1. **அத் தைய் பிகன் மகன் செய்அ தான**
   அந்தை பிகன் மகன் செய்த தானம்.
2. **பெதலை குவிரன்.**
   பெதலையைச் சேர்ந்த குவிரன்
3. **செங் குவீரன்**
   செங்கு வீரன் இஃது ஒரு ஆளின் பெயர்.

நாம் இவற்றைப் படிப்போம்.

1 அந்தை பிகன் மகன் வேண் அதன்

அந்தை என்பது ஆந்தை என்னும் பெயர். இப் பெயர் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களில் நெடுக அந்தை என்றே எழுதப் பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் இந்தப் பெயர் ஆந்தை என்று இருப்பதைக் காண்கிறோம். பிகன் என்பது பேகன் என்றிருக்க வேண்டும். சங்க காலத்தில் பேகன் என்னும் பெயர் வழங்கிவந்தது. பிகன் என்பது பேகன் என்பதன் கொச்சை வழக்கு. ஆந்தை பீகனுடைய மகன். வேண் ஆதன். வேண் என்பது 'வெந்' என்று எழுதப்பட்டுள்ளது. பிராமி எழுத்து நவின் தலையில் குறுக்குக் கோடும் அமைத்தால் ண் ஆகிறது. குறுக்குக் கோடு இடாமல் எழுதப்

[1] P. 61. Seminar on Inscriptions 1966.

பட்டுள்ளது. அதன் என்பது ஆதன் என்பதன் கொச்சை வழக்குச் சொல். ஆதன் என்னும் பெயர் சங்க காலத்தில் வழங்கியுள்ளது.

2. பொதலை குவிர(ன்)

பொதலை என்னும் ஊரில் இருக்கும் குவிரன் என்பது பொருள்.

3. செங்குவிரன்

இஃது ஓர் ஆளின் பெயர். செங்கண்ணனார் என்பது போலச் செங்குவிரன் என்பதாகும்.

இவர்கள் மூவரும் இங்குள்ள கற்படுக்கையை அமைத்தார்கள் என்பது கருத்து. விக்கிரமங்கலத்து உண்டான கல் குகையில் இன்னொரு பிராமி எழுத்துக் கல்வெட்டு இருக்கிறது. அதைத் திரு. ஐ. மகாதேவன் காட்டியுள்ளார். அவர் காட்டும் அந்த எழுத்தின் வரிவடிம் இது.



இதை இவர் இவ்வாறு படிக்கிறார்.

'எம் ஊர் ச அதன் - அ தான'.

எங்கள் ஊர் சாதனுடை தானம் என்பது இதன் கருத்து என்று கூறுகிறார்.[1]

இவர் படித்துள்ளது சரி என்று தெரியவில்லை. இதைக் கீழ்க்கண்டவாறு படிக்கலாம்.

'ஏம ஊர் சஅதன் அதன்'

---

[1] P. 62 Seminar on inscriptions 1966.

ஏம ஊர் என்பது ஓர் ஊரின் பெயர். ச அதன் என்பதைச் சாத்தன் என்று படிக்கலாம். அதன் என்பது ஆதன் என்னும் பெயர். ச அதன் அதன் என்று தவறாக எழுதப்பட்டுள்ளது. இது சாத்தன் ஆதன் என்று எழுதப்படவேண்டும். பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களில் பல கொச்சைச் சொற்களும் தவறான எழுத்தக்களும் காணப்படுவது போல இங்கும் இத் தவறுகள் காணப்படுகின்றன.

ஏம ஊரில் வசித்த சாத்தன் ஆதன் என்பவர் இந்தக் கற்படுக்கையை அமைத்துக் கொடுத்தார் என்பது இதன் பொருள்.

9.அரிட்டாபட்டி

அரிட்டாபட்டியிலுள்ள இன்னொரு பிராமி எழுத்துக் கல்வெட்டைத் திரு.ஐ. மகாதேவன் கீழ்வருமாறு எழுதியுள்ளார்.



கிருட்டிண சாத்திரிகே.வி. சுப்பிரமணிய ஐயர், நாராயண ராவ், டி.வி. மகாலிங்கம் ஆகியோர் முதல் வரியை (பத்து எழுத்துக்களை) விட்டு விட்டு மற்றவற்றைப் படித்துள்ளனர். ஒவ்வொரு விதமாகப் படித்து வெவ்வேறு பொருள் கூறுகின்றனர். கிருட்டிண சாத்திரி இவ்வாறு படித்துள்ளார்.

வெ ள (அ) (டை) ய நி கா மா த (ா)
கொ (போ) திர (ய) காஸ் தீ கா அ (ரிதெ)
அ ஸா தா னா பி நா க கொடுபி தோ னா

கே. வி. சுப்பிரமணிய அய்யர் இவ்வாறு படித்து விளக்கம் கூறுகிறார்.

வெள் அடைய் நிகாமதா கொ
பொதிர் யகாஸீ தி கா அரிதாவ
ஸாதான் கிணாக கொடு பி தோன்

பொதிர் - புத்திரி. நிகாமதாகொ - நகரத்தாருடைய யகாஸீதி - ஒருவருடைய பெயர். கா அரிதா - செய்வித்தார். பிணாகன் - பிணக்கன், 'வெள்ளடையில் வசிக்கிறவரின் மகளான யக்ஷாஸ்தி (இந்தக் குகையை) செய்வித்தாள். ஸாத்தன் பிணக்கன் இதைச் செய்தான்' என்று பொருள் கூறுகிறார்.

திரு. நாராயணராவ் இந்த எழுத்துக்களைப் பிராகிருத மொழியாகப் படித்துப் பிறகு சமற்கிருதமாகக் கற்பித்து அதற்கேற்பப் பொருள் கூறுகிறார். அவற்றை இங்குக் காட்டவில்லை.

திரு.டி.வி. மகாலிங்கம், சுப்பிரமணிய அய்யரைப் பின்பற்றிக் கீழ்வருமாறு படித்துப் பொருள் கூறுகிறார்;[1]

'வெள் அடைய் நிகமத
கொபிதிர் யக ஸிதிக அரிதெ அ
ஸதன் பிணக கொடுபி தோன்'.

'வெள்ளடையில் வசிப்பவரின் மகளான யாகஸிதி என்பவள் (இந்தக் குகையை) செய்வித்தாள். ஸாத்தன் பிணக்கன் இதைக் கொத்துவித்தான்.'

திரு.ஐ. மகாதேவன், முதல் வரிசைப் பத்து எழுத்துக்களையும் சேர்த்துக் கீழ்வருமாறு படித்துப் பொருள் கூறுகிறார்:[2]

கணிஇ ந தாஸீ ரி ய கு வ
வெள் அறைய் நிகமது
காவி தி இ ய் கா ழி திக அந்தை அ
ஸுதன் பிணாஊ கொடுபி தோன்.

உங்கு (உவ) வசிக்கிற கணி நதாவுக்கு வெள்ளறை நிகமத்து காவிதி காழிதிக அந்தையின் மகன் இந்தப் பிணாஊ கொடுப்பித்தான்.

---

[1] P. 211 Early South Indian Palaeography.

[1] P. 60. No. 3 Seminar on Inscriptions 1966.

இவர் ஏறக்குறையச் சரியாகவே படித்துள்ளார்.

இவ்வெழுத்துக்களை நாம் படித்துப் பொருள் கூறுவோம்.

'கணிஇ நதா ஸிரி யகுவ்
வெள் அறைய் நிகமது
காவிதிஇய் காழி திக அந்தை அ
ஸ௳தன் பிணாஊ கொடுபி தோன்.

மிகையாயுள்ள எழுத்துக்களைத் தள்ளிவிட்டு, விடுபட்ட எழுத்துக்களைச் சேர்த்து இவற்றை இவ்வாறு படிக்கலாம்:

'கணி நந்தா ஸிரியற்கு
வெள்ளறை நிகமத்து
காவிதி காழிதி ஆந்தைய
ஸ௳தன் பிணாவு கொடுபித்தான்!

விளக்கம்: கணி நந்தாசிரியர் என்பது முன் இரண்டு கல்வெட்டுக்களில் கூறப்படுகிறது. கணி நதி ஆசிரியர் ஆகும். **வ்** என்பது தேவையற்ற எழுத்து. அதை 'வெள் அறை' என்பதோடு சேர்த்துப் படிக்கலாம். வெள் அறை - வெள்ளறை என்று சேர்த்துப் படிக்கலாம். வெள்ளறை என்னும் ஐகார ஈற்றுச் சொல்லுடன் யகர மெய் சேர்த்து எழுதுவது அக்காலத்து முறை. நிகமம் என்பது நியமம். இச்சொல், தெரு என்னும் பொருளில் சங்க காலத்தில் வழங்கப்பட்டது. 'கருங்கட் கோசர் நியமமாயினும்' (அகநா.90:12) நியமம் என்பதற்குக் கோயில் என்னும் பொருள் உண்டு. இக் கல்வெட்டுக் கூறுகிற 'வெள்ளறை நிகமம்' என்பது 'வெள்ளறை நியமம்', அஃதாவது 'வெள்ளறையூரின் அங்காடித் தெரு என்று பொருள் உள்ளது. **காவிதி** என்பது அரசனால் கொடுக்கப்படும் பட்டப் பெயர். காழிதி ஆந்தை என்பது காவிதி பட்டம் பெற்ற வருடைய பெயர். ஆந்தை என்னும் பெயர் சில பிராமிக் கல்வெட்டுக் களில் அந்தை என்று எழுதப்பட்டுள்ளது. 'ஆந்தைய' என்பதன் பொருள் ஆந்தையினுடைய என்பது, அ என்னும் வேற்றுமை உருபு உடைய என்னும் பொருள் உள்ளது. ஸ௳தன் என்பது வடமொழிச்

சொல். மகன் என்னும் பொருள் உள்ளது. பிணா, அல்லது பிணாவு என்பது பின்னப்பட்டது. முடையப்பட்டது என்னும் பொருள் உள்ளது. அல்லது சாமரையைக் குறிக்கிறதா? பிணாவு என்பதன் சரியான பொருள் தெரியவில்லை? கற் படுக்கைகளைக் குறிப்பதாக வும் இருக்கலாம்.

வெள்ளறை யங்காடித் தெருவில் வசிக்கிற காவிதி காழிதி ஆந்தையினுடைய மகன் கணிநந்தாசிரியற்கு 'பிணாவு' கொடுப் பித்தான் என்பது இதன் கருத்தாகும்.

அரிட்டாபட்டி 5

அரிட்டாப்பட்டியில் உள்ள இன்னொரு பிராமி எழுத்துக் கல்வெட்டு இது:



திரு. எச். கிருட்டிண சாத்திரி இவ்வாறு படித்துள்ளார்;

ச(ா) ந தா ரி தா னா கொ டு பி தோ ன

திரு. டி.வி. மகாலிங்கம் இவ்வாறு படித்துப் பொருள் கூறுகிறார்:[1]

சா த ரி த ன கொ ட் டு பி தொ ள

திராவிடியில் இதை இவ்வாறு படிக்கலாம். சந்த ரிதன் கொட்டு பிதோன். சந்தரிதன் என்பவன் இதைக் கொடுத்தான் என்பது இதன் பொருள்.திரு.ஐ. மகாதேவன் இதை இவ்வாறு படிக்கிறார்.

சாந்தாரி தன் கொடு பி தோன் சந்தாரிதான் இதைக் கொடுத்தான் என்பது இதன் பொருள். திரு.கே.வி. சுப்பிரமணிய அய்யர். இதை

[1] 209 - 210 Early South Indian Palaeography.

'சான தாரிதான் கொட்டுபி தோன்' என்று படிக்கிறார். ஆனால் இவர் இன்னொரு சொற்றொடரையும் இதனோடு சேர்த்துப் படிக்கிறார். அது பொருத்தமாக இல்லை. திரு. நாராயணராவ் கூறுவதற்கும் இதற்கும் பொருத்தம் இல்லை. இதன் வாசகத்தை **சாந்தாரிதன் கொடு பித்தோன்** என்று படிக்கலாம். இந்தக் கற்படுக்கையைச் சாந்தாரிதன் என்பவன் கொடுத்தான் என்பது பொருள். 'கொடு பித்தோன்' என்று எழுதவேண்டியது 'கொட்டு பி தோன்' என்று எழுதப்பட்டுள்ளது. **கு**வை **ட்டு** என்றும் **த்தோ** என்பது **தோ** என்றும் தவறாக எழுதப் பட்டுள்ளன.

அரிட்டாபட்டி 6

அரிட்டாபட்டியில் உள்ள இன்னொரு கல்வெட்டு இது:



திரு. கிருட்டிண சாத்திரி இதை இவ்வாறு படித்துள்ளார்

வெள அ டை நி காமா தோ ர கொடி (ஓர)

திரு. கே.வி. சுப்பிரமணிய அய்யர் இவ்வாறு படித்துள்ளார்

வெள் - அடை நிகாமதோர் கொடி ஓர்.

வெள் - அமை என்பது வெள்ளடை என்னும் 'ஊர்ப் பெயர்' நிகாமம் என்பது நிகமம். வணிகர் என்பது இதன் பொருள் கொடியோர் என்பது கொட்டுவித்தான் என்னும் சொல். இவ்வாறு கூறுகிற இவர் வேறு பிராமி எழுத்துக்களோடு இதையும் இணைத்துப் பொருள் கூறுகிறார். ஆனால் அது பொருந்தவில்லை.

திரு. நாராயணராவ் இதையும் வேறு கல்வெட்டையும் இணைத்து வழக்கம்போல பிராகிருதமாக்கிப் பிறகு அதைச் சமற்கிருதப்படுத்திக் கூறுகிறார். அவர் கூற்றுக்கும் இந்த எழுத் துக்கும் தொடர்பில்லையாகையால் அதைக் கூறாது விடுகிறோம்.

திரு. டி.வி. மகாலிங்கம் இவ்வாறு படித்துப் பொருள் கூறுகிறார்:[1] வெள் - அடை நிகமத்தோர் கொடி ஓர்.

வெள் - அடை என்பது வெள்ளடை. இஃது ஓர் இடத்தின் பெயர். நிகமதோர் என்பது வணிகச்சாத்தர். கொடியோர் - என்பது கோடியர் (விறலியர்). கோடர் என்பது நாகர். (கார் கோடகன் என்னும் பாம்பின் பெயரிலிருந்து உண்டானது.) கோடர் என்னுஞ்சொல் 'வெள்ளடை என்னும் ஊரில் உள்ள நிகமத்தோர் (வாணிகக் குழு)வைச் சேர்ந்த கோடிஓர் (நாகர் இனத்துப் பெண்)' என்று பொருள் கூறுகிறார்.

திரு. ஐ. மகாதேவன் இந்த எழுத்துக்களை இவ்வாறு படித்துப் பொருள் கூறுகிறார்.[2]

'வெள் - அறை நிகமதோர் கொடி ஓர்' என்று படித்து, வெள்ளறையில் உள்ள வாணிகச் சாத்தைச் சேர்ந்தவர் இதைக் கொடுத்தார்கள் என்று பொருள் கூறுகிறார். இதை இவ்வாறு படிக்கலாம்.

வெள் அறை நிகமதோர் கொடிஓர்

'இதை (இந்தக் கற்படுக்கையை)க் கொடுத்தவர். வெள்ளறை வாணிகக் குழுவினர்' என்பது இதன் பொருள்.

விளக்கம்: இந்தக் கல்வெட்டில், இடப்புறத்திலிருந்து நான்காவதாக உள்ள எழுத்தை ஒருவரைத் தவிர மற்றெல்லோரும் தவறாகவே படித்துள்ளனர். எச். கிருட்டிண சாத்திரி, கே. வி. சுப்பிரமணிய அய்யர், நாராயணராவ். டி.வி. மகாலிங்கம் ஆகிய எல்லோரும் இந்த எழுத்தை **டை** என்று தவறாகப் படித்துள்ளனர். ஐ. மகாதேவன் மட்டும் **றை** என்று சரியாகப் படித்துள்ளார். இந்த எழுத்தின் அடிப்பகுதி கீழ்நோக்கி வளைந்திருப்பதே இது **றை** என்பதை ஐயமில்லாமல் தெரிவிக்கிறது. ஆகவே, முன் கூறியவர்

---

[1] P. 210 - 211 Early south Indian palaeography.

[1] P. 61 Seminar on Inscriptions 1966.

எல்லோரும் இது **டை** என்று கொண்டு **வெள்ளடை** என்று படித்தது தவறு. திரு. ஐ. மகாதேவன் **றை** என்று கொண்டு **வெள்அறை** (வெள்ளறை) என்று படித்ததே சரியாகும். வெள்ளறை என்பது ஓர் ஊரின் பெயர். அந்த ஊர் கற்பாறைகள் உள்ள இடத்தில் இருந்திருக்க வேண்டும். (அறை என்றால் பாறை. வெள் அறை - வெள்ளைப் பாறை)

அரிட்டாபட்டி 7

அரிட்டா பட்டி கிராமத்தின் வடமேற்கே அரை மைல் தொலைவில் கழிஞ்சமலை என்னும் பாறைக் குன்று இருக்கிறது. இந்தக் குன்றின் கிழக்குப் பக்கத்தில் உள்ள குகையின் வாயில் மேற்பாறையில் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. இதை டாக்டர் கே.வி. இராமனும், திரு. ஓய். சுப்பராயலும் அண்மையில் கண்டுபிடித்தனர்.[1]



இருபத்தைந்து எழுத்துள்ள இந்தக் கல்வெட்டு ஒரு வரியாக எழுதப்பட்டுள்ளது; இந்த எழுத்தின் வரிவடிவம் கீழே தரப்படுகிறது; இந்த எழுத்துக்கள் கண்ணால் பார்த்துக் கையால் வரையப்பட்டவை (மையொற்றுப்படி அன்று) ஆகவே இதில் ஒரு சில தவறுகள் இருக்கவுங் கூடும்.

[1] A New Tamil Brahmi Inscription. The Sunday Standard. Madras. Sunday September, 26. 1971.

இதன் வாசகத்தை இவ்வாறு படித்துள்ளனர்;

'நெல்வெளி இய் சழிவன் அதனன் வொளியன் மு ஸ கை கொடுவன்'

நெல்வெளி வழிவன் (செழியன்) அதனன் ஒளியன் (அல்லது வளியன்) முஸகை கொடுவன். கொடுவன் என்பதன் பொருள் கொடுத்தவன் என்றும், கொத்துவித்தவன் என்றும் பொருள்படும். பாண்டியரின் கீழ் தலைவனாக இருந்த நெல்வெளிசெழியன் அதனன் ஒளியன் (அல்லது வளியன்) முஸகையைச் செய்து கொடுத்தான் என்பது கருத்து.

இவர்கள் படித்துள்ளதில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. நெல்வெளி என்பதை **நெல்வேலி** என்றும் அதனன் என்பதை **ஆதன்** என்றும் ஒளியன் அல்லது வளியன் என்பதை **வெளியன்** என்றும் மாற்றி, **நெல்வேலி சழிவன் ஆதன் வெளியன் முஸகை கொடுவன்** என்று படிப்பது சரி என்று தெரிகிறது. இதற்கு விளக்கம் வருமாறு:

1. **நெல்வெளி இய்** பிராமி **வெ** எழுத்தை **வே** என்றும் படிக்கலாம். பிராமி **ளி**க்கும் **லி** க்கும் வேற்றுமைதான் உண்டு. **லி**யின் வலப்புறத்தின் பக்கத்தில் கீழே வளைவான சிறு கோடு இட்டால் **ளி** யாகும். அக் கோடு இடாவிட்டால் **லி**யாகும். மேல் காட்டிய எழுத்தில் **ளி** என்று எழுதப்பட்டுள்ளது. பார்த்து எழுதப்பட்ட தாகையால் இதில் தவறும் இருக்கலாம். இந்த எழுத்தை **லி** என்றே கொள்வோம். ஏனென்றால் நெல்வேலி என்று ஊர் இருக்கிறது. நெல்வெளி என்று ஊர் இருந்ததாக இதுவரையில் தெரியவில்லை. ஆகையால் வரலாற்றுப் புகழ் வாய்ந்த நெல்வேலி என்றே கொள்வோம். நெல்வேலி என்பது **நெல்வேலிஇய்** என்று எழுதப்பட்டுள்ளது. இகர ஈற்றுச் சொற்களில் இகரத்தையும் யகர மெய்யையும் இட்டு இவ்வாறு எழுதுவது அக்காலத்து வழக்கம். ஆகவே, நெல்வேலிஇய் என்பதை நெல்வேலி என்றே படிக்கவேண்டும்.

2. **சழிவன்**: இதன் சரியான உருவம் செழியன் என்பதாகும். செழியன் என்பது பேச்சு வழக்கில் சழிவன் என்று மருவி வழங்கிற்றுப் போலும். செழியன் என்பது பாண்டியரின் பொதுப் பெயர்.

3. **அதனன்**: இதில் இரண்டு றன்னகரங்கள் சேர்த்து எழுதப்பட்டுள்ளன. அதன் என்பது இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. அதன் என்பது ஆதன். பிராமி அகர எழுத்தின் மத்தியில் வலப்பக்கமாகச் சிறு கோடு அமைத்தால் ஆகாரம் ஆகும். அமைக்க வேண்டிய அந்தக் கோட்டை அமைக்காதபடியால் **அதன்** என்று இருக்கிறது. இது கற்றச்சரின் தவறு. மேட்டுப்பட்டி பிராமிக் கல்வெட்டிலும் இந்தத் தவறு காணப்படுகிறது. அங்கும் ஆதன் என்னும் சொல் அதன் என்றும் ஆந்தை என்னுஞ் சொல் அந்தை என்றும் எழுதப்பட்டுள்ளன. விக்கிரம மங்கலம், அழகர் மலையிலும் இவ்வாறே ஆதன், ஆந்தை என்பவை அதன், அந்தை என்று எழுதப்பட்டுள்ளன. ஆதன், ஆந்தை என்பதே சரியாகும். இந்தக் கல்வெட்டிலும் அதன் என்றிருப்பதை ஆதன் என்றே படிக்கவேண்டும்.

4. **வொளியன்**: வொளியன் என்றும் வளியன் என்றும் இதனைப் படித்துள்ளனர். ஒளியன் என்பதை ஒளியர் என்னும் இனத்தாரோடு ஒப்பிடுகின்றனர். வளியன் என்றும் இன்னொரு மொழித் தொடரைக் கூறுகின்றனர். இரண்டு மொழித் தொடரும் தவறு என்று தோன்றுகிறது. இதன் சரியான வாசகம் **வெளியன்** என்பது. பிராமி எழுத்துத் தலைமேல் கோடு இட்டால் **வொ** ஆகும். அக்கோட்டையே இடப்பக்கத்தில் மட்டும் இட்டால் **வெ** ஆகிறது. இதை **வெ** என்றே கொள்கிறோம். கண்ணால் பார்த்து எழுதியபடியால் இதில் தவறு இருக்கலாம். வெளியன் என்பதே சரியான சொல். ஏனென்றால் சங்க காலத்தில் வெளியன் என்னும் பெயருள்ளவர் இருந்தனர். வெளிமான், வெளியன் வேண்மான், வெளியன் தித்தன், வீரை வெளியன் என்னும் பெயர்களைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். சங்க காலத்தைச் சேர்ந்த இந்தக்

கல்வெட்டிலும் வெளியன் என்னும் பெயர் காணப்படுவது பொருத்தமானதே.

5. **முஸகை**: இச்சொல் தமிழ்ச்சொல் அன்று என்றும், பிராகிருத மொழிச்சொல் என்றும் இதன் சரியான பொருள் விளங்கவில்லை என்றும் கூறினோம். இந்தப் பிராகிருத மொழிச் சொல்லைப் பௌத்த பிக்குகளிடமிருந்து பெற்றிருக்கக்கூடும். இச்சொல் இங்கு, இந்த மலைக்குகையைக் குறிக்கிறது போலும்.

கொடுவன்: கொடுத்தவன் என்பதன் தவறான வாசகம். இவன் செழியனின் (பாண்டியனுடைய) கற்றச்சன் என்று தோன்று கிறான்.

நெல்வேலியில் இருந்த செழியன் ஆதன் வெளியன் என்னும் பெயர் பெற்ற கற்றச்சன் இந்த 'முஸகை'யைச் செய்து கொடுத்தான் என்பது இந்தக் கல்வெட்டின் கருத்தாகும்.

அரிட்டாபட்டி கழுகுமலை

மதுரை மாவட்டம் மதுரை தாலுகாவில் உள்ளது அரிட்டாபட்டிக் கிராமம். (இவ்வூருக்கு மாங்குளம் என்றும் பெயர் உண்டு) அரிட்டாபட்டி மதுரையிலிருந்து வடகிழக்கே 14 வது கல்லில், மேலூருக்கும் அழகர் மலைக்கும் இடையில் இருக்கிறது. அரிட்டா பட்டியைச் சேர்ந்த மாங்குளம் என்னும் ஊரில் கழுகுமலை என்னுங் குன்றுகள் உள்ளன. கழுகுமலைக்கு ஊவா மலை என்னும் பெயருங் கூறப்படுகிறது. கழுகுமலையின் கிழக்குத் தாழ்வரையில் ஐந்து குகைகளும் அக் குகைகளில் கற்படுக்கைகளும் காணப்படுகின்றன. பழங்காலத்தில் பௌத்த சமய முனிவர்கள் இந்தக் குகைகளில் தங்கியிருந்து தவஞ்செய்தார்கள் என்பதை இங்குள்ள கற்படுக்கைகள் தெரிவிக்கின்றன. கற்படுக்கைகள் சிலவற்றில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மற்றும், இங்குள்ள இரண்டு குகைகளின் மேற்புறத்தில் இரண்டு பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள் காணப்படுகின்றன. இந்த எழுத்துக்களை ஆராய்வதற்கு முன்னர், **அரிட்டாபட்டி, கழுகுமலை** என்னும் பெயர்களின் வரலாற்றை அறியவேண்டும்.

அரிட்டாபட்டி

அரிட்டாபட்டி என்னும் பெயர் பௌத்த சமயத் தொடர்புடையதாகத் தெரிகிறது. இலங்கையைக் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அரசாண்ட தேவனாம்பிய திஸ்ஸன் என்னும் அரசனுடைய அமைச்சன் அரிட்டன் (அரிஷ்டன்) என்பவன். அரிட்டனை மகாஅரிட்டன் என்றுங் கூறுவர். தேவனாம்பிய திஸ்ஸன் காலத்தில் பாரதநாட்டை அரசாண்ட அசோக சக்கரவர்த்தி இலங்கையில் பௌத்த மதத்தைப் பிரசாரஞ் செய்யப் பௌத்த பிக்குகளை அனுப்பினார். தேவனாம்பிய திஸ்ஸன் அசோக சக்கரவர்த்தியிடத்தில் அமைச்சனான அரிட்டன் தலைமையில் ஒரு தூதுக்குழுவை அனுப்பினான். அசோக சக்கரவர்த்தி புத்தகயை யிலிருந்து (போதி) அரச மரக்கிளையையும் பிக்குணி சங்க மித்திரையையும் இலங்கைக்குக் கடல் வழியாகக் கப்பலில் அனுப்பியபோது அவர்களை அழைத்துக்கொண்டு இலங்கைக்குக் கொண்டுவந்து சேர்த்தவனும் அமைச்சனான அரிட்டனே. பிற்காலத்தில் அரிட்டன் பௌத்தமதத்தைச் சேர்ந்து பௌத்த பிக்குவாகிப் பௌத்த மதப் பிரசாரஞ் செய்தார். அவர் பாண்டிய நாட்டுக்கு வந்து மாங்குளத்தில் தங்கினார். அவர் தங்கியிருந்த கிராமத்துக்கு அரிட்டாபட்டி என்று பெயர் வந்தது அஃதாவது அரிட்டர் இருந்த ஊர் என்பது பொருள்.

கழுகுமலை

அரிட்டாபட்டியில் உள்ள குன்றுகளுக்குக் கழுகுமலை என்று பெயர் உண்டு. அரிட்டரும் இவருடைய சீடர்களும் இந்த மலைக்குக் கழுகுமலை என்று பெயர். இட்டிருக்கவேண்டும். பௌத்தப்பிக்குகள் தாங்கள் தங்கியுள்ள மலைக்குகைகளுக்குக் கழுகுமலை என்று பெயர் இடுவது வழக்கம். பௌத்த மதத்தை உண்டாக்கின கௌதம புத்தர் உயிர் வாழ்ந்திருந்த காலத்தில், இராசக்கிருக நகரத்துக்கு அருகில் இருந்த கிஜ்ஜர கூடமலைக் குகையில் அடிக்கடி போய்த்

தங்குவது வழக்கம். அந்த மலையில் கழுகுகள் இருந்தபடியால் அதற்கு கிஜ்ஜரகூடமலை என்று பெயர் இருந்தது (கிஜ்ஜரம் -கழுகு)

பகவன் புத்தர் கிஜ்ரகூட மலையில் தங்கியிருந்ததை நினைவு கூர்ந்து அவருடைய மதத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் தமிழ் நாட்டில் தாங்கள் தங்கியிருந்த மலைகளுக்குக் 'கழுகுமலை' என்று பெயரிட்டார்கள். செங்கற்பட்டு அருகிலுள்ள திருக்கழுக்குன்றமும் (கழுகுக் குன்றம் என்பது கழுக்குன்றம் என்று மருவிற்று) திருநெல்வேலிக்கு அருகில் உள்ள கழுகுமலையும் மதுரைக்கு அருகிலுள்ள அரிட்டாபட்டிக் கழுகுமலையும் பௌத்த மதத் தொடர்புடையவை. அக்காலத்தில் பௌத்த பிக்குகள் இந்த மலைகளில் தங்கியிருந்தபடியால் இந்த மலைகளுக்குக் கழுகுமலை என்று பெயராயிற்று. ஆகவே, அரிட்டாபட்டிக் கழுகுமலையில் காணப்படுகிற கற்படுக்கைகளும் பிராமி எழுத்துக்களும் பௌத்த சமயத் தொடர்புடையவை.

அரிட்டாபட்டிக் கழுகுமலைகளில் இயற்கையாக அமைந் துள்ள குகைகளிலே தெற்குக் குகையின் வாயிலுக்கு மேலே எழுதப் பட்டுள்ள பிராமி எழுத்துக்களும் அதற்கு அருகில் கீழ்புறக் குகையின் உட்புற வாயிலுக்கு மேலே எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துக்களும் மிக முக்கியமானவை. இந்த இரண்டு கல்வெட் டெழுத்துக்களும் நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன் பெயரைக் கூறுகின்றன. தமிழ்நாட்டிலே பாண்டியன் பெயரைக் கூறுகிற மிகப் பழைய கல்வெட்டெழுத்து இதுவே.

நெடுங்காலமாக மறைந்து கிடந்த இந்தக் கல்வெட்டெழுத்து 1906ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

குகையின் வாயிலுக்கு மேற்பாறையில் ஒரே வரியாக இக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதன் வரிவடிவம் இது; (அடுத்த பக்கம் காண்க.)

இக்காலத்து எழுத்தில் இதை இவ்வாறு எழுதலாம்.

கணிய் நந் தா ஸி ரி ய கு அன தமம ஈதா நெ டி ஞ ச ழி யா ன

ஸ ல க ன இ ள ஞ சா டி க ன த ந தை ய் ச டி கா ன செயிய பாளிய்

புள்ளி இடவேண்டிய எழுத்துக்குப் புள்ளியிட்டால் இதன் வாசகம் இவ்வாறு அமைகிறது:



கணிய் நந் தா ஸி ரி ய கு அன தமம் ஈதா நெடி ஞ் சழியான்

ஸ லகன் இளஞ் சாடிகன் தந்தைய் சடிகான் செயிய பானிய்

இதில், நந்தாஸிரியகு என்பதில் உள்ள ஸகரமும் தமம் என்பதிலுள்ள தகரமும் ஸலகம் என்பதில் உள்ள ஸகரமும் பிராகிருத வடமொழி எழுத்துக்கள்.

இந்தக் கல்வெட்டை அறிஞர்கள் சிலர் படிக்க முயன்று தங்களுக்குத் தோன்றியபடி படித்துப் பொருள் கூறியுள்ளனர்.

அவர்கள் படித்துப் பொருள் கூறியதைப் பார்ப்போம். திரு. எச். கிருட்டிண சாத்திரி இதைக் கீழ்க்கண்டவாறு படித்துப் பொருள் கூறுகிறார்.[1]

காணிய ந(ா) ந தாஸிரியகு அனா பாம இ தா ந டி ஞ
சாட்டியனா.

ஸால(ா) கானா ஈஸாஞ சாடிகானா தாநதைய சாடிகானா செஇயா பாளிய

இவ்வாறு படித்த இவர் ழி யை ட்டி என்று படித்துள்ளார். சாழியன் என்பதைச் சாட்டிகன் என்று படித்து, இஃது இக் கல்வெட்டில் இரண்டு இடங்களில் வருகிற சாடிகன் என்பதன் வேறு வடிவம் என்று கூறுகிறார். கடைசியில் வருகிற செயிய என்பது சைத்யானி என்னுஞ் சொல்லின் திரிபு என்கிறார். இறுதியில் இருக்கிற பாளிய் என்பது பால்ய என்னுஞ் சொல்லின் திரிபு என்கிறார்.

திரு. கே. வி. சுப்பிரமணிய அய்யர் இந்தக் கல்வெட் டெழுத்துக்களை இவ்வாறு படிக்கிறார்:[2]

''கா ணியன் நடா ஸிரி யகு அன தமாம இதர நடிஞ்
சாறியன் ஸாலாகன் இளஞ்சாறிகன் தாந்தைய்
சாறிகான் செ இய பாளிய்''

காணியன் என்பது கரணியன். கரணியன் என்பது அநுலோம (கலப்பு) சாதியைக் குறிக்கிறது. நடா என்பது நாத (தலைவன்) என்னும் பொருள் உள்ள சொல். யகுஅன் என்பது யக்ஷன் என்னுஞ் சமற்கிருதச் சொல். பாளிய் என்பது பாழி.

---

[1] The Caverns and Brahmi Inscriptions of Southern India by H. Krishna Sastri, PP. 327 - 348.

Proceedings and Transactions of the First Oriental Conference, Poona (5,6,7 November 1919.)

[2] PP. 290 - 9 Proceedings and Transactions of the Third All India Oriental Conferences (1924)

''கரணி குலத்தில் பிறந்த புகழ்பெற்ற தலைவனான ஸ்ரீயக்ஷன் இந்தத் தருமத்தைச் செய்தான். இந்தச் சத்தியியத்தை அமைத்தவன் நெடுஞ்சாறிகளின் மைத்துனனும் (சட்டகன்) இளஞ்சாறிகளின் தந்தையுமான சாடிகன்.''

திரு. சி. நாராயணராவ் இந்தக் கல்வெட்டெழுத்தைப் பிராகிருத மொழி என்று தவறாகக் கருதிக்கொண்டு முதலில் பிராகிருதமாகப் படிக்கிறார். பிறகு அந்தப் பிராகிருதத்தைச் சமற்கிருதமாக அமைக்கிறார்.[1]

''காணியநா நதா ஸிரியகு அ நா காமம்
இதர நடிஞா சாட்டியந ஸ் இயகா நா இளாந
சாடிகா ந தாநதைய; சாடிகாந சே இய பாளிய'' (பிராகிருதம்)

''கணகாநாம் நாதா (நாம்)ஸ்ரீயக்ஷாணாம் தர்மம்,
இதா நர்திநாம் ஸார்த வாஹகநரம் ஸிம்
ஹலாநாம் ஸ்ரேஷ்டிகா நாம் சைத்ய பாலிகா'' (சமற்கிருதம்)

திரு. ஐ. மகாதேவன் இந்த எழுத்துக்களை இவ்வாறு படிக்கிறார்.[2]

''காணிய நாந்தாஸிரிய யகுஅன் தமாம்
இதா நெடிஞ்சாழியான் ஸாலாகான்
இளாஞ்சாடிகான் தாந்தைய் சாடிகான் செயியா பாளிய்''

(இவ்வாறு படித்துப் பிறகு இதன் வாசகத்தை இவ்வாறு அமைக்கிறார்.)

---

[1] The Brahmi Inscriptions of South India, C. Narayana Rao PP. 362 - 376 New Indian Antiquary Vol. I. 1938-39.

[2] P. 60 Texts and Transactions of Tamil Brahmi Inscriptions I. Mahadevan Seminar on Inscriptions Madras 1966 Historical Tamil-Brahmi Inscriptions Paper read at the 1st World Tamil Seminar Conference held at Kwala Lampur 1966.

''கணிய நந்த - (ஆ) ஸிரிய்க உவன் த(ம்)மம்
இத(உ) அ நெடிஞ்சழியன் ஸாலகன் இளஞ்சடிகள்
தந்தைய் சடிகன் செஇய பளிய்''

(இதற்கு இவர் இவ்வாறு பொருள் கூறுகிறார்)

அங்கு (உவன்) வசிக்கிற கணியன் நந்தன் என்னும் துறவிக்குப் படைக்கப்பட்டது. நெடுஞ்செழியனின் மைத்துனனும் (ஸாலகன்) (மைத்துனியின் கணவன்?) இளஞ்சடிகளின் தந்தையுமான சடிகனால் இந்தப் பள்ளி அமைக்கப்பட்டது.

திரு. டி.வி மகாலிங்கம் இந்த எழுத்துக்களைக் கீழ்வருமாறு படித்துப் பொருள் கூறுகிறார்: [1]

''கணிய நந்த ஸிரிய் குஅன் ஏமம் இத
நெடிஞ் சழியன் ஸலகன் இளஞ்சடிகன் தந்தைய்
சடிகன் செய் பாளிய்''

(இவ்வாறு படித்துப் பிறகு சில சொற்களுக்கு விளக்கங் கூறுகிறார்) கணி - சோதிடன். நந்த என்பது குபேரனுடைய நிதிகளில் ஒன்றின் பெயர். அல்லது குபேரனுடைய ஓர் ஊழியனின் பெயர். ஸிரிய் என்பது ஸ்ரீ. குஅன் என்பது ஒருவனுடைய பெயர். அது குபேரனுடைய பெயர். இது குஹ்ய, குஹயக என்னும் இயக்கரைக் குறிக்கிறது. ஏமம் என்பது ஹேமம் என்பதன் திரிபு. இதற்குப் பொன் என்பது பொருள். இவ்வாறு சில சொற்களுக்கு விளக்கங் கூறின பிறகு இவ்வாறு பொருள் கூறுகிறார். ''நந்த ஸிரி குபேர (நந்த ஸ்ரீயக்ஷ) என்னும் சோதிடனால் கொடுக்கப்பட்ட பொன்னைக் கொண்டு'' இந்தப் பள்ளி அமைக்கப்பட்டது என்று முடிக்கிறார்.

இந்தப் பிராமி எழுத்து வாசகத்தையும் இதன் பொருளையும் நாம் ஆராய்வோம்.

---

[1] PP. 207-209 Early South Indian Palaeography T.V. Mahalingam Madras 1967.

"காணிய் நாந்தா ஸிரிய்கு அன தமாம்
ஈதா நெடிஞ் சாழியான் ஸாலாகான்
ஈளஞ் சாடி கான் தாந்தைய் சடிகான்
செ ஈ யா பா ணி ய்"

இதில் சில எழுத்துக்கள் நெடிலாக எழுதப்பட்டுள்ளன. பட்டிப் பரோலு கல்வெட்டின் வாய்பாடுப்படி,[1] நெட்டெழுத்துக்களைக் குற்றெழுத்தாக அமைத்துப் படித்தால் இதன் வாசகம் இவ்வாறு அமைகிறது:

"கணிய் நந்தஸிரிய்கு அன தமம்
ஈதா நெடிஞ்சழியன் ஸலகன்
ஈளஞ் சடிகன் தந்தைய் சடிகன்
செஈய பளிய்"

இதன் பொருளைக் கூறுவதற்கு முன்பு இதிலுள்ள சொற்களை விளக்கிக் கூற வேண்டும். **கணிய** - ஈற்றில் யகரமெய் சேர்த்து எழுதப்பட்டுள்ள இந்தச் சொல்லின் சரியான வாசகம் **கணி** என்பது. இகர ஈற்றுச் சொற்களின் இறுதியில் யகரமெய் சேர்த்து எழுதுவது அக்காலத்து வழக்கம். கணி என்பதன் பொருள் வான நூலை அறிந்தவர் (கோள்களைக் கணிப்பவர்) என்பது. கணியன் பூங்குன்றனார் என்னும் பெயரைக் கருதுக. கணியன் பூங்குன்றனார் நற்றினை 226ஆம் செய்யுளையும் புறம் 192ஆம் செய்யுளையும் பாடியவர். இந்தக் கல்வெட்டில் கூறப்படுகிற கணி என்பவர் வானத்திலுள்ள கோள்களைக் கணிப்பவர். **நந்தஸரிய்கு** என்பது தவறாகக் கற்றச்சனால் எழுதப்பட்டுள்ளது. இதன் சரியான சொல் **நந்தியாசிரியற்கு** என்றிருக்க வேண்டும் நந்தியாசிரியர் என்பது இந்தக் குகையில் வசித்த முனிவரின் பெயர். அவர் வான நூலைக் கணிக்க வல்லவர் ஆகையால் 'கணிந்தியாசிரியர்' என்று கூறப்பட்டார்.

[1] Battiprolu Script. Epigraphia Indica Vol. II, pp. 323 - 24

அன என்றிருப்பது **ஆன** என்றிருக்க வேண்டும். இது கற்றச்சன் செய்த பிழை. **தமம்** என்றிருப்பது **தம்மம்** என்றிருக்கவேண்டும் இதன் பொருள் தர்மம் (அறம்) என்பது. **ஈதா** என்பது **ஈந்தான்** என்றிருக்க வேண்டும். இந்தத் தர்மத்தை ஈந்தவன் என்பது இதன் பொருள். **நெடிஞ்சழியன்** என்று எழுதப்பட்டிருப்பது **நெடுஞ் செழியன்** என்றிருக்க வேண்டும். **செ** என்னும் எழுத்தை **ச** என்று எழுதியிருக்கிறான் கற்றச்சன். **ஸலகன்** என்னும் சொல் பிராகிருத மொழிச் சொல். இதன் பொருள் தெரியவில்லை. ஐ. மகாதேவன் இதற்கு கசலன் (மைத்துனியின் கணவன்) என்று பொருள் கூறுகிறார். இது சரி என்று தோன்றவில்லை. கேசவர் (சேனைத் தலைவன்) என்னும் சொல் இப்படித் தவறாக எழுதப்பட்டதோ என்று ஐயமாக இருக்கிறது.

இளஞ்சடிகன். இது பாண்டியன் நெடுஞ்செழியனுடைய சேவகன் பெயர். **தந்தைய்** என்னும் சொல்லின் ஈற்றில் யகரமெய் இட்டு எழுதப்பட்டிருக்கிறது. இகர ஈறு ஐகார ஈற்றுச் சொற்களின் இறுதியில் யகர மெய் இட்டு எழுதுவது அக்காலத்து வழக்கம். அதன்படி தந்தை என்னும் இச் சொல்லின் இறுதியில் யகரமெய் இட்டு எழுதப்பட்டிருக்கிறது. **சடிகன்** என்பது இளஞ்சடிகனுடைய தந்தையின் பெயர். செயிய என்பது செய்த என்னும் பொருள் உள்ளது. பளிய் என்பது 'பள்ளி' என்பதன் திரிபு. இகர மெய்யிற்றுச் சொல்லாகையால் இதன் இறுதியில் யகரமெய் இட்டு எழுதப்பட்டிருக்கிறது. பள்ளி என்பது பௌத்த சைன சமயத்துத் துறவிகள் தங்கியிருக்கும் இடம்.

இக் கல்வெட்டின் கருத்து இது: கணியரும் நந்தி என்னும் பெயரையுடையவருமான ஆசிரியருக்கு அறமாக இந்த மலைக்குகை கொடுக்கப்பட்டது. இதைக் கொடுத்தவன் (பாண்டியன்) நெடுஞ்செழியன். அரசனுடைய சேவகனாகிய இளஞ்சடிகனுடைய தந்தையான சடிகன் என்பவன் இந்தப் பள்ளியை (கற்படுக்கைகளை) அமைத்தான்

கணி நந்தாசிரியர் பாண்டியன் நெடுஞ்செழியனுடைய குரு என்று தெரிகிறார். இந்தப் பாண்டியன் நெடுஞ்செழியன் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இருந்தவன்.

அரிட்டாபட்டிக் கழுகுமலையில், இன்னொரு குகையில் இன்னொரு பிராமி எழுத்துக் கல்வெட்டு இதே பாண்டியன் நெடுஞ்செழியனால் எழுதப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டும் 1906ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

முன் கல்வெட்டை ஆராய்ந்த அறிஞர்கள் இந்தக் கல்வெட்டை ஆராயவில்லை. எச். கிருட்டிண சாத்திரியும், கே.வி. சுப்பிரமணிய அய்யரும், சி. நாராயணராவும், டி.வி. மகாலிங்கமும் இந்தக் கல்வெட்டைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை. இந்தக் கல்வெட்டு இருக்கிறது என்று கூட அவர்கள் குறிப்பிடவில்லை. முன் கல்வெட்டெழுத்துப் போன்றே இந்தக் கல்வெட்டும் பாண்டியர் வரலாற்றுக்கு மிக முக்கியமானது.

திரு. ஐ. மகாதேவன் இந்தக் கல்வெட்டைப்பற்றி எழுதியுள்ளார். அவர் இந்தப் பிராமி எழுத்துக்களை இவ்வாறு படித்துள்ளார்:[1]

> **''காணிய் நாந்தா அஸிரிய் ஈகுவ அன்கே தம்மாம்**
> **ஈத்தா நெடுஞ்சாழியான் பானா அன் காடால அன்**
> **வாழுத்திய் கொட்டு பித்தா அ பர்ஸிஇய்''**

திரு. ஐ. மகாதேவன் இதை இவ்வாறு படித்துப் பொருள் கூறுகிறார்:

> **'கணிய்' நந்தா ஆஸிரிய்கு உவன் தம்மன்**
> **ஈத்தா நெடுஞ்சழியன் பணவன் கடலன் வழுத்திய்**
> **கொட்டுபித்த பளிஇய்'**

---

[1] P.60 Test and Translations of Tamil Brahmi Inscriptions. Seminar on Inscriptions, 1966. Historical Tamil Brahmi Inscriptions. I. Mahadevan. Paper read at the 1st World Tamil Seminar Conference held at Kwala Lampur 1966.

இதற்கு இவ்வாறு பொருள் கூறுகிறார்:

'அங்கு (உவன்) வசிக்கிற கணியன் நந்தா ஸிரியற்குத் தருமம்.

நெடுஞ்செழியனி பணயன் (ஊழியன்)ஆன கடலன் வழுத்தி இந்தப் பள்ளியைக் கொடுப்பித்தான்'

(இவர் இதையே இன்னொரு வகையாகவும் படிக்கிறார்)

'அங்கே வசிக்கிற கணி நந்தாளஸிரியற்கு கொடுக்கப்பட்டது. நெடுஞ்செழியன் பணவன் (பஞ்சவன்) கடலன் வழுதி இந்தப் பள்ளியைக் கொடுப்பித்தான்'.

(இதற்கு இவர் இவ்வாறு விளக்கங் கூறுகிறார்)

'பண' என்பது 'பஞ்ச' என்பதன் திரிபு. பணவன் என்பது பஞ்சவன் என்னும் பொருளுள்ளது. பஞ்சவன் என்பது பாண்டியர்களுக்குப் பெயர். கடலன் என்பதும் பாண்டியனுடைய பெயர். கடல்களுக்குத் தலைவன் என்பது இதன் பொருள். கடலன் என்பதைக் கடல் நட்சத்திரத்தில் (சதய நட்சத்திரத்தில்) பிறந்தவன் என்றும் கொள்ளலாம். கடல் நட்சத்திரம், கடல் தெய்வமாகிய வருணனுடன் தொடர்புள்ளது. பிறந்த நட்சத்தின் பெயரை அரசர்களுக்கு இடுவது வழக்கம். வழுதி என்பது பாண்டியருக்குரிய சிறப்புப் பெயர். இவ்வாறு இவர் இந்தக் கல்வெட்டெழுத்துக்கு இரண்டு பொருள்களைக் கூறுகிறார். கணியன் நந்தி ஆசிரியர்க்கு நெடுஞ்செழியனுடைய பணய்ன் (ஊழியன்) ஆன கடலன் வழுதி இந்தப் பள்ளியைக் கொடுத்தான் என்பது ஒரு பொருள். நெடுஞ்செழியன் பஞ்சவன் கடலன் வழுதி என்னும் பெயருள்ள பாண்டியன், கணி நந்தி ஆசிரியர்க்கு இந்தப் பள்ளியைக் கொடுத்தான் என்பது இன்னொரு பொருள்.

இந்தப் பிராமிக் கல்வெட்டெழுத்தை நாம் படித்துப் பொருள் காண்போம். பட்டி பரோலு எழுத்தின் வாய்ப்பாட்டுப்படி

நெட்டெழுத்துக்களைக் குற்றெழுத்தாகக் கொண்டு படித்தால் இதன் வாசகம் இவ்வாறு அமைகிறது:

> ''கணிதி நந்த அஸிரிய் இகுவ் அன்கெ தம்மம்
> ஈத்த நெடுஞ்செழியன் பண அன் கடலஅன்
> வழுத்திய் கொட்டுபித்த அ பளிஇய்'

இந்தக் கல்வெட்டின் கருத்தைக் கூறுவதற்கு முன்பு இதிலுள்ள சொற்களை விளக்க வேண்டியிருக்கிறது.

கணிய்: இந்தச் சொல்லை முன் கல்வெட்டில் விளக்கினோம். மறுபடியும் இங்கு விளக்கவேண்டியதில்லை. **நந்த அஸிரிய்** நந்தி ஆசிரியர் என்பதை இவ்வாறு எழுதியுள்ளனர். இதுவும் முன்னமே விளக்கப்பட்டது. **இகுவ் அனகெ**. இதன் சரியான உருவம் தெரியவில்லை. 'இவனுக்கு' 'இவனுக்குரிய' என்னும் பொருளுள்ள தாகத் தோன்றுகிறது. **தம்மம்**: இது பாலி (பிராகிருத) மொழிச் சொல். சமற்கிருதத்தில் இது தர்மம் என்று எழுதப்படும். இதன் பொருள் அறம் என்பது. இந்தச் சொல் முன் கல்வெட்டில் **தமம்** என்று எழுதப்பட்டுள்ள. **ஈத்தா அ நெடுஞ்சழியன்**: 'ஈத்தான் நெடுஞ் செழியன்' என்று எழுத வேண்டியது இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஈத்தான் - ஈந்தவன், கொடுத்தவன் செழியன் என்பது சழியன் என்று தவறாக எழுதப்பட்டுள்ளது. செழியன் என்பது பாண்டியனுடைய பெயர். **பணஅன்** என்பது பணயன் என்று எழுதப்படவேண்டும். பணயன் என்றும் பணயகாரன் என்றும் பாண்டியரின் செப்பேடு களிலும் கல்வெட்டுக்களிலும் எழுதப்பட்டுள்ளன. பணயன் என்பதன் பொருள் அரசருடைய தச்சன் என்பது. அரசருடைய தச்சனைப் பெருந்தச்சன் என்றும் கூறுவர். இச்சொல் இங்குப் பாண்டியனுடைய கற்றச்சனைக் குறிக்கிறது. பாண்டியனுடைய கற்றச்சன் இந்தக் குகையில் கற்படுக்கைகளை அமைத்தவன். **கடலன்** என்பது பணயனான கற்றச்சனுடைய இயற்பெயர். கடலன் என்னும் பெயர் சங்க காலத்தில் பெயராக வழங்கப்பட்டது. எருமை

வெளியனார் மகனார் கடலனார் என்னும் புலவர் சங்க காலத்தில் இருந்தார். அவர் அகநானூறு 72 ஆம் செய்யுளைப் பாடினவர். **வழுத்தி** என்பது வழுதி என்றிருக்க வேண்டும். வழுதி என்பது பாண்டியரின் பொதுப்பெயர். பாண்டியன், பணயன் கடலனாகிய கற்றச்சனுக்கு வழுதி என்று சிறப்புப் பெயர் அளித்திருந்தான் என்பது தெரிகிறது. **கொட்டு பித்த அ** என்பது கொத்துவித்த (பாறையைக் கொத்திக் கற்படுக்கையைச் செய்வித்த) என்னும் பொருளுடையது. இறுதியில் அகர எழுத்து மிகையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இச் சொல் கொத்துவித்த என்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. **பளிஇய்** என்பது பள்ளி என்று எழுதப்படவேண்டும். கற்றச்சன் இவ்வாறு எழுத்துக்களை விட்டும் சேர்த்தும் வெட்டியிருக்கிறான்.

சோதிடத்தில் வல்லவரான அரச குருவாகிய நந்தி ஆசிரியருக்கு இந்த மலை தானமாகக் கொடுக்கப்பட்டது. இதைத் தானம் கொடுத்தவன் பாண்டியன் நெடுஞ்செழியன். பாண்டியனுடைய பணயனாகிய கடலன் வழுதி இக் குகையில் கற்படுக்கைகளைக் கொத்துவித்தான் என்பது இக் கல்வெட்டின் கருத்து.

· இந்த இரண்டு கல்வெட்டுக்களிலிருந்து அறியப்படுவது: ஆசிரியராகிய (குருவாகிய) கணி நந்தி என்பவருக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் இரண்டு மலைக்குகைகளைத் தானஞ் செய்தான் இரண்டு குகைகளைத் தானஞ் செய்தபடியாலே, அவருக்குப் பல சீடர்கள் இருந்தனர் என்பது தெரிகிறது. நெடுஞ்செழியனுடைய சேனைத் தலைவனுடைய தந்தையான சடிகன் முதற் குகையில் கற்படுக்கைகளைச் செய்வித்தான். பாண்யடினின் பணயகாரனாகிய கடலன் வழுதி இரண்டாவது குகையில் கற்படுக்கைகளைச் செய்வித்தான்.

10 ஆனைமலை பிராமி எழுத்து

மதுரையிலிருந்து மேலூருக்குப் போகிற சாலையில் ஐந்து கல் அளவில் ஆனைமலை இருக்கிறது. இந்த மலை பெரிய கற்பாறை யினால் அமைந்துள்ளது. இந்த மலைப்பாறையின் உருவ அமைப்பு யானையொன்று தன்னுடைய முன்னங்கால்களை நீட்டிக் கொண்டு அக் கால்களின் நடுவே தும்பிக்கையை வைத்திருப்பது போலக் காணப்படுகிறபடியால் இதற்கு யானை மலை என்று பெயர் உண்டாயிற்று. யானை மலைக்குன்றில் சில இடங்களிலே சமண சமய தீர்த்தங்கரரின் திருமேனிகளும் வட்டெழுத்துச் சாசனங்களும் காணப்படுகின்றன. இவை கி.பி. 7,8ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டவை. இந்த மலையின் அடி வாரத்தில் நரசிங்கமங்கலம் என்னும் ஊருக்கு அருகில் பாண்டியனுடைய அமைச்சனாக இருந்த மாறங்காரி கி.பி 770இல் நரசிங்கப் பெருமானுக்கு ஒரு குகைக் கோயிலை அமைத்தான் என்று அங்குள்ள வட்டெழுத்து கிரந்த எழுத்துச் சாசனங்கள் கூறுகின்றன.

பிற்காலத்தில் இந்த மலையைப் பற்றிப் புராணக் கதைகள் கற்பிக்கப்பட்டன. சமண சமய முனிவர் தங்களுடைய மந்திர சக்தியினால் ஒரு பெரிய யானையை உண்டாக்கி அதைப் பாண்டியனுடைய மதுரை நகரத்தை அழித்துவிட்டு வரும்படி ஏவினார்களாம். அந்தப் பெரிய யானை மதுரையை யழிக்க வருவதைக் கண்ட பாண்டியன் சொக்கப் பெருமானை வேண்டிக் கொள்ள அவர் நரசிங்க அம்பு எய்து யானையைக் கொன்றாராம். விழுந்த யானை கல்லாகச் சமைந்துவிட்டதாம். இந்தக் கதை திருவிளையாடற் புராணங்களில் கூறப்படுகின்றன.

இந்த யானைமலை மேல் உயரத்திலுள்ள இயற்கையான குகையும் அக் குகை வாயிலின்மேல் பொறிக்கப்பட்டுள்ள பிராமி

எழுத்தும் நம்முடைய ஆராய்ச்சிக்கு உரியவை. மலையுச்சியிலுள்ள குகைக்குச் செல்வது கடினமானது. குகையின் நீளம் 23 அடி குகைக்குள்ளே முனிவர் இருப்பதற்காகக் கற்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குகையின் வாயிலுக்கு மேலேயுள்ள பாறையின் ஓரத்தில், மலை நீர் குகைக்குள்ளே விழாதபடி பக்கங்களில் வழிந்து போகும்படி குழைவான தூம்பு செதுக்கப்பட்டிருக்கிறது. குகைக்கு வெளியிலும் கற்படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. குகைக்குச் சற்றுத் தூரத்தில் நீர் ஊற்றுள்ள சுனையொன்று இருக்கிறது. குகை வாயிலின் மேலேயுள்ள பாறையில் நீண்ட பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. 1906ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இவ்வெழுத்துக்கள் அவ்வாண்டின் சாசனத் தொகுப்பில் 457ஆம் எண்ணுள்ளதாக இந்தச் சாசனம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வெழுத்துக்களின் வரிவடிவம் இவை:



இந்த எழுத்துக்களைப் படித்த அறிஞர்கள் இதற்கு வெவ்வேறு பொருள் கூறியுள்ளனர். இவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைப் பார்ப்போம். திரு. கிருட்டிண சாத்திரி இவ்வாறு படித்துள்ளார்:

இ வ (ம்) ஜெ னா டு தூ உடை யு ள (பா) த் ன தானா ஏரி

அ தா து வா யி அர ட்டம் ட்ட கா யி பா னா (ஆரிதனா

இவ்வாறு படித்த இவர் கீழ்க்கண்டவாறு விளக்கங் கூறுகிறார்:

'இவம்ஜெ நாடு' என்பது ஒரு நாட்டின் பெயர். உடையு என்பது உடையன் (தலைவன்) என்னும் பொருள் உள்ளது. ஏரி என்பது குளத்தைக் குறிக்கிறது. ஆரிதனா என்பது ஹரிதானா என்னும்

சமற்கிருதச் சொல்லின் திரிபு. தாதுவாயி என்பது தந்துவாய என்னும் பிராகிருதச் சொல்லின் திரிபு. இதன் பொருள் துணி நெய்கிறவன் என்பது.[1]

திரு. கே.வி. சுப்பிரமணிய அய்யர் இவ்வாறு படித்துள்ளார்.

இவ குன்றது உறை உள்நாதன் அ தான

ஏரி அநிதன் அத்துவாயி அரட்ட காயிபான்

இதற்கு இவர் இவ்வாறு பொருள் கூறுகின்றார்: 'குன்றத்தூரில் வசிக்கி௹ உள்நாதன் கொடுத்த தானங்கள். பின் உள்ள சொற்கள் இந்தக் குகையில் வசித்தவர்களுடைய பெயரைக் கூறுகின்றன.[2]

திரு. நாராயணராவ் இதை இவ்வாறு படித்துள்ளார்:

'இவகு - நாட்டு - தூ உட்டுயுள - பொ தன - தானா

ஏரி ஆரிதனா அதாந்துவாயி 'அ - ரட்ட - காயிபானா'

நாடு என்பது திராவிடச் சொல் அன்று; அது நட் என்னும் சமற்கிருத வேர்ச் சொல். போதனா என்பது புதரானாம் அல்லது பௌத்ரானாம் என்னும் சமற்கிருதச் சொல்லைச் சுட்டுகிறது. தான என்பது தானம் என்னும் சமற்கிருதச் சொல். ஏரி ஆரிதனா என்பது ஐராவதானாம் என்னும் சொல்லாகும். ரட்ட என்பது ராஷ்ட்ரம். காயிபானா என்பது காஸ்யபானாம் என்னும் சொல். இவ்வாறு விளக்கங் கூறி இதன் கருத்தையும் தெரிவிக்கிறார். 'அதாத்து வாயக ராஷ்ட்ரத்து இவது நாட்டிலிருந்து வந்தவர்களான காஸ்யபர்களின் ஐராவத குலத்தைச் சேர்ந்த உட்டுயுல் என்பவரின் மக்கள் (அல்லது பேரன்கள்?) செய்த தானங்கள்.[3]

---

[1] Proceedings and Transaction of the First All India oriental Conference. Poona 1919.

[2] Proceedings and Transactions of the Third All India Oriental Conference. Madras 1924.

[3] Proceedings and Transactions of the Tenth All India Oiental Conference. Tirupati 1940; PP 362 - 367 New Indian Antiquary Vol.I

திரு. ஐராவதம் மகாதேவன் இதைப் படித்துக் கூறுவது இது:

இவ குன்றதூர் உறையுள் நாதன் தான அரிதன்

அத்துவாயி அரட்ட காயிபன்.

''குன்ற(த்)தூர் (படுக்கைகளில் வசிக்கும்) நாதன் என்பவரின் படுக்கைகள் (இவற்றைச் செய்து கொடுத்தவர்) அரி அரிதன், அத்துவாயி, அரட்ட காயிபன்.[1]

திரு. டி.வி. மகாலிங்கம் அவர்கள், இவ்வாறு படித்து விளக்கமும் பொருளும் கூறுகிறார்:

'இவ குன்றதூ உறையுள் பாதந்தன் எரி அரிதன்

அதன் தூவயி அரிட்ட கோயிபன்'

இவகுன்றம் என்பதுயானைமலை. இவம் என்னும் சமற்கிருதச் சொல் இபம் என்றாயிற்று. இந்த மலையின் பழைய பெயர் 'இவகுன்று' என்றிருக்கலாம். பதந்தன் என்பது பதந்த என்னும் பாலி மொழிச் சொல். இதன் பொருள் வணக்கத்துக்குரிய ஆசிரியர்' என்பது. எரி என்பது தீ (அக்கினி). அஃதாவது சூரியனைக் குறிக்கிறது. அரிதன் என்பது ஹாரித என்பதாகும். ஹாரித குலத்தைச் சேர்ந்தவன் என்பது இதன் பொருள்.

முதல் வாக்கியத்தின் பொருள். 'இவ குன்றத்தில் வசிக்கிற வணக்கத்துக்குரிய (பத்தந்த)

ஏரி ஆரிதன் 'என்பது இரண்டாவது வரியில்' அதன் என்பது ஆதன் என்னும் சொல்லின் திரிபு. ஆதன் என்பது அதன் என்று எழுதப்பட்டுள்ளது. தூவி, தூவல் என்னுஞ் சொற்கள் பறவைகளின் சிறகைக் குறிக்கும் சொற்கள். இவை மயில் இறகையும் குறிக்கிறது. தூவயி (தூவை அல்லது தூவையர்) என்பது மயில் இறகைக் கையில் வைத்திருப்பவர் என்னும் பொருள் உள்ளது. திகம்பர சைனர் மயில் இறகுக் கொத்தைக் கையில் வைத்திருப்பது வழக்கம். ஆசீவகர்களும்

---

[1] p- 65 Seminar on Inscriptions: 1966.

இறகை வைத்திருக்கக்கூடும். அரிட்ட கோயிபன் என்பது ஓர் ஆளின் பெயர். கோயிபன் என்பது காஸ்யபன் என்பதன் திரிபு. இந்த வாக்கியத்தின் பொருள் 'மயில் இறகுக் கத்தையை வைத்திருக்கிற ஆதனாகிய' அரிட்ட கோயிபன் என்பது.[1]

இந்த வாக்கியத்தை நாம் படித்து நேரான செம்பொருள் காண்போம்.

இ வ கு ன ற தூ உ றை யு ள உ த ன ஏ ரி அ ரி த ன

அ த தூ வா யி அ ரி ட ட கொ யி ப ன

புள்ளி இட்டுப் பதம் பிரித்தால். இவ்வாறு வாக்கியம் அமைகிறது.

இவ் குன்ற தூ உறையுள் உதன் ஏரி அரிதன்

அத் தூ வா யி அரிட்ட கோ யிபன்

இந்த வாக்கியத்தின் பொருள் இது:

குன்றிலுள்ள உறையுளையும் (குகையையும்) அதன் அருகில் உள்ள ஏரியையும் அரிதன் அந்துவாயி அரிட்டகோயிபன் (என்னும் இருவர் தானமாக முனிவர்களுக்குக் கொடுத்தார்கள்.)

இதற்கு விளக்கம் வருமாறு: இவ் என்பது இவை என்னும் பொருள் உள்ள சொல். இச்சொல் குன்றின்மேலுள்ள குகையையும் அதற்குள் உள்ள கற்படுக்கைகளையும் குன்றின் கீழேயுள்ள ஏரியையும் சுட்டுகிறது. **குன்றதூ:** இதன் பொருள் குன்றத்து என்பது கடைசி எழுத்து து என்றிருக்க வேண்டியது. தூ என்று எழுதப் பட்டுள்ளது. த்து என்று தகர ஒற்றெழுத்து விடுபட்டிருக்கிறது.

வேறு சில பிராமிக் கல்வெட்டுக்களிலும் இவ்வாறே தகர ஒற்றெழுத்து விடுபட்டிருக்கிறது. இதை **த்து** என்று படிப்பதுதான் வாக்கிய அமைதிக்குப் பொருந்துகிறது. உறையுள் என்பது வசிக்கும் இடம் என்னும் பொருள் உள்ள சொல். உறையுள் என்பது இங்கு

[1] PP. 276-278 Early South Indian palaeography.

இம்மலையில் இருந்த முனிவர்களின் குகையைச் சுட்டுகிறது. அடுத்துள்ள **உதன்** என்பது சுட்டெழுத்து. அ.இ. உ. என்னும் சுட்டெழுத்துகளில் அகரம் (உது) நடுவில் (இடையில்) உள்ள பொருளைச் சுட்டுகிறது, என்பது இலக்கணம். இந்த இலக்கணப்படி 'உதன் என்பது இடையிலுள்ள என்னும் பொருள் உள்ள சொல். இச் சொல் ஏரியைச் சுட்டுகிறது. ஏரி என்பது நீர் நிலையைக் குறிக்கிறது. இந்த யானைமலையின் உச்சியில் குகைக்கு அருகில் நீரூற்றுச்சுனை இருக்கிறது என்று முன்னமே அறிந்தோம். கல்வெட்டு கூறுகிற ஏரி, இந்தச் சுனை அன்று. மலையின் அடிவாரத்தில் இருந்த ஏரியைக் குறிக்கிறது.

குன்றத்தைச் சார்ந்த உறையுளையும் (குகையையும்) குன்றத்தைச் சார்ந்த (அடிவாரத்தில்) இருந்த ஏரியையும் ஆக இரண்டையும் முனிவர்களுக்குத் தானம் செய்தார்கள். இவ்விரண்டு பொருள்களையும் குறிக்கவே 'இவ்' என்னுஞ் சொல் பன்மையில் குறிக்கப்பட்டது. இச் சொல் குன்றத்தை மட்டும் குறிப்பதாக இருந்தால் 'இக் குன்றத்து என்று ஒருமையில் எழுதப்பட்டிருக்கும். 'இவ்' என்று இருப்பதனால் இச் சொல் குகையை (உறையுளை)யும் ஏரியையும் குறிக்கிறது என்பது தெளிவு. உறையுளைத் தானங் கொடுத்தது சரி, ஆனால் ஏரியை ஏன் துறவிகளுக்குத் தானங் கொடுத்தார்கள் என்று ஐயம் உண்டாகலாம். முனிவர்களின் உணவுக்காகத் தானியம் பயிர் செய்வதற்கு இந்த ஏரி தானம் செய்யப்பட்டது என்று தோன்றுகிறது. இலங்கையில் ஒரு குகையில் உள்ள பிராமிக் கல்வெட்டு ஒன்று, மலைக் குகையையும் அதன் கீழுள்ள ஏரியையும் தானம் செய்ததைக் கூறுகிறது. பருப்புகளைப் பயிர் செய்வதற்கு அந்த ஏரியைத் தானம் செய்துள்ளனர். அதுபோன்ற இந்த மலையை அடுத்துள்ள ஏரி தானியம் பயிர் செய்யத் தானங் கொடுக்கப்பட்டது என்று தோன்றுகிறது. **அரிதன் அத்துவாயி, அரிட்ட கோயிபன்** என்பவை தானங் கொடுத்தவர்களின் பெயர்கள். இவர்கள் இருவரும் சேர்ந்து குகையையும் (உறையுளையும்) ஏரியையும் தானம் செய்தார்கள்.

கடைசியில் தானம் என்னும் சொல் இவ் வாக்கியத்தில் விடுபட்டுள்ளது. ஆகவே இந்த வாக்கியம் பயனிலை இல்லாமல் முடிகிறது. வினைச்சொல்லைச் சேர்த்து இந்த வாக்கியத்தை 'இவ் குன்றத்து உறையுள் உதன் ஏரி அரிதன் அத்துவாயி அரிட்ட போயிபன் தானம்' என்று முடிக்கலாம்.

11. கருங்காலக்குடி பிராமி எழுத்து

மதுரை வட்டத்தின் மேலூருக்கு வடக்கே எட்டுக் கல் தொலைவில் கருங்காலக்குடி இருக்கிறது. இவ்வூருக்கு அருகில் இருக்கிற குன்றுகளில் ஒன்று 'பஞ்சபாண்டவர் குட்டு' என்று கூறப்படுகிறது குன்று என்னும் சொல் குட்டு என்று கூறப்படுவது கவனிக்கத்தக்கது. இந்தக் குன்றில், இடைக்காலத்தில் செதுக்கி யமைக்கப்பட்ட அருகக் கடவுளின் திருமேனிகளும் வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. இவை நம்முடைய ஆராய்ச்சிக்கு உரியவை அல்ல. இந்தக் குன்றின் மேலே இன்னோர் இடத்தில் இயற்கையாக அமைந்த குகையும் கற்படுக்கைகளும் பிராமி எழுத்துக் கல்வெட்டும் இருக்கின்றன. இவை 1909ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் கல்வெட்டெழுத்து 1911ஆம் ஆண்டின் தொகுதியில் 561ஆம் எண்ணுள்ளதாகப் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இந்தக் குகையையும் பிராமி எழுத்தையும்பற்றி 1912ஆம் ஆண்டு எபிகிறாபி ஆண்டு அறிக்கையில் 57ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளன. இந்த ஆண்டு அறிக்கையிலேயே இந்தப் பிராமி எழுத்தின் நிழற்படம் வெளியிடப்பட்டிருக்கிறது.[1]

இந்தப் பிராமிக் கல்வெட்டெழுத்து பதினொரு எழுத்துக்களைக் கொண்ட சிறு வாக்கியம். இந்த எழுத்தின் வரிவடிவம் கீழே காட்டப்பட்டுள்ளது. வலப்புறத்தில் இரண்டாவது எழுத்து தெளிவாக இல்லாமல், கல்லில் உள்ள புரைசலோடு சேர்ந்த வட்டவடிவமாகக் காணப்படுகிறது.

---

[1] Annual Report on South Indian Epigraphy for 1912 Plate facing P. 57.



திரு. எச். கிருட்டிண சாத்திரி இவ்வாறு படித்துள்ளார்:

'(ஏ) ட்டு ய ர (உ) ர அரி தினா பாளி' (வலப்புறத்து இரண்டாம் எழுத்தை இவர் வடமொழி ட்ட என்னும் எழுத்து என்று கருதுகிறார்) முதல் ஐந்து எழுத்துக்களும் ஓர் ஊரின் பெயரைக் குறிக்கின்றன. கடைசி இரண்டு எழுத்துக்கள் 'பாளி' என்பது/ என்று இவர் விளக்கங் கூறியுள்ளார். [1]

திரு. கே.வி சுப்பிரமணிய அய்யர் இவ்வாறு படித்துள்ளார்:

'எட் டு ய ரூ ர அரிதின் பாளி'

முதல் சொல்லின் இறுதியில் ன் சேர்ந்து எட்டியூரன் என்று படித்து 'எட்டியூர் அரிதின் என்பவருடைய குகை' என்று விளக்கங் கூறியுள்ளார். [2]

திரு நாராயண ராவ், 'எட்டு யார ஹாரீ தானாம் பாலி - (கி?)' என்று சமற்கிருதப்படுத்தி எழுதினார். [3]

திரு. ஐராவதம் மகாதேவன், வலப் பக்கத்து இரண்டாம் எழுத்தை ழை என்று படித்துள்ளார் (இவ்வெழுத்துடன் கலந்துள்ள புரைசல் இவ்வாறு கருதும்படி இருக்கிறது) இவர் கீழ்க்கண்டவாறு படித்துப் பொருள் கூறுகிறார்:

'எழை ஊர் அரிதின் பாளி'

---

[1] Proceedings and Transactions of the Fist All India Oriental Conference P. 208-217 Poona 1919.

[2] Proceedings and Transactions of the Third All Indian Oriental Conference Madras, 1924.

[3] New India Antiquary Vol.I.

'எழையூர் அநிதி என்பவருடைய ஆசிரமம்''[1] திரு. டி.வி. மகாலிங்கம் அவர்கள், 'எட்டுய உர அரிதித பாளி' என்று படித்து '(எ)ட்டு யூர் அரிதின் பாளி' என்று சொல் பிரித்து, 'எட்டுயூர் (எட்டியூர்) அரிதின் (ஹரித என்பவரின்) படுக்கை' என்று பொருள் கூறுகிறார்.[2]

இந்தக் கல்வெட்டின் வலப்புறத்து இரண்டாவது எழுத்து புரைசலுடன் கலந்து தெளிவாகத் தெரியவில்லை. இதை வட்டவடம் என்று கொண்டு சமற்கிருத இரண்டாவது ட்ட என்னும் எழுத்து என்று கருதினார், திரு. கிருட்டிண சாத்திரி. திரு. ஐ. மகாதேவன் இதை ழை என்று கொண்டார். இது தமிழ் டகர எழுத்து. இதை,

எ டய் ஊர் அரிதின பாளி

என்று படிக்கலாம் **எடய்** என்பது எட்டிய் என்று இருக்கவேண்டும். டகரம் இரட்டித்து ட்டி என்று இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இப்படிக் கருதுவதற்குக் காரணம் இதனொடு யகரமெய்(ய்) சேர்ந்திருப்பதுதான். இகர ஈற்றுச் சொற்களின் இறுதியில் (ய்) யகரமெய் சேர்த்து அக்காலத்தில் எழுதப்பட்டிருப் பதை வேறு பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களில் பார்க்கிறோம். ஆகவே, இந்த முதற் சொல் **எட்டி** என்று இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. டகரம் புரைசலோடு சேர்ந்திருப்பதனால் இதன் சரியான வடிவம் தெரியவில்லை. இதை எட்டிய்' என்று படிக்கலாம்.

இரண்டாவது சொல் ஊர் என்பதில் யாருக்கும் ஐயம் இல்லை. மூன்றாவது சொல் **அரிதின** என்பது. இதை அரிதின் என்று படிப்பதை விட அரிதின என்று படிப்பதே சரி என்று தோன்றுகிறது. அரிதின என்பது அரிதியின் உடைய என்றும் பொருள் உள்ளது. அ என்பது உடைய இ அது என்னும் ஆறாம் வேற்றுமை உருபுச் சொற்கள். **பாளி** என்பது பாழி என்னும் பொருள் உள்ள சொல். எட்டியூர் அநிதியினுடைய பாழி என்பது இதன் வாக்கிய அமைதி. எட்டி

[1] P. 63 Seminar on Inscriptions 1966.

[2] P. 213 Early South Indian Palaeography.

யூரில் வாழ்ந்த அரிதி என்பவர். இந்தப் பாழியை குகையை)க் கொடுத்தார் என்பது கருத்து.

12. மேட்டுப்பட்டி (சித்தர்மலை)

மதுரை மாவட்டத்தில் நிலைக்கோட்டையிலிருந்து தெற்கே ஆறு கல் தொலைவில் அம்மை நாயக்கனூரும் அவ்வூரைச் சார்ந்து மேட்டுப்பட்டிக் கிராமமும் உள்ளன. வைகையாறு பேரணைப் பக்கமாகத் திரும்புகிற இடத்தில் ஆற்றங்கரைக்கு அருகில் அழகான இயற்கைச் சூழ்நிலையில் சித்தர்மலை அமைந்திருக்கிறது மலையின் மேலே சிவன் கோயில் இருக்கிறது. இம் மலையின் தெற்குப்புறத் தாழ்வரையில் பெரிய குகையும் குகைக்குள்ளே பாறையில் அமைக்கப்பட்ட கற்படுக்கைகளும் உள்ளன. இவற்றை ஊரார் பஞ்சபாண்டவர் படுக்கை என்று கூறுகிறார்கள். இந்த நீண்ட குகைக்குள்ளே பக்கத்துக்கு ஐந்து படுக்கையாக இரண்டு வரிசையில் பத்துக் கற்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. தலையணைப் பக்கத்தில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. குகையின் வாயிலை இப்போது கல்லும் மண்ணும் இட்டுச்சுவர் எழுப்பி அடைத்துள்ளனர். சுவரில் உள்ள சிறு வாயிலில் புகுந்து உள்ளே சென்றால் கற்படுக்கைகளைக் காணலாம். கற்படுக்கைகளும் பிராமி எழுத்துக்களும் 1908ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு அவ்வாண்டு எபிகிறாபி இலாகா அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.[1]

இந்தப் பிராமி எழுத்துக்களின் நிழற்படங்களை 1912ஆம் ஆண்டு எபிகிறாபி இலாகா அறிக்கையில் 57ஆம் பக்கத்தில் வெளியிட்டுள்ளனர். இந்த எழுத்துக்கள் கற்படுக்கைகளை அமைத்தவர்களின் பெயர்களைக் கூறுகின்றன. பிராமி எழுத்துக் களின் வரிவடிவத்தையும் அவற்றின் பக்கத்தில் இப்போதைய எழுத்தையும் காட்டுகிறோம்.

[1] Madras Epigraphy Report 1908, part II, Para 5,6.

(1) பதன ஊர் அதன்



(2) குவிர அந்தைவேள் அதன்



(3) திடி இள அதன்

(4) அந்தை அரிய்(தி)



(5) அந்தை இரைவதன்



(6) மதிரை அந்தை விஸுவன்

(7) அந்தை சந்தஅதன்

(8) சந்தந்தை சந்தன்

திரு வெங்கையா அவர்கள், 'அந்தை அரிய' என்பதன் பொருள், 'பௌத்த முனிவர்கள் வசிக்கும் இடம்' என்று பொருள் கூறுகிறார்[1] திரு.எச். கிருட்டிண சாத்திரி இவற்றை இவ்வாறு படித்துள்ளார்:

1. போ தி னா (ஊ) ர தா (னா)
2. கு வி ரா அ (ந) தை வெ ய அ தா னா
3. கு வி ரா அ ந தை வெ (ய) அ தா னா
4. தி தோ ஈ ல அ தா னா
5. அ ந தை அ ரி ய
6. தி அ ந தை (ஈர) வா த ன
7. ம தி ர (ஆ) அ ந தை (வி) ஜு வா னா
8. சா ந தா ந தை சா ந தா னா
9. அ ந தை வ (எ) ந தா அ தர் னா

இவ்வாறு படித்த இவர் இதில் 'அதானா' என்னுஞ் சொல் ஆறு இடங்களிலும் 'அநதை' என்னுஞ்சொல் ஏழு இடங்களிலும் வந்துள்ளன என்று கூறுகிறார்.

---

[1] Madras Epigraphy Report, 1908, Para. 59.

திரு.கே.வி. சுப்பிரமணிய அய்யர் இந்த எழுத்துக்களை இவ்வாறு படித்துள்ளார்:

1. பொதின் ஊர - அ தான. (பொதினூரைச் சேர்ந்த ஒருவர் கொடுத்த தானம்)
2. குவீர அந்தை வேய தான (குவீரருடைய படுக்கை. வேய் கொடுத்த தானம்)
3. திடயில்-அ-தான (திட்டையூரில் இருந்தவர் கொடுத்த தானம்)
4. அந்தை அரைதி (அரைதி என்பவரின் படுக்கை)
5. அந்தை இரவாதான் (இரவாதானின் படுக்கை)
6. மதிர அந்தை (மதிரைக்கு உரிய படுக்கை)
7. விசுவ சானதா அந்தை (விசுவன் சானதானின் படுக்கை)
8. சானதான் அந்தை (சானதானின் படுக்கை)
9. வேனதா - அ - தான (வேனதானின் தானம்)

இவர் தான என்பது தானம் (கொடை) என்னும் சொல்லாகக் கொண்டார். அந்தை என்பதை அநதை என்று கொண்டு, அது படுக்கை என்னும் பொருள் உள்ள சொல் என்று கூறுகிறார். அநதை என்பது 'எண்ட' என்னும் சிங்கள மொழிச் சொல் என்று கூறுகிறார். அந்தை என்பதை ஆந்தை என்றும் கொள்ளலாம். எயின் ஆந்தை, பிசிர் ஆந்தை, அஞ்சில் ஆந்தை முதலான (அகப்பாட்டுப் பாடியவர்) பெயர்களைப் போல என்று கூறுகிறார். தன், தான், என்பதைக் கீரத்தன், விண்ணத்தார் என்பது போலவுங் கொள்ளலாம் என்று கூறுகிறார்.

திரு. நாராயணராவ் இந்த எழுத்துக்களைப் பிராகிருத பாஷையாகப் படித்துப் பிறகு அதைச் சமற்கிருதமாக்கிப் பொருள் கற்பிக்கிறார்.

1. பொதின 'ஹ' அ தான (பிராகிரும்) பொதின ஊரஸ்ய தானானி (சமற்கிருதம்) போதின ஊர என்னும் கிராமத்தாரின் தானம்.

2.3. குவிரா அன தை (பிராகிருதம்) குபேரானாம் தேயம் (சமற்கிருதம்) குபேரன் என்னும் பெயருள்ள இனத்தார் செய்த தானம்.

4.5. திடேரயிள அ தான (பௌத்த பிக்கு பிக்குணிகளுக்குக் கொடுக்கப்பட்ட தானம்)

5,6. அரியதி அநதை (பிராகிருதம்) ஆர்ய ஸ்திரீணாம் தேயம் (சமற்கிருதம்) கணவன் - மனைவி கொடுத்த தானம்.

6,7. இரவாதனா மதிரா அந்தை (பிராகிருதம்) இராவதானாம் மாத்ருனாம் தேயம் (சமற்கிருதம்) இரவாத என்னும் பிரிவினரின் தாய்மார் செய்த தானம்.

7,8. விஸுவானா சானதானா தை (பிராகிருதம்) விஸ்வானாம் ஜானபதானாம் தேயம் (சமற்கிருதம்) (எல்லா கிராமத்தாருடையவும் தானம்)

8,9. சானதானா அந தெ (பிராகிருதம்) ஜானபதானாம் அந்யத் தேயம் (சமற்கிருதம்) (கிராமத்தாருடைய இன்னொரு தானம்)

9. வெனதாத் தானா (பிராகிருதம்) விநதாயா தானம் (சமற்கிருதம்) வினதாவினுடைய (அல்லது ஒரு பக்தருடைய தானம்.

திரு.டி.வி. மகாலிங்கம் இவ் வெழுத்துக்களை இவ்வாறு படித்துப் பொருள் கூறுகிறார்:[1]

1. பொ தி ன (ஊ) ர அ த ன என்பது இதன் வாசகம். திராவிடியில் இது 'பொதின ஊர் அதன்' என்றாகும். இதன் பொருள் பொதின் ஊர் அதன்' என்பது.

2,3. கூவிரா அந்தாய் வேய அதான, குவிர அந்தாய் வேள் அதன். இது திராவிடியில் 'குவிர அந்தாய் வேள் அதன்' என்றாகும். இதன் பொருள், '(ஆசீவக மதத்தைச் சேர்ந்த) தூய தந்தையான

[1] Early South Indian Palaeography, 1967, PP. 262 - 266.

குவிரனும் ஆதனும்' அடிக்குறிப்பில், இதன் முழு வாசகம் ஒரே ஆளைக் குறிப்பதாகவும் இருக்கிறது என்று கூறுகிறார்.

4. தீ டா இ ல அ த ன: இது திராவிடியில் தி - ட - இல் அதன் என்றாகும். திடியில் அல்லது தீடியில் என்பது.

மதுரை மாவட்டம் திண்டுக்கல்லுக்கருகில் உள்ள திடியன் என்னும் ஊர். 'திடியில் ஆதன்' என்பது இதன் பொருள்.

5. அந்தை அரிய என்பது இதன் வாசகம். திராவிடியில் இது 'அந்தை அரியி' என்றாகும். இதன் பொருள் 'தூய தந்தை அரி' என்பது.

6. தி அ ந தை (இரா) வா த ன. இது திராவிடியில் 'தி அந்தை இராவதன்' என்றாகிறது. இராவதன் என்பது ஐராவதன் என்பதாகும். இந்திரனுடைய ஐராவதம் என்பது. ஐராவதன் என்பது ஓர் ஆளின் பெயர். இரவாதான் என்பது இராவதவன் (யாசிக்காதவன்) என்னும் பொருளுள்ளதாகவும் இருக்கலாம்.

7. மதிர அந்தை விஸுவன். இதன் பொருள், மதுரையில் உள்ள தூய தந்தை விசுவன் என்பது.

8. சா ந தா ந தை சா ந தான. திராவிடில் இது சந்தந்தை சந்தன் என்றாகிறது. சந்தன் என்பது இடை ஏழு வள்ளல்களில் ஒருவன். சந்தன் தந்தை சந்தந்தை.

9. அந தை வெ ந த அ தா ன. இதை 'அந்தை வேந்த அதன்' என்று படிக்கலாம். வேந்த(ன்) என்பது அரசன் அல்லது இந்திரன் என்பது பொருள். மேலே கூறப்பட்ட எல்லாப் பெயர்களும் ஒரு சமயப் பிரிவைச் சேர்ந்தவர் என்பது தெரிகிறது. இவர்கள் ஆசீவக மதத்தைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும்.

திரு. ஐ. மகாதேவன் இவ்வெழுத்துக்களைக் கீழ்க்கண்டவாறு படித்துப் பொருள் கூறுகிறார்:[1]

1. Seminar on Inscriptions 1966 Edited by. R. Nagaswamy P. 62.

1 அந்தை அரிதி (ஓர் ஆண் மகன் பெயர்)

2. அந்தை இரவாதான் (ஓர் ஆண் மகனின் பெயர்)

3. மதிர அந்தை விஸுவன (மதுரை அந்தை விஸுவன்)

4. அந்தை சேந்த அ தான (சேந்தன் அந்தையினுடைய தானம்)

5. சந்தந்தை சந்தன் (ஓர் ஆண் மகனுடைய பெயர்)

6. பதின் (ஊ)ர் அதை (பதினூர் அந்தை)

7. குவிர அ(ந்) தை செய் அ தான (குவிர அந்தை செய்த தானம்)

8. குவிர அந்தை வேன்-அ-தான (ஒரு வேள் ஆகிய குவிர அந்தை செய்த தானம்.

9. திடி இல் அ தான (திடியில் கிராமத்தவர் செய்த தானம்)

இந்தப் பிராமி எழுத்துக்களை நாம் கீழ்க்கண்டவாறு படித்துப் பொருள் கூறுகிறோம்: இங்குள்ள பத்துக் கற்படுக்கைகளையும் பத்துப் பேர் ஒவ்வொரு படுக்கையை அமைத்தனர். படுக்கைகளை அமைக்கக் கற்றச்சருக்குப் பொருள் கொடுக்க வேண்டும். பத்துப் பேர் சேர்ந்து ஒவ்வொருவரும் பொருள் செலவு செய்து படுக்கைகளையமைத்துக் கொடுத்தார். அவர்களுடைய பெயர் படுக்கையில் எழுதப்பட்டுள்ளது. **ஆதன்** என்ற சொல்லைக் கற்றச்சன் அதன் என்று எழுதியுள்ளான். பிராமி அகர எழுத்தின் நடுவில் வலப் பக்கமாக இட வேண்டிய சிறு கோட்டை இடாத படியால் அதன் என்று படிக்க வேண்டியுள்ளது. பட்டிப்ரோலு (திராவிடி) வாய்ப்பாட்டின் படி இந்த எழுத்துக்கள் அமைந்துள்ளன.

1. பதன ஊர் அதன் (பதனூர் ஆதன்)

2. குவிர அந்தை வேள் அதன் (குவிர ஆந்தை வேன் ஆதன்)

3. திடி இ ள அதன் (திட்டி இள ஆதன். திட்டி, ஊர்ப்பெயர்)

4. அந்தை அரிய் (தி) (ஆந்தை அரிதி. அரிதி என்பதில் யகர மெய் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. அரிதி என்பதில் தி என்பது அடுத்த பெயரோடு சேர்ந்துள்ளது. பிரித்துப் படிக்கவேண்டும்)

5. (தி) அந்தை இரைவதன் (ஆந்தை இரைவதன்)
6. மதிரை அந்தை விஸுவன் (மதுரை ஆந்தை விஸுவன்)
7. சந்தந்தை சந்தன் (சந்தந்தை சந்தன்)
8. அந்தை சந்த அதன் (ஆந்தை சந்த(ன்) ஆதன்)

இரண்டாவது எண்ணிலுள்ள 'குவிர ஆந்தை வேள் ஆதன்' என்பதைக் குவிர ஆந்தை என்றும் வேள் ஆதன் என்றும் இரண்டு பெயர்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஆறாவது எண்ணில் உள்ள 'மதிரை ஆந்தை விஸுவன்' என்பதை மதிரை ஆந்தை என்றும் விசுவன் என்றும் இரண்டு ஆட்களாகக் கொள்ளவேண்டும். இந்தப் பெயருள்ள பத்து ஆட்களும் பத்துப் படுக்கைகளைச் செய்து கொடுத்தார்கள்.

குவீர ஆந்தை என்னும் பெயரில் உள்ள குவீரன் என்னும் பெயர் விக்கிரம மங்கலப் பிராமிக் கல்வெட்டிலும் காணப்படுகிறது. அங்குப் பொதலை குவீரன், செங்குவீரன் என்று குவீகன் என்னும் பெயர் காணப்படுகிறது. இதனால், குவீரன், அரிதி என்னும் பெயர்கள் அக்காலத்தில் வழங்கி வந்தன என்பது தெரிகிறது.

ஆந்தை, ஆதன் என்னும் பெயர்கள் பிராமிக் கல்வெட்டில் அந்தை, அதன் என்று விக்கிரமமங்கலத்திலும் அழகர்மலையிலும் இந்த மேட்டுப்பட்டிக் கல்வெட்டில் எழுதப்பட்டிருப்பது போலவே எழுதப்பட்டுள்ளன.

13. கீழை வளவு பிராமி எழுத்து

மதுரை வட்டத்து மேலூரிலிருந்து ஏழு கல் தொலைவில் கீழை வளவு இருக்கிறது. கீழை வளவுக்கும் கீழூருக்கும் இடை நடுவில் தாழ்வான குன்றுத் தொடர்கள் உள்ளன. பாறைகளிலே தீர்த்தங்கரர் திருமேனி உருவங்களும் அவற்றின் கீழே வட்டெழுத்துச் சாசனங்களும் காணப்படுகின்றன. இவை இடைக் காலத்தில் அமைக்கப்பட்டவை. இங்குள்ள குகை ஒன்றிலே கற்படுக்கைகளும் பிராமிக் கல்வெட்டெழுத்தும் உள்ளன. இவை 1903ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு, அவ்வாண்டு சாசனத் தொகுப்பில் 135ஆம் எண்ணுள்ளதாகப் பிராமி சாசனம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலே முதன் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டு இதுவே.

குகை வாயிலின் மேலேயுள்ள பாறையில் பதினைந்தடி உயரத்தில் இந்தப் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வெழுத்துகளின் வரிவடிம் இவை:



இந்த எழுத்துக்களில் சில எழுத்துக்கள் தலைகீழாக எழுதப்பட்டுள்ளன. வலப்புறத்திலிருந்து ஐந்தாவது எழுத்தும் ஆறாவது எழுத்தும் பதினொன்றவது எழுத்தும் பன்னிரண்டாவது எழுத்தும் தலைகீழாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இவை கி.மு. 3 அல்லது 2ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. இந்த எழுத்துக்களை அறிஞர் எவ்வாறு படித்துள்ளனர் என்பதைப் பார்ப்போம்.

தொடக்கத்தில் உள்ள 'உபாசா' என்பது உபாத்தியாய என்பதன் திரிபு. லாசோ என்பதும் அதுபோன்றதே என்று விளக்கங் கூறியுள்ளார், திரு. கிருட்டிண சாத்திரியார்.[1]

திரு.கே.வி சுப்பிரமணிய அய்யர் படித்து விளக்கம் கூறுவன இவை: 'உபா-சா-அ போத ணெட்டுல வோச்சோ கொடு பளிஈ' உபாசா என்பது உபாசகன் என்னும் பிராகிருத மொழிச் சொல்லின் திரிபு. போத என்பது புத்திரன் என்னும் பொருள் உள்ள சொல்.

[1] Proceedings and Transaction of the First All India Oriental Conference, Poona, 1919.

ணெட்டுல வோச்சோ என்பது ஓர் ஆளினுடைய பெயர். கடைசியில் உள்ள ஈ என்பது இது என்னும் பொருள் உள்ள சொல். 'உபாசகன் மகன் நெடுலவோச்சன் அமைத்த குகை' என்பது இவ் வாக்கியத்தின் பொருள்.[1]

திரு.சி. நாராயண ராவ் இந்த எழுத்துக்களைப் பிராகிருத மொழிபோலப் படித்துப் பிறகு அதைச் சமற்கிருதமாக்கிப் பொருள் கூறுகிறார்:

'உபாசா' அ போதா நாட்டலா ஒச்சோ கொடு பாலி'ஈ'

(பிராகிருதம்)

உபாத்யாய - புத்ரஹ் நாட்ய கர் ஒ பாத்யாயாற் குட்டபிதா

பாவிசா (கி.ஒ.) (சமற்கிருதம்)

உபாத்தியாயரின் மகனான நாட்டியம் கற்பிக்கிற நட்டுவன் வெட்டி உண்டாக்கிய ஆசிரமம் என்பது இதன் பொருள்.[2]

திரு. டி.வி. மகாலிங்கம் இதைப் படித்துப் பொருள் கூறுவன இவை:

'உபாசா அபொதெ ணெடுள வோசோ கொடு பளிஈ' உபாசன் என்பது உபாஸகன் என்னும் சொல்லின் திரிபு. உவச்சன் என்பதுடன் தொடர்பு படுத்தலாம். அபொதெ ணெடுள வோசோ என்னும் சொற்கள் ஓர் ஆளினுடைய பெயர். இதில் 'அபொதெ' என்பது அபுரத்திரன். அபுத்திரன் என்னும் பெயர் ஆபுத்திரன் என்று மணி மேகலை காவியத்தில் கூறப்படுகிறது. நெடுள என்பதில் முதல் எழுத்து ணகரத்தில் தொடங்குகிறது. இது தமிழ் இலக்கணப்படி தவறு. ஆனால், பிராகிருத மொழிப்படி சரியானது. நெடுள என்பது நெடுவேள்(முருகன்) நெடியோன் (விஷ்ணு) என்னும் பொருள்

---

[1] Proceedings and Transaction of the Third All India Oriental Conference, Madras, 1924.

[2] Proceedings and Transaction of the 10th All India Oriental Conference, Tirupati, 1940. New Indian Antiquary Vol.I. PP.362-76.

உள்ளது. உபாசகன் ஆபுத்திர நெடுவேளின் வத்ஸன் (மகன்) இந்தத் தானத்தைச் செய்தான் என்பது இதன் கருத்து.[1]

திரு. ஐ. மகாதேவன் இதுபற்றி இவ்வாறு கூறுகிறார்:

'ஊ பா ச - அன் தொண்டி - ளவன் கொடி பாளிஈ'

தொண்டிலிருக்கும் உபாசகன் இளவன் கொடுத்த பள்ளி என்பது இதன் பொருள்.[2]

இதை நாம் படித்துப் பொருள் காண்போம். தலைகீழாகப் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களைச் சரிசெய்தால் இந்த எழுத்துக்கள் இவ்வாறு அமைகின்றன:

ஊ பா ச அ ன த ண டு லா வ ன கொடு ப ளி ஈ

இதை இவ்வாறு பதம் பிரிக்கலாம்: உபா ச அன் தண்டுலாவன் கொடு பளிஇ. உபாசகன் ஆன தண்டுலா வன்(முனிவர்களுக்குக்) கொடுத்த பள்ளி என்பது இதன் பொருள்.

விளக்கம், ஊபாசஅன். இதை ஊபாசான் என்று படிக்கலாம். இதன் சரியான வாசகம் உபாசகன் என்பது. உகரத்துக்கு ஊகாரம் இடப்பட்டுள்ளது தவறு. சகர எழுத்துக்குப் பக்கத்தில் அகரம் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. இது சா என்று எழுதப்படவேண்டும். அஃதாவது உபாசான் என்று இருக்கவேண்டும். இப்படி எழுதுவதும் பிழை. உபாசகன் என்று எழுதப்படவேண்டும். உபாசகர் என்பது பௌத்த - சைன மதத்து இல்லறத்தாரின் பெயர். **தண்டுலாவன்** என்பது ஒர் ஆளின் பெயர். இஃது இந்தப்பள்ளியைத் தானஞ் செய்தவரின் பெயர். **கொடு** என்பது கொடுத்த என்றிருக்கவேண்டும். **பளிஇ** என்பது பள்ளி என்பதன் இடைக் குறை. **பளிஇ** என்று எழுதப்பட்டிருப்பதும் தவறு. **பளிய்** என்று எழுதப்படவேண்டும். இகர ஈற்றுச் சொற்களின் இறுதியில் யகர மெய் சேர்த்து எழுதுவது

---

[2] Early South Indian Palaeography, P. 216-217.

[3] Seminar on Inscriptions, 1966, P.61.

அக்காலத்து வழக்கம். பளிய் என்று எழுதாமல் பளிஇ என்று எழுதியிருப்பது தவறு. சரியாக எழுதத் தெரியாத ஓர் ஆள் இதை எழுதியிருக்கிறான் என்பது தெரிகிறது.

14. மருகால்தலை பிராமி எழுத்து

திருநெல்வேலிக்கு அருகில் உள்ள பாளையங்கோட்டைக்கு வடகிழக்கே பத்துக் கல் தூரத்தில் மருகால் தலை கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமத்தில் பூவினுடையார்மலை என்னுங் குன்றின்மேல் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட சில சிறு கோயில்கள் இருக்கின்றன. இந்தக் குன்றின் இன்னோர் இடத்தில் இயற்கையாக அமைந்த பொடவு (குகை) ஒன்றிருக்கிறது. இந்தப் பொடவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வசித்திருந்த பௌத்த முனிவர்களுக்கர்க அமைக்கப்பட்ட கல்படுக்கைகள் காணப்படுகின்றன. இந்தக் குகை வாயிலின் மேற்புற நெற்றியில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளாக மறைந்து கிடந்த இந்தப் பிராமி எழுத்து 1906 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. பல நூற்றாண்டு களாக மறைந்து கிடந்த பிராமி எழுத்துக் கல்வெட்டுக் களில் முதல் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டெழுத்து இதுவே. இது சாசனத் தொகுப்பில் 1906ஆம் ஆண்டு 407ஆம் எண்ணாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.[1] சாசன இலாகாவில் 1907ஆம் ஆண்டு அறிக்கையில் 60ஆம் பக்கத்தில், இது 'அசோகன் சாசன எழுத்துக் களைப் போன்ற எழுத்தில் பாலி மொழி சாசனம்' என்று கூறப்படு கிறது.[2] இந்தப் பிராமி எழுத்துக் கல்வெட்டு பாலி மொழியில் எழுதப்பட்டது என்று கருதியபடியால் இதைப் பல ஆண்டுகளாகப் படிக்காமலே வைத்திருந்தார்கள். பல ஆண்டு களுக்குப் பிறகுதான் இது தமிழ்மொழிக் கல்வெட்டு என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

இந்த எழுத்துக்கள் ஒரே வரியில் பதினொரு எழுத்துக்களைக் கொண்டது. இந்த எழுத்துக்களின் அளவு 1அடி முதல் 1அடி 3 அங் குலம் வரையில் உள்ளது. இதன் வரிவடிவம் அடுத்த பக்கம்

---

[1] 407 of 1906.

[2] Madras Epigraphy Report, 1907, P. 60.

காணலாம்.

இந்த எழுத்தின் நான்காவது எழுத்து பிராகிருத ஸி என்னும் எழுத்து. மற்ற எழுத்துக்களெல்லாம் தமிழ் எழுத்துக்களே.

திரு. எச். கிருட்டிணசாத்திரி இந்த எழுத்துக்களைக் கீழ்வருமாறு படித்தார்.[1]



'வே ண கோ ஸி பா னா கு டு பி தா கா (ளா) கா ஞ ச ணா ன'

கோஸிபானா என்பதை காஸ்யபானாம் என்னும் சமற்கிருதச் சொல்லோடு ஒத்திருக்கிறது. குடுபிதா என்பது கொட்டுவித்தான் (வெட்டினான்) என்னும் பொருள் உள்ள சொல். கோஸிபானா என்பதில் கோ என்னும் எழுத்து ஸி போலக் காணப்படுகிறது.

திரு. கே.வி. சுப்பிரமணிய அய்யர் இந்த எழுத்துக்களை இவ்வாறு படித்துள்ளார்.[2]

---

[1] The Caverns and Brahmi Inscriptions of Southern India. H. Krishna Sastri. PP./ 327 - 348. Proceedings and Transactions of the Oriental Research Institue, Poona, 1922.

[2] Proceedings and Transactions of the Third All India Oriental Conference, 1924.

வேண் கோஸிபான் குடுபிதா காள காஞ்சனம்.

வேண் நாட்டு காஸ்யபன்(அல்லது வேளிர் தலைவன் காஸ்யபன்).

கொத்துவித்த சுபமுள்ள (அல்லது கல்லினாலான) ஆசிரமம்.

காள என்பது கல்ய என்னும் சமற்கிருதச் சொல். இது மங்கலம் என்னும் பொருள் உள்ளது. இதற்குக் கல் என்றும் மலை என்றும் பொருள் கொள்ளலாம். குடுபிதான் என்பதிலுள்ள குடு என்பது கொட்டு (அறு) என்னும் பொருள் உள்ளது. காஞ்சனம் என்பது பொதுவாகப் பொன் என்னும் பொருளுடையதானாலும் இங்கு ஆசிரமத்தைக் குறிக்கிறது.

திரு.சி. நாராயண ராவ் இதைப் பிராகிருதமாகப் படித்துப் பிறகு அந்தப் பிராகிருதத்தைச் சமற்கிருதமாக்குகிறார்.[1] அவர் இவ்வாறு படித்துப் பொருள் கூறுகிறார்:

'வேண கோஸிபான குட்டுபிதா காளகாஞ்சனம்' (பிராகிருதம்)

'வேணாகி ஸிபான குட்டுபிதா கால காஞ்சனம்' (சமற்கிருதம்)

பௌத்த விநய பிடகத்தைச் சேர்ந்த (அல்லது வேணாகி, வேநாயகி என்னும் பெயரையுடைய) சில்பி குலத்தைச் சார்ந்த ஒரு பெண் மகளால் செய்விக்கப்பட்ட கல்கால காஞ்சனம்?

திரு.டி.வி. மகாலிங்கம் இந்த எழுத்துக்களை இவ்வாறு படித்துள்ளார்.[2]

வேண் கோஸிபன் குட்டுபித கல் கஞ்சனம்.

வேள்+கோஸிபன்= வேண் கோஸிபன் என்றாயிற்று. வேள் என்பதற்குத் தலைவன் என்றும் பொருள் கொள்ளலாம். இச் சொல்லுக்கு யாகன் என்னும் பொருளும் உண்டு. பிற்காலத்துச் செவிவழிச் செய்தி, வேள் அல்லது வேளிர் என்பவர் வேள்வித்

---

[1] New Indian Antiquary, Vol.I, 1938-39. P. 364-65.

[2] Early South Indian Palaeography, 1962. P. 221-223.

தீயிலிருந்து தோன்றியவர் என்று கூறுகிறது. குடுபித என்பது குடுப்பித்த அல்லது கொடுப்பித்த என்னுஞ் சொல்லாகும். கல்+கஞ்சணம் என்பதை கல்+கஞ்+சணம் என்று பிரிக்கலாம். கம்+சணம்+கஞ்சணம். கம் என்பதன் பொருள் கம்மியர்: கம்மாளர் என்பது. சணம் என்பது படுக்கை என்னும் பொருளுள்ள சயனம் என்னும் சமற்கிருதச் சொல்.

உறையுள் அல்லது படுக்கை கல்லினால் அமைக்கப்பட்டு வேண் கோஸிபனால் தானமாகக் கொடுக்கப்பட்டது என்பது இதன் கருத்து.

திரு. ஐ. மகாதேவன் இதை இவ்வாறு வாசித்துள்ளார்:[1]

வேண் காஸிபன் கொடுபித கல் கஞ்ச ணம்.

வேள் காஸிபனால் கொடுக்கப்பட்ட கல்படுக்கை.

இதில் திரு.சி. நாராயணராவ் படித்துப் பொருள் கூறுவது முழுவதும் பொருத்தம் இல்லாதது என்பது நன்றாகத் தெரிகிறது.

திரு. எச் கிருட்டிண சாத்திரி, குடுபிதா என்பது கொட்டுவித்தான் (வெட்டுவித்தான்) என்று பொருள் கூறுவது ஏற்கத்தக்கததன்று.

திரு. கே.வி. சுப்பிரமணிய அய்யர், வேண் கோஸிபன் என்பதற்கு வேண் நாட்டுக் காஸ்யபன் என்றும் வேளிர் தலைவன் என்றும் இரு வகையாகப் பொருள் கூறுவது ஏற்கத்தக்கதன்று. காள என்பதற்குச் சுபமுள்ள என்றும் கல்லினால் செய்த என்றும் பொருள் கூறுவதும் ஏற்கத்தக்கதன்று. காள என்பது கல்ய என்னும் சமற்கிருத மொழிச் சொல் என்றும் மக்கலம் என்னும் பொருள் உள்ளது என்றும் கூறுவது பொருத்தமற்றவை. குடு என்பது கொட்டு (அறு) என்று பொருள் கூறுவது பொருத்தமற்றது.

திரு.டி.வி. மகாலிங்கம் அவர்கள், வேண்கோசிபன் என்பது, வேள்+கோசிபன்= வேண்கோசியன் என்றாயிற்று என்று கூறுவது புதுமையாக இருக்கிறது. வேள்+கோசிபன்+வேட்கோசிபன்

[1] Corpus of the Tamil-Brahmi Inscriptions, P.63. Seminar on Inscriptions, 1966. edited by R.Nagaswamy, P. 57-73.

என்றாகுமேயல்லாமல் வேண்கோசிபன் என்று ஆகாது. வேள்+கோ=வேட்கோ என்றாவதுபோல் வேள்+கோசிகன்=வேட் கோசிகன் என்று ஆகும். வேண்கோசிகன் என்றாகாது. ஆகவே இவர் கூறுவது தவறு. வேள் என்பது யாகம் என்னும் பொருள் உடைய சொல் என்றும், வேளிர், வேள்வித் தீயில் இருந்து வந்தவர் என்று செவிவழிச் செய்தியுண்டு என்றும் கூறுகிறார். வேளிர் எல்லோரும் யாகத் தீயில் இருந்து வந்தவர் அல்லர். துவரை (துவாரசமுத்திரம்) யையாண்ட புலிகடிமால் வேளிரும், இருங்கோ வேள் பரம்பரையும் வேள்வித் தீயில் இருந்து வந்தவர் என்று கூறப்பட்டனரே தவிர எல்லா வேளிரும் வேள்வியில் இருந்து தோன்றவில்லை. பகாப்பதமாகிய கஞ்சணம் என்பதை இவர் கம்+சணம் என்று பிரித்துக் கம் என்பதற்குக் கம்மியர், கம்மாளர் என்றும், சணம் என்பதற்குச் சயனம் (படுக்கை) என்றும் பொருள் கூறுவது குத்திரயுக்தியா இருக்கிறதே தவிர ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை.

திரு.ஐ. மகாதேவன், இந்தச் சாசனத்தைச் சரியாகவே படித்திருக்கிறார். ஆனால், இவர், வேண்காசிபன் என்பதை வேள் காசிபன் என்று படித்திருப்பது தவறு என்று தோன்றுகிறது.

இனி, இந்தப் பிராமி எழுத்து வாசகத்தை நாம் படித்தும் பொருள் காண்போம்.

வெண் காஸிபன் கொடுபித கல் கஞ்சணம்

என்று இதைப் படிக்கிறோம். இதனை விளக்கிக் கூறவோம் முதற்சொல் வெண் என்பது. பிராமி எழுத்தில் எகரமும் ஏகாரமும் ஒரே மாதிரி எழுதப்படுகிறது. இதை வெண் என்றும் வேண் என்றும் படிக்கலாம். மேலே கூறப்பட்ட அறிஞர்கள் இதை 'வேண்' என்று படித்துள்ளனர். ஆனால் 'வெண்' என்று படிப்பதே இந்த இடத்துக்குப் பெரிதும் பொருந்துகிறது. முதல் ஆறு எழுத்துக்களையும் 'வெண் காசிபன்' என்று படிக்கலாம். சங்ககாலத்தில் வெண் என்னும் தொடக்கத்தையுடையவர் இருந்ததைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். வெண்கண்ணனார், வெண்கொற்றனார், வெண்

பூதனார், வெண்பூதியார் வெண்மணிப் பூதியார் என்னும் பெயர்கள் சங்க காலத்தில் வழங்கி வந்ததை அறிகிறோம்.

வெண் கண்ணனார் அகநானூறு 130, 192ஆம் செய்யுள்களைப் பாடிய புலவர். வெண்கொற்றனார் குறுந்தொகை 86ஆம் செய்யுளைப் பாடிய புலவர். வெண்பூதனார் குறுந்தொகை 83ஆம் செய்யுளைப் பாடியவர். வெண்பூதியார் குறுந்தொகை 97, 174, 219ஆம் செய்யுட்களைப் பாடியவர். வெண்மணிப்பூதியார் குறுந்தொகை 299ஆம் செய்யுளைப் பாடியவர். ஆகையால், இந்தப் பிராமிக் கல்வெட்டெழுத்தில் கூறுப்படுபவரை வெண்காசிபன் என்று கொள்வதுதான் சாலப் பொருத்தம் ஆகும். இப்படிக் கொள்வது தான் அந்தக் காலச் சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருக்கிறது.

அடுத்த நான்கு எழுத்துக்கள் 'குடுபித' என்றிருக்கின்றன. இந்தச் சொல் 'குடுப்பித்த' என்றிருக்க வேண்டும். தகர ஒற்றெழுத்து எழுதப்படவில்லை. இது கற்றச்சனுடைய பிழையாக இருக்கலாம். குடு என்பதும் கொடு என்பதும் ஒரே பொருளுடைய சொற்கள். குடு, கொடு என்னும் சொற்கள் சாசனங்களில் பயின்று வந்துள்ளன.

இதற்கு அடுத்த இரண்டு எழுத்துக்கள் 'கல' என்று எழுதப்பட்டிருக்கிறது. இதைக் கல் என்று வாசிக்கிறோம். புள்ளியிடப் படவேண்டிய எழுத்துக்கள் புள்ளியிடப்படாமலே பெரும்பாலும் எழுதப்படுகின்றன. ஆகவே இதைக் கல் என்று ஐயமில்லாமல் படிக்கலாம். கல் என்றால் மலை என்பது பொருள்.

கடைசி ஐந்து எழுத்து 'கா ஞ ச ண ம' என்றிருக்கிறது. புள்ளி வைக்க வேண்டிய எழுத்துக்களும் புள்ளி வைத்துப் படித்தால் 'காஞ்சணம்' என்று படிக்கலாம். இது தமிழ்ச் சொல் அன்று. பிராகிருத மொழிச் சொல்லாக இருக்கலாம். இதனுடைய நேரான பொருள் தெரியவில்லை. இந்த இடத்தில் இது கற்படுக்கைகளைக் குறிக்கிறது.

வெண் காஸிபன் கொடுப்பித்த கல் காஞ்சணம் என்று படிக்கிறோம்.

வெண்காசிபன் என்பவர் முனிவர்களுக்காக மலைக்குகையில் அமைத்துக் கொடுத்த கற்படுக்கை என்பது இதன் பொருள்.

15. அரிக்கமேடு பிராமி எழுத்து

வங்காளக் குடாக் கடலின் ஓரத்தில் புதுச்சேரிக்குத் தெற்கே இரண்டு கல் தூரத்தில் அரிக்கமேடு இருக்கிறது. கி.பி. முதல் நூற்றாண்டில் கிரேக்க யவன வாணிகர் இந்த இடத்தை வாணிக நிலையமாக அமைத்திருந்தனர். உரோம் நாட்டுப் பொருள்களைக் கொண்டுவந்து வைக்கவும் இந்நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்காகச் சேமித்து வைக்கவும் இந்த இடம் பயன் படுத்தப்பட்டது. இந்த வாணிகத் துறைமுகத்தைப் பற்றிச் சங்கச்செய்யுள்களில் ஒன்றும் கூறப்படவில்லை. கி.பி. முதல் நூற்றாண்டில் வாணிகத் துறையாக இருந்த இந்த இடம் பிற்காலத்தில் மறைந்து மண்மூடிப் போயிற்று. 1937இல் இந்த இடத்தில் மணிகளும் இரத்தினக் கற்களும் அவ்வப்போது கிடைத்தன. ஆகவே இந்த இடம் பழம்பொருள் ஆய்வுக்குரிய இடம் என்று கருதப்பட்டு 1941இல் பிரெஞ்சு ஆய்வாளர் சிறு அளவில் அகழ்வாராய்ச்சி செய்தனர். பிறகு 1945இல் இந்திய அரசாங்கத்துப் பழம்பொருள் ஆராய்ச்சிக்காரர் இந்த இடத்தைப் பெரிய அளவில் ஆழ்ந்து பார்த்தனர். அதன் பலனாக, இந்த இடம் கிரேக்க யவன கப்பல் வாணிக நிலையமாக இருந்தது தெரிந்தது. பல வகையான பொருள்கள் இங்குக் கிடைத்தன. அவற்றில் உரோம் தேசத்து மட்பாண்டங்களும் சீனநாட்டுப் பீங்கான்களும் தமிழ் நாட்டு மட்பாண்டங்களும் கிடைத்தன. இந்தப் பொருள்கள் எல்லாம் முழுமையாகக் கிடைக்காமல் உடையுண்ட துண்டுகளாகக் கிடைத்தன. சில மட்பாண்ட ஓடுகளில் பிராமி எழுத்துக்கள் வரையப்பட்டிருந்தன. உடைந்துபோன ஓடுகளாகக் கிடைத்த படியால் எழுத்துக்களின் முழுவாசகம் கிடைக்கவில்லை. இரண்டோர் ஓடுகளில் முழுச்சொற்கள் கிடைத்துள்ளன. அந்தச் சொற்கள், மட்பாண்டத்துக்குரியவரின் பெயராகக் காணப் படுகின்றன. நீண்ட வாக்கியமாக இல்லை. இந்த மட்பாண்டங்களை

வனைந்து அவை ஈரமாக இருந்தபோதே எழுத்தாணி போன்ற கருவியினால் எழுத்தைக் கீரிப் பிறகு சூளையில் இட்டுக் கொளுத்தப்பட்டவை இவை என்று தெரிகின்றது.

அகல் விளக்கு

தொன்று தொட்டுத் தமிழகத்தில் அகல் விளக்கு பரவலாக உபயோகிக்கப்பட்டது. அகல் விளக்கு மண்ணினால் செய்யப் பட்டன. அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியில் கிடைத்த உடைந்து போன அகல் விளக்கு ஓட்டில் பிராமி எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ள. நற் காலமாக அந்த எழுத்துக்களின் முழு வாக்கியமும் அதில் இருக்கிறது. அந்த விளக்கின் உரிமையாளரின் பெயர் அதில் பிராமி எழுத்தினால் எழுதப்பட்டிருக்கிறது. அவ்வெழுத்துக்கள் வரி வடிவம் இது:



மு தி கு ழு ர அ ன் அ க ல்

என்பது இதன் வாசகம்.[1] முதுகுழூரன் என்பவருடைய அகல் என்பது இதன் பொருள். முதுகுழூரில் இருந்து வந்து இங்கு வசித் திருந்தவர் முதுகுழூரான் என்று கூறப்பட்டார். அவருடைய அகல் இது. முதுகுழூரான் என்பதை 'முதிகுழுரஅன்' என்று எழுதப்பட்டிருக் கிறது. அகல் என்பது அகல் விளக்கு.

சட்டி

இன்னொரு பிராமி எழுத்து வாசகம் உடைந்து போன சட்டி ஓட்டில் காணப்படுகிறது. இந்தப் பிராமி எழுத்துக்களின் வரி வடிவம் இது:[1]

---

[1] Fig. 47. No.15.P 113. Plate XLI No.15. Arikamedu. An Indo-Roman Trading Station on the East coast of india by R.E.M. Wheeler. with Contributions by A. Ghosh and Krishna Devar PP. 17-124. Ancient India. No. 2. July 1946.



சா த் த ன் ஆ வி ஈ நி சொ தி ஈ ச ன ஆ தி தை வ னி க என்பது இதன் வாசகம்.

ஆர்க்கியாலஜி இலாகாவைச் சேர்ந்தவர். இதைச் 'சாத்தன் ஆவிஇன் கோதி ஈசன் ஆதிதைவன்' என்று படித்துள்ளனர். கடைசியில் உள்ள 'க' இந்த வாசகத்தின் இறுதியை (முற்றுப் புள்ளியை)க் குறிக்கிறது என்று கூறுகிறார். கோதி என்பது கோத்திரம் என்னும் வடமொழிச் சொல் என்று கூறுகிறார். சாத்தன் ஆலியி னுடைய உறவினன் ஈசன் ஆதிதைபன் என்பது இதன் கருத்து என்று கூறியுள்ளார்.[2]

இந்த வாசகத்தினுடைய சரியான அமைப்பு 'சாத்தன் ஆவிஈ நிதோதி ஈசன் ஆதி தைவ னிக' என்பது. இது சாத்தன் ஆவி, நிதோதி ஈசன் ஆதிதைவ னிக(ன்) என்னும் மூன்று பேர்களைக் குறிக்கிறது என்று தோன்றுகிறது. அல்லது, மூன்று பெயரும் ஒரே ஆளைக் குறிக்கிறது என்றும் கொள்ளலாம். ஆவி என்பதுஅக்கால்த்து முறைப்படி இகர ஈற்றுச் சொல்லின் இறுதியில் சேர்க்கிற இகரம் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. இது 'ஆவிய்' என்று எழுதப்பட வேண்டும். இதில் 'ஆவிஈ' என்று எழுதப்பட்டிருக்கிறது.

அலகரை, உறையூர் அகழ்வாரய்ச்சியிலும் பிராமி எழுத்துப் பாளை ஓடுகள் காணப்பட்டன. ஆனால் அவை துண்டு துண்டு களாக இருப்பதனால் வாசகம் சரியாகத் தெரியவில்லை.

---

[1] P. 112, No9, Plate XLI, No.9, Ancient India, No2, July 1946.

[2] P.113.No.9. Ancient India. No.2

16. திருப்பரங்குன்றத்துப் பிராமி எழுத்து

மதுரை நகரத்துக்கு அருகிலே பேர்போன திருப்பரங் குன்றமலையும் அதன் அடிவாரத்தில் திருப்பரங்குன்றம் என்னும் ஊரும் இ5ருக்கின்றன. திருப்பரங்குன்றில் தொன்றுதொட்டு முருகக்கடவுள் எழுந்தருளியிக்கிறார். நக்கீரனார் தம்முடைய திருமுகாற்றுப்படையில் திருப்பரங்குன்றத்தையும் பாடியுள்ளார். அவர் காலத்தில், கூடலுக்கு (மதுரைக்கு) மேற்கே திருப்பரங்குன்றம் இருந்தது என்று (மாடமலி மறுகில் கூடல் குடவயின்) அவர் கூறியுள்ளார்.

கடைச்சங்கப் புலவர்களில் சிலர் திருப்பரங்குன்றத்து முருகப்பெருமானைப் பரிபாடலில் பாடியுள்ளனர். பரிபாடல் 8ஆம் பாட்டை நல்லந்துவனாரும், 9ஆம் பாட்டைக் குன்றம்பூதனாரும், 17ஆம் பாட்டை நல்வழுதியாரும், 19ஆம் பாட்டை நப் பண்ணனாரும், 21 ஆம் பாட்டை நல்லச்சுதனாரும் பரங்குன்றத்து முருகவேளினைப் பாடியுள்ளனர்.

பரங்குன்ற மலையில் பாறைகளிலும் பொடவுகளிலும் சைன சமய தீர்த்தங்கரர்களின் திருமேனிகளும் அருகில் வட்டெழுத்து வாசகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இடைக்கால நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்டவை. மலை உச்சியில் கடைச்சங்க காலத்தில் பௌத்த-சமண சமயத் துறவிகள் தங்கியிருந்த இரண்டு குகைகளும் அவற்றில் கற்படுக்கைகளும் பிராமிக் கல்வெட் டெழுத்துக்களும் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றி இங்குக் கூறுவோம்.

முதலாவது குகை: இது திருப்பரங்குன்றம் இரயில் நிலையத்துக்கு அருகே சாவடி என்னும் கிராமத்துக்கு அருகில் இருக்கிறது. மலைமேல் இயற்கையாக அமைந்துள்ள இந்தக் குகைக்குப் போவது கடினம். குகைக்கு ஏறிச் செல்வதற்குக் கரடு முரடான துளைகள் பாறையில் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றின்

வழியாகக் கால் வைத்து ஏறிச் சென்றால் மேலே வடக்குத் தெற்காக அமைந்துள்ள குகையைக் காணலாம். இந்தக் குகை 56அடி நீளமும் 20அடி அகலமும் உள்ளது. குகை வாயிலின் மேலேயுள்ள பாறையிலிருந்து மழைநீர் குகைக்குள்ளே விழாமல் பக்கங்களில் வழிந்து போகும்படி குழைவான தூம்புகள் செதுக்கப்பட்டுள்ளன. குகைக்கு அருகில் குளிர்ந்த நீருள்ள சுனை இருக்கிறது.

குகையின் உள்ளே பாறைகளைச் சமப்படுத்தி வழவழப்பாக்கி அமைத்துள்ள கற்படுக்கைகள் இருக்கின்றன. கற்படுக்கைகளின் தலையணைப் பக்கமாகப் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. குகைக்குள்ளே இரண்டு திண்ணைகள் அமைக்கப்பட் டுள்ளன. ஒரு திண்ணை ஐந்து அடி நீளமும் ஒன்றே முக்காலடி உயரமும் உள்ளது. இன்னொரு திண்ணை ஆறு அடி நீளமும் மூன்று அடி உயரமும் உள்ளது.

இந்தக் குகையின் வடக்குக் பக்கத்தில் இன்னொரு சிறு குகையும் அதற்குள் இரண்டு கற்படுக்கைகளும் உள்ளன இக் குகையில் கல்வெட்டெழுத்து இல்லை.

பெரிய குகையில் கற்படுக்கைமேல் எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்தைப் பார்ப்போம். இவை 1908ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டன. 1908ஆம் ஆண்டின் 333ஆம் எண்ணுள்ள சாசனத் தொகுப்பாக இவ்வெழுத்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது.[1] இந்த எழுத்துக்கள் ஒரே வரியாக முப்பத்தொரு எழுத்துக்களைக் கொண்டுள்ளன. இந்த வரியின் பதினெட்டு எழுத்துக்கள் பெரியவையாகவும் அடுத்த பதின்மூன்று எழுத்துக்கள் சற்றுச் சிறியவையாகவும் இருக்கின்றன. பெரிய எழுத்தின் இறுதியில் சிறிய எழுத்தின் தொடக்கத்திலும் இடையிலே செங்குத்தான சிறு கோடு காணப்படுகிறது. எனவே இந்தக் கல்வெட்டெழுத்து இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. இந்தக் கல்வெட்டெழுத்தின் வரிவடிவம் இது:

---

[1] Epi. Coll. A.R.No. 333 of 1908.



இந்த எழுத்துக்களை அறிஞர்கள் எப்படிப் படித்திருக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். திரு. கிருட்டிண சாத்திரி இவ்வாறு கூறுகிறார்:

1. எரு கோ(ட்டூர) இ ஜம் கு டு ம (பிக) னா போ லா வ ய னா.

2. ச(ஏ) ய தா ஆ ய சா ய னா னை டு ச(சா) த னா

எருகோட்டூர என்பது எருகோட்டூர். குடும்பிகன் என்பது இல்வாழ்வோனைச் சுட்டுகிறது.[1]

திரு.கே.வி. சுப்பிரமணிய அய்யர் இவ்வாறு படிக்கிறார்:

'எருகோட்டூர் ஈழ குடும்பிகன் போலாலையன் செய்தா ஆய்ச்சுடன் நெடுசாதன்'

எருகோட்டூர் என்பது ஊரின் பெயர். அகநானூற்றில் தாயங்கண்ணனார் செய்யுளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவருடைய ஊர் எருக்கோட்டூர். இழம் என்பது ஈழம். செய்தா என்பது செய்தான் என்னுஞ் சொல். ஈழத்தைச் சேர்ந்தவனுடைய எருக்கோட்டூரில் வசித்தவனுமான போலாலையன் செய்வித்தான். ஆய்ச்யன் நெடுஞ்சாத்தன் செய்தான் என்பது பொருள்.[2]

திரு.சி. நாராயணராவ் இந்த எழுத்துக்களை வழக்கம் போலப் பிராகிருதமாகப் படித்து அதைச் சமற்கிருதமாக மாற்றுகிறார்:

1. 'எருகோடூர ஈழ குடும்பிகனா போலாலையனா சேய்தா' (பிராகிருதம்)

---

[1] Proceedings and Transactions of the Ist All India Oriental Conference.

[2] P. 288. Proceedings and Transactions of the Third All India Oriental Conference, Madras, 1924.

ஆய - சயனா நெடுசாதனா.

2. எருகோடீர ஸிம்ஹள - குடும்பி - கானாம் போலால் - ஆர்யானாம் சய்த்ய - கய்யானாம் - நிஷ்ட்டா சைத்யானாம்.

(சமற்கிருதம்)

இலங்கையில் வசிப்பவரும் எருக்காட்டூர் வாசிகளுமான போல நகரத்தார் சைத்தியங்களை நிறுவினார்கள் என்பது பொருள்.[1]

திரு. ஐ. மகாதேவன் இவ்வாறு கூறுகிறார்:

'எரு காட்டூர் ஈழ குடும்பிகன் பொலாலையன் செய்தா ஆய் சயன் நெடு. சாதன்'

இலங்கையிலிருந்து வந்த எருகாட்டூர் பொலாலையன் இதைக் கொடுத்தான். ஆய், சயன், நெடுசாதன் ஆகிய இவர்கள் (இதைச் செய்தார்கள்).[2]

திரு.டி.வி. மகாலிங்கம் படித்து இவ்வாறு பொருள் கூறுகிறார்:

'எருகோட்டூர் ஈழ - குடும்பிகன் போலாலையன் செய்த ஆய் - சயன - நெடு - சாத ன(ம்)'

இதன் கடைச் சொல்லாகிய சாதன என்பது தியானம் என்னும் பொருள் உள்ள சமற்கிருதச் சொல் நெடு என்பது நீண்ட, ஆழ்ந்த என்னும் பொருள் உள்ளது. நெடு சாதன என்பதன் பொருள் ஆழ்ந்த தியானம் என்பது. சயன என்பது படுக்கை. 'ஆய்வை' என்பது உறங்கும் இடம் என்று பிங்கலந்தை நிகண்டு கூறுகிறது. 'ஆய்' என்னுஞ் சொல் தாலாட்டுப் பாட்டிலும் வருகிறது. 'லொல் லொல் லொல் லொல் ஆயி' என்னும் தாலாட்டுப் பாட்டில் 'ஆயி' என்பது

[1] The Brahmi Inscription ofSouth India. N.I.A.Vol. I

[2] P. 69. Seminar on Inscriptions. 1966.

தூங்கு என்னும் பொருள் கொண்டது. எனவே, 'ஆய் - சயன - நெடு - சாசன (ம்)' என்பதன் பொருள், 'தூங்குவதற்கும் ஆழ்ந்த தியானம் செய்தவற்கும் அமைக்கப்பட்ட படுக்கை' என்பது. 'இலங்கை' (ஈழம்)யிலிருந்து வந்து எருகோட்டூரில் வசிக்கிற குடும்பிகனான போலாலையன் உறங்குவதற்கும் ஆழ்ந்த தியானம் செய்வதற்கும் அமைத்தான் என்பது இதன் கருத்து. அக நானூற்றில் 149. 319. 357

ஆம் செய்யுள்களைப் பாடிய தாயங்கண்ணனார் எருக் கோட்டூரைச் சேர்ந்தவர்.[1]

இந்த எழுத்துக்களை நாம் படித்துப் பொருள் காண்போம். இந்தக் கல்வெட்டெழுத்துக்கள் பெரிய எழுத்தினாலும் சிறிய எழுத்தினாலும் எழுதப்பட்டு இடையே செங்குத்தான கோடு உள்ளதென்று முன்னமே கூறினோம். இந்த வாக்கியத்தை எழுதியவர் சரியாகத் தமிழ் படிக்காதவர் என்பதும் பேச்சுத் தமிழில் இதை எழுதியுள்ளார் என்பதும் இந்த வாக்கிய அமைப்பினால் அறிகிறோம்.

எரு கா டுர் இழ குடும்பிகன் பொலாலையன் (பெரிய எழுத்து)

செய்தா ஆய்சயன் நெடு சாதன் (சிறிய எழுத்து)

பெரிய எழுத்து தனி வாக்கியம். சிறிய எழுத்து தனி வாக்கியம் என்று தெரிகிறது. எருகாட்டூர் ஈழக்குடும்பிகன் (வாணிகன்) பொலாலையன் இந்தக் குகையை முனிவர்களுக்குத் தானஞ் செய்தான். குகையின் கற்படுக்கைகளைச் செய்து அமைத்தவன் ஆய்ச்சயன் நெடுஞ்சாத்தன் என்பது இவ் வாக்கியங்களின் கருத்து.

விளக்கம்: இதை எழுதியவர் நன்றாகப் படிக்காதவர் என்றும் பேச்சுத் தமிழில் எழுதியுள்ளார் என்றும் கூறினோம். எருகாட்டூர் என்று எழுத வேண்டியதை எருகாடூர் என்று எழுதியுள்ளார். ட்டூ என்று டகரம் இரட்டிக்கவேண்டும். இரட்டிக்காமல் 'தவறாக எழுதியுள்ளார். வேறு இடத்திலும் ட்டு என்பது டு என்று எழுதப்பட்டிருக்கிறது. டு என்பதை ட்டு என்று அக்காலத்தில்

---

[1] P.254-256, Early South Indian Palaeogarphy.

ஒப்பித்தார்கள் போலும். **ஈழ** என்பது **இழ** என்று தவறாக எழுதப்பட்டுள்ளது. சங்க காலத்திலும் தமிழ்நாட்டவர் ஈழ நாட்டுக்கும் போய் வாணிகம் செய்து வந்தனர். அவர்கள் குடும்பிகர் என்று கூறப்பட்டனர். ஈழத்துப் பூதன்தேவனார் பாண்டி நாட்டி லிருந்து ஈழஞ் சென்றவர். அவர் பாடியவை சங்கச் செய்யுள்களில் தொகுக்கப்பட்டுள்ளன. எருகாட்டூர் ஈழ குடும்பிகன் பொலாலையன் என்பவன் (குகையையும் கற்படுக்கைகளையும் திண்ணைகளையும் செய்வித்தான்) என்று வாக்கியம் முடியவேண்டும். செய்வித்தான் என்னும் வினைச் சொல் விடுபட்டுள்ளது.

இரண்டாவது வாக்கியத்தில் **செய்தா** என்றிருக்கிறது. இது செய்தான் என்று இருக்கவேண்டும். **ன்** விடுபட்டுள்ளது. ஆய் சயன் நெடு சாதன் என்பது செய்தவனுடைய பெயர். இப்பெயரில் **நெடு சாதன்** என்பது தவறாக எழுதப்பட்டுள்ளது. **சாதன்** என்பதில் **த்த** என்னும் சகரம் இரட்டித்து சாத்தன் என்று எழுதப்பட வேண்டும். சாத்தன் என்னும் பெயர் சங்க காலத்தில் பரவலாக வழங்கி வந்தது. நெடுஞ்சாத்தன் என்னும் பெயரும் வழங்கி வந்தது.

இந்தக் குகையிலேயே வேறு இடத்தில் தனியே பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பொருள் தெரியவில்லை. எதையோ எழுதத் தொடங்கி முற்றுப்பெறாமல் விடுபட்ட எழுத்துக்கள் என்று தோன்றுகின்றன. அவை:



1. (கய)[1]
2. (மாரயவ)[2]

திருப்பரங்குன்றத்தில் இன்னோர் இடத்தில் உள்ள குகையில் எழுதப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டெழுத்தைப் பார்ப்போம் மலையின் உச்சியில் உள்ள இந்தக் குகைக்கு ஏறிச் செல்வது மிகக் கடினமானது. இந்தக் குகையில் எழுதப்பட்டுள்ள பிராமிவாசகம் பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்டது. இஃது 1951 - 52ஆம் ஆண்டின் 142வது எண்ணுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த எழுத்துக்கள் தெளிவாகத் தெரிகின்றன. இதன் வரி வடிவம் இது



'அந்துதன் கொடுபிதவன்' என்பது இதன் வாக்கியம். திரு. டி. வி. மகாலிங்கமும், ஐ. மகாதேவனும் இதைச் சரியாகவே படித் துள்ளனர்.

'கொடுபிதவன்' என்பதற்கு விளக்கம் கூறுவோம். ப் என்னும் பகர ஒற்றெழுத்தும், த் என்னும் தகர ஒற்றெழுத்தும் இதில் விடுபட் டுள்ளன. ஒற்றெழுத்துக்களைச் சேர்த்துப் படித்தால் 'கொடுப் பித்தவன்' என்றாகும். சங்க காலத்துப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக் களில் பல ஒற்றெழுத்துக்கள் விடுபட்டுள்ளதைக் காண்கிறோம். இது கற்றச்சரின் தவறாக இருக்கலாம். அல்லது எழுதியவரின் தவறாகவும் இருக்கலாம். பிராமிக் கல்வெட்டு வாசகங்களை எழுதியவர் பெரும்பாலோர் நன்றாகக் கல்வி கற்றவர் அல்லர் என்பது அவர்கள் எழுதியுள்ள வாக்கியங்களிலிருந்து அறிகிறோம்.

இந்தக் குகையில் கற்படுக்கைகளை அமைத்துக் கொடுத்த அந்துவன் என்பவரைப் பற்றிக் கூறவேண்டும். கடைச்சங்க காலத்தில்

[1] No. 140 of 1951 - 52
[2] No. 141 of 1951 -52.

அந்துவன் என்னும் பெயருள்ளவர் சிலர் இருந்தனர். அவர்களுடைய பெயரைச் சங்க இலக்கியத்தில் காண்கிறோம். அந்துவன் கீரன், அந்துவன் சாத்தன், வேண்மாள் அந்துவஞ்செள்ளை, நல்லந்துவன் என்னும் பெயர்களைப் பார்க்கிறோம். அந்துவன் கீரன் என்னும் அரசனைக் கல்லாடனார் புறம் 359இல் பாடியுள்ளார். அந்துவன் சாத்தனை ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் தன்னுடைய வஞ்சினக்காஞ்சியில் [1] குறிப்பிடுகிறார். செல்வக்கடுங்கோ வாழி யாதனுடைய தந்தையின் பெயர் அந்துவன் பொறையன்.

நல்லந்துவனார் கடைச்சங்க காலத்தில் (கி.பி 2ஆம் நூற்றாண்டில்) இருந்த பெரும் புலவர். இவர் பாடின செய்யுள்கள் சங்க இலக்கியங்களில் [2] தொகுக்கப்பட்டுள்ளன. கலித் தொகை யைத் தொகுத்தவரும் நல்லந்துவனாரே. 33 செய்யுள்களையுடைய நெற்தற்கலிச் செய்யுள்களை இயற்றினவரும் இவரே. இவர் பாடின பரிபாட ல் 8ஆம் செய்யுளில் 'பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்' என்று கூறியுள்ளார். [3] நல்லந்துவனாரின் சம காலத்துப் புலவரான மருதன் இளநாகனார் தம்முடைய செய்யுளில் நல்லந்துவனார் பரங்குன்றத்து முருகனைப் பாடினதைக் குறிப்பிடுகிறார். [4]

திருப்பரங்குன்றத்துப் பிராமிக் கல்வெட்டில் கூறப்படுகிற அந்துவன் இந்த நல்லந்துவனாராக இருக்கக்கூடும். அல்லது அவருடைய முன்னோரான ஓர் அந்துவனாக இருக்கக்கூடும். சங்ககாலத்தில் மக்களிடையே மதக் காழ்ப்பும் மதப் பூசல்களும் இல்லை. சங்க காலத்தில் சமயப் பகைமை மிகமிகச் சொற்பம். சங்க காலத்துக்குப் பிறகுதான் மதப்பூசல்கள் தமிழகத்தில் தாண்டவம் ஆடின. சங்க காலத்தில் எல்லாச் சமயத்தாரும் ஒன்றுபட்டு

---

[1] புறநா 71.

[2] அகநா. 43. நற்.88, பரிபா 6, 8, 11

[3] பரிபா. 8: 127-130.

[4] 'சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேள் சினமிகு
முருகன் தண் பரங்குன்றத்து,
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை'
(அகநா. 59)

வாழ்ந்தனர். நல்லந்துவனாரே பரங்குன்றத்துக் குகையைத் தானஞ் செய்தவராக இருக்கலாம்.

17. புகளூர் பிராமி எழுத்து

திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூர் தாலுகாவில் புகளூர் இருக்கிறது. திருச்சி - ஈரோடு இருப்புப் பாதையில் புகளூர் ஒரு நிலையமாகவும் இருக்கிறது. புகளூரின் பழைய பெயர் புகழியூர். இவ்வூருக்கு இரண்டு கல் தொலைவில் வேலாயுத பாளையம் என்னும் கிராமமும் அதன் அருகில் ஆறு நாட்டார் மலை என்னும் பெயருள்ள தாழ்வான குன்றுகளும் உள்ளன. இந்தக் குன்றுகளில் இயற்கையாக அமைந்துள்ள குகைகளும் குகைக்குள்ளே தரையில் கற்படுக்கைகளும் கற்படுக்கைகளின் ஓரத்தில் பிராமி எழுத்துக் களும் காணப்படுகின்றன. இவை கடைச்சங்க காலத்தவை என்பதில் ஐயமில்லை.

ஆறு நாட்டார் மலையிலுள்ள பிராமி எழுத்துக் கல் வெட்டுக் களைப் பார்ப்போம். முதலில், சாசன எழுத்து (எபிகிராபி) இலா காவின் 1927-28 ஆம் ஆண்டின் 343 ஆம் எண்ணாகப்[1] பதிவு செய் துள்ள கல்வெட்டைப் பார்ப்போம். இந்த எழுத்துக்கள் இரண்டு வரிசையாக எழுதப்பட்டுள்ளன. முதல் வரியில் பத்து எழுத்துக் களும் இரண்டாம் வரியில் ஒன்பது எழுத்துக்களும் உள்ளன. இந்த எழுத்துக்களின் வரி வடிவம் இவை.



பாறையில் பொளவுகளும் புரைசல்களும் இருப்பதனால் சில எழுத்துக்கள் உருத்தெரியாமல் இருக்கின்றன. ஆனாலும் கூர்ந்து பார்த்து இவற்றைப் படிக்க இயலும். முதல் வரியில் கருவூர் பொன் வாணிகன் என்றும் இரண்டாம் வரியில் முதல் மூன்று எழுத்துக்களை

[1] Madras Epigraphic Collections. 343 of 1927 - 28.

நீக்கி மற்ற எழுத்துக்களை **அதிட்டானம்** என்று படிக்கலாம். இரண்டாவது வரியில் முதல் எழுத்து பொளிந்து சரியான உருவம் தெரியாமல் இருக்கிறது. அடுத்துள்ள இரண்டு எழுத்துக்கள் த்தி என்பவை.

திரு.டி.வி. மகாலிங்கமும்[1] திரு. ஐ. மகாதேவனும்[2] இவற்றைப் படித்துள்ளனர். திரு.டி.வி. மகாலிங்கம் இரண்டாம் வரியில் முதல் நான்கு எழுத்துக்களை **நேர்த்தி** என்று படித்து, நேர்த்தி என்றால் நேர்ந்துகொள்ளுதல் (பிரார்த்தனை செய்து கொள்ளுதல்) என்று விளக்கங் கூறினார். கருவூர் பொன் வாணிகன் நேர்ந்துகொண்டு அமைத்த அதிஷ்டானம் என்று பொருள் கூறுகிறார்.

திரு. ஐ.மகாதேவன், இரண்டாவது வரியின் முதல் மூன்று எழுத்தை **நத்தி** என்று படித்துள்ளார். படித்து 'கருவூர் பொன் வாணிகன் நந்தி அதிட்டானம்' என்று வாக்கியத்தை அமைக்கிறார். பிறகு, வாணிகன்+நத்தி என்பதை வாணிகன்+அத்தி என்று பிரித்து கரூவூர் பொன் வாணிகன் அத்தியினுடைய அதிட்டானம் (இடம்) என்று பொருள் கூறியுள்ளார். கல்வெட்டில் வாணிகன் என்றும் நத்தி (?) என்றும் சொற்கள் தனித்தனியே பிரிந்துள்ளன. பிரிந்துள்ள சொற்களை இவர் பிரித்துக் காட்டுவது பொருந்தவில்லை. இவர் தவறாகப் படித்துள்ள 'நந்தி' என்னும் பெயர் புதுமையாக இருப்பதனால் நத்தியை அத்தியாக்க எண்ணி, வாணிகன்+நத்தி= வாணிகன் அத்தி என்று எங்கும் இல்லாத இலக்கணத்தைக் கூறி, நந்தியை அத்தி ஆக்குகிறார்.

மகாலிங்கமும் மகாதேவனும் இரண்டாம் வரியின் முதல் சொல்லை நேர்த்தி என்றும் நத்தி என்றும் படித்தார்கள். காரணம் முதல் எழுத்து பொளிந்துபோய்ச் சரியாக உருத்தெரியாமலிருப்பதுதான். இரண்டு வாசகமும் பொருத்தமாகத் தோன்றவில்லை பொளிந்துள்ள முதல் எழுத்தைக் கூர்ந்து நோக்கினால் அது பொ என்னும் எழுத்து

---

[1] Early South Indian Palaeography, 1967. P. 281 -282.

[2] No. 66. Seminar on inscriptions. 1966. P. 67.

என்று தோன்றுகிறது. அடுத்துள்ள இரண்டு எழுத்துக்களையும் சேர்த்துப் படித்தால் **பொத்தி** என்றாகிறது. ஆகவே கருவூர் பொன் வாணிகனுடைய பெயர் பொத்தி என்பது தெரிகிறது. இந்த வாக்கியத்தைக் 'கருவூர் பொன் வாணிகன் பொத்தி அதிட்டானம்' என்று படிப்பது சரி என்று தோன்றுகிறது.

விளக்கம்: பொத்தன், பொத்தி என்னும் பெயர்கள் சங்க காலத்தில் வழங்கி வந்தன. பொத்த குட்டன் என்னும் தமிழன் இலங்கையிலே செல்வாக்குள்ளவனாக இருந்தான். அவன் தான் விரும்பிய வர்களை இலங்கையின் அரசராகச் சிம்மாசனம் ஏற்றினான் என்று குலவம்சம் என்னும் நூல் கூறுகிறது. சங்க காலத்தில் பொத்தியார் என்று புலவர் ஒருவர் இருந்தார். அவ்ருடைய செய்யுள்கள் புறநானூற்றில் (புறநா. 217, 220, 221, 222, 223) தொகுப் பட்டுள்ளன. எனவே, இந்தக் கல்வெட்டின் இரண்டாவது வரியில் உள்ள முதல் மூன்று எழுத்தையும் பொத்தி என்றுபடித்துப் பொன் வாணிகனுடைய பெயர் பொத்தி என்று தீர்மானிக்கலாம்.

புகழூர்ப் பிராமி எழுத்துக் கல்வெட்டு இன்னொன்றைப் பார்ப்போம். இது சாசன எழுத்து இலாகவின் 1927-28ஆம் ஆண்டுத் தொகுப்பில் 346ஆம் எண்ணுள்ளது.[1] இதில் ஒரே வரியில் இருபத் திரண்டு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள. கல்லில் புரைசல்களும் புள்ளிகளும் கலந்திருப்பதனால் சில எழுத்துக்களின் சரியான வடிவத்தைக் கண்டறிவது கடினமாக இருக்கிறது. ஆனாலும் படிக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனாலும் இந்த எழுத்துக்களின் வரிவடிம் இது. (இதில் புள்ளியிட்டுக் காட்டப்பட்டிருப்பவை பாறையில் உள்ள புரைசல்கள்)



ந ள ளி வ ஊா ப பி ட ந தை மக ன கீ ரன கொ ற ற ன

[1] Madras Epigraphy Collection, 346 of 1927-28.

இந்த எழுத்துக்களுக்குப் புள்ளியிட்டுப் படித்தல் இவ்வாறு அமைகிறது:

'ந ள் ளி வ் ஊர் ப் பிட ந் தை ம க ன் கீ ர ன் கொ ற் ற ன்'

திரு டி.வி. மகாலிங்கம் இதை இவ்வாறு படித்துள்ளார்:2

'நாளாளப ஊர் பிடந்தை மகன் கீரன் கொற்றன்'. இவ்வாறு படித்த பிறகு இவர் 'பிடந்தை' என்பதற்கு விளக்கங் கூறுகிறார்: ஆதன்+தந்தை= ஆந்தை என்றாவது போலப் பிடன்+தந்தை=பிடந்தை என்றாயிற்று. பிடன்=படாரன், பட்டாரன், தந்தை=பெரியவன், மேலானவன், உயர்ந்தவன், புனிதமானவன்.

முதல் ஆறு எழுத்துக்களை 'நளாளப ஊர்' என்று இவர் படித்திருப்பது தவறு என்று தோன்றுகிறது. பிடந்தை என்பதை பிடன் தந்தை என்று பிரிப்பதும் தவறு என்று தோன்றுகிறது. பிடந்தை என்பது ஒரே சொல். அஃது ஓர் ஆளைக் குறிக்கிறது. பிடன் என்பதற்கும் தந்தை என்பதற்கும் இவர் கூறுகிற பொருள்கள் பொருத்தமாகத் தோன்றவில்லை. 'மகன் கீரன் கொற்றன்' என்று மற்ற எழுத்துக்களைப் படித்திருப்பது முழுவதும் சரி.

திரு. ஐ. மகாதேவன் இவ்வாறு படித்துள்ளார்:[3]

'நல்லிய் ஊர்அ பிடந்தை மகள் கீரன் கொற்ற....'
நல்லியூர் பிடந்தையின் மகளான கீரன், கொற்ற(ன்)'

முதல் ஆறு எழுத்துக்களை இவர் 'நல்லிய் ஊரா' என்று படித்திருப்பது தவறு என்று தோன்றுகிறது. பிராமி எழுத்தில் லகரத்துக்கும் ளகரத்துக்கும் சிறு வேற்றுமைதான் உண்டு. லகரத்தின் வலப் பக்கத்தின் மத்தியில் வளைந்த கோடு இட்டால் அது

2. Early south Indian Palaeography, 1967. P. 283-84.

3. No, 58. P. 66. Seminar on Inscriptions 1966. Historical Tamil Brahmi Inscriptions. Iravadham Mahadevan. Paper read at the Tamil Conference Seminar held at Kulalumpur, 1966.

ளகரமாகிறது. கோடு இடாவிட்டால் லகரமாகிறது. இந்தச் சாசன எழுத்தின் நிழற்படத்தை உற்று நோக்கினால் ளகர எழுத்தாகத் தோன்றுகிறது. ஆகவே நள்ளி ஊர் என்பதே சரியாகும். 'பிடந்தை மகள்' என்று இவர் படிப்பது தவறு. எழுத்தில் 'பிடந்தை மகன்' என்றுதான் இருக்கிறது. மகள் என்று தவறாகப் படித்த இவர், மகள் என்பதற்கு மக்கள் என்று பொருள் கூறுகிறார். கீரன் கொற்றன் என்னும் ஒரே பெயரைக் கீரன் என்றும் கொற்றன் என்றும் இரண்டு பெயர்களாகக் கூறுகிறார்.

இந்த எழுத்துக்களை நாம் படித்துப் பொருள் காண்போம்:

நள்ளிவ் ஊர்ப் பிடந்தை மகன் கீரன் கொற்றன்

என்பது இதன் வாசகம். நள்ளி ஊரில் வாழ்ந்த பிடந்தை என்பவருடைய மகனான கீரன் கொற்றன் (என்பவர் கற்படுக்கையை அமைத்துக் கொடுத்தார்) என்பது இதன் பொருள்.

விளக்கம்: நள்ளியூர் என்று எழுத வேண்டிய சொல்லை வகர ஒற்றுச் சேர்த்து எழுதியிருக்கிறது. இஃது எழுதினவரின் பிழையாகும். நள்ளி என்பவர் பெயரால் நள்ளியூர் இருந்தது என்பது தெரிகிறது. நள்ளி என்னும் பெயருள்ள கடையெழு வள்ளல்களில் ஒருவர் கூறப்படுகிறார். 'நளிமலை நாடன் நள்ளி'[1] 'கழல்தொடித் தடக்கைக் கலிமான் நள்ளி'[2] 'திண்தேர் நள்ளி'[3] 'வல்வில் இளையர் பெருமகன் நள்ளி'[4] 'கொள்ளார் ஓட்டிய நள்ளி'[5] கண்டிரம் என்னும் ஊரின் தலைவனான கண்டீரக்கோப் பெருநள்ளியைச் சங்கச் செய்யுள் கூறுகிறது. நள்ளியூரை இந்தப் பிராமி எழுத்துக் கூறுகிற படியால் நள்ளி என்பவர் பெயரால் நள்ளியூர் ஒன்று இருந்தது என்பதை யறிகிறோம்.

---

[1] சிறுபாண். 107

[2] அகநா. 238: 14.

[3] குறுந். 210: 1.

[4] அகநா. 152: 15.

[5] புறநா. 158: 16.

பிடந்தை என்பது ஒருவன் பெயர். சங்கச் செய்யுள்களில் பிட்டங்கொற்றன் கூறப்படுகிறான். இவன் வானவன் (சேரனுடைய) மறவன் (சேனைத்தலைவன்) என்று கூறப்படுகிறான்.[1] பிட்டங்கொற்றனைப் **'பிட்டன்'** என்றும் கூறுவர்[2]. அவனைக் **கொற்றன்** என்றும் கூறுவர்.[3] பிட்டன் என்றும் கொற்றன் என்றும் கூறப்பட்ட பிட்டங்கொற்றனுக்கு எந்தை என்னும் சிறப்புப் பெயரும் இருந்தது. பிட்டங்கொற்றனைப் பாடிய காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் புறநானூறு 171இல் பாடியுள்ளார். அதன் அடிக்குறிப்பு 'பிட்டங்கொற்றனைப் பாடியது' என்று கூறுகிறது. அச் செய்யுளில் அவர் அவனைக் **கொற்றன்**(அடி7) என்றும் **எந்தை** (அடி12) என்றும் கூறுகிறார். ஆகவே அவனுக்குப் **பிட்டெந்தை** என்னும் பெயர் இருந்தது தெரிகிறது.

இந்தப் பிராமி எழுத்துக் கல்வெட்டில் **பிடந்தை** என்பவன். கூறப்படுகிறான். **பிடந்தை** என்பது **பிட்டெந்தை** என்பதன் திரிபு. நள்ளியூர்ப் பிடந்தை, சங்கச் செய்யுள்களில் கூறப்பட்ட பிட்டெந்தையாக இருக்கலாம்.

கீரன் கொற்றன் என்பது ஒரே ஆளின் பெயர். இவன் பிடந்தையின் மகன்.

நள்ளியூரில் இருந்த பிடந்தை (பிட்டனெந்தையின்) மகனான கீரன் கொற்றன் இந்தக் கற்படுக்கைகள்ளச் செய்து கொடுத்தான் என்பது இக் கல்வெட்டின் பொருள்.

மேலே கூறப்பட்ட கீரன் கொற்றனுடைய தங்கையும் இந்தக் குகையில் கற்படுக்கையை யமைத்துத் தானம் செய்திருக்கிறார் அவருடைய பெயர் கீரன் கொற்றி என்பது. இவருடய பெயரையும் இந்தக் கல்வெட்டு கூறுகிறது. இது 1963-64ஆம் ஆண்டின் கல்வெட்டுத் தொகுப்பில் 296ஆம் எண்ணுள்ளதாகப் பதிவு

---

[1] அகநா. 143: 10-13.

[2] புறநா. 170:8, அகநா. 77: 15-16, புறநா. 172:8

[3] புறநா. 168: 17, 171:7.

செய்யப்பட்டிருக்கிறது.[1] 1927-28ஆம் ஆண்டின் 346ஆம் எண்ணுள்ள கல்வெட்டும் 1963-64ஆம் ஆண்டின் 296ஆம் எண் கல்வெட்டும் தமயன் தங்கைமாரைக் குறிக்கின்றன என்பதைச் சாசன இலாகா அலுவலகர் ஒருவரும் தெரிந்துகொள்ளவில்லை. இக் கல்வெட்டைப் படித்த திரு. ஐ. மகாதேவனும், இதை அறியவில்லை. இந்த இரண்டு கல்வெட்டுக்களும் தமயன் தங்கையரைக் காட்டுகின்றன என்பது எம் ஆராய்ச்சியினால் காணப்பட்டது. இந்தக் கல்வெட்டைப் பார்ப்போம். இந்த எழுத்தின் வரி வடிவத்தைத் திரு. ஐ. மகாதேவன் வெளியிட்டுள்ளார். இதை இவர் நேரில் கண்டு எழுதியதாகத் தோன்றுகிறது எழுதியபோது சில கோடுகளை விட்டுவிட்டார் என்று தோன்றுகிறது. இந்த எழுத்துக்களை இவர் காட்டியபடி இங்கே தருகிறோம். (இதில் மூன்றாவது எழுத்து இடப் புறமாகத் திரும்பியிருக்க வேண்டியது வலப் புறமாகத் திரும்பி இருக்கிறது.)



திரு. ஐ. மகாதேவன் அவர்கள் இந்தக் கல்வெட்டுக்களை இவ்வாறு படித்துள்ளார்.[2]

நல்லி ஊர் அ பிடன் குறும் மகள்

கீரன் நொற்றி செயிபித பளி

நல்லியூர் பிடனுடைய இளைய மகன்களான கீரனும் ஓரியும் செய்வித்த பள்ளி.

---

[1] Madras Epigraphy Collection. 296 of 1936-36.

[2] No. 59, P. 66. Seminar on Inscriptions 1966, Historical Tamil-Brahmi Inscriptions. I. Mahadevan. Paper read at the Tamil Conference Seminar held at Kulalumpur, 1966.

இவர் படித்துப் பொருள் கூறுவதில் சில தவறுகள் உள்ளதை எடுத்துக்காட்டுவோம். நல்லி ஊர் என்பது மேலே முன் சாசனத்தில் கூறப்பட்ட நள்ளியூர். நல்லி என்பது தவறு என்றும் நள்ளி என்பதே சரி என்றும் முன்னே கூறினோம். குறும்மகன் என்பதை இளைய இரண்டு மகன்கள் என்று பொருள் கூறுகிறார். இது தவறு. குறும் மகன் என்பது இரண்டு இளைய மகன்களைக் குறிக்கவில்லை. அதன் பொருள் சிறிய மகன் என்பது. கீரன் ஒற்றி என்பவை இரண்டு மகன்களின் பெயர் என்று கூறுகிறார் இஃது ஒரே ஆளின் பெயரைக் குறிக்கிறது. கீரனும் ஓரியும் என்னும் இரண்டு மகன்கள் என்று எழுதிய இவர், பிறகு கோலாலம்பூர் மாநாட்டில், கீரன் ஓரி என்பது ஒரு மகனின் பெயர் என்று கூறியுள்ளார்.

இக் கல்வெட்டின் சரியான வாசகத்தையும் கருத்தையும் கூறுவோம்:

நள்ளி ஊர் பிடன் குறும் மகள்

கீரன் கொற்றி செய்பித பளி

'நள்ளியூர் பிட்டனுடைய சிறிய மகளான கீரன் கொற்றி செய்வித்த பள்ளி' என்பது இதன் கருத்து.

விளக்கம்: நல்லி ஊர் என்றிருப்பது நள்ளி ஊர் என்றிருக்கவேண்டும். நிழற்படத்தையாவது மை யொற்றுப் படியையாவது பார்த்து இதை முடிவு செய்யவேண்டும்.

இந்த இரண்டு சாசனங்களில் நள்ளியூர் பி(ட்)டன் கூறப்படுகிறார். 'நள்ளியூர் பிடந்தையின் மகன் கீரன் கொற்றனும் மகள் கீரன் கொற்றியும் கூறப்படுகின்றனர். இந்தத் தமயனும் தங்கையும் இந்தக் குகையில் கற்படுக்கைகளை அமைத்து முனிவர்களுக்குத் தானஞ் செய்தனர்.' இவர்களுடைய உறவுமுறை இது:

நள்ளியூர்ப் பிட்டந்தை (பிட்டன் கொற்றன்)

மகன் — கீரன் கொற்றன்[1]

மகள் — கீரன் கொற்றி[2]

முன் கல்வெட்டில் நள்ளி ஊர் என்று படித்தோம். ஆகவே இதுவும் நள்ளி ஊராகத்தான் இருக்கவேண்டும். பிராமி எழுத்து **லகரத்துக்கும் ளகரத்துக்கும்** மிகச் சிறு வேறுபாடுகள் உண்டு என்பதை முன்னமே விளக்கிக் கூறினோம். **ல்லி** என்னும் எழுத்துக் களின் வலப்பக்கத்தில் தாழச் சிறு வளைவுக்கோடு விடுபட்டிருக் கிறது; அல்லது மறைந்திருக்கிறது. மையொற்றுப் படியைக் கொண்டு அறியவேண்டும்.

'ஊர்அ' என்று அடுத்த எழுத்துக்கள் உள்ளன. அ என்பது 'உடைய' அது, என்னும் பொருள் உடைய வேற்றுமையுருபு எழுத்து. ஊர்+அ என்பதை ஊர என்று படித்து, ஊரைச் சேர்ந்த, ஊரினுடைய என்று பொருள் கொள்ளலாம்.

பிடன் என்பது பிட்டன் என்பதே. டகர ஒற்று விடுபட்டிருக் கிறது. பிடன் என்பது முன் சாசனத்தில் கூறப்பட்ட பிடந்தை (பிட்டனெந்தை)யைக் குறிக்கிறது.

'குறும்மகள்' என்பது சிறு மகள் என்னும் பொருள் உள்ளது. பிட்டனுடைய மகள் என்பது பொருள். இதில் மகர ஒற்றுமிகையாக எழுதப்பட்டிருக்கிறது. குறுமகன் என்றிருக்க வேண்டும். குறுமகன் என்பதை ஐ. மகாதேவன் மகன்கள் என்று படித்திருப்பது தவறு. மகள் என்று தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. அவர் குறுமகள் என்பதை இளைய மகன் என்று படித்திருப்பதும் தவறாகும். தமிழில் குறுமகள்

---

[1] 346 of 1927-28.

[2] 296 of 1963 -64.

என்பதற்கும் குறுமகன் என்பதற்கும் பொருள் வேறுபாடு உண்டு. குறுமகள் என்றால் இளம்பெண் என்று பொருள். குறுமகன் என்பது குறுமகளின் ஆண்பாற் பெயர் அன்று. குறுமகன் என்றால் கீழ் மகன் என்று பொருள்.[1] பிராமி எழுத்தில் கூறப்படுகிற 'படன் குறுமகள்' என்பதைப் 'பிடன் குறுமகன்' என்று படித்தால் பிட்டனுடைய கீழ்மகன் என்று பொருளாகிறது. கல்வெட்டில் 'குறுமகள்' என்னும் சொல் தெளிவாகக் காணப்படுகிறது.

'குறுமகள்' என்றால் இளம் பெண். சிறு வயதுள்ள மகள் என்பது பொருள். சங்கச் செய்யுள்களில் குறுமகன் என்னுஞ் சொல்லை நெடுகக் காண்கிறோம்.[2]

இரண்டாவது வரியில் கீரன் கொற்றி என்று தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. இதைக் கீரன் ஓரி என்று மகாதேவன் படிப்பது தவறு. கீரன் கொற்றி என்பதே சரியானது. கொற்றன் என்று ஆண்மகனுக்கும் கொற்றி என்று பெண்மகளுக்கும் சங்க காலத்தில் பெயர்கள் வழங்கிவந்தன. கீரன் கொற்றி என்பவள். முன்பு கல்வெட்டில் கண்ட கீரன், கொற்றனுடைய தங்கை. இரண்டு கல்வெட்டுக்களும் அடுத்தடுத்து இருப்பதும் இதனைத் தெளிவ ாக்குகிறது.

செயிபித என்பது செய்ப்பித்த என்று இருக்கவேண்டும். செய்வித்த என்னும் பொருள் உள்ளது.

---

[1] 'குறுமகன் தன்னால்' (சிலம்பு. 15: 95), 'குறுமகனாற் கொலையுண்ண' (சிலம்பு. 29 உரைப்பட்டுமடை) 'கோவலன் தன்னைக் குறுமகன் கோளிழைப்ப' (சிலம்பு. 29, காவற்பெண்டரற்று) குறுமகன் என்பதற்கு 'கீழ்மகன்' என்று அரும்பதவுரைகாரர் கூறுகிறார்.

[2] 'ஒள்ளிழைக் குறுமகள்' (நற். 253:5). 'மேதையங் குறுமகள்' (அகநா. 7:6), 'பொலந்தொடிக் குறுமகள்' (அகநா. 219:9) வாணுதற் குறுமகள்' (அகநா. 230:5), 'பெருந்தோட்குறுமகள்' (நற் 221:11), 'மெல்லியற் குறுமகள்' (அகநா. 93:8), 'மடமிகு குறுமகள்' (நற் 319:8), 'எல்வளைக் குறுமகள்' (நற். 167:10), 'அணியியற் குறுமகள்' (நற் 184:8) முதலியன காண்க.

பளி என்பது பள்ளி என்றிருக்க வேண்டும். ளகர ஒற்று இடாமல் எழுதப்பட்டிருக்கிறது.

18 ஐயர்மலை பிராமி எழுத்துக்கள்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குழித்தலை வட்டத்தில் ஐயர்மலை என்னும் ஊரில் ஐயர்மலை இருக்கிறது. திருச்சிராப்பள்ளி - ஈரோடு இருப்புப் பாதையில் உள்ள குழித்தலை நிலையத்திலிருந்து ஆறு கல் தொலைவில் இந்த மலை இருக்கிறது. ஐவர் மலை என்னும் ஊர் இனாம் சத்திய மங்கலத்தைச் சார்ந்தது. ஐயர்மலை என்னும் பெயர் பிற்காலத்தில் அமைந்தது போலத் தோன்றுகிறது. இதன் பழைய பெயர் 'ஐவர்மலை' என்றிருக்க வேண்டும். ஏனென்றால் பழைய மலைக் குகைகள் ஐவர்மலை என்றும், பாண்டவமலை என்றும், பஞ்சபண்டவமலை என்றும் வேறு சில இடங்களில் பெயர் கூறப் படுவதை அறிகிறோம். மலையில் உள்ள குகைக் குன்றுகள் பாண்டவ ரோடு இணைத்துப் பெயர் கூறப்பட்டன. ஆகவே ஐயர்மலை என்று இப்போது கூறப்படுகிற பெயர் பழங்காலத்தில் ஐவர்மலை என்று இருந்து பிற்காலத்தில் ஐயர் மலை என்று வழங்குகிறது போலத் தோன்றுகிறது.

ஐயர்மலை என்னும் இவ்வூரின் நடுவில் இருக்கிற ஐயர்மலை மேல் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. இந்தக் கோயிலை இரத்தின கிரீசுவரர் கோயில் என்று கூறுகிறார். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்த மலைக்கு வாட்போக்கிமலை என்று பெயர் வழங்கி வந்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இருந்த திருநாவுக்கரசு சுவாமிகள் தம்முடைய தேவாரத்தில் வாட்போக்கிமலையில் எழுந்தருளியுள்ள இரத்தினகிரீசு வரரையும் சுரும்பார் குழலியம்மையையும் பாடியுள்ளார்.[1] இந்த மலைக்கு மாணிக்கமலை, இரத்தினகிரி என்னும் பெயர்களும் உண்டு.

நம்முடைய ஆராய்ச்சிக்கு உரிய பிராமி எழுத்துக் கல்வெட்டு இந்த மலையின் உச்சியில் இருக்கிறது. இந்த மலைமேல் வேறு

---

[1] அப்பர் தேவாரம்: இரண்டாம் திருமுறை - திருவாட்போக்கி தேவாரம்.

இடத்தில் மூன்று இடங்களில் கற்படுக்கைகள் உள்ளன. இவை கடைச்சங்க காலத்தில் கி.மு. முதல் நூற்றாண்டு அல்லது கி.பி முதல் நூற்றாண்டில் அமைக்கப்பட்டவை. மூன்று இடங்களில் உள்ள கற்படுக்கைகளுக்கு இவ்வூரார் 'மஞ்சனமெத்தை' என்று பெயர் கூறுகிறார்கள். முதல் மஞ்சன மெத்தை, இரண்டாம் மஞ்சன மெத்தை. இவற்றுக்கு மேலேயுள்ளதை மூன்றாம் மஞ்சன மெத்தை என்று பெயர் கூறுகிறார்கள். இந்தப் பெயர் 'மஞ்சமெத்தை' என்றிருக்க வேண்டும் மஞ்சனமெத்தை என்று கூறுவது பாமரர் பகர்ச்சி என்று தோன்றுகிறது. மஞ்சனம் என்றால், குளித்தல் நீராடுதல் என்பது பொருள்; மஞ்சன் என்பதற்கு இருக்கை, படுக்கை, உட்காரும் இடம் என்றும் பொருள். ஆகவே, கற்படுக்கை என்னும் பொருளில் மஞ்ச மெத்தை (மஞ்சம் - படுக்கை. மெத்தை - நிலை) என்று வழங்கப்பட்டுப் பிற்காலத்தில் மஞ்சன மெத்தை என்று தவறாக வழங்கப்படுகிறது என்பது தெரிகிறது. உயரத்தில் உள்ள மூன்றாவது மஞ்ச மெத்தையில் ஆறு கற்படுக்கைகளும் நம்முடைய ஆராய்ச்சிக்குரிய பிராமி எழுத்துக் கல்வெட்டும் உள்ளன. இந்தக் கல்வெட்டு அண்மையில் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த எழுத்துக்களின் வரிவடிவம் இது:[1]

ப னை து றை வெ ஸ ன அ த ட அ ன ம

இவ்வெழுத்துக்களை இவ்வாறு படிக்கலாம்.

பனைதுறை வெஸன் அதடஅனம்.

இது மூன்று சொற்கள் அடங்கிய வாக்கியம். அவை பனைதுறை வெஸன் அதடஅனம் என்பவை. இதனை விளக்குவோம்: முதல் நான்கு எழுத்துக்கள் பனைதுறை என்பவை. பனைதுறை என்பது ஓர் இடத்தின் பெயர். அடுத்த சொல்லில் கூறப்படுகிற வெஸன் என்பவர் இவ்வூரில் இருந்தவர் என்று தெரிகிறது. இரண்டாவது சொல்

---

1. 'கொங்கு' 15, 8.73, தேனடை 3. தேனீ 8, பக். 201 - 203.

'வெஸன்' என்பது. இதை வேஸன் என்றும் படிக்கலாம். வேஸன் என்பதில் ஸ என்பது வடமொழி எழுத்து.

வெஸன் அல்லது வேஸன் என்பது தமிழ்ப் பெயராகத் தோன்றவில்லை; இவர் பௌத்தராகவோ சைனராகவோ இருக்கவேண்டும் என்று தெரிகிறது. இந்தப் பெயருக்கு அடுத்துள்ள 'அதடஅனம்' என்னும் சொல்லைக் கொண்டு, இவர் இந்தக் கற்படுக்கைகளை அமைத்துக் கொடுத்தார் என்று தெரிகிறது. மூன்றாவது சொல்லாகிய 'அதட அனம்' என்பது தவறாக எழுதப்பட்டிருக்கிறது. அகரத்தை அடுத்துள்ள **தகர** எழுத்து **நிகர**மாக எழுதப்படவேண்டும். அதற்கு அடுத்த **டஅ** என்னும் எழுத்துக்களை **டா** என்று எழுதியிருக்க வேண்டும். ஆனால், அக்காலத்து வழக்கப் படி **டஆ** என்று எழுதப்பட்டுள்ளது. இதை **டா** என்று படிக்க வேண்டும் **டா** என்பதிலும் தவறு காணப்படுகிறது. இந்த எழுத்து **ட்டா** என்று எழுதப்பட வேண்டும். **ட்** என்னும் **டகர** ஒற்று விடு பட்டிருக்கிறது. தவறாக எழுதப்பட்டுள்ள இந்தச் சொல்லை அதிட்டானம் என்று திருத்திப் படிக்க வேண்டும்.

சித்தன்னவாசல் பிராமிக் கல்வெட்டிலும் இத்தச் சொல், அதிட அனம் என்று எழுதப்பட்டிருக்கிறது. (சித்தன்னவாசல் பிராமி எழுத்து காண்க.) ஆனால் புகழியூர் கல்வெட்டில் இந்தச் சொல் **அதிட்டானம்** என்று சரியாக எழுதப்பட்டிருக்கிறது. அதிட்டானம் என்பது தமிழ்ச் சொல் அன்று. அது பிராகிருத மொழியாகவோ அல்லது சமற்கிருத மொழியாவோ இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அதிட்டானம் என்பது இருக்கை நிலை என்னும் பொருள் உள்ளது போலத் தோன்றுகிறது.

பனைதுறை என்னும் ஊரினரான வெஸன் என்பவர் முனிவர்களுக்காக இந்தக் கற்படுக்கைகளை அமைத்தார் என்பது இந்தக் கல்வெட்டின் கருத்து.

***

பின்னிணைப்பு

ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான் கல்வெட்டு

தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூரிலிருந்து 16கல் தொலைவில் ஜம்பை என்னும் ஊர் உள்ளது. இவ்வூரைத் திருவண்ணாமலையிலிருந்து (30கி.மீ) சென்றடையலாம். இவ்வூர் பெண்ணையாற்றின் வடகரையிலுள்ளது. பல குன்றுகளால் சூழப்பட்டிருப்பதால் இவ்வூர் பார்ப்பதற்கு இனிய காட்சியளிக்கிறது. இவ்வூர் 'வாணக்கோப் பாடி நாட்டில்' இருந்தது எனப் பழைய கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வூரில் தான் வரலாற்றுச் சிறப்பு மிக்க அதியமான் நெடுமான் அஞ்சியின் கல்வெட்டொன்றை அண்மையில் தமிழ்நாட்டரசின் தொல்பொருள் ஆய்வுத் துறை கல்வெட்டியல் மாணவர் திரு. செல்வராஜ் கண்டுபிடித்துள்ளனர்.

இக் குன்றத்தில் ''ஆள் ஏறாப் பாறை'', ''சன்யாசி மடம்'' ''தாசி மடம்'' என்னும் பெயர்களுடைய பகுதிகள் உண்டு. தாசி மடம் என்பது இயற்கையாக அமைந்த குகைத்தளம். அதில்தான் இக் கல்வெட்டு இருக்கிறது. ஏறத்தாழ நான்கு அடி நீளமுள்ள ஒரே வரியில் எழுதப்பட்டுள்ள இக் கல்வெட்டு பின்வருமாறு:

''ஸதியபுதோ அதியந் நெடுமாஞ் அஞ்சி ஈத்த பாளி''

என்பதாகும். இவ்வெழுத்துக்கள் கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று அதனைப் படித்த தொல் பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி கூறியுள்ளார்.

அண்மையில் கண்டுபிடிக்கப்பெற்ற இக் கல்வெட்டினைப் பற்றித் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள், தினமணி 12-10-81 இதழில் எழுதிய கட்டுரையினின்று தொகுக்கப்பெற்றது.

இக் கல்வெட்டின் சிறப்பு யாதெனின் இதிலுள்ள இரண்டு சொற்றொடர்கள் **"ஸதிய புதோ"** என்பதும் **"அதியந் நெடுமாஞ் அஞ்சி"** என்பதுமாகும்.

அதியமான் நெடுமான் அஞ்சியைப் பற்றி அறிந்திராத கற்றறிந்த தமிழர் இருக்க மாட்டார்கள். தமக்குக் கிடைத்த அரிய நெல்லிக் கனியைத் தாம் உண்ணாது தமிழ் மூதாட்டியான ஔவையாருக்கு அளித்த வள்ளல் அன்றோ அதியமான் நெடுமான் அஞ்சி!

ஔவையார், பரணர், மாமூலனார், அரிசில் கிழார், நல்லூர் நத்தத்தனார், பெருஞ்சித்திரனார், அஞ்சியின் அத்தை மகள் நாகையார் ஆகிய புலவர்கள் பாடிய சங்கப் பாடல்கள் அதியனின் புகழைக் கூறுகின்றன. தகடூரை (இன்றைய தர்மபுரியை)த் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்கள் அதியர் வழியினர் அதியமான் மரபின் முன்னோர்கள் ஆவர்.

இவ்வளவு சிறந்த வீரன் இறுதியில் தகடூரில் முற்றுகை யிடப்பெற்றான். சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் மன்னனால் தகடூர்ப் போரில் வீழ்த்தப்பட்டான்.

முதன்முதலில் புகளூர் ஆர் நாட்டார் மலைக் கல்வெட்டில் மூன்று சேரர் தலைமுறையைக் குறிக்கும் கல்வெட்டைப் படித்துச் சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ள அரசர்களே கல்வெட்டில் குறிக்கப்பெறுபவர். இதிலிருந்து சங்க இலக்கியத்தின் காலத்தைக் கணிக்க முடியும் என்று உலகுக்கு வெளிக்காட்டியவர் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் ஆவர். ஜம்பையில் இப்போது கிடைத்துள்ள அதியமான் நெடுமான் அஞ்சியின் கல்வெட்டு சங்க இலக்கியத்தில் கூறியுள்ள அரசர்களும் தலைவர்களும் வாழ்ந்து - வீரம் விளைத்துக் குடிகளைக் காத்து - வரலாறு படைத்தவர்களே என ஐயம் திரிபற ஆணித்தரமாக ஆதாரச் சான்றுகளுடன் எடுத்துக் கூறுகிறது

என்பதாலேயே இக் கல்வெட்டு மிகச் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

இக் கல்வெட்டு அதியன் ஆட்சியில் வேறு யாரோ கொடுத்த தன்று. அதியமான் நெடுமான் அஞ்சியே கொடுத்தது. அது மட்டு மன்று. தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அவன் திருக்கோயிலூர் மலையமான் திருமுடிக்காரியை வென்றான் எனச் சங்கப் பாடலால் தெரிகிறது. ஔவையும் பரணரும் அவனது திருக்கோயிலூர் வெற்றியைச் சிறப்பித்துப் பாடியதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. அந்தத் திருக்கோயிலூருக்கு மிக அண்மையிலேயே இந்தக் கல்வெட்டும் இருக்கிறது. எனவே, அதியமான் திருக்கோயிலூரை வென்றபோது இந்தப் பாளியை ஏற்படுத்திக் கல்வெட்டைப் பொறித்திருக்கிறான் என்பது தெளிவாகிறது.

அதியமான் திருக்கோயிலூரை வென்றதும் உண்மை; அதனை ஔவையும் பரணரும் பாடியதும் உண்மை என்பதற்கு வேறு சான்று என்ன தேவை? அதியன் சிவனடியை வணங்கும் சென்னியன் ஆயினும் சமணர்க்குப் பாளி அமைத்துக் கொடுத்திருக்கிறான் என்பதைக் காணும்போது அவன் எல்லாச் சமயங்களையும் போற்றியிருக்கிறான் என்ற உண்மையும் தெளிவாகின்றது. அது மட்டுமன்று; ''அஞ்சி ஈத்த பாளி'' என்றும் அக் கல்வெட்டு கூறுகிறது.

இக் கல்வெட்டு, தமிழக வரலாற்றுக்கு மட்டுமே அரிய செய்திகளை வழங்கியுள்ளது என்று எண்ணிவிடக் கூடாது. இந்தியத் துணைக் கண்ட வரலாற்றுக்கே மிகச் சிறந்த செய்தியை வழங்கியுள்ளது, எனலாம். அதியனை இது 'ஸதியபுதோ அதியந் நெடுமாஞ் அஞ்சி'' என்று அழைக்கிறது. இந்தியாவின் மிகச் சிறந்த அரசனாகத் திகழ்ந்தவன் மௌரியப் பேரரசனான அசோகன். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப் பெருமன்னன் தன் கல்வெட்டுக்களில் சோழர். பாண்டியர், கேரள புத்ரர், ஸத்திய புத்ரர்

ஆகியோரைக் குறித்துள்ளான். இவர்களின் நாடுகள் அவ் அசோகனின் ஆட்சிக்குட்பட்டவையல்ல. அவர்கள் தனியாட்சி நடத்தி வந்தனர். அங்கெல்லாம் அவன் பௌத்த அறங்கள் பரவும்வகை செய்தான். அசோகன் குறிக்கும். ''ஸத்ய புத்ரர்'' யார் என்பது இதுகாறும் அறியகூடவில்லை. சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெறும் 'வாய்மொழிக் கோசர்'' என்பவராய் இருக்கக் கூடும் எனச் சிலர் கூறுகின்றனர். இவர்கள் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்களாக இருக்கக்கூடும் என்று சிலர் கருதினர். மகாராட்டிரத்தில் ''சத்புதர்'' என்போர் உண்டு. இஃது அவர்களாயிருக்கக் கூடும் என்போரும் உளர். சத்ய மங்கலம் இவர் பெயரால் வந்தது என்கின்றனர் சிலர். ''ஸதிய புதோ'' என்பவர் அதியமான்களாக இருக்கக் கூடும் என்பவர்களும் உண்டு.

இப்போது கிடைத்துள்ள இக் கல்வெட்டு அசோகன் கூறும் ''ஸத்ய புத்ரர்கள்'' அதியமான்கள்தாம் எனத் திட்ட வட்டமாகத் தெளிவாகிவிட்டது. அதியனை ''பொய்யா எழினி'' (சத்யபுத்ரர்) எனப் புறநானூறு கூறுகிறது.

* *

சாசனச் செய்யுள் மஞ்சரி

முகவுரை

பழைய சாசன வெளியீடுகளைப் படித்துக் கொண்டிருந்த போது, அவற்றின் இடையிடையே சில சாசனங்கள் செய்யுளாக அமைந்திருப்பதைக் கண்டேன். கண்டபோது, அச்செய்யுட்களைத் தொகுத்துவைப்பது நலம் என்று தோன்றியது. வெவ்வேறு காலத்திலே, வெவ்வேறு இடங்களில் இருந்த புலவர்கள், அவ்வப்போது பாடிய தனிச்செய்யுட்களைப் பிற்காலத்தவர் தொகுத்துத் தனிப்பாடற்றிரட்டு என்னும் பெயருடன் வெளியிட்டிருப்பதைப் படித்து, நாம் பல செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம். அது போலவே, வெவ்வேறு ஊர்களிலே வெவ்வெறு காலத்தில் சாசனங்களிலே எழுதப்பட்ட செய்யுள்களைத் தொகுத்து வெளியிட்டால், அது தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆராய்வதற்கும், அக்காலத்து அரசியல் சமூக இயல் வரலாறுகளைத் தெரிந்து கொள்வதற்கும் பெரிதும் துணையாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகவே, சாசனங்களில் காணப்படுகிற செய்யுள்களைத் தொகுத்துச் 'சாசனச் செய்யுள் மஞ்சரி' என்று பெயரிட்டு அமைத்தேன்.

பிறகு, இதுபோன்று, கன்னடம் தெலுங்கு சமஸ்கிருதம் என்னும் மொழிகளில் உள்ள சாசனங்களிலும் செய்யுள்கள் இருப்பதையறிந்து, அச்செய்யுள்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்களா என்றறிய, அறிந்தவர்களை உசாவினேன். கன்னடம் தெலுங்கு சமஸ்கிருத மொழிகளில் உள்ள சாசனச் செய்யுட்களைத் தொகுத்து, அந்தந்த மொழியில் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். ஆகவே, நான் தொகுத்த தமிழ்ச் சாசனச் செய்யுட்களை அச்சிட்டு வெளியிட வேண்டும் என்று எண்ணினேன்.

சாசனங்களிலே, பெரும்பாலும், அரசர்களின் மெய்க்கீர்த்திகள் செய்யுளாக அமைந்திருக்கின்றன. அந்த மெய்க்கீர்த்திச் செய்யுட்களை மட்டும் சிலர் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், மெய்க்கீர்த்தி அல்லாத வேறு தனிச் செய்யுட்களைத் தொகுத்து, இதுவரையில், சரிவர அச்சிடவில்லை. ஆகவே, மெய்க்கீர்த்திச் செய்யுட்களைத் தவிர, ஏனைய சாசனச் செய்யுட்களைத் தொகுத்து வெளியிடுவது மிகத் தேவையான தென்பதைக் கண்டேன். ஏனென்றால் சாசனங்களைத் தொகுதி தொகுதியாக அச்சிட்டிருக்கிற செய்தி, பலருக்குத் தெரியாது. தெரிந்த சிலரில், பலர் சாசன வெளியீடுகளைப் படிப்பது இல்லை. பெரும்பாலும் புத்தக சாலைகளில் (இரண்டொரு புத்தகசாலைகள் தவிர), சாசன வெளியீடுகள் காணப்படுவது இல்லை. சில சாசன வெளியீடுகள், இப்போது விலைக்குக் கிடைப்பதும்

இல்லை. இவ்வாறு சாசன வெளியீடுகள் கிடைப்பதற்கு அரிய அரும் பொருளாக உள்ளன.

அரிதில் முயன்று தேடிக் கண்டுபிடித்தாலும் வசன சாசனங்கள் எவை, செய்யுள் சாசனங்கள் எவை என்பதைக் கண்டுபிடிப்பது எளிய காரியம் அல்ல. ஏனென்றால், கருங்கல்லிலும் செப்பேட்டிலும் சாசனச் செய்யுள் களைச் செதுக்கியவர்கள், செய்யுள்களைச் செய்யுள் அமைப்புப்படி அடி பிரித்து எழுதாமல், வசனங்களை எழுதிவைப்பதுபோல எழுதி வைத்தார்கள். இதனால், வசன சாசனங்களிலிருந்து செய்யுட் சாசனங்களைப் பிரித்தறிவது எளிதானதல்ல. அதிலும் அச்சுப் புத்தகங்களில் செய்யுள்களைப் படித்துப் பழகியவர்கள், (ஓலைச்சுவடியில் செய்யுள்களைப் படித்துப் பழகாதவர்கள்), சாசனங்களிலுள்ள செய்யுள்களைக் கண்டறிவது மிகமிகக் கடினமானது. சிறிதாவது செய்யுள் இலக்கணம் அறிந்தவர்களும், செய்யுள் களை ஏட்டுச் சுவடியில் படித்துப் பழகியவர்களுந்தான், சாசனங்களில், அடிபிரித்து எழுதாமல் நெடுக எழுதியுள்ள செய்யுட்களைக் கண்டறிய முடியும்.

மேலும், இந்திய சாசனங்கள் என்னும் சாசன வெளியீட்டில், சாசன வாசகங்களை, இலத்தின் (ஆங்கில) எழுத்தினால் அச்சிட்டிருக்கிறார்கள். தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் எழுதப்பட்டுள்ள சாசனங் களை ஆங்கில எழுத்தில் அச்சிட்டால், அவ்றறை யார் படிப்பார்கள்? இவ் வாறு பதிப்பித்துள்ள சாசனங்களைப் படிப்பதில், உச்சரிப்பு இடர்ப்பாடுகள் பல உண்டு.

இது ஒருபுறமிருக்க, தமிழ் எழுத்தில் பதிப்பித்துள்ள சாசனங்களைப் படிப்பதிலும் எழுதுவதிலும், சில இடர்ப்பாடுகளும் துன்பங்களும் உண்டு. 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' என்னும் பழமொழி, ஓலைச்சுவடிகளை எழுதினவர்களுக்கு மட்டும் அல்லாமல், செப்பேட்டை எழுதினவனுக்கும் கருங்கல்லில் எழுதினவனுக்கும்கூட முழுவதும் பொருந்தும். எப்படி என்றால், இவர்கள் எல்லோரும், புள்ளி பெறவேண்டிய எழுத்துக்களுக்குப் பெரும்பாலும் புள்ளிவைத்து எழுதுவதில்லை; மிக அருமையாக யாரோ ஒருவர்தான், புள்ளி அமைத்து எழுதுவார்கள். இதில் உள்ள இன்னொரு சங்கடம் என்னவென்றால், இக்காலத்து மெய்யெழுத்துக்களைப் போலவே அக்காலத்து மெய்யெழுத்துக்களும் புள்ளிபெற்றிருந்ததோடு, எகர ஒகரக் குற்றெழுத்துக்களும் அக்காலத்தில் புள்ளி பெற்றிருந்தன.

இக்காலத்தில், எகர, ஏகார, ஒகர ஓகாரங்களுக்குத் தனித்தனி எழுத்துக்கள், புள்ளியிடப்படாமல் எழுதப்படுகின்றன. ஆனால்,

அக்காலத்தில், இவ்வெழுத்துக்களைப் புள்ளி அமைத்தும், புள்ளி அமைக்காமலும் எழுதிவந்தார்கள். புள்ளியிடப்பட்ட எகர ஒகரங்கள் குற்றெழுத்தாகவும், புள்ளியிடப்படாத எகர ஒகரங்கள் நெட்டெழுத்தாகவும் அக்காலத்தில் வாசிக்கப்பட்டன. ஆனால், கல்லிலும் செம்பிலும் ஏட்டிலும் எழுதிய அக்காலத்து எழுத்தாளர்கள், புள்ளியிட வேண்டிய எழுத்துக் களுக்கும் (எகர ஒகர மெய்யெழுத்துக்கள்) புள்ளியிடாமல் எழுதி வைத்தார்கள். எக ஒகரக் குற்றெழுத்துக்களுக்கும் மெய்யெழுத்துக்களுக்கும் புள்ளியிட்டெழுத வேண்டும் என்று நன்னூல் சூத்திரமும் தொல்காப்பியச் சூத்திரமும் கூறுகின்றன.

''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்'' என்றும்,

'எகர ஒகரத் தியற்கையும் அற்றே''

என்றும் தொல்காப்பிய இலக்கணம் (எழுத்ததிகாரம், சூத்திரம் 15,16) கூறுகிறது.

''தொல்லை வடிவின எல்லா எழுத்தும், ஆண்டு
எய்தும் எகர ஒகரமெய் புள்ளி''

என்று நன்னூல் சூத்திரம் கூறுகிறது.

இந்த இலக்கண முறைப்படி, புள்ளி பெறவேண்டிய எழுத்துக்கள் எவை என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டால்தான், சாசனங்களைப் பிழையில்லாமல் படித்து அறிய முடியும். இல்லையேல், தவறுகள், பெருந்தவறுகள் ஏற்படும். சில உதாரணங்களைக் காட்டுவோம்:

எறு, ஒது என்று சாசனங்களில் எழுதியிருந்தால் இவற்றை முறையே ஏறு, ஓது என்று வாசிக்கவேண்டும், பழைய இலக்கண முறைப்படி. இவற்றின்மேல் புள்ளி இல்லாதபடியால் இவ்வெழுத்துக்களை நெட்நெழுத் தாகக் கொள்ளவேண்டும். (ஆனால், புள்ளியிடாமலே எழுதுவது அக்காலத்து எழுத்தாளர் வழக்கமாகையால் இதை நெட்டெழுத்தாகக் கொள்வதா, குற்றெழுத்தாகக் கொள்வதா என்கிற ஐயம் ஏற்படுகிறது.) இவ்வாறே மெகம, செரி, மெய, தெனருந்த, பெசி, முனறு, தெங்கமழ, செவவெல, வெடகை, வெறு, செறு, தெவர, குணடுர, தநதென என்று சாசன எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கும். இவற்றை முறையே மேகம், சேர், மேய், தேனருந்த, பேசி, மூன்று, தேங்கமிழ், செவ்வேல், வேட்கை, வேறு, சேறு, தேவர், குண்டூர், தந்தேன் என்று இடமறிந்து வாசிக்க வேண்டும்.

கொடல, கொலவளை, மலரொன, பொல, பெரருளான, நொக்கி, சொனனொம, கொளரி, பொதிநிழல, பொரத தனன, வானறொய,

தெனறொய, கொளரவும, மெநதன என்று சாசனங்கில் எழுதப்பட்டிருக்கும் இவற்றை முறையே கோடல், கோல்வளை, மலரோன், போல, பேரருளான், நோக்கி, சொன்னோம், கோளரி, போதிநிழல், போர்த்தன்ன, வான்றோய், தேன்றோய், கோளரவும், மேந்தன் என்று இடமறிந்து வாசிக்க வேண்டும்.

சில சொற்கள், இகரத்திற்கும் ஈகாரத்திற்கும் வேறுபாடு தோன்றாமல் எழுதப்பட்டிருக்கும். விதி, வெலை, நிர், நிலம், கண்டிர, திரும, சிரமை, நிடிய, விரன என்றிருப்பதை முறையே வீதி, வேலை, நீர், நீலம், கண்டீர், தீரும், சீர்மை, நீடிய, வீரன் என்று வாசிக்கவேண்டும். இவ்வாறு பண்டைக்காலத்துச் சாசன எழுத்துக்களை வாசிப்பதில் சில இடர்ப்பாடுகள் உள்ளன.

இத்தகைய இடர்களும் துன்பங்களும் ஒருபுறமிருக்க, வேறு சில துன்பமும் காணப்பட்டன. அவை என்னவென்றால், சாசனச் செய்யுள்கள் சிலவற்றில், இடையிடையே சில பல எழுத்துக்கள் மறைந்துள்ளன. இடையிடையே எழுத்துக்கள் மறைந்துபோன செய்யுள்களை அடிபிரித்துச் செய்யுள் உருவத்தில் அமைப்பது கடினமானது. கட்டளைக் கலித்துறை போன்ற செய்யுட்கள் சிலவற்றில், செய்யுள் இலக்கண முறைக்கு மாறுபட; சில அடிகளில் அதிக எழுத்துக்களும், சில அடிகளில் குறைந்த எழுத்துக் களும் காணப்படுகின்றன. அவை, எழுத்துக்களைச் செதுக்கிய சிற்பிகளின் அறியாமையினால் நேர்ந்த பிழைகளாகும். அப்படிப்பட்ட செய்யுள்களை, உள்ளது உள்ளபடியே அமைத்து எழுதியுள்ளேன்.

சாசனத்தில் உள்ள செய்யுள்களை அடிபிரித்து அமைத்ததும், எகர ஒகர மெய்யெழுத்துக்களை ஆராய்ந்து தக்கவாறு சொற்களை அமைத்ததும் தவிர, ஏனைய திருத்தங்கள் எதையும் நான் செய்யவில்லை. செய்யுள்களில் எழுத்துக்கள் தவறாக இருந்தாலும், அதிகமாகவோ குறைவாகவோ இருந்தாலும், அவற்றை உள்ளது உள்ளவாறே எழுதியுள்ளேன். இந்த வகையில் குறைபாடு காணப்பட்டாலும், அவை தவிர்க்க முடியாதவை என்பதை வாசகர் அறியவேண்டும்.

சாசனச் செய்யுள்களை மட்டும் அச்சிடுவதால் பயனில்லை. அவற்றிற்கு விளக்கங்களும் குறிப்புக்களும் எழுதினால் பெரிதும் பயன்படும் என்றறிந்து, ஒவ்வொரு செய்யுளுக்கும் விளக்கமும் குறிப்பும் எழுதியுள்ளேன். மேலும், அவை உள்ள, அல்லது கிடைத்த இடங்களையும், அவை அச்சிடப்பட்டுள்ள வெளியீடுகளின் பெயர்களையும் காட்டியுள்ளேன். கால வரையறைப்படி செய்யுட்களைத் தொகுப்பதில்

குறைகள் உள்ளபடியால், அப்படித் தொகுக்காமல், மாவட்ட முறையாகச் செய்யுள்களைத் தொகுத்துள்ளேன்.

தென் இந்திய சாசனங்கள், இந்திய சாசனங்கள், புதுக்கோட்டை சாசனங்கள், திருவாங்கூர் சாசனங்கள், கர்னாடக சாசனங்கள் ஆகிய சாசன வெளியீடுகளில் உள்ள சாசனச் செய்யுட்களைத் தொகுத்துள்ளேன். செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்துள்ள சில சாசனச் செய்யுள்களையும் இதனுடன் தொகுத்துள்ளேன். இதுவரையில் வெளிவராத புதிய சாசனச் செய்யுள் ஒன்றையும் இதனுடன் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளேன். இந்தப் புதிய சாசனச் செய்யுளை இதில் அச்சிடக் கொடுத்துதவியவர், அண்ணா மலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளரும், சாசன ஆராய்ச்சியிலும் சரித்திர ஆராய்ச்சியிலும் வல்லவருமான உயர்திரு. *T.V.* சதாசிவ பண்டாரத்தார். அவர்கள். அப்பெரியாருக்கு, மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழிலே சாசனச் செய்யுட்கள் இவ்வளவுதான் என்று நினைக்க வேண்டா. இன்னும் நூற்றுக்கு மேற்பட்ட செய்யுள்கள் உள்ளன. அவை அச்சிடப்படாமல் எபிகிராபி இலாகாவில், வைக்கப்பட்டு, உலகத்துக்குப் பயன்படாமல் உள்ளன. இப்போது எனக்குக் கிடைத்தவரையில், சாசனச் செய்யுள்களை அச்சிடுகிறேன். இந்த நூலில் உள்ள செய்யுட்கள், தமிழ் இலக்கியத்தை ஆராய்வதற்கும், பண்டைக்காலத்துச் சமுதாய வாழ்க்கை நிலை. அரசியல் நிலை, வரலாற்றுச் செய்தி முதலியவைகளை ஆராய்வதற்கும் பெரிதும் பயன்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

'சாசனச் செய்யுள் மஞ்சரி' என்னும் இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவி புரியவேண்டுமென்று டில்லியில் உள்ள சாகித்திய அக்கடமி என்னும் கழகத்தைக் கேட்டுக் கொண்டேன். அக்கழகத்தார், தமது தமிழ்க் குழுவின் மூலமாக இத்தொகுப்பை ஆராய்ந்து, அக் குழுவின் இசைவு பெற்று, இந்நூலை வெளியிடும் செலவுக்காக ரூபா ஐந்நூறு நன்கொடையாக வழங்க உடன்பட்டனர். ஆகவே, இந்நூல் சாகித்திய அக்கடமியின் ஆதரவில் வெளிவருகிறது. இவ்வுதவியை அளித்தருளிய சாகித்திய அக்கடமிக்கும், அதன் தமிழ்க் குழுவுக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மயிலாப்பூர் சீனி. வேங்கடசாமி.

சென்னை

15.3.1959

படம் - I



(இது பல்லவர் காலத்துத் தமிழ் எழுத்து. கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருவெள்ளறைக் கிராமத்தில் 'நாலு மூலைக் கேணி' என்னும் மாற்பிடுகு பெருங்கிணற்றுச் சுவரில் எழுதப்பட்டுள்ளது. இதன் வாசகத்தை 254 பக்கம் காண்க)

கண்டார் காணா வுலகத்திற் காதல் செய்து நில்லாதேய்;
பண்டேய் பரமன் படைத்தநாள் பார்த்து நின்று நையாதேய்;
தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்
னுண்டேல் லுண்டு, மிக்கது உலகம் மறிய வைம்மினேய்.

(முன் பக்கத்தில் காட்டப்பட்ட பல்லவர் காலத்துத்
தமிழ் எழுத்தின் வாசகம்.)

படம் - II



(இது வட்டெழுத்து. ஒரு காலத்தில் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்ட எழுத்து இது. இவ்வெழுத்தின் வா்சகத்தை அடுத்த பக்கம் காண்க.)

வட்டெழுத்துப் படத்தின் வாசகம்

தென்னவர்தந் திறலாணைச்
        சிலைஒடுபுலி கயலிணைமன்
பொன்னிமையச் சிமையத்து
        விறற்கருவி இற்றைக்குந்
தொழில் செய்து வந்தவர் பின்னோன்
        செயல்பல பயின்றோர் முன்னோன்
திருமலிசாசன மிதற்குச்
        செழுந்தமிழ் பாடினோனற்றை
நிருபசேகரப் பெருங்கொல்லன்
        நீள்புகழ் நக்கனெழுத்து.

(இந்நூல், சாசனச் செய்யுளின் கடைசி ஐந்து அடிகள்.
342-ம் பக்கம் காண்க)

சாசனச் செய்யுள் மஞ்சரி

சுந்தரபாண்டியன்

இடம்: செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலுகா, திருப்புட்குழி, விஜயராகவப் பெருமாள் கோவில் முன் மண்டபத்துக் கிழக்கு மேடைச் சுவர்.

பதிப்பு: எண் 455 தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஆறு *(No.455. S.I.I. Vol. VI)*.

விளக்கம்: இந்த மண்டபத்தை அமைத்தவர், எடுத்தகை அழகியான் பல்லவராயர் என்பவர். பெருமாள் குலசேகர தேவரான சுந்தரபாண்டியனை வாழ்த்துகிறது இந்தக் கவி.

சாசனச் செய்யுள்

வாழ்க கோயில் பொன்மேய்ந்த மகிபதி
வாழ்க செந்தமிழ் மாலை தெரிந்தவன்
வாழ்க மண்டலம் யாவையும் கொண்டவன்
வாழ்க சுந்தர மன்னவன் தென்னனேய்.

பெருமாள் குலசேகர தேவர் திருத்தோளுக்கு நன்றாக எடுத்தகை அழகியான் பல்லவராயர் செய்வித்த தன்மம்.

குறிப்பு: - பண்டைக் காலத்து வழக்கம்போல இச்செய்யுளில், ஏகார ஈற்றெழுத்து யகரமெய் பெற்றுள்ளது.

கோதண்டராமன்

இடம்: செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சீபுரம் தாலுகா, சின்னகாஞ்சீபுரம். அருளாளப் பெருமாள் (வரதராசப் பெருமாள்) கோவிலைச் சூழ்ந்துள்ள மண்டபங்களின் திண்ணைச் சுவரில் உள்ளது.

பதிப்பு: எண் 853. தென் இந்திய சாசனங்கள். தொகுதி நான்கு. *(No. 853. S.I.I. Vol. IV.)*

விளக்கம்: வசனமாக எழுதப்பட்ட ஒரு சாசனத்தின் அடியில் இந்தச் செய்யுள் காணப்படுகிறது.

சாசனச் செய்யுள்

கூாவேல் வல்ல கோதண்ட ராமன் குலோத்துங்கன்
பேரால் பணித்தமைக்கும் விச்சையம்மன் சேரமான்
வங்கத்தே துங்க வடகொல்லம் கொண்டமைக்கும்
சங்கத் தருங்கடலே சான்று.

மணியன் பெருங்கன்

இடம்: செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலுகா, மாகறல். வைகுண்ட பெருமாள் கோவில் மண்டபத்தின் தென்புறச் சுவரிலும், தாயார் சந்நிதி வாயிலின் மேற்புறத்திலும் எழுதப்பட்டுள்ள செய்யுட்கள்.

பதிப்பு: எண்கள் 437, 438, தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. *(Nos. 437, 438, S.I.I. Vol. VII.)*

விளக்கம்: இராஜராஜ சோழனின் 23-ஆம் ஆண்டில், பட்டியர் போயன் மணியன் என்பவர் இக்கோவிலில் திருப்பணிகள் செய்ததை முதல் செய்யுள் கூறுகிறது.

அண்டம்பாக்கிழான் திருவன் என்பவர், முருகன் கோவிலைக் கட்டியதாக இரண்டாவது செய்யுள் கூறுகிறது.

இந்த முருகன் கோவில் இப்போது தாயார் சந்நிதியாக இருக்கிறது. முன்பு, முருகன் திருவுருவம் இங்கு இருந்ததாகவும், பிற் காலத்தில் அவ்வுருவம் இவ்வூர்ச் சிவன் கோவிலுக்குக் கொண்டு போகப்பட்டதாகவும் கூறப்படுகிறது. முருகன் இருந்த ஆலயத்தில் இப்போது மடைப்பள்ளி நாச்சியார் என்னும் உருவம் வைக்கப் பட்டிருக்கிறது. இதற்குப் பூசை கிடையாது. ஆனால், இந்த முருகன் ஆலயம் இப்போது தாயார்சந்நிதி என்று பெயர் கூறப்படுகிறது. இந்த ஆலயத்தின் வாயிலின் மேலே இரண்டாவது செய்யுள் எழுதப் பட்டிருக்கிறது.

முதலாவது செய்யுளின் மேலே கீழ்க்கண்ட வாசகம் எழுதப்பட்டிருக்கிறது.

'ஸ்வஸ்திஸ்ரீ. திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு 203 வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் திருமேற்கோயில் வீற்றிருந்த எம்பெருமான் கோவில் ஸ்ரீவிமானமும் திருவர்த்த மண்டபமும் திருமண்டபமும் சோபனமும் ஸ்ரீபீடமும் இவ்வூர் பட்டியர் போயன் மணியன் பெருங்கன் செய்வித்தான். ஹரி''.

சாசனச் செய்யுள்

திருமன்னு ஸ்ரீராச ராசற் கியாண்டு சென்ற
விருபத்து மூன்றாவதிற் செந்தளிர் சூழ்
மருமன்னும் பொழிற் றிருமாகறல் திருமேற்கோயில்
மன்னிவீற் றிருந்த பெருமாளுக்கு மண்மேற்
கருமன்னு சீவிமான மத்தமண்டப மோர்கலந்த
மண்டபத்தொடு சோபானஞ் சீபீடந்
தருமன்னுங் கொடைப்பட்டியர் போயன் மணியன்
தரும்பெருங்கன் செய்வித்தான்
தருமநிலைபெறவே. 1

சீராச ராசற் காண்டாறிற் றென்மாகறற்
பாரார்புக ழண்டம் பாக்கிழான் - காரார்

தருப்போல் தருந்திருவன் காழன் முருகன்
திருக்கோயில் செய்தான் சிறந்து. 2

திருமால் மாவலிவாணன்

இடம்: செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலுகா, காஞ்சீபுரம், ஏகாம்பரநாதர் கோவிலில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோவில், மேற்கு - தெற்குப்புறச் சுவர்களில் எழுதப்பட்டுள்ளவை.

பதிப்பு: எண் 348 A தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு, (No. 348 -A. S.I.I. Vol .IV)

விளக்கம்: திருமால் மாவலிவாணன் என்னும் அரசனுடைய போர்வெற்றியைக் கூறுகின்றன இச்செய்யுட்கள்.

சாசனச் செய்யுள்

அடுகயலை முன்னாளி லாடகக் குன்றிட்ட
வடுமறைந்து போயும் மறையா - முடுகுசமர
மாற்றோர் தொழுந்திருமால் மாவுதைப்ப வேல்வழுதி
தோற்றோடிப் போன சுவடு. 1

மாலாக்கி யிந்திரையைத் திருத்தோள் வைத்து வையமொரு
கோலாற் புரந்தருள மாவலிவாணன் நன்கொற்றவடி
வேலாற் றுரப்புண்டபின் வீரமாறன் வெகுண்டு பண்டு
காலாற் குடித்த கடற் கண்களால் விழக் கண்டனமே. 2

ஏற்றார்க் கிடாதா ரில்லையென்ப தின்றறிந்தேஞ்
சீற்றத் திருமால் செருவேற்க - மாற்றிலாப்
பொன்னிட்டான் சென்னிகொடிப் பன்னிட்டான் சேரமான்
வென்னிட்டான் கொற்கையார் வேந்து. 3

குறிப்பு: செய்யுள் 1. ஆடகக் குன்று - பொன்மலை, இமயமலை. திருமால் - திருமால் மாவலிவாணன். மாவலிவாணர்

என்னும் வாணாதிராயர்கள். பாண்டியரின் கீழ்ப் படைத்தலைவராக இருந்த வர்கள். பாண்டியர் ஆற்றல் குறைந்த பிற்காலத்தில் இவர்கள் சுயேச்சை பெற்றுப் பாண்டிய அரசர்களைத் தமக்குக் கீழ்ச் சிற்றரசராகும்படி செய்தார்கள். இவ்வாணாதிராயர்களில் ஒருவன் திருமால் மாவலிவாணன் என்பவன். செய்யுள் 2. மாவலிவாண னால் துரத்தப்பட்ட வீரமாறன் என்னும் பாண்டியன் வரலாறு தெரிய வில்லை. செய்யுள் 3. மூன்றாம் வரியில் கொடிப்பன்னிட்டான் என்றிருப்பது கொடிப்பின்னிட்டான் என்றிருத்தல் வேண்டும். வென்னிட்டான் - முதுகுகாட்டித் தோற்றோடினான்.

சண்டேசுவரர்

இடம்: செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா, பெரும்பேர் கிராமம். இவ்வூர் தான்தோன்றீசுவரர் கோவில் முன்மண்டபத்துத் தெற்குச்சுவரில் உள்ள சாசனச் செய்யுள்.

பதிப்பு: எண் 484. தென் இந்திய சாசனங்கள். தொகுதி ஏழு. *(No. 484. S.I.I. Vol. VII)*.

விளக்கம்: இது சண்டேசுவரர் ஓலைச் செய்யுள். தண்டீசுவரர் ஓலை என்றும் கூறப்பெறும். சண்டேசுவரர் அல்லது தண்டீசுவரர் என்பவர் சைவ அடியார்களில் ஒருவர். சிவன்கோவில்களில், எல்லா விசாரணைகளையும் செய்யும்படி சிவபெருமான் சண்டேசுவரரை ஏற்படுத்தியதாகப் புராண வரலாறு கூறுகிறது. இந்த வரலாற்றுப்படி. சிவன் கோவில் வரவு செலவு கணக்குகளைச் சண்டேசுவரர் பேரினால் எழுதுவது பண்டைக் காலத்து மரபு. இந்தச் செய்யுள் அந்த மரபைக் கூறுகிறது.

''புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப'' என்று தொடங்குகிற ஒரு சாசனத்தின் கீழே இந்தச் செய்யுள் எழுதப்பட்டுள்ளது.

சாசனச் செய்யுள்

சண்டேச்சரன் ஓலை சாகரஞ்சூழ் வையகத்தீர்
கண்டீச்சரன் கரும மாராய்க - பண்டேய்

அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமைச் சென்னிமேற் கொள்க.

குறிப்பு:- இந்தச் செய்யுள், பாடபேதங்களுடன் வேறு சாசனங்களிலும் எழுதப்பட்டுள்ளது. அவற்றை இங்கே குறிப்பிடுவது அமைவுடைத்து.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, உடையார் கோயில் திருக்களாவுடைய மகாதேவர் ஆலயத்தின் வடபுறச் சுவரில் உள்ள செய்யுள். (எண் 1041, தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு)

தண்டீச்சரன் ஓலை சாகரஞ்சூழ் வைய்யகத்து
கண்டீச்சுரன் கருமம் ஆராய்மின் - பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து.

தென் ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரம் தாலுகா, திரு. வாமாத்தூர், அபிராமேசுவரர் கோவில் முதல் பிராகாரம் தென் புறச் சுவரிலும் இதே செய்யுள் பாடபேதத்துடன் காணப்படுகிறது. (எண். 750, தென் இந்திய சாசனங்கள், தொகுதி எட்டு)

தண்டேசுரன் ஓலை தாபரஞ்சூழ் வையகத்து
கண்டீசன் கருமம் ஆராய்க - பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து.

வெண்ணெயூரில் உள்ள விசுவநாதர் கோவிலில், இதே செய்யுள் வேறு பாடபேதத்துடன் காணப்படுகிறது. அது, ''செந்தமிழ்'', நான்காந் தொகுதியில், 252ஆம் பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. பாடபேதமுள்ள முதல் இரண்டடி இது:

''தண்டிச் சுரன் கோயிற் றாபரஞ்சூழ் வையகத்திற்
கண்டீச் சுரங்கருப்ப மீறாகப் - பண்டே''

புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, கள்ளம்பட்டி, மதீசுவரர் கோவிலின் முன்புள்ள ஒரு கல்லில் இச்செய்யுள் எழுதப்பட்டுள்ளது.

அது, புதுக்கோட்டை சாசனங்கள் 989 - ஆம் எண்ணில் அச்சிடப்பட்டிருக்கிறது. இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

மகதைப் பெருமாள்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை தாலுகா, திருவண்ணாமலை. அண்ணமலையார் கோவில், முதல் பிராகாரம், வடக்குப் பக்கச் சுவரில் உள்ளது.

பதிப்பு: எண் 97, தென் இந்திய சாசனங்கள், தொகுதி எட்டு. *(No. 97. S.I.I. Vol. VIII)* 'செந்தமிழ்' மூன்றாந் தொகுதி, பக்கம் 427 - 432.

விளக்கம்: மகதைப் பெருமாள் என்பவரின் வீரத்தையும் வெற்றியையும் புகழையும் கூறுகின்றன இந்தச் செய்யுட்கள். மகதை என்பது மகதநாடு. இதற்கு நடுநாடு என்னும் பெயரும் உண்டு. மகதைப் பெருமாள் வாண குலத்தைச் சேர்ந்தவன். ஆகையால், வாணகோவரையன் என்றுங் கூறப்படுகிறான். மகதைப் பெருமாள், திருவண்ணாமலை கோவிலைப் பொன் வேய்ந்தான். ஆதலால், பொன் பரப்பினான் மகதைப் பெருமாள் என்றும் கூறப்படுகிறான். இவன் சோழ அரசனுக்குக் கீழடங்கியவன்.

சாசனச் செய்யுள்

பொன் பரப்பினானான மகதைப் பெருமாள் கவி.

தாரு முடியு முரசுந் தமக்குரிய
பாரு முடன்பெறுவர் பார்வேந்தர் - வீரப்
பெருமாள் மகதேசன் பேரெழுதித் தத்தம்
திருமார்பி லாளோலை செய்து. 1

வன்மதுரை விட்டு வடகடலான் மால்வழுதி
தென்மதுரை பட்டின்று தென்கடலான் - நன்னுதலாய்
மல்லார்தோள் மாகதர்கோமான் முனிந்தால் மன்னவருக்
கெல்லாங் கடலோ விடம் 2

ஆழந் தருகடல் வையத் தரசு
செலுத்திய செங்கோ லரசெல்லாம்
வேழந் தருகொடை வாண திவாகரன்
விதிமுறை செய்வது மெய்கண்டீ
ரீழந் திறையிடு மாணிக் கப்படி
யடுமின் தென்னரீ ரிடீராகிற்
சோழன் திறையிடும் யானைக் குங்களை
யிடுமென் றிருமிது சொன்னோமே. 3

பாரோங்குகொற்றக் குடைவாணன் பல்புரவித்
தேரோன் திருவுத் திராடநாள் - பேருவமை
குன்றெடா மாலியானைக் கோவேந்தர் வீற்றிருப்ப
ரின்றெடா னின்றெடா னென்று. 4

தென்னர் முதலா வுலகாண்ட செம்பொன்முடி
மன்னர் பெருவாழ்வும் வாள்வலியு - மின்னு
முருவத் திகிரி யுயர்நெடுந்தேர் வாணன்
புருவக் கடைவளையப் போம். 5

தீய்ந்து பொழிலாகா சிந்தி நகராதா
தூந்து மணிநீர்த் துறையாகா - வேந்துமுலைப்
பூணாகா மாறி விழவாகா பொன்னெடுந்தேர்
வாணாகா வென்னாதார் மண். 6

பொருப்பிற் கரிய புகர்முக வெங்கூற்றின்
மருப்பிற் றுளைப்புண்ண வாரா - திருப்பில்
வடியுளவாஞ் செவ்வேல் மகதையர் கோமா
னடியுளவாம் வேந்தற் கரண். 7

அரிந்த கனைகழற்காற் போர்வளவர் கோனை
வரிந்த திறைக்காக வாணா - தெரிந்தானை
வாங்கினா யென்று வழுதியர்கள் தாங்கலங்கி
யேங்கினார் பாரிழந்தோ மென்று. 8

முருகுந்து காஞ்சியும் வஞ்சியும் கொண்ட மொய்தார்
மகதன்
திருகுங் கனைகழல் வீக்கிய நாள்சீ பராந்தகனிற்
பெருகுங் குருதிப் புனல்வாய் தொறும் பிலவாய் மடுத்துப்
பருகுங் கழுதுடன் செம்மைகொண் டாற்கும்
பனிக்கடலே. 9

மட்டியன் றேறிய தார்புனை வாண புரந்தரனீ
வெட்டியன் றேகொன்ற வெண் மணிப்பொடி
யுதிரவெள்ளத்
தொட்டியென் றேனுந் துலைவதுண்டே துலையாதபந்தி
கட்டியன் றேதெவ்வர் பாய் பரித்தானை கலக்குவதே. 10

கொங்குங் கலிங்கமுங் கொண்ட கண்டா கொடித்
தேருதியர்
தங்கும் பதிகொண்ட வாணாதிபா தணியாத தென்கொல்
பொங்குஞ் சினப்படை வங்கார *தொங்கன் புரண்டுவீழச்
செங்குன்ற மின்று பிணக்குன்ற மாக்கிய தேர்மன்னனே.
11

வாரொன்று முலையாய்மற் றவரொன்றும்
பழுதுரையார் மகதை வேந்தன்
போரொன்று புரியாமுன் பெரியகுறிச்
சியில்லெழுந்த புகையே கண்டாய்
காரன்று கனலெரியை மின்னென்று
தளரேல் காரைக் காட்டி
லூரொன்று மதிள்விழுந்த பேரொலியும்
உருமதிர்வ தொக்கும் காணே. 12

முன்பொரு படைக்கடலை விட்டரச ரானார்
மூலதன மும்பரியு முறைமுறை பரிவாரித்
தென்பகை யடக்கியபின் வாணகுல தீபன்
செய்ததனி யாண்மைவட திக்கி லறிகிற்பீர்

---

* *சிங்கன் என்பது ரிஷபேசுவரர் கோவில் சாசனத்திற் கண்ட பாடம்.*

பண்டொரு பொருப்பரண் விடாமலைய மானைப்
போரயிலில் பொருத போதொரு பெரும்போர்
வன்பறை தவிர்த்தொரு குதிரைவலி யாலவனை
வாட்டுறை தவிர்த்ததொரு கோலின் வலியாலே. 13

மண்ணாள் திகிரிக்கை வாணன் வடுகெறிந்த
எண்ணா யிரஞ்சூழ்ந்த எண்டிசையும் - புண்வடிந்த
நீரே நீர்காக நிழலே நிழல்நெடும்பேய்த்
தேரேதேர் செஞ்சேறே சேறு. 14

எண்மேல் மிகும்பரித் தேர்மக தேசன் இகல் விசையப்
பெண்மேல் விரும்பிவெம் போர்செய்த நாள்பின்
குடாவடுகர்
விண்மேல் நடந்து வடுகென்னு நாமம் விலக்குண்டபின்
மண்மேல் நடந்தது தேசிமுன் னான் வடுகொன்றுமே. 15

சூழும் பிணவணைமேல் தோய்க்மூகின் பந்தற்கீழ்
வீழுங் கழுதினங்கள்** மெய்காப்ப - வாழுந்தன்
தொன்னகரே போல்வடுகர் துஞ்சத் துயிற்றியதே
மன்னவர்கோன் மகாதர்கோன் வாள். 16

மடலளவு நிறைந்தொழுகு மதுமலர்த்தார்
மகதேசன் வையங் காக்கும்
அடலளவி லணிநெடுந்தேர் ஆயு....
.....ரமனை வணங்கா வரச ரியாவர்
கடலளவு நடந்தவன் கணை குரக்கு
மவன்றன் கதிர்வேல் மன்ன
ருடலளவு நடத்துமற் றுலகளவு
நடந்ததவன் ஒருசெங் கோலே. 17

தெற்கோடி மாமறுகில் தெண்மணலைச் சேயிழையா
ரமரற்கு மருந்தாக்க வல்லவா - யாற்கு

---

* பின்பொரு என்றும் பாடம் உண்டு ** கழுகினங்கள் என்றும் பாடம்

முயிராய் செங்கோ லுயர்நெடுந்தேர் வாணன்
னயிரா வதத்தி னடி. 18

சொல்லி விடுசெரு மீனவர் சூழு முரிமைகொ டாழ்கட
லெல்லி விடுபட வெறுவ ரேனு மியமபுரி யேறுவர்
கொல்லி விடுமுத காதிபர் கூளி கருதில் ரூர்புக
வல்லி விடும் அயிராவதம் வாணன் வரவிடு நாளையே. 19

வேளை நெடுங்கல்லும் வெட்டும் விரற்குகையு
மூளை தெரிக்கு முடித்தலையு - நாளை
மதிவா ணுதல்மடவாய் காணலாம் வாண
னதிவா ரணன்தொடர்விட் டால். 20

குறிப்பு: - 3- ஆம் செய்யுள். மனிதரை யானையால் மிதித்துக் கொல்லும் வழக்கம் அக்காலத்திலிருந்ததை இச்செய்யுள் கூறுகிறது.

4- ஆம் செய்யுள். அரசர் தமது பிறந்த நாளில் போர் செய்வது மரபன்று. பொன்பரப்பினானான மகதைப் பெருமாளும், தான் பிறந்த திருவுத்திராட நாளில் போர் செய்வதில்லை என்பது கருத்து.

15-ஆம் செய்யுள். இரண்டாம் அடியில், ''குடாவடுகர்'' என்றிருப்பது ''கொடா வடுகர்'' என்றிருக்க வேண்டும். ஆனால், சாசனங்களிலெல்லாம் இச்சொல் ''குடு'' என்றே எழுதப்படுகிறது. குடு என்னும் பழைய உருவம் இக்காலத்தில் ''கொடு'' என்று திரிந்துள்ளது போலும்.

பொன்பரப்பினானான மகதைப் பெருமாளின் சிறப்புக்களைக் கூறுகிற இந்தச் செய்யுட்களில் சில, திருவண்ணாமலை தாலுகா, செங்கமா கிராமத்தில் உள்ள ரிஷபேசுவரர்கோவில் தென்புறச் சுவரிலும் எழுதப்பட்டுள்ளன. அவை, தென் இந்திய சாசனங்கள், ஏழாந் தொகுதி, 123-ஆம் நெம்பரில் அச்சிடப்பெற்றுள்ளன. மேலே யுள்ள செய்யுள்களில் 9, 10, 12, 11, 13, 16, 19. எண்ணுள்ள செய்யுள்கள் அந்தச் சாசனத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆகையால் அவற்றைத் தனியே இங்குக் காட்டவில்லை.

மகதைப் பெருமாள்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை தாலுகா, திருவண்ணாமலை, அண்ணாமலையார் கோவில், முதல் பிராகாரம் வடக்குப்புறத்துச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: 'செந்தமிழ்', மூன்றாந் தொகுதி, பக்கம் 432.

விளக்கம்: இவையும் பொன்பரப்பினானான மகதைப் பெருமாளைப்பற்றிய கவிகள்.

சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஸ்ரீ பொன்பரப்பினானான மகதைப் பெருமாள் கவி.

நாமான் அரவிந்தமான் விந்தமான் முடி நாகர்சென்னிப்
பூமான் விரும்பும் புகழ்மக தேசற்குப் போர்வழுதி
வாமா னிறையிட்ட வன்னாள் துடங்கி அவ் வானவர்தம்
கோமான் றனதென் றிரான் அமராபதி குஞ்சரமே. 1

மேருவின்மேல் வென்று கயல்பொறித்த வார்த்தையிலும்
வாரிபட வேலெறிந்த வார்த்தையிலும் - கார்விலங்கு
முன்னிட்ட வார்த்தையிலுந் தென்னவர் மாகதற்குப்
பின்னிட்ட வார்த்தை பெரிது. 2

குறிப்பு: - மகதைப் பெருமாளின் யானையைப் புகழ்கிறது முதற் செய்யுள். பாண்டியன், மகதைப் பெருமாளிடம் தோல்வியடைந் ததைக் கூறுகிறது இரண்டாவது செய்யுள்.

ஆட்கொண்டான்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை தாலுகா, செங்கமா, இவ்வூர் ரிஷபேசுவரர் கோவில் தென்புறச் சுவரில் உள்ள செய்யுட்கள்.

பதிப்பு: எண் 121. தென் இந்திய சாசனங்கள். தொகுதி ஆறு. (No. 121. S.I.I. Vol. VII.)

விளக்கம்: கண்ணனூர் ஆட்கொண்டான் என்பவர், முருகன் திருவுருவத்தை இக்கோவிலில் அமைத்ததைக் கூறுகின்றன இச்செய்யுள்கள்.

சாசனச் செய்யுள்

திருவளரும் புயன்தென் கண்ணை ஆட்கொண்ட நாயகனிற்
பொருள்வளரும் புவியிற் பொலிவெய்திப் பொருந்திடவே
யுருவளர் தோகையின் மேல்வந் துதித்தெழு ஞாயிறுபோற்
கருவளர் கந்தனைக் கற்பித் தடியிணை கண்டனனே.

பெரியுடையார் திருமேனி கல்யாணி திருமேனியாக

நீடுலகில் வாழ நிறைந்து திருவிருக்க
நாடிநெதி எய்தி நலந்திகழ - கோடுவளர்
கண்ணனூ ராட்கொண்டான் கந்தனைக் கற்பித்தா
னண்ணல் சிறுவேளன் அறிந்து.

குறிப்பு:- செய்யுள் 1. கண்ணை - கண்ணனூர். செய்யுள் 2. நெதி - நிதி, செல்வம்.

கோப்பெருஞ் சிங்கனும் ஆட்கொண்ட தேவனும்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை தாலுகா, திருவண்ணாமலை, அண்ணாமலையார் கோவில், முதல் பிராகாரம், மேற்குப் பக்கத்துச் சுவரில் உள்ளது.

பதிப்பு: எண்.69, தென் இந்திய சாசனங்கள், தொகுதி எட்டு, (No. 69. S.I.I. Vol. VIII.)

விளக்கம்: கூடலாளப் பிறந்தான் கோப்பெருஞ் சிங்கனும் அவன் மகன் ஆட்கொண்ட தேவனும் இந்தக் கோவிலுக்குச் செய்த தான தருமங்களைச் சிறப்பித்துக் கூறுகிறது இந்தச் செய்யுள்

சாசனச் செய்யுள்

கார்வளர் மேனிக் கமலக் கண்ணன்
பார்வள ருந்திப் பல்லவர் பெருமான்
சகல புவனச் சக்கர வர்த்தி
கூட லவனி யாளப் பிறந்தான்
கோப்பெருஞ் சிங்கன் குரைகழற் காடவன்

சொன்மறை யாக்கன் சுடர்வா ளெடுத்துப்
பின்வர நடந்து பிலந்திறந் தருளிய
காவலர் தம்பிரான் கண்ணா ரமுத
ரருண மால்வரைப் பெருமாள் தமக்குச்
செய்த திருப்பணி தெரிந்தெடுத் துரைப்பிற்

காதிற் கம்பியுங் கதிர்மணி மகுடமும்
செங்கதி ரெரிக்கு மங்க சுத்தமும்
பாகு வலையமும் பைம்பொற் பலதொழிற்
திருவுடை யாடையுந் திருக்கழற் கீழிடும்
பேதை பாதமும் பிறங்கிருட் கண்டமு

மிளஞா யிற்றி னெழினிறந் தோன்ற
வளர்மா ணிக்க வாளிவெயி லரும்பிய
விரிகட லவனி யாளப் பிறந்தான்
திருவா சிகையுஞ் சிங்கா சனமும்
கற்பக விருக்கமு முத்தின் பந்தலு

மோடரி மைக்க ணுமையிசை பாடி
ஆடிய வதிருங் கழற்பெரு மாளுக்
கினமா ணிக்க மிலங்கச் செய்த

பரதம் வல்ல பெருமா ளென்னுந்
திருவா சிகையுஞ் சிறந்த செங்கதி

ரொளி விளங்கு மாணிக்கமுந் துளங்கும்
வயிரமுங் கட்டிய பொலன்தருக் கூட
மஞ்சனமுங் கண்ணா ரமுதர்காமக் கோட்டத்
துண்ணா முலையா முமையவள் தனக்குப்
பருமணி நிரைத்த திருவுடை யாடையும்

வென்றிவேல் கொண்டு குன்றெறி முருகன்
செந்நிற மேனியுந் தேவியர் மேனியு
மைஞ்ஞிறத் தோகை வண்ணமு மடையப்
பொன்னிற மாக்கிய பொற்பணி பலவு
மல்லை காவல னிச்சங்க மல்லன்

பல்லவர் வேந்தன் பரதம் வல்லன்
கூட லவனி யாளப் பிறந்தான்
செய்தன விப்பணி யடங்கவு மிவன்சிறந்
தூழி காலம் வாழி இவன்மகன்
வாடா வாகைக் காடவ குமாரன்

வான்புகழ் மல்லையு மயிலையுங் காஞ்சியுந்
தண்டக நாடுந் தண்புனற் பாலியும்
பெண்ணையுங் கோவலும் மெவுகையு முடையவ
னெண்ணருஞ் சிறப்பில் யாவரு மதித்த
விருதரில் வீரன் விறல்வீ ராசனி

கரிய நாதன் காதற் குமரன்
குடதிசைக் கருநடர் தென்புலங் குறுகவும்
வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந் தழியவும்
போர்பல கடந்து பொருந்தா மன்னவ
ராரெயிற் சேர்ந்தூர் மலையர ணழித்து

நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வெல்புக ழனைத்து மேம்படத் தங்கோன்
வாகையுங் குரங்கும் விசையமுந் தீட்டிய
வடல்புனை நெடுவே லாட்கொண்ட தேவன்
கடகரி முனைமுகங் கடந்த காங்கயன்

கன்னா ரமுதர் கனங்குழை யாகத்
தன்னா மலையற் கன்புகெழு நெஞ்சில்
விருப்புடன் செய்த திருப்பணிக் கோவை
யாவையு மெடுத்துப் பாவல ருரைப்பில்
நின்ற தொல்புகழ் நிலமுழு தளித்த

வென்றி புனைதோ ளாட்கொண்ட தேவன்
வேணா வுடையா னென்னும் பெயரா
னீணாள் வாழ நிலைபெறச் செய்த
பெருமா ளமருந் திருமண் டபமும்
மருக்கமழ் கனகத் திருப்பளி யறையுந்

திருவமு தேற்றும் பெருமண் டபமும்
விரிவுடன் செய்திருக் காக்கள்ளியும்
பெருவிற லவனி யாளப் பிறந்தான்
திருமண்டபமுஞ் செழுமலர் தொடுத்த
கண்ணி வாடாது கண்ணிமை யாது

மண்மிசை நடவா வானோர் வலம்வர
வெண்மதி நிலவில் விளங்குசுட ரெரிக்கும்
படித்தள மென்னவும் படிமூன் றுக்கு
மடித்தள மென்னவு மடையா மன்னவர்
மலைத்தளம் பறித்தம் மன்னவர் சுமந்தச்

சிலைத்தளங் கொண்டு செய்தசிலைத் தளமு
மெல்லையி லுகந்தொறுஞ் செல்வந் தொலையாது
வரும்படி வகுத்த நிச்சங்க மல்லன்

பெரும்பண் டாரமும் பிறைமுடிப் பெருமா
ளின்னாள் வந்திருந் தமைதோன் றவு

முன்னா ளமைந்த முறைமை காணவும்
வாட்டடங் கண்ணியர் மலைதொறும் பலிகொளக்
காட்டிய வடிவிற் கங்காள வேடமும்
வான்முகத் தமரர் வணங்கச் செய்த
நான்முகத் தெரு நாயகி தனக்கு

மப்படி வகுத்த வணிநெடுந் தெருவுஞ்
செப்பிய கதிரவர் திசைவலம் போதும்
சோதி நன்மணி வீதிகள் இலங்கக்
கலைபயில் தவத்தோர் நிலைபெற விருக்க
மலைவகுத் தனைய காங்கயன் மடமுங்

கானிற் பயிலுங் கடவுளர் தமக்கு
வேனிற் றென்றல் வியன்பெருங் கவரி
யிருமருங் கிரட்டவு மிமையவர் துதிக்கவு
மருமணம் பெருகிய வாள்வல பெருமாள்
திருநெடுந் தோப்புந் தீர்த்த மாகிய

வமுத நன்னதி யனைத்திலுந் தூய
தமிணாடு காத்த பெருமாள் தடாகமும்
வண்டிசை பாடல் மதுமலர் வாசங்
கொண்ட காடவ குமாரன் தோப்புங்
கவின் வெம்பரிக் கதிர்வழி தடுத்த

வவனி யாளப் பிறந்தான் தோப்பும்
தலைநிகழ் சேனைத் தலைவன் தோப்பும்
வெம்மை நாளில் வெஞ்சுர னடைந்தவர்
தம்மனங் குளிரத் தண்டலை நிழற்செயு
மம்மை மடமு மைய்ய னேரியும்

வெற்பகந் துளைத்தெனக் கற்புடை யராகி
யடனெடும் பிலத்தி லமுதுவந் தெழுந்த

வடிவாள் வல்ல பெருமாள் கிணறு
மளிமுரல் கமலமு மாம்பலு மலர்ந்து
குளிர்புனற் காடவ குமாரன் தடாகமுங்
குன்று கரையன்ன கோடுயர் நெடுங்கரை
வென்று மலைகொண்ட பெருமா ளேரியுஞ்
சுரர்தரு நெருங்கிய சோலையு மொவ்வாப்
பரதம் வல்ல பெருமாள் தோப்பும்
வளஞ்மி றார்க்கு மடலிளம் பாளை
விரைகமழ் வீர ராயன் தோப்புந்
தவநெறிச் சுந்தரர் தம்பெருங் குலத்திற்
த...ற்குச் செய்து குடுத்த
கடலென நிறைந்து கார்வயல் விளைக்கும்.
விச்....சை நிச்சங்க மல்ல னேரியுங்
காங்கயன் தடாகமுங் காங்கயன் மடமும்
பூங்கமழ் சோலையும் பொற்புடன் விளங்க
யில்வகை யாவையுஞ் செய்தன னதனாற்
பாவை பாகன் சேவடித் தாமரை
யணிந்த சென்னியர் பார்க்குங் கண்ணின
ரணிந்த நீற்றின ராகம நன்நெறி
படிந்த நெஞ்சினர் பரசமையங் கடனை
கடிந்த வாணையர் கண்ணுதற் பெருமா
னாதி நாத நாய்வேடங் கொண்டு
பாய்புனற் கங்கை யாயிர முகங்கொண்
டார்த்தெழு மன்னா ளேற்றுக் கொண்ட
திருந்திய பிறைமுடி யருந்தவச் சடாதர
ராதியி லஞ்செழுத் தோதிய தொண்டரென்
றெண்ணிய நாற்பத் தெண்ணா யிரவருந்
திருவரு ளிவன்மேல் வைத்தன
ரிருநிலந் தன்னி லினிதுவாழ் கெனவே.

குறிப்பு: - 51ஆம் வரியில், ''நல்லிசைக் கடாம்புனை நன்னன்'' என்று கூறப்பட்டுள்ளது. இதில், நல்லிசைக்கடாம் என்பது சங்க காலத்து இலக்கியமாகிய பத்துப்பாட்டில் **மலைபடுகடாம்** என்னும் பாட்டாகும். மலைபடுகடாம் பாடியவர், இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங்கௌசிகனார், என்பவர். இப்பாடலைப் பெற்றவன் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னன் என்னும் சிற்றரசன்.

வரி 43. 'மெவுகைய' என்பது 'உதையு' என்றிருத்தல் வேண்டும்.

129வரி முதல் 132 வரி வரையில், சிவபெருமான் நாய்வேடங் கொண்டு கங்கையை ஏற்ற செய்தி கூறப்படுகிறது. பல்லவர் காலத்துச் சிற்பங்களில் கங்காதரமூர்த்தி உருவத்தில், சிவபெருமான் கங்கையைத் தாங்குகிற சடைக்குப் பக்கத்தில் நாயின் உருவம் இருப்பதைக் காண்கிறோம். பிற்காலத்துக் கங்காதரமூர்த்தி சிற்ப உருவத்தில் நாய் உருவம் காணப்படவில்லை. இந்தச் சாசனத்தில் நாயின் உருவம் குறிப்பிடப்பட்டிருப்பது கருதத்தக்கது.

காடவராயர்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், செய்யாறு தாலுகா, அத்தி கிராமம். இவ்வூர் அகத்தீசுவரர் கோவில், திருவுண்ணாழிகைத் தென்புறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: எண் 125. தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு. *(No. 125. S.I.I.Vol. XII.)*

விளக்கம்: தொண்டைமண்டலங் கொண்ட பல்லவாண்டாரான காடவராயரின் சிறப்பைக் கூறுகின்றன இச்செய்யுட்கள். பல்லவ அரசர்களுக்குக் காடவராயர் என்பது பெயர்.

சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஸ்ரீ. கூடல் ஆளப் பிறந்தா, ான காடவராயர் மகனார் தொண்டைமண்டலங் கொண்ட பல்லவாண்டாரான காடவராயர் கல்வெட்டு.

தங்கோ நகர்பெறத் தம்புவி தாம்பெறத் தான்வணங்கிய
செங்கோல் வளைக்கே யரிவைய ரோடும் அடியுங் கையும்
பங்கேருக மன்ன பல்லவன் காடவன் பார்முழுதா
னெங்கோ னனுமதந் தோளிலிடா மன்ன ரெம்மன்னரே. 1

பொருதிக் கிலுஞ்சென்று போர்வென்ற பல்லவன்
காடவர்கோன்
கருதிப் பொரச்சென்று சேவூரினிற் றிருக்கண் சிவக்கப்
பருதிக்கு மேலுமுயர் பிணக்குன்றிற் பரந்திழிந்த
குருதிப்புனல் தொண்டை நன்னாட்டங்கலுங்
கொண்டதுவே. 2

கூராழி யேந்திய பல்லவற்குக் கூடல் மன்னவற்குப்
பாராழி சூழ்ந்திசை பரிக்குப் பந்தி பண்டடைந்த
நீராழி வேழங்க ணீராடு மாமடு நின்றகொற்றப்
போராழி வெற்பிவன் செங்கோல் நடக்கும் பெருவழியே.
3

தொழுதிய லாமன்னர் தொண்டைத் திருநாடு
கொண்டவரூர்
கழுதிய லக்கண்ட காடவன் பல்லவன் காசினிமேற்
பழுதிய லாத்தனிச் செங்கோல் நடாத்திப் பராக்ரமஞ்சென்
றெழுதிய தூணங்க ளெண்டிசை சூழ்ந்த வெழுகிரியே. 4

கைம்மலை வெள்ளக் கடற்படைப் பல்லவன்
காடவர்தஞ்
செம்மலை வந்து பணியா வடமன்னர் சேனைவிட்டுத்
தம்மலைவிட்டுப் புறமலை வேலித் தலத்துளஞ்சா
தெம்மலை யெச்சுரத்துப் புகுவார் புக்கிருப்பதற்கே. 5

வண்டற் புனற்பெண்ணை நாடுடையான்
வடவேங் கடவெற்பன்
தொண்டைத் திருநாடு தோள்வலியாற்
கொண்ட தொண்டைமன்னன்

கண்டற் கடற்கச்சிப் பல்லவன்
காடவன் காரிருளிற்
பண்டப் பிரமவர்க் கன்பிலாப்
பொற்பதாம் புயனே.

குறிப்பு:- இச் செய்யுட்களில் மூன்றாவதான ''கூராழியேந் திய'' என்னும் செய்யுள், வடஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் தாலுகா, ரங்கம்பேட்டைக்கு அருகில் உள்ள மோரி ஜொனை என்னும் இடத்தில் ஒரு பாறைமேல் எழுதப்பட்டுள்ளது (தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு, 127-ஆம் எண் சாசனம்). அந்தச் சாசனச் செய்யுளின் மேலே சிதைந்துபோன சாசன வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. அதன் வாசகம் இது: ''கூடல் ஆளப்பிறந்தார் மகனார் தொண்ட மண்டலங் கொண்ட பல்லவாண்டாரான வீரர் வீரன் காடவராயர்......''

3-ஆம் செய்யுள். கூடல் மன்னவன் என்பது மதுரை நகரின் மன்னவன் என்பது பொருள் அன்று. இந்தக் கூடல், தென்ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கூடலூர் ஆகும்.

4-ஆம் செய்யுள். கழுது - பேய்.

5-ஆம் செய்யுள். கைம்மலை வெள்ளக் கடற்படைப் பல்லன் என்பது, யானைப் படையையும் கடற்படையையும் உடையவன் என்பது.

விடுகாதழகிய பெருமாள்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், போளூருக்கு அடுத்த திருமலை. இவ்வூர் மலைமேலுள்ள சிகாநாதசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ள குகைவாயிலின் வெளிப்புறச் சுவரில் உள்ள செய்யுள்.

பதிப்பு: எண் 75. தென் இந்திய சாசனங்கள், முதல் தொகுதி. *(No. 75. S.I.I. Vol. I.)*

விளக்கம்: சேர அரசர் குலத்தவனாகிய எழினி என்பவன், முன் ஒரு காலத்தில் இந்த மலையின்மேலே அமைத்த இயக்கன் இயக்கி

உருவங்கள் பிற்காலத்தில் பழுதடைந்து போக, அக்குலத்தில் தோன்றிய அதிகமான் விடுகாதழகிய பெருமாள் என்னும் அரசன் அவ்வுருவங்களைப் பழுது தீர்த்துப் புதுப்பித்ததோடு வெண்கல மணியொன்றைத் தானம் செய்ததையும், கடப்பேரியிலிருந்து ஒரு கால்வாயை வெட்டியமைத்ததையும் இச்செய்யுள் கூறுகிறது. இந்தச் செய்யுளுக்கு மேலே ஒரு வடமொழிச் செய்யுளும் எழுதப் பட்டிருக்கிறது.

சாசனச் செய்யுள்

சேரவம்சத்து அதிகமான் எழினி செய்த தர்ம யட்சரையும் யட்சியாரையும் எழுந்தருளுவித்து எறிமணியும் இட்டுக் கடப்பேரிக் காலுங் கண்டு குடுத்தான்.

வஞ்சியர் குலபதி எழினி வகுத்த
வியக்க ரியக்கியரோ
டெஞ்சிய வழிவு திருத்தியிவ் வெண்குண
விறைதிரு மலைவைத்தான்
அஞ்சிதன் வழிவருமவன் வழிமுதலி
அதிகன் வகன் நூல்
விஞ்சையர் தலபுனை தகடையர் காவலன்
விடுகாதழகிய பெருமாளேய்.

குறிப்பு:- இயக்கர் இயக்கியர் - யட்சன், யட்சி. இவர்கள் அருகக் கடவுளின் பரிவாரத் தெய்வங்கள். எண்குண இறை - எட்டுக் குணங்களையுடைய அருகக் கடவுள். வகன் - குபேரன். தகடை - தகடூர். இச்செய்யுளின் ஏகார ஈறு அந்தக் காலத்து வழக்கப்படி யகரமெய் பெற்றுள்ளது.

இவ்வரசர்கள், கடை எழு வள்ளல்களில் ஒருவனாகிய அதிகமான் நெடுமானஞ்சியின் மரபில் வந்தவர்கள் எனத் தெரிகின்றனர்.

குணவீர முனிவர்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், போளூருக்கு அருகில் உள்ள திருமலை என்னும் ஊர் இவ்வூர் ஏரியின் மதகில் உள்ளது இந்தச் சாசனம்.

பதிப்பு: எண் 66. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஒன்று. *(No. 66. S.I.I.Vol. I.)*

விளக்கம்: இவ்வூர் வைகைத் திருமலை என்றும், வைகாவூர் திருமலை என்றும் கூறப்படும். இது பேர்போன ஜைனத் திருப்பதி. இவ்வூர் குந்தவை ஜினாலயம் பேர்போனது.

குணவீர மாமுனிவர் என்பவர். கணிசேகர மருபொற்சூரியன் என்பவர் பெயரினால், நிலங்களுக்கு நீர் பாய இவ்வூர் ஏரியில் கலிங்கு கட்டியதை இந்தச் செய்யுள் கூறுகிறது. இந்தச் செய்யுளுக்கு மேலே, இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தி கீழ்க்கண்டபடி எழுதப் பட்டிருக்கிறது: -

'ஸ்வஸ்திஸ்ரீ. திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வெங்கை நாடுங் கங்கபாடியு நுளம்பாடியுந் தடிகைபாடியுங் குடமலைநாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர வீழமண்டலமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் எல்லா யாண்டும் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோவிராஜ இராஜசேகரி பன்மரான இராஜராஜ தேவர்க்கு யாண்டு 20 - ஆவது.''

சாசனச் செய்யுள்

அலைபுரியும் புனற்பொன்னி ஆறுடைய சோழன்
அருமொழிக்கு யாண்டு இருபத்தொன்றவ தென்றுங்
கலைபுரியு மதிநிபுணன் வெண்கிழான் கணிச் செக்
கர மருபொற் சூரியன்றன் நாமத்தால் வாம

நிலைநிற்குங் கலிஞ்சிட்டு நிமிர்வைகை மலைக்கு
நீடூழி இருமங்கும் நெல்விளையக் கண்டோன்
கொலைபுரியும் படைஅரைசர் கொண்டாடும் பாதன்
குணவீர மாமுனிவன் குளிர்வைகைக் கோவேய்.

குறிப்பு: - பொன்னி ஆறு - காவேரி ஆறு. கலிஞ்சு - கலிங்கு.

கோப்பெருஞ் சிங்கன்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி தாலுகா, வாயலூர். இவ்வூர் ஏரி கரைமேல் உள்ள கல்லில் எழுதப்பட்டுள்ள செய்யுட்கள். இந் வாயலூர், செங்கற்பட்டிலுள்ள வாயலூர் அன்று. இது தெள்ளாற்றி லிருந்து 12 மைல் தூரத்தில் உள்ளது.

பதிப்பு: இந்திய சாசனங்கள், தொகுதி இருபத்து மூன்று, பக்கம் 174 - 182 (Epigraphia Indica Vol. XXIII. Page 174 - 182.)

விளக்கம்: கோப்பெருஞ் சிங்கன் என்னும் பல்லவ அரசன், தெள்ளாறு என்னும் ஊரில் சோழ அரசனுடன் போர் செய்து அவனை வென்றுச் சிறைபிடித்து வைத்ததையும், அவனுடைய வீரத்தையும் புகழ்ந்து பேசுகின்றன இந்தச் செய்யுட்கள். இந்தத் தெள்ளாற்றுப் போர், மூன்றாம் நந்தி வர்மன் என்னும் பல்லவ அரசன் பாண்டியனுடன் செய்த தெள்ளாற்றுப் போர் அன்று. இது பிற்காலத்தில் நடந்த போர்.

ஸ்வஸ்திஸ்ரீ. சகலபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ கோப்பெருஞ் சிங்கன் சோழனைத் தெள்ளாற்றில் வென்று சகல பரிச்சின்னமுங் கொண்டு சோழனைச் சிறையிட்டு வைத்து சோணாடு கொண்ட அழகிய சீயன்.

பொன்னி நாடனு முரிமையும் அமைச்சரு
மிருப்பதுன் சிறைக்கோட்டம்
பொருப் பிரண்டென வளர்ந்த தோள்
வலியினாற் கொண்டு சோணாடு

கன்னி காவிரி பகீரதி நின்பிரியா
தெண்டுறை வாவி காவல்
மன்னவர் திரையுட னுணங்குவ
துன்பெருந் திருவாசல்

வென்னிடாத போர்க் கன்னடர் வென்னிடப்
பொருததுன் பெருஞ்சேனை
விளங்கு செம்பொனி னம்பலக் கூத்துநீ
விரும்பிய தேவாரம்

பின்னி காவல அவனி நாராயண
பேணு செந்தமிழ் வாழப்பிறந்த
காடவகோப் பெருஞ்சிங்க நின்
பெருமை யார் புகழ்வாரேய். 1

திரையிட் டிருமின்கள் தெவ்வேந்தர் செம்பொன்
திரையிடாப் பூம்புகார்ச் சோழன் - சிறைகிடந்த
கோட்டந்தனை நினைமின் கோப்பெருஞ்சிங்கன் கமல
நாட்டங் கடைசிவந்தநாள். 2

மீளிவன் கொண்ட விடைவேந்தர் மார்பினும்
தோளினுந் தீட்டிய தொண்டை மன்னவர்
வாளில் வென்றிடு சிறைவளவன் தூங்கிய
நாளினும் பெரியதின் னாளெனப் புலம்புமே. 3

அறைகடலி னிசையுடனே யண்டர் வேயினாம்
பல்லிசை செவிகவர அந்திமாலை
நிறைமடியி னிலவென்னு நெருப்புப் பட்டால்
நீரிலை நின்றாற்றுவளோ நிருபதுங்கா
பிறைபொருத கனமகர கிம்புரிவன் கோட்டுப்
பெருங்களிற்றுச் சோழனையு மமைச்சரையும்
பிடித்துச்

சிறையிலிடக் களிறுவிடு மிண்டன் சீயா
திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே. 4

ஒருநாளும் விடியாத நெடிய கங்கு
லூழியென நீண்டுவர உலகிற் புன்கண்
மருண்மாலை யிதுமுன்னே வந்ததென்றால்
மடந்தையிவ ளாற்றுவளோ மல்லைவேந்தே
பொருமாலை முடியரசர் கன்னிமாதர்
போற்றிசெயும் புவனமுழு துடையார்தாமுந்
திருமாதும் புணர்புயத்து மிண்டன்சீய
திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே. 5

இது கோச் சீயன் ஆணை.

குறிப்பு: செய்யுள் 1. அவனிநாராயணன் - இது கோப்பெருஞ் சிங்கனுடைய சிறப்புப்பெயர். இவனுடைய முன்னோனான தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனுக்கும் இந்தச் சிறப்புப் பெயர் உண்டு. பின்னி - பெண்ணையாறு; தென்பெண்ணையாறு. இச்செய்யுளின் ஈற்றுச்சொல், யகரமெய் பெற்றுப் புகழ்வாரேய் என்றிருக்கிறது. இது அக்காலத்து முறை.

செய்யுள் 2. தெவ்வேந்திர் - பகையரசர்களே.

செய்யுள் 3. கோப்பெருஞ் சிங்கனுடைய கொடி விடைக் கொடி. அதாவது ஏற்றுக்கொடி. அவனுடைய முத்திரையும் ஏறு (எருது). இவனால் வெல்லப்பட்ட மன்னருடைய மார்பிலும் தோளிலும் இவனுடைய முத்திரையாகிய எருதின் உருவத்தை (பச்சைகுத்தி) எழுதினான். இது, அவர்களை அவமதிப்பதாகும். இவ்வாறு அவமதிக்கப்பட்ட அரசர்கள், இவனால் சிறைப்பிடிக்கப் பட்டுச் சிறைச்சாலையில் இருந்து இறந்த சோழ அரசன் பட்ட துன்பத்தைவிடப் பெரிய துன்பமாகக் கருதினார்கள் என்பது இச்செய்யுளின் கருத்து. போரில் வெற்றிபெற்ற அரசர், தமது முத்திரையைத் தோற்ற அரசரின் மார்பிலும் தோளிலும் பொறிப்பது அக்காலத்து வழக்கம்.

செய்யுள் 4. திரிபுவனத் திராசாக்கள் தம்பிரான் - சோழ அரசர் களின் தலைவன். சோழ அரசர்கள் தம்மைத் திரிபுவன சக்கரவர்த்திகள் என்று கூறிக்கொள்வது வழக்கம். கோப்பெருஞ்

சிங்கன், சோழனைப் போரில் வென்று அவனைச் சிறை வைத்துச் சோழநாட்டை யரசாண்டபடியினாலே, திரிபுவனத்திராசாக்கள் தம்பிரான் என்று புகழப்படுகிறான்.

செய்யுள் 5. மல்லை - மாமல்லபுரம். இப்போது மகாபலிபுரம் என்று வழங்கப்படுகிறது. இது, பண்டைக்காலத்தில் பல்லவ அரசர்களின் துறைமுகப்பட்டினம். சீயன் - சிங்கன்; அதாவது கோப்பெருஞ் சிங்கன்.

கோப்பெருஞ் சிங்கன் என்னும் பெயருடைய பல்லவ அரசர்கள் இருவர் இருந்தனர். அவ்விருவரில் இந்தப் கோப்பெருஞ் சிங்கன் முதலாமவன். இவன், ஏறத்தாழ கி.பி. 1232-இல் சிம்மாசனம் ஏறினான் என்பர். தெள்ளாற்றுப் போரிலே இவனால் சிறைப் பிடிக்கப்பட்ட சோழன், கி.பி. 1216-இல் முடிசூடிக்கொண்ட மூன்றாம் இராஜராஜன் என்பர்.

வீரவீர ஜினாலயம்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், ஆரணி தாலுகா, பூண்டி, இவ்வூர் பொன்னிநாதர் ஆலயம் என்னும் ஜைனக் கோவிலின் மேற்குப்புறச் சுவரில் உள்ள சாசனச் செய்யுள்

பதிப்பு: எண் 62. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. *(No. 62. S.I.I.Vol.VII.)*

விளக்கம்: இந்த அழகான அகவற்பா, ஒரு அரசன் வீரவீர ஜினாலயத்துக்குத் தானருதருமங்கள் செய்ததைக் கூறுகிறது. வீரவீர ஜினாலயம் என்பது பொன்னிநாதர் கோவில். இந்தச் செய்யுளின் இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

சாசனச் செய்யுள்

சிறப்பருளிக்
கொற்றவன் மகிழ்ந்த கொள்கைய னாகி
மெய்த்தவத் தீர்க்கு வேண்டுவ தியாதென

அத்தவ னுரைப்போ னின்னகன்றலை ஞாலத்துச்
செயங்கொண்ட சோழ மண்டலந் தன்னிற்
பயன்படு சோலைப் பல்குன்றக் கோட்டத்து
வேண்டியது சுரக்கு மெய்யூர் நாட்டுப்
பூண்டி யென்பது காண்டகு திருநகர்
சீயன் சம்புமன் திரு....ற மாப்பொய்
காலத்துப் புரந்துடன் வந்தது
அறநெறி வளர வருணமக் கென்ன
மறமலி தானை மன்னர் மன்னன்
சினவரன் றனக்குச் சொம்பொற் கோயி
னிவன்தக வருளிநின்று நீடு விளங்க
வீர வீர சினாலய மென்றுதன்
பெயர்பொறித் தமைத்துப் பெருஞ்சிறப் பியற்றி
முனிகள் பூண்டியென் றினிதினி னடப்ப
வெல்லை தழுவிய விரும்பே டுட்பட
நல்லறந் தழைப்ப நன்கமைத் தனனே
அஃதான்று
அணிநக ரகன்பெய ரெல்லை யாவதுங்
கணியிலுப் பைக்குக் காண்டகு மேற்கு
நெருநற் பார்க்கத் தெல்லை வடமேற்கும்
பொருநற் குன்றிப் புனல்யாற்றின் வடக்குங்
குலாமலி குண்டிகைத் துறைக்கு வடகிழக்கு
மிலாறை யாதித்த மங்கலத் தெல்லைக்கேய் கிழக்கு
மிரும்புனற் பொய்கை மெயூரெல்லை..ந்த
தென்கிழக்கு
மல்லற் றொல்சீர் மறையோ ராதை
யெல்லை நிலத்துக் கியைந்த தெற்கு
மிவ்வாத னூரி லகன்பெய ரெல்லையிற்

பீலி மடுவிற்குப் பிறங்குதென் மேற்கு
மெண்டிசை மருங்கினு மியன்ற வெல்லையிற்
குண்டிகைக் கல்லு நாட்டிக் கண்கவர்.
கொல்லை நன்னிலங் குறைவின்றி விரிந்....
னெல்லை முற்று மிறையும் வரியு

மந்த ராயமு மாயமு மமஞ்சியும்
வந்தன பிறவு மாற்றி வளமலி
மாளிகை யெடுக்கவு மணிக்குலை கமுகு
நாளி கேரமு நன்குட னாக்கவுங்
கரும்புஞ் செந்நெலு மொருங்குட னடவுஞ்

சண்பகந் தமனகஞ் சாதி கேதகை
வண்கழு நீருடன் மலர்பல வியற்றவும்
....ஞ் செக்கு மமைக்கவு மருளிச்
சாலையுந் தவமுந் தருமமுந் தழைப்பச்
செம்பிலுங் கல்லிலுஞ் செய்து தன்புக
ழலர்கதி ரளவுஞ் செல்ல
மலர்தலை யுலகின் வாழ்வமைத் தனனே.

குறிப்பு:- வரி 5. செயங்கொண்ட சோழ மண்டலம் - தொண்டை மண்டலம். வரி 13. சினவரன் - ஜினன், அருகன். வரி 15. சினாலயம் - அருகன் கோவில்.

ஆலத்தூர் திவாகரன்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம். குடியாத்தம் தாலுகா, திருவல்லம். இவ்வூர் பில்வநாதேசுவரர் கோவிலின் மகா மண்டபத்துத் தென்புறச் சுவரில் உள்ள செய்யுள் சாசனம்.

பதிப்பு: எண் 325. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. (No. 325. S.I.I.Vol. IV.)

விளக்கம்: வல்லத்துப் பில்வநாதேசுவரர் கோவில் முற்காலத்தில் திருவல்லத்து ஆழ்வார் கோயில் என்று பெயர் பெற்றிருந்தது. இக்கோவில் பூசைக்காக ஆலத்தூர் திவாகரன் என்பவர் தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

ஆலத்தூ ராளி திவாகரன்தான் செய்வித்தான்
பாலொத்த வெள்ளி நாற்பதின் கழஞ்சால் - சோலைத்
திருவலத்தே யாழ்வார் திருப்பலிக்குச் செல்வம்
வருநலத்தான் கொள்கைதான் மற்று.

திருவுண்ணாழிகையார் வசம்.

குறிப்பு: - திருவலத்தே - திருவல்லத்தே. திருவுண்ணாழிகை - அகநாழிகை; அதாவது கருப்பக்கிருகம். 'திருவுண்ணாழிகை உடையார் வசம்' என்பது, கருப்பக்கிருகத்தில் பூசை செய்யும் குருக்களிடம் இந்தத் தர்மம் ஒப்படைக்கப்பட்டது என்பது கருத்து.

குராமரம்

இடம்: செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலுகா, திருப்பருத்திக்குன்று கிராமம். திரைலோக்யநாதர் என்னும் ஜைனக் கோவிலின் ஒரு மேடைமீது உள்ள சாசனம்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு, எண் 399. *(No. 399. S.I.I.Vol. VII.)*

விளக்கம்: இந்தக் கோவிலில் உள்ள குராமரத்தைப் புகழ்கிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

தன்னளவிற் குன்றா துயராது தண்காஞ்சி
முன்னுளது மும்முனிவர் மூழ்கியது - மன்னவன்தன்
செங்கோல் நலங்காட்டுந் தென்பருத்திக் குன்றமர்ந்த
கொங்கார் தருமக் குரா.

குறிப்பு: - குரா என்பது குராமரம். கோரா மரம் என்றும் கூறப் படுகிறது. மும்முனிவர் யாவர் என்பது தெரியவில்லை. மல்லிசேனர் என்னும் வாமன முனிவரும், அவர் சீடர் புஷ்பசேனரும் இங்கு இருந்தனர் என்பது சாசனங்களினால் தெரிகிறது.

சுந்தரபாண்டியன்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கிழக்குக் கோபுரவாயிலின் வலதுபுறச் சுவரில் உள்ளவை.

பதிப்பு: எண் 618. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. *(No. 618. S.I.I.Vol. IV.)*

விளக்கம்: சுந்தரபாண்டியனின் வெற்றிச் சிறப்பைக் கூறுகின்றன.

சாசனச் செய்யுள்

காரேற்ற தண்டலைக் காவிரி நாடனைக் கானுலவுந்
தேரேற்றி விட்ட செழுந்தமிழ்த் தென்னவன்
சென்றெதிர்ந்து
தாரேற்ற வெம்படை யாரியர் தண்டுபடத் தனியே
போரேற்று நின்ற பெருவார்த்தை யின்றும்
புதுவார்த்தையே.

பண்பட்ட மென்மொழிப் பைந்தொடி கொங்கையர்க்
கவைமேற்
கண்பட்ட முத்தவடங் கண்டு காக்கிலன் காடவர்கோன்
எண்பட்ட சேனை யெதிர்பட் டொழுக வெழுந்த
புண்ணீர்
விண்பட்ட டலையப் படைதொட்ட சுந்தர மீனவனே.

குறிப்பு:- செந்தமிழ்த் தென்னவன் - சடாவர்மன் சுந்தர பாண்டியன் *I*.

செய்யுள் 2. காடவர்கோன் - பல்லவ அரசன்; இவன் கோப் பெருஞ் சிங்கன் போலும். சுந்தர மீனவன் - சுந்தர பாண்டியன் I.

சுந்தரபாண்டியன்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கிழக்குக் கோபுரவாயிலின் வலதுபுறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: எண் 619, தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. (No. 619. S.I.I. Vol. IV.)

விளக்கம்: சுந்தரபாண்டியன் வென்ற போர்க்களத்தின் உவமை.

சாசனச் செய்யுள்

வட்ட வெண்குடை மன்னர் தம்புகல்
கொண்டு மாமுடி கொண்டுபோர்
மாறு கொண்டெழு போசளன் தடை
கொண்டு வாணன் வனம்புகத்

தொட்ட வெம்படை வீரன் வெற்றி
புனைந்த சுந்தர மாறன்முன்
சூழி விட்ட தெலிங்கர் சேனை
துணித்து வென்ற களத்துமேல்

விட்ட வெம்படி பட்ட பொழுதெழு
சோரி வாரியை யொக்குநீர்
மேல் மிதந்த நிணப் பெருந்திரள்
வெண் ணுரைத்திர ளொக்குமுன்

பட்ட வெங்கரி யந்த வீரர்
படிந்த மாமுகி லொக்கும்வீழ்
பருமணிக் குடை யங்கு வந்தெழு
பருதி மண்டல மொக்குமே.

குறிப்பு:- சுந்தர மாறன் - சுந்தரபாண்டியன். இவன் தெலிங் கருடன் செய்த போர்க்களத்தின் வர்ணனை இச்செய்யுள். குதிரைப் படை சிந்திய இரத்தம் கடலையொத்தது. நிணப்பெருந்திரள் இரத்தக் கடலில் தோன்றும் நுரை போன்றன. போரில் இறந்த யானைகள், கடல்நீரைப் பருகும் மேகம் போன்றிருந்தன. தோற்றோடிய அரசன் போட்டுச் சென்ற வெண்கொற்றக்குடை, கடலிலிருந்து தோன்றுகிற சூரியனைப் போன்றிருந்தது என்பது கருத்து.

சுந்தரபாண்டியன்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம். சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கிழக்குக் கோபுரவாயிலுக்குள் வலது புறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: எண் 620. தென் இந்திய சாசனங்கள். தொகுதி நான்கு. *(No. 620. S.I.I. Vol. IV.)*

விளக்கம்: சுந்தரபாண்டியன் என்னும் பாண்டிய அரசன், தில்லைச் சிற்றம்பலத்தில் துலாபாரம் ஏறித் தன் எடைக்குச் சரியாகப் பொன்னையும் முத்தையும் நிறுத்துத் தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது. முதல் அடியில் இரண்டு எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

சாசனச் செய்யுள்

இனவ....கம்புரி வெண்பிறைக் கோட்டிகல்
வெங்கடுங்கட்

சின மதத்த வெங்கரிச் சுந்தரத் தென்னவன்
தில்லைமன்றில்

வனசத் திருவுடன் செஞ்சொற் றிருவை மணந்ததொக்கும்
கனகத் துலையுடன் முத்தத் துலையிற் கலந்ததுவே.

குறிப்பு:- சுந்தரத் தென்னவன் - சடாவர்மன் சுந்தர பாண்டியன்.I இவன் கி.பி. 1251-1271 வரையில் அரசாண்டான். சிதம்பரக் கோவிலின் மேற்குக் கோபுரத்தை அமைத்தவன் இவன். வனசத் திரு - செந்தாமரையில் உள்ள திருமகள். செஞ்சொற்றிரு - சொல்லின் செல்வியாகிய கலைமகள்.

சோழகுலவல்லி

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கிழக்குக் கோபுரவாயிலுக்குள் வலது புறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: எண் 621. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. (No. 621. S.I.I.Vol. IV.)

விளக்கம்: திருமூலத்தானமுடையான் என்பவர் இச்செய்யுட் களை இயற்றினார்.

சாசனச் செய்யுள்

ஓதுஞ் சகரர் யாண்டோ ரொருபத்தெட்டில்
மேலாதி மூலநாளி லானிதனில் - சோதி
துளங்கிலமேல் சோழன் சோழகுல வல்லி
களங்கமற வைத்தான் கரு. 1

வண்ணந் திகழுங் கொடியாட மன்னுஞ் சோழ குலவல்லி
நண்ணுந் தலைமை யுடையாரை நாமார் புகழப் பாமாலை
யெண்ணும் படியில் புகழாளர் என்றே யன்றே
யென்னுடைய
கண்ணும் பழனக் கழுமலமுங் கலந்தார்த் திருவ
மலந்தாரேல்.

திருமூலத்தான முடையான்.

குறிப்பு:- சோழகுல வல்லி - கோப்பரகேசரி வர்மனான இராஜேந்திர சோழதேவரின் மடைப்பள்ளி உத்தியோகஸ்தன் பெயர்.

விக்கிரம பாண்டியன்

இடம்: தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கீழைக்கோபுரத்துத் தெற்குக் கதவு நிலையில் உள்ள செய்யுள்.

பதிப்பு: 'செந்தமிழ்', நான்காந் தொகுதி; பக்கம் 493.

விளக்கம். விக்கிரம பாண்டியனின் யானையைப் புகழ்கிறது.

சாசனச் செய்யுள்

மீனவற்கு விக்கிரம பாண்டியற்கு வேந்தரிடும்
யானை திருவுள்ளத் தேறுமோ - தானவரை
வென்றதல்ல மேனிநிறம் வெள்ளையல்ல செங்கனகக்
குன்றதல்ல நாலல்ல கோடு.

குறிப்பு:- இந்த அரசன் சடையவர்மன் விக்கிரம பாண்டியன் என்பவன். இவன், கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்தவன்.

சுந்தரபாண்டியன்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம், நடராசர் கோவில் கீழைக்கோபுரத்துத் தெற்குக் கதவு நிலையில் உள்ள செய்யுட்கள்.

பதிப்பு: 'செந்தமிழ்', நான்காந் தொகுதி: பக்கம் 492, 493.

விளக்கம்: சுந்தர பாண்டியனின் வெற்றிச் சிறப்பைக் கூறுகின்றன.

சாசனச் செய்யுள்

மீளா வழிசெல்ல வேணாடர் தங்களை வென்றதடந்
தோளான் மதுரைமன் சுந்தர பாண்டியன் சூழ்ந்திறைஞ்சி
யாளான மன்னவர் தன்னேவல் செய்ய வவனிமுட்ட
வாளால் வழிதிறந் தான்வட வேந்தரை மார்திறந்தே. 1

கொங்க ருடல் கிழியக் குத்தியிரு கோட்டெடுத்து
வெங்க ணழலில் வெதுப்புமே - மங்கையர்கண்
சூழத் தாமம்புனையுஞ் சுந்தரத்தோள் மீனவனுக்
கீழத்தா னிட்ட இறை. 2

வாக்கியல் செந்தமிழ்ச் சுந்தர பாண்டியன் வாளமரில்
வீக்கிய வன்கழற் கண்ட கோபாலனை விண்ணுலகிற்
போக்கிய பின்பவன் தம்பியர் போற்றப் புரந்தரசி
லாக்கிய வார்த்தை பதினா லுலகமு மானதுவே. 3

குறிப்பு:- சுந்தரபாண்டியன் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்தவன். வீரகண்ட கோபாலன், கணபதி என்னும் காகதீய அரசர்களை வென்றான். 3-ஆம் செய்யுளில் கூறப்படும் 'கழற்கண்ட கோபாலன்' என்பவன், வீரகண்ட கோபாலன் ஆவான்.

நரலோக வீரன்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் முதல் பிராகாரத்தின் வெளிப்பக்கம், வடபுறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: எண் 225. தென் இந்திய சாசனங்கள். தொகுதி நான்கு. (No. 225. S.I.I.Vol.IV.)

விளக்கம்: இந்தச் செய்யுள்களுக்கு மேலே வட மொழிச் செய்யுள்களும் உள்ளன. தமிழ்ச் செய்யுட்கள் கூறுவதையே வட மொழிச் செய்யுள்களும் கூறுகின்றன. இச்செய்யுட்கள், முதலாங் குலோத்துங்கச் சோழனின் சேனைத் தலைவனாகிய நரலோகவீரன், திருச்சிற்றம்பலத்தில் செய்த திருத்தொண்டுகளைக் கூறுகின்றன. நரலோகவீரன் குலோத்துங்கச் சோழன், விக்கிரம சோழன் என்னும் இரண்டு அரசர்கள் காலத்திலும் இருந்தான்.

சாசனச் செய்யுள்

எல்லை கடலால் இகல்லெந் தணக்க வந்த
செல்வமெலாம் தில்லைச் சிற்றம்பலத்து - தொல்லைத்
திருக்கொடுங்கை பொன்மேந்தான் திண்மைக் கலியின்
தருக்கொடுங்க வெல்கூத்தன் தான். 1

தில்லையில் பொன்னம்பலத்தைச் செம்பொனால்
மேந்துவா
னெல்லையைப் பொன்னாக்கினா னென்பரால் - ஒல்லை
வடவேந்தர் செல்வமெலாம் வாங்க வேல்வாங்கும்
குடைவேந்தர் தொண்டையார் கோன். 2

தென்வேந்தர் கூநிமிந்த செந்தமிழர் தென்கோயில்
பொன்மேந்து திக்கைப் புகழ்வேந்தா னொக்கும்
குற்றம்பல கண்டோன் கோலிழைக்கு வெல்கூத்தன்
சிற்றம் பலத்திலே சென்று. 3

பொன்னம்பலக் கூத்தாடு மிடம் பழமரைவில்
பொன்னம்பலக் கூத்தர் பொன்மேந்தார் - தென்னர்
மலைமன்னர் ஏனை வடமன்றக் குலமன்னர்
செல்வ மெலாம் கொண்டு. 4

தில்லைச்சிற் றம்பலத்தே பேரம்பலந் தன்னை
மல்லற் கடற்றான் வாழ்கூத்தன் - வில்லவுதொ
நம்புசேர் வெஞ்சிலையின் ஆற்றலனை மாற்றியகோன்
செம்பு மேவித்தான் தெரிந்து. 5

ஏனை வடவரைசர் இட்டிடைந்த செம்பொனால்
ஏனலென தில்லை நாயகற்கு - ஆனை
சொரிகலமா மாமயிலை தொண்டையர்கோன் கூத்தன்
பரிகலமாச் செய்தமைத்தான் பார்த்து. 6

தெள்ளு புனற்றில்லைச் சிற்றம்பலத் தார்க்கு
தள்ளி எதிரம்பலந் தாதம்பாதம் - புள்ளுண்ண
நற்பிக்கம் கொண்ட நரலோக வீரன்செம்
பொற்படிக்கம் கொண்டான் புரிந்து. 7

இட்டான் எழில்தில்லை. எம்மாற் கிசைவிளங்க
மட்டார் பொழில்மணவில் வாழ்கூத்தன் - ஒட்டாரை
இன்னமற்ற நித்தான நேற்றினான் நீண்டொளிசேர்
செம்பொற் றனிக்காளம் செய்து. 8

ஆடுந் தனித்தேனுக்கு அம்பலத்தே கர்ப்பூரம்
நீடுந் திருவிளக்கு நீடமைந்தான் - கூடா
ரடிக்கத்தினை நரியும் புள்ளும்
கடிக்கத் பெருங்கூத்தன் தான். 9

பொன்னம்பலம் சூழப் பொன்னின் திருவிளக்கால்
மன்னுஞ் திருச்சுற்று வந்தமைத்தான் - தென்னவர்தம்
பூபெறு வார்குழலா ரொடும் பொருள் பெரு
மாவேறு தொண்டையார் மன். 10

சிற்றம் பலத்தானை ஏற்றினா ரெவ்வடத்து
போற்றாத தால்வந்த கொழுநெதியால் - பற்றொக்கு
கட்ட வஞ்சனம் வெலுகார் மணவில் கூத்தன்திருக்
கட்ட வஞ்சநமாஞ் செய்து. 11

தொல்லைப் பதித்தில்லைக் கூத்தற்குத்
தொண்டையர்கோன்
எல்லைத் திசைக்கரிகள் எட்டளவும் - செல்லப்போய்
சாலமுதுபேய் தடிக்க தாறட்டிகத்தங்கு
தொண்டையர்கோன்
பாலமுது செய்வித்தான் பரிந்து. 12

ஆடுந் தெளிதேனை ஆயிரநாழி நெய்யால்
ஆடம்படி கண்டான் அன்றினார்கள் - ஓடுந்
திறங்கண்ட நாளன் சினக்களிற்றான் ஞால
மறங்கண்ட தொண்டையர்கோன் ஆங்கு. 13

நட்டப் பெருமான் நாமஞானங் குழைந்தளித்த
சிட்டப் பெருமான் திருப்பதியம் - முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான் தெவ்
வேந்தர்கெட
வாட்டிக்கும் தொண்டையர்கோன் மன். 14

மல்லக் குலவரையால் நூற்றுக்கால் மண்டபத்தே
தில்லைப் பிரானுக்குச் செய்தமைத்தான் - கொல்ல
மழிவுகண்டான் சேரன் அளப்பரிய ஆற்றற்
கிழிவுகண்டான் தொண்டையார்கோ னேறு. 15

தில்லைப் பெரிய திருச்சுற்று மாளிகை
எல்லைக் குரைவரைபோ லீண்டமைத்தான் -
தொல்லைநீர்
மண்மகளைக் கங்கோன் மதிக்குடைக்கீழ் வீற்றிருத்தி
உண்மகிழும் தொண்டையர்கோ னுற்று. 16

புட்கரணி கல்சாத்து வித்தான் பொற் கோயிலின்வாய்
விக்கரணம் பார்ப்படந்ததன் மேல்விதித்து - திக்களவு
மாநடத்திக் கோல்நடத்தும் வாள்கூத்தன் மண்ணில்லறம்
தாநடத்தில் நீடுவித்தான் தான். 17

வீதிசூழ் நல்விளக்கும் வீற்றிருக்க மண்டபமும்
மாதுசூழ் பாதமும் மகுழ்ந்தார்க்குப் - போதுசூழ்
தில்லைக்கே செய்தான் திசைகளிறு போய்நிற்கும்
எல்லைக்கே செல்கலிங்க ரேறு. 18

நடங்கவின்கொ ளம்பலத்து நாயகச் செந்தேனின்
னிடங்கவின்கொள் பச்சையிளந் தேனுக் - கடங்கார்
கருமாளி கைய்மேல் பகடுதைத்த கூத்தன்
திருமாளிகை யமைத்தான் சென்று. 19

எவ்வுலகும் எவ்வுயிரு மீன்று மெழிலழியாச்
செவ்வியாள் கோயில் திருச்சுற்றைப் - பவ்வஞ்சூழ்
எல்லைவட்டன் தங்கோற் கியல்விட்ட வாட்கூத்தன்
தில்லைவட்டத்தே யமைத்தான் சென்று. 20

வாளுடைய பொற் பொதுவின்மன் நடந்தன னடமாடும்
ஆளுடைய பாவைக் கவிஷேகம் - வேளுடைய
பொற்பினான் பொன்னம்பலக் கூத்தன் பொங்குசட
வெற்பினாற் சாத்தினான் வேறு. 21

சேதாம்பன் வாயுமைக்குந் தில்லையந் தேவிக்கும்
பீதாம்பரஞ் சமைத்தான் பேரொலிநீர் - மோதா
வலைகின்ற வெல்லை யபயனுக்கே யாக
மலைகின்ற தொண்டையார் மன். 22

செல்வித் திருந்தறங் கண்ணா னகரித் தில்லைக்கே
நல்லமகப்பா லெண்ணை நாள்தோறும் - செல்லத்தான்
கண்டா னரும்பையர்கோன் குண்ணக்கநீர்
ளஞாலமெல்லாங்
கொண்டான் தொண்டையர் கோன். 23

பொன்னுலகு தாம் புலியூர் தொழுவதற்கு
குன்னிழி கின்ற சொக்கமால் - தென்னர்
....டாமற் செகுத்த கூத்தன் செம்பொன்னின்
கொடிபுறஞ் செய்த குமா. 24

ஆதிசெம்பொன் னம்பலத்தி லம்மா னெழுந்தருளும்
வீதியும்பொன் மேய்ந்தெனனாய் மேல்விளக்கும் -
சோதிக்
கொடியுடைத்தா பொன்னால் குறுகவலான் ஒன்றும்
படியமைத்தான் தொண்டையர்கோன் பார்த்து. 25

நாயகர் வீதி எழுந்தருளும் நன்னாளால்
தூய கருவெழு தூபத்தால் - போய்யொளிசேர்
வான்மறைக் கண்பானிம் பண்மகவன் வண்புகழால்
தான்மறைக் கூத்தன் சமைத்து. 26

பாருமைய் மொட்புச் செய்வீர் சீரியர்
திருவுருவ மான திருக்கோலம் - பெருகொளியால்
காட்டினான் தில்லைக்கே தாசந்வாய் வெங்கலியை
ஓட்டினான் தொண்டையர் கோன். 27

என்றுஞ் சிற்றம்பலத் தெங்கோமா னந்தி
சங்கொடு முலகேத்தச் சாந்தமைத்தான் - கல்லுவந்

துயினக் கொள்வீர் கொள்வொன்னல் வெல்களெர்களிரி
வளித்திடு தொண்டையர்கோன் வென்று. 28

மன்னுந் திகழ் தில்லைக்கே வாணிக்க சகணத்
துன்னுபொழில் மணவில் தொண்டைமான் - என்றுந்
துண்ணக் கண்டான் இகல்வேந்த ராகம்பருந்
துண்ணக் கண்டான் பரிந்து. 29

தில்லைத் தியாகவல்லி விண்சிற்பஞ் சவினி
எல்லைநிலங் கொண்டிறை யிழிச்சி - தில்லை
மறைமுடிப்பார் வீதி மடஞ்சமைத்தான் மண்ணோர்
குறைமுடிப்பார் தொண்டையர் கோ. 30

என்றும் பெறுதலால் ஏறாவிழிற் புலியூர்
மன்றி னடனுக்கு மாமத்தக் - குன்று
குடுத்தருளி மண்ணிற் கொடுங்கலி வாராமே
தடுத்தான் தொண்டையர்கோன் றான். 31

முத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவர்
ஒக்கமைத்த செப்பேட்டி னுள்ளினெழு - தித்தலத்தி
லெல்லைக் கிரிவா யிசை யெழுதினான் கூத்தன்
தில்லைச் சிற்றம்பலத்தே சென்று. 32

தில்லை வளரும் தெளிதே னொளிதழைப்ப
நல்ல திருநந்தா வனஞ்சமைத்த - வில்லித்திருக்
கோட்டங்கொள் வாழ்வேந்தர் கொற்றக் களியானை
யீட்டங்கொள் காலிங்க ரேறு. 33

நூறாயிர முகமாங் கமைத்தான் னோன்சினத்தி
பாறாக வெல்களிற்று வாட்கூத்தன் - கூறாளும்
வல்லிச் சிறுகிடைக்குக் கான்வளர் நாடஞ்செய்
தில்லைச் சிற்றம்பலத்தே சென்று. 34

மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும்
மாசற்ற வற்றைப் பெருவழியும் - ஈசற்குத்

தென்புலியூர்க்கே யமைத்தான் கூத்தன் திசையனைத்து
மன்புலி யாணை நடக்கறை யத்து. 35

ஓங்கியபொன் னம்பலத்தார்க் கோராயிரஞ் சுரவி
ஆங்களித்தா னேற்றெதிர்ந்தா ராழிழையார் - தாங்கா
தொக்கி உடலாவி யுயிர்நாட் போக்கி
இருக்கின்ற தொண்டைய ரேறு. 36

தொல்லோர் வாழ்தில்லைச் சுடலையமர்ந்தார் கோயில்
கல்லால் எடுத்தமைத்தான் காசினியிற் - பொலன்
மறைவளர்க்க வெங்கலியை மாற்றி வழுவாம
லறம்வளர்க்கக் காலிங்க னாய்ந்து. 37

தில்லை மூவாயிரவர் தங்கள் திருவளர
எல்லையில் பேரேரிக் கெழில்மதகு - கல்லினால்
தானமைத்தான் தெவ்வேந்தர்க் கெல்லாங் கலந்தவீர
வானமைத்தான் தொண்டையார் மன். 38

ஹர உ இது வெட்டுவித்தான் காலிங்கராயர் ஆண்ட அரசு.
அற மறவற்க அறமல்லது துணையில்லை.

திருச்சிற்றம்பலம். உ

குறிப்பு - சாசனத்தைப் பொறித்த சிற்பியின் தவறுதலினால், சில செய்யுட்களில் பொருள் விளங்காதபடி எழுத்துக்கள் அமைந்துள்ளன. அவை சாசனத்தில் உள்ளபடியே அச்சிடப்பட்டுள்ளன. 24-ஆம் செய்யுளில் மூன்றாம் அடியில் சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன. 1,2,4-ஆம் செய்யுட்களில் ''மேந்தான்'' என்றிருப்பது வேய்ந்தான் என்றிருத்தல் வேண்டும்.

இச்செய்யுட்களில் கூறப்படுகிற நரலோக வீரன், தொண்டையர்மன், காலிங்கன், கூத்தன் என்னும் பெயர்களையுடையவன்.

செய்யுள் 15, நரலோக வீரன் தில்லைச் சிற்றம்பலத்தில் நூற்றுக்கால் மண்டபத்தை அமைத்ததை இச்செய்யுள் கூறுகிறது. இந்த மண்டபத்திற்கு ஸ்ரீ விக்கிரமசோழன் திருமண்டபம் என்று

பெயர் சூட்டினான். இந்த மண்டபத்துத் தூண்கள் சிலவற்றில் இன்றும், ''ஸ்ரீ விக்கிரம சோழன் திருமண்டபம்'' என்று எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

செய்யுள் 22. இதில், அபயன் என்பது முதலாம் குலோத்துங்கச் சோழனை.

விக்கிரம பாண்டியன்

இடம்: தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கீழைக்கோபுரத்து வடக்குப் பக்கச் சுவரில் எழுதப்பட்டுள்ளவை.

பதிப்பு: 'செந்தமிழ்', நான்காந் தொகுதி: பக்கம் 493, 494.

விளக்கம்: விக்கிரம பாண்டியன் வெற்றிச் சிறப்பைக் கூறுகின்றன.

சாசனச் செய்யுள்

ஏந்து மருவி யிரவி புரவியின்முன்
பூந்து வலைவீசும் பொதியிலே - காந்துசின
வேணாடனை வென்ற விக்கிரம பாண்டியன்மெய்ப்
பூணாரம் பூண்டான் பொருப்பு. 1

புயலுந் தருவும் பொருகைப் புவநேக வீரபுனல்
வயலுந் தரளந்தரு கொற்கை காவல வாரணப்போர்
முயலுங் கணபதி மொய்த்த செஞ்சோதி முகத்திரண்டு
கயலுண் டெனுமதுவோ முனிவாறிய காரணமே. 2

வெங்கண் மதயானை விக்கிரம பாண்டியனே
பொங்கி வடதிசையிற் போகாதே - யங்கிருப்பாள்
பெண்ணென்று மீண்ட பெருமாளே பேரிசையாழ்ப்
பண்ணொன்றும் வேய்வாய் பகை. 3

குறிப்பு: இங்குக் கூறப்படும் விக்கிரம பாண்டியன், சடையவர்மன் விக்கிரம பாண்டின் ஆவன் இவனுக்குப் புவனேக வீரன்

என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. 13-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இருந்தவன். இவன், சடைய வர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் பாண்டி நாட்டின் ஒரு பகுதியை அரசாண்டான்.

செய்யுள் 1. வேணாடன் ஆகிய திருவாங்கூர் அரசனை வென்று அவனுடைய பொதிகைமலையைத் தன்னுடைய மலையாக்கிக் கொண்டதைக் கூறுகிறது.

செய்யுள் 2. விக்கிரம பாண்டியனுக்குப் புவனேக வீரன் என்னும் சிறப்புப் பெயர் உண்டு. இவன் காகதீய அரசன் வீரகண்ட கோபாலனைப் போரில் கொன்றான். பிறகு, அவன் உறவினனாகிய கணபதி என்பவன் இவனிடம் நட்புக்கொள்ள, அவனுக்கு அரசை அளித்தான். இச்செய்தியைக் குறிக்கிறது இச்செய்யுள்.

செய்யுள் 3. ''பொங்கி வடதிசையிற் போகாதே அங்கிருப்பாள் பெண்'' என்பது, தெலுங்கு தேசத்தின் ஒரு பகுதியைக் காகதீய குலத்தில் வந்த ருத்ராம்பா என்பவள் அரசாண்டதைக் கூறுகிறது. இந்த இராணி ருத்திரதேவ மகாராஜா என்னும் ஆண்பெயர் பூண்டு அரசாண்டாள் என்று பிரதாபருத்திரீயம் என்னும் நூல் கூறுகிறது. பெண்ணின் மேல் போருக்குச் செல்வது அரசருக்கு மரபன்று என்பதை இச்செய்யுள் கூறுகிறது.

விக்கிரம பாண்டியன்

இடம்: தென் ஆர்க்காடு மாவட்டம். சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் இரண்டாம் பிராகார வாயிலின் மேற்குப் பக்கச் சுவரில் உள்ளது.

பதிப்பு: எண் 228. தென் இந்திய சாசனங்கள், நான்காந் தொகுதி. *(No. 228. S.I.I. Vol. IV.)*

விளக்கம்: புவனேக வீரன் என்னும் சிறப்புப் பெயருடைய விக்கிரம பாண்டியன். வெள்ளாறு என்னும் இடத்தில் போர் வென்றதையும், பகை மன்னரைச் சிறைப்பிடித்தையும் இச்செய்யுட்கள் கூறுகின்றன.

சாசனச் செய்யுள்

சீர்கொண்ட வெள்ளாறு குருதிப் பெருக்கிற்
செவ்வாறு பட்டோட வவ்வாறு சென்றப்
போர்வென்று வனப்பேய் நடங்கண் டதற்பின்
புலியூர் நடங்கண்ட புவனேக வீரா
பார்பண் டளந்துண்டோ ராலிற் கிடக்கும்
பச்சைப் பசுங்கொண்ட லேபத்ம நாபா
கார்கொண்ட நின்கையில் வேலுக்கு வற்றுங்
கடலல்ல வென்பேதை கண்டந்த கடலே. 1

மாறுபடு மன்னவர்தங் கைபூண்ட வாளிரும்பு
வேறுமவர் கால்பூண்டு விட்டதே - சீறிமிக
வேட்டந் திரிகளிற்று விக்கிரம பாண்யடின்த
னாட்டங் கடைசி வந்த நாள். 2

குறிப்பு: - செய்யுள்1. புவனேக வீரன் - இது மாரவர்மன் விக்கிரம பாண்டியனின் சிறப்புப் பெயர்.

செய்யுள் 2. விக்கிரம பாண்டியன். இவன் கி.பி. 1269 முதல் 1296வரையில் அரசாண்டான். மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இருந்தவன். இந்தச் சோழன் உதவியினால் பாண்டிய அரசைப் பெற்றவன்.

பல்லவர் கோன்

இடம்: தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவிலில் உள்ள சாசனம்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு; முன்னுரை, பத்தாம் பக்கம். (Page 10. Preface. S.I.I.I. Vol. XII.)

விளக்கம்: பல்லவ அரசன் தில்லையில் உலா வந்ததைக் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

சுந்தரத் தோரண நாட்டித் துகிற்கொடி சூட்டிமுத்துப்
பந்தரப் பாலிகை தீபம் பரப்புமின் பல்லவர்கோன்
செந்தளிர்க் கைக்கோத் தபையன் மகளுடன் தில்லையுலா
வந்தளிக்கும் பெருமாள் வெற்பர் மாதை
மணஞ்செய்யவே.

குறிப்பு: அபையன் - அபயன். அபயன் மகள் - சோழ அரசன் மகள்.

குந்தவையாழ்வார்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம். சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவிலின் உள்பிராகாரம் வடக்குப் புறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: இந்திய சாசனங்கள், தொகுதி ஐந்து, பக்கம் 105. *(Epigraphia Indica, Vol. V. Page 105.)*

விளக்கம்: குலோத்துங்க சோழனுடைய தங்கையார் குந்தவை யாழ்வார். தில்லைச் சிற்றம்பலத் திருக்கோவிலில் செய்த தான தருமங்களைக் கூறுகிறது. இச்செய்யுளின் மேலும் கீழும் உரை நடையில் சில செய்திகள் எழுதப்பட்டுள்ளன.

சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர் திருத்தங்கையார் ராஜராஜன் குந்தவை யாழ்வார் ஆளுடையார்க்கு தண்ணீர் அமுது செய்தருள இட்ட மிண்டம் ஒன்றினால் குடிநற்கல் நிறை மதுராந்தகன் மாடையோடு ஒக்கும் பொன். 50 ஐம்பதின் கழஞ்சு.

நானிலத்தை முழுதாண்ட சயதரற்கு
நாற்பத்து நாலாண்டில்

மீனநிகழ் நாயற்று வெள்ளி பெற்ற
உரோகிணிநா ளிடபம் போதால்
தேனிலவு பொழிற்றில்லை நாயகர்தன்
கோயிலெலாம் செம்பொன் மேய்ந்தா
ளேனவருந் தொழுதேத்தும் ராஜராஜன்
குந்தவை பூவிந்தையாளே.

தில்லைநாகய தேவற்குத் திருக்கண்ணாடியும் இட்டார்.

ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு காம்போச ராஜன் காட்சியாகக் காட்டின கல்லு. இது உடையார் ராஜேந்திர சோழ தேவர் திருவாய் மொழிந்தருளி உடையார் திருச்சிற்றிம்பல முடையார் கோவிலில் முன் வைத்தது.

இந்தக் கல்லு திருவெதிரம்பலத்து திருக்கல் சரத்தில் திருமுன்பத்திக்கு மேலைப்பத்தியிலே வைத்தது.

குறிப்பு:- இந்தச் செய்யுளில் சயதரன் என்பது முதலாங் குலோத்துங்க சோழனின் சிறப்புப் பெயராகும். அவனுடைய நாற்பத்து நாலாம் ஆண்டில், குந்தவையார் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்ததாக இச்செய்யுள் கூறுகிறது. சயதரனுடைய 44-ஆம் ஆண்டு கி.பி. 1114 என்பர் சரித்திர நூலோர். இந்தக் குந்தவையார், ஸ்ரீ இராஜராஜ சோழன் மகளும் குலோத்துங்க சோழன் தங்கையும் ஆவார். இவர் சிதம்பரக் கோவிலைப் பொன் வேய்ந்ததோடு, வேறு சில தானங்களையும் செய்ததை இச்செய்யுளும் வசனமும் கூறுகின்றன.

அன்றியும், இராஜேந்திர சோழனுக்குக் காம்போச அரசன் கல் ஒன்றைக் காட்சிப் பொருளாக அளித்ததையும், அக்கல் சிற்றம் பலத்தின் எதிரம்பலத்தில் வைக்கப்பட்டதையும் இந்தச் சாசனம் கூறுகிறது.

சரித்திரப் புகழ் படைத்த இந்தக் கல் இப்போது சிதம்பரத் திருக்கோவிலில் இருக்கிறதா? புதுக்கப்பட்டபோது இந்தக் கல் தவறிப்போய்விட்டதா? இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து இக் கல்லைக் கண்டெடுக்கவேண்டுவது அறிஞர் கடமையாகும்.

கம்பன் மூவேந்த வேளான்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் தாலுகா, கீழூர். இவ்வூர் வீரட்டானேசுவரர் கோவிலின் திருவுண்ணாழி கையின், தெற்கு - கிழக்கு - வடக்குப் புறச் சுவர்களில் எழுதப் பட்டுள்ளது.

பதிப்பு: எண் 863. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. *(No. 863. S.I.I.Vol. VII.)*

விளக்கம்: இந்த அழகான அகவற்பா, முதலாம் இராசராச சோழன் காலத்தில் எழுதப்பட்டது. இந்தச் சோழனிடம் அதிகாரி யாயிருந்த கம்பன் மூவேந்த வேளான் என்பவர், வீரட்டானேசுவரர் கோவிலில் செய்த தானதருமங்களைக் கூறுகிறது. இந்தக் கம்பன் மூவேந்த வேளானை, அம்பர்நாடன், ஆலங்குடிக் கோன். திரைமூர் நாடன். மணற்குடி நாடன் என்று இச்செய்யுட்கள் கூறுகின்றன.

இந்த அகவற்பாவின் இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

சாசனச் செய்யுள்

....
ஜயஜய வென்று மொழி
பன்னிய வாய்மையிற் பணியப் பொன்னியல்
விசும்பரிற் கதமும் பசும்புரி வெள்ளுளை
நெடுஞ்சுவற் றெடுத்த குறுந்துனைப் படுங்க
னள்ளுறப் பொன்ஞான் வள்ளுற வச்சத்
தனிக்கா லரசு மனக்காற் கங்குற்
குழம்புபடு பேரிருட் பிழம்புபட வுருட்டிய
செஞ்சுடர் மௌலி வெஞ்சுடர் வானவன்
வழிமுதல் வந்த மஹிபதி வழிமுத
லதிபதி நரபதி அஸ்வபதி...
கஜபதி கடலிடங் காவலன் மதிமுதல்

வழுதியர் வரைபுக மற்றர் தேவிய
ரழுதுய ரழுங்கலி லழுங்கப் பொழுதியல்
வஞ்சியிற் காஞ்சி வகுத்த செஞ்சிலைக்
கலிங்கன் கனவெ....கப்பா.... வங்கன்
அம்மை.... ....ட்
புதுமலர் வாகை புனைந்து நொதுமலர்
கங்க பாடி கவ்விக் கொங்கம்
வெளிப்படுத் தருளி யளிபடுத் தருளிய
சாரல் மலையட்டுஞ் சேரன் மலைஞாட்டுத்
தாவடிக் குவட்டின் பாவடிச் சுவட்டுத்
துடர்நெய்க் கனகந் துகளெழ நெடுநற்
கோபுரங் கோவை குலைய மாபெரும்
புரிசை வட்டம் பொடிபடப் புரிசைச்
சுதைகவின் படைத்த சூளிகை மாளிகை
யுதைகை முன்னொள்ளெரி கொளுவி
உதகை வேந்தைக் கடல்புக வெகுண்டு போந்து
சூழமண் டலந்தொழு வீழமண் டலமுங்கொண்டு
தண்டருளிப் பண்டு தங்கடிருக் குலத்தோர்
தடவரை எழுதிய பொங்குபுலிப் போத்துப்
புதுக்கத் துங்கத் திக்கினிற் சேனை
செலுத்தி மிக்க வொற்றை வெண்குடைக்கீ
ழிரட்டை வெண்கவரி தெற்றிய வனலந்
திவள வெற்றியுள் வீற்றிருந் தருளிய
வேந்தன் போற்றிருந் தண்டமிழ் நாடன்
சண்ட பராக்கிரமன் றிண்டிரற் கண்டன்
செம்பியர் பெருமான் செந்திரு மடந்தைமன்
ஸ்ரீ ராஜ ராஜ னிந்திர சமானன்
ராஜசர் வஞ்ஞனெனும் புலியைப் பயந்த
பொன்மான் கலியைக் கரந்து கரவாக்

காரிகை சுரந்த முலைமிகப் பிரிந்து
முழங்கெரி நடுவணுந் தலைமகற் பிரியாத்
தையல் நிலைபெறுந் தூண்டா விளக்கு

....சி சொல்லிய
வரைசர்தம் பெருமா னதுலனெம் பெருமான்
பரைசை வண்களிற்றுப் பூழியன் விரைசெயு
மாதவித் தொங்கல் மணிமுடி வளவன்
சுந்தர சோழன் மந்தர தாரன்

றிருப்புய முயங்குந் தேவி விருப்புடன்
வந்துதித் தருளிய மலையர் திருக்குலத்தோ
ரன்மை யாக தமரகத் தொன்மையிற்
குலதெய்வ.... .....கொண்டது
நலமிகுங் கவசந் தொடுத்த கவின்கொளக்

கதிர்நுதித் துவசந் தொடுத்த சுதைமதிற்
சூழகழ்ப் புளகப் புதவக் களகக்
கோபுர வாயின் மாடமாளிகை வீதித்
தேசாந் தன்மைத் தென்திருக் கோவலூ
ரீசரந் தன்றக் கவன்றது மீசரங்

குடக்குக் கலுழி குணக்குகால் பழுங்கக்
காளா கருவுங் கமழ்சந் தனமுந்
தாளார் திரள்ச் சாளமு நீளார்
குறிஞ்சியுங் கொடியு முகடுயர் குன்றிற்
பறிந்துடன் வீழப் பாய்ந்து செறிந்துயர்

புதுமத கிடறிப் போர்க்கலிங் கிடந்து
மொதுமொது முதுதிரை விலகி கதுமென
வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலு முத்தமிழ் நான்மைத்

தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் டடக்கைப் பாரித னடைக்கலப்
பெண்ணை மலயர்க் குதவிப் பெண்ணை
யலைபுன லழுவத் தந்தரிக்ஷஞ் செல
மினல் புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்

கனல்புகுங் கபிலக் கல்லது புனல்வளர்
பேரெட் டான வீரட் டான
மனைத்தினு மனாதி யாயது நினைப்பினு
முணர்தற் கரியது யோகிக ளுள்ளது
புணர்தற் கினியது பொய்கைக் கரையது

சந்தன வனத்தது சண்பகக் கானது
நந்தன வனத்தி னடுவது பந்தற்
சுரும்படை வெண்பூங் கரும்பிடை துணித்தரத்
தாட்டொலி யாலை யயலது பாட்டொலிக்
கருங்கைக் கடையர் பெருங்கைக் கடைவாள்

பசுந்தாட் டீயுங் செந்நெற் பழனத்
தசும்பார் கணி... ....
யவற்றை யருக்க னரிச்சனை முற்றிய
நான்மறை தெரிந்து நூன்முறை யுணர்ந்தாங்
கருச்சான விதியொடு தெரிச்சவா கமத்தொழில்

மூவெண் பெயருடைய முப்புரி நூலோர்
பிரியாத் தன்மைப் பெருந்திரு வுருடையது
பாடகச் சீறடிப் பணைமுலைப் பாவையர்
நாடகத் துழதி நவின்றது சேடகச்
சண்டையுங் கண்டையுந் தாளமுங் காளமுங்

கொண்டதிர்ப் படகமுங் குளிறுமத் தளங்களுங்
கரடிகைத் தொகுதியுங் கைம்மணிப் பகுதியு
முருடியல் திமிலை முழக்கமும் மருடரு

வால்வளைத் துணையு மேல்வளைத் தணையுங்
கருப்பொலி மேகமுங் கடலுமெனக் கஞலி
திருப்பொலி திருப்பலி சிநத்து விருப்பொலிப்
பத்தர்தம் பாடல் பயின்றது முத்தமிழ்
நாவலர் நாற்கவி நவின்றது ஏவலி
லருஷையோ டரஹர வெனக்குனித் தடிமைசெய்
பருஷையர் பகுவிதம் பயின்றது கருஷை

முக்கண்ணவ னுறைவது கடவுளர் நிறைவது
மண்ணவர் தொழுவது வானவர் மகுழ்வது
மற்று மின்ன வளங்கொள் மதிற்பதாகைத்
தெற்றுங் கொழுநிழற் சிவபுரத் தரற்குப்
பன்னா ணிலைபெற முந்நா ளுரவோன்

செய்த தானந் தேவன் குடியி
லலகியல் மரபி னமைந்து உலகியல்
சாண்பன் னிரண்டிற் சமைந்த தனிக்கோல்
போற்றுற வளந்த நூற்றறு பதுகுழி
மாவொன் றாக வந்த வேலி

யாறே காலி லந்தங் களைந்து
நீங்கிய நிலத்தா னீங்கா நெற்றுகை
ஆங்கொரு மாவிற் கறுகல மாகக்
கொழுநூற் றவராடுங் கூட்டி யளந்த
எழுநூற் றிருபதி லிறைமகற் குரிமை

நாழி யெட்டான் வாழியட் டானக்
கருங்கா லொன்றாற் செங்கை யிரண்டிட்
டளந்த நெல்லா லறுபதனிற் களைந்த
நிவந்தத் தன்மை நினையி லுவந்து
நஞ்சுண்ட டவருக் கமுதுண நயந்த

வொத்தெண் வழுவாப் பத்தெண் குத்தல்
பழநெல் லரிசி பன்னிரு நாழிக்கு
பதினை யிரட்டி நெற் பதினை யிரட்டியுங்
குறுவா ளான நெடுவா ணயனிக்
கோரிரு நாழியுள்ப் படுத்து யர்ந்தநெல்

நாலெட் டான நாழியும் மெ.....
.... மிளகுமுப் பிடிக்கு
செல்லக் குடுத்த நெல்லஞ் ஞாழியுஞ்
சூழ்கறி துவன்ற பொழ்கற் கொள்நெற்
பெருக்கிய நாலுரி யுருக்கிய நறுநெ

யுழக்கரை தனக்கு வழக்கரை வினவில்
முந்நா ழியுந்தயிர் முந்நாழிக் காங்கறு
நானா ழியுமடைக் காய மிதிற்குப்
பன்னீ ருழக்கும் பரிசா ரகமா
ணன்னான் கினுக்கு நெல்லறு நாழியுந்

திருமடைப் பள்ளிப் பெருமடைக் குதவு
மிந்தன வொருவற்குத் தந்த முன்னாழியும்
ஆகநெற் கலமு மேகநற் றிவசம்
அப்பரி சியற்றலி லறுவகை யிருதுவு
மிப்பரி சியற்றி யெழுந்துநே ரானபின்

புதுமலர் விரிந்து மதுமலர் சோலைப்
புள்ளூர் கோவ லுள்ளூர்ப் பழநிலம்
இரட்டு முக்காலிற் றந்த பதினைஞ்சு
மொட்டுக் கல்லைக் கவர்மூன்று மாவும்
ஆலஞ் செறுவி லஞ்சு மாவும்

திரண்டு பாய்புனற் றெங்காச் செறுவி
விரண்டு மாவும் இலுப்பைக் காலிரண்டும்
நெல்லா லித்தெழும் புல்லா லிப்புற
மஞ்சொடுங் கூட்டி ஆகிய நிலத்தொகை
அப்புத்திரண் டியல்மா முப்பத் திரண்டு

மேல றுணந்த நால றெண்பயி
லந்தண ரனைவர்க்கு மரிச்சனா போகந்
தந்த பின்னைத் தடமலர்ப் பொய்கைப்
போதகர் பழனப் புதுமலர்ச் சோலைச்
சிதாரி பல மஞ்சு மஞ்சாமற் கெட்ட
திருவையன் கோட்டமில் குணத்தாற் செம்பொற்
புரிசைச் சிவபுரத் தாற்குக் கோவ
லந்தணர் பாற்கொண்டு கொடுத்தன
பண்டைக் கோலாற் பண்டைக் குழித்தொகை
மணங்கொண் டீண்டு முணங்கல் பூண்டி
யொப்புத் தொறுமா முப்பத்தறு மாவு
மிகவந் துயர்புனற் பகவந்தக் கழனி
யெட்டுமுத விருபது மாவு மட்டவிழ்
பூத்துழா வியபுனல் மாத்துழான் வேலி
ஏவிய வெட்டு மாவும் வாவியிற்
கோடறு பழனக் காடேறு மாநில
மஞ்சுங் களர்நிலம் பத்துந் நெஞ்சகத்
துள்ளத் தகும்புன லுரவுக் கடலுகா
யம்பளத் திரண்டும் பாவருங் கணியக்
கழனியி லெட்டுங் கைகலந் துரைப்பிற்
றுழனி.. .... கலமென
மேற்படி காலாற் பாற்பட வளந்த
வீங்குட னவர் பாங்குடன் றொகுத்த
மெஞ்நூற் றுரைகயில் மேதக தூநெ
லஞ்ஞூற் றிருபத் திருகலம் என
மற்றைத் தொகையில் மதிவளர் சடையோன்
பெற்ற வாரம் பிழையறப் பேசி
லைம்பதிற் றைஞ்சொடு மொய்ம்புறு பதினொரு
கலத்தொடு முணங்கல் பூண்டியிற் கறைஞெல்
நஞ்சை ஞீக்கிப் புஞ்சை நான்மா

மாத்தாற் கலவரை யான வரையறை
அறுகல மேற்றிப் பெறுகல வளவை
மூன்றொடு முப்பது குறைந்த முன்னூற்றுக்
கலத்தினில் மற்றக் கண்ணுதற் காக
நிலத்தவ ருவந்த நிவந்தந் நலத்தகு

நாளொன் றினுக்கு நான்முன் னாழி
பானிறத் தன்மைத் தூநிறக் குத்த
லரிசியி லான நெல்லு வரிசையிற்
குறுபவள் கூலி யெற்றிப் பெறுவன
பேணிய பழநெற் றூணியுங் காணிய

வையமிது புகழு நெய்யமுது முப்பிடி
கொள்ளக் கொடுத்த நெல்லறு நாழியும்
பொழுது மூன்றினுக் கிழுதுபடு செந்தயி
ரொருமுன் னாழிக் கிருமுன் னாழியு
யடைக்கா யமுதுக் காறுரி யத்து

மந்தண னொருவ னபிஷேகஞ் செய்யத்
தந்தன குறுணிமுற் றதைந்த நாழியு
மறையேவல் செய் மாணிரண் டினுக்குக்
குறைவறக் குடுத்த நெற்குறுணி ஞானாழியு
மோராண் டினுக்கு நேராண்டாக

நண்ணிய நக்ஷத் திரமென னல்லோ
னண்ணிய திருவிளக் கெண்பதுங் கண்ணெனக்
காவியர் கயல்பயி லாவியூ ரதனிற்
றிக்குடை யிவரு முக்குடை யவர்தம்
அறப்புற மான திறப்பட நீக்கிச்

சாலி விளைஞிலம் வேலி யாக்கி
முதல்வதின் மூன்றே முக்காலே யரைக்கா
லிதன்த னிவந்த மியில்வகை யுரைப்பில்
ஒப்பத் திருவனை யவர்முப்பத் திருவர்
பாடல் பயின்ற நாடக மகளிர்க்கும்

நெஞ்சா சார நிறைவொடு குறையாப்
பஞ்சா சாரியப் புகுதி யோர்க்கும்
நறைப்புது மலர்விரி நந்தவான
மிறைப்புத் தொழில்புரிந்த விருந்தவத் தோற்கும்
யோகி யொருவனுக்கு நியோக முடைநில

… … …. வாழியர்
செஞ்சடைக் கடவுடன் றிருவாக் கேழ்வித்
தஞ்சுடைக் கடிகையன் றனக்கும் நெஞ்சில்
விதித்த முறைமை மதித்து நோக்கி
யின்னவை பிறவு மாராஜ ராஜன்

றன்னவை முன்னற் றத்துவ நெறியி
லறங்கள் யாவையு மிறங்கா வண்ணம்
விஞ்ஞா பனத்தால் மிகவெளிப் படுத்தோன்
அன்பது வேலியி லடைகுன் றகர்க்கு
மொன்பது வேலி யுடைய வுரவோன்

கொம்பர் நாடுங் குளிர்மலர்ச் சோலை
யம்பர் நாடன் ஆலங்குடிக் கோன்
தெண்டிரைப் பழனத் திரைமூர் நாடன்
வண்டிரைத் துயர்பொழில் மணற்குடி நாடன்
நேரிய னருமொழி நித்த வினோதன்

காரிய மல்லதோர் காரிய நினையா
தா ராண் டலைமைக் கற்பக சதுசன
பேராண் டலைமைப் புணர்புயத் துரவோன்
கூத்தொழில் கேளா தேத்தொழில் முனைந்த
கண்டகர் கரிசறத் துரிசறக் கலிசெக

மண்டல சுகதியில் வயப்புலி வளர்த்தோன்
வான்பால் மதியும் வலம்புரி யிடம்புரி
யான்பால் வதியும் விரிசடைக் கடவுள்
நெற்றிக் கண்ணும் நிலத்தவர் நினைந்த
தெற்றிக் கண்ணுஞ் சிந்தா மணியும்

போலப் பிறந்த புகழோன் கோலக்
கருங்களிற் றுழவன் கம்பத் தடிகள்
மாதி விடங்கு வருபரி வல்ல
வீதி விடங்கன் மென்கருப் பாலைத்
தலந்தருந் தண்டலைத் தடநீர்
நலந்தரு பொன்னி நாடுகிழ வோனே.

வேலியர்கோன் வீதிவிடங்கன் விறற்கம்ப
னாலியல்மான் சோழ னதிகாரி - கோலப்
படியின்மேற் பொற்பூப் பைங்கோவல் வீரட்டர்
முடியின்மேல் வைத்தான் முயன்று.. 1

பொன்முக் கழஞ்சால் மணிப்பட்டம் பூப்புனைந்து
மின்மிக்க கட்டமைத்து மேற்கட்டி - சொன்மிக்க
கோவலான் வீரட்டற் கீந்தான் குலவேலி
காவலான் வாழ்கம்பன் கண்டு. 2

சென்னி திறற் ஸ்ரீ ராஜ ராஜற் கியாண்டு
திகழு மிருபத்தேழிற் செழுநீர் வேலி
மன்னிய கம்பன் மஹிமாலைய மூவேந்த
வேளான் விண்ணப்பத்தால் மணிநீர்க் கோவ 3

லென்னியல்சீர் வீரட்டத் திலிங்க மொன்று
பொன்னூற்றாற் செய்ததற்கு வெள்ளிப்பீடம்
பன்னிய தொண்ணூற்றறு முக்கழஞ்சுடை யம்பொன்ட
பேர்த்தும் அய்ங்கழஞ்சின் மேற பத்துமாவே. 4

குறிப்பு:- இச்செய்யுளில் சில சொற்கள் இவ்வாறு பயின்றுள்ளது காண்க: அரிச்சனை (அருச்சனை), துழதி (தொகுதி), மகுழ்வது (மகிழ்வது), உள்படுத் துயந்த (உட்படுத்துயர்ந்த), குடுத்த (கொடுத்த), ஞாழி (நாழி), ஞெல் (நெல்), ஞீக்கி (நீக்கி), ஞிலம் (நிலம்).

இச்செய்யுட்களில் கூறப்படும் திருப்பணிகள் இராஜராஜ சோழனுடைய ஆட்சி இருபத்தேழாவது ஆண்டில் செய்யப்பட்டன.

அரும்பாக்க எல்லை

இடம்: தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் தாலுகா, கீழூர். இவ்வூர் வீரட்டானேசுவரர் கோவில் தென்புறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: எண் 857. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. *(No.857. S.I.I.Vol. VII.)*

விளக்கம்: கோவிராஜ ராஜகேசரி பன்மர் என்னும் சோழ அரசனுடைய 11-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது இச்சாசனச் செய்யுள். இது அரும்பாக்கம் என்னும் ஊரின் எல்லையைக் கூறுகிறது. இந்தச் சாசனச் செய்யுளின்மேலே கீழ்க்கண்ட வசனம் எழுதப்பட்டிருக்கிறது:

'ஸ்வஸ்திஸ்ரீ. காந்தளூர்சாலை கலமறுத்த கோவிராஜ ராஜ கேசரி பன்மக் கியாண்டு கக - ஆவது மலாட்டு குறுக்கைக் கூற்றத்து திருக் கோவிலூர் திருவீரட்டான முடையாற்கு மிலாடு உடையான் இராமன் நாட்டடிகள் வைத்த நொந்தா விளக்கு ஒன்றுக்கும் திருவுண்ணாழிகை சபையார் வசம் சந்த்ராதித்தவல் விளக்கெரிப்ப தற்குக் குடுத்த பொன் பன்னிரு கழஞ்சு. பன்மாஹேஸ்வர ரக்ஷை.''

சாசனச் செய்யுள்

இறைவ னரும்பாக்க மெல்லைக் கற்குட்டம்
முறைசேர் கோவல் முழைசுனை - பிறைநுதலாய்
வெண்மாறங் கெல்லை மேல்பால் கறடிவடாவாறு
கீழ்பால்
கண்ணத்தம் பாடியாங் காண்.

குறிப்பு: இவ்வெண்பாவின் மூன்றாமடி பொருந்தவில்லை.

கம்பன் வீதிவிடங்கன்

இடம்: தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் தாலுகா, கீழூர். வீரட்டானேசுவரர் கோவிலின் வடக்குப் புறத்துச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: எண் 880. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (No. 880. S.I.I.Vol. VII.)

விளக்கம்: ''திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்'' என்று தொடங்குகிற கோவிராஜ பாகேசரி பன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவரின் 29-ஆவது ஆண்டில் எழுதப்பட்ட ஒரு சாசனத்தின் கீழ் இந்தச் செய்யுள் எழுதப்பட்டிருக்கிறது. ஜயங்கொண்ட சோழபுரத்து மிலாடான ஜனநாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்துத் திருக்கோவலூர் வீரட்டானமுடைய மகாதேவருக்கு 150 பசுக்கள் தானங் கொடுக்கப் பட்டதை இச் செய்யுள் கூறுகிறது. ''பசு ஒன்றுக்கு பாலாழாக்காக நிசதம் பால் பதக்கிருநாழி முழாக்குப் பால் உச்சம்பொழுது பாலாடியருள'' இந்தப் பசுக்கள் இக்கோவிலுக்குத் தானங் கொடுக்கப்பட்டன.

சாசனச் செய்யுள்

பாலிக்குங் கோவலூர் சிற்றிங்கூர் மருதூர் பதிமல்லம்
பதிற்றுப்பத் தொடுபதிற் றைஞ்சான
காலிக்குப் புணையாகத் திருவுண்ணா ழிகையார்
கைக்கொண்டு

கறவைஒன் றாலாழாக் காங்கணக்குக்
கோலிக்கொள் பால்பதினெண் ணாழிமுழக்
குக்கோவல்

வீரட்டர்க்கு மஞ்சனமாடக் குடுத்தான்
வேலிக்கோன் திறற்கம்பன் விறல்வீதி விடங்கன்
வேந்தர்பிரா

னருமொழிக்கு விண்ணப்பஞ் செய்தே.

குறிப்பு: - பதிற்றுப்பத்தொடு பதிற்றைஞ்சு - நூற்றைம்பது. காலி - பசு. திருவுண்ணாழிகையார் - அகநாழிகையார் (கருப்பக்கிருகத் தார்), அதாவது மூலஸ்தானத்தில் பூசை செய்யும் ஆதிசைவர்கள். குடுத்தான் - கொடுத்தான். பழைய சாசனங்களில் இந்தச் சொல் குடுத்தான் என்றே எழுதப்பட்டுள்ளது. வேலிக்கோன் கம்பன்

வீதிவிடங்கன் - இவன் இராஜராஜ சோழனின் ஒரு உத்தியோகஸ்தன். அருமொழி - அருமொழித் தேவர்; இது இராஜராஜ சோழனின் பெயர்.

காடவர்கோன் பாவை

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம், திருக்கோவலூர் தாலுகா, சிற்றாமூர் இவ்வூர் மலைநாதர் கோவிலின் பின்புறமுள்ள பொடவின் அடியில் உள்ள செய்யுள்.

பதிப்பு: எண் 830. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. *(No. 830. S.I.I.Vol. VII.)*

விளக்கம்: சிற்றாமூர் மலைநாதர் கோவில் ஜைனக்கோவில். இக்கோவிலுக்குச் சோழ அரசியார் தருமஞ் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

காடவர்கோன் பாவை கனைகழற்காற் சோழற்கு
நீடுபுகழ்த் தேவியார் நீணிலத்துப் - பீடுசிறந்
தமரும் சிற்றாமூர் செய்திறங்கல் மீட்பித்
தறம்பெருக வாக்கு மவள்.

குறிப்பு: - காடவர்கோன் பாவை - பல்லவ அரசன் மகள். இவர் சோழ அரசனை மணந்தார். இவர், நிலத்தைச் செப்பனிட்டு அதனை இக்கோவிலுக்குத் தானமாக வழங்கினார்.

புத்தன் இராசசிங்கன்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் தாலுகா. திண்டீசுவரர் கோவில் முன்மண்டபத்துத் தென்புறச் சுவரில் உள்ள செய்யுள்.

பதிப்பு: எண் 837. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. *(No. 837. S.I.I. Vol. VII.)*

விளக்கம்: புத்தன் இராசசிங்கன் என்பவன் இந்தக் கோவிலின் முன்மண்டபத்தைக் கட்டியதை இந்தச் செய்யுள் கூறுகிறது. இவன் கோ ராஜராஜ ராஜகேசரி பர்மன் என்னும் சோழ மன்னனுக்குக் கீழடங்கிய சிற்றரசன்.

சாசனச் செய்யுள்

சீராருந் தென்கிடங்கிற் றிண்டீச்சரத் தரனுக்
கேராருங் கன்மண்டப மெடுத்தான் - பாராரும்
பொன்னான பூமகள்சேர் புத்தன் இராசசிங்க
னென்னானை ஆறையா றேறு.

புத்த னிராசசிங்கன் ஏவத் திருத்திண்டீஸ்வரமுடையார் மண்டபம். செய்வித்தான் வாகூர் சிவப்பிராமணன் திருமாங்கோயில் வாணகோவரையன்.

குறிப்பு: - கிடங்கில் என்பது திண்டிவனத்தின் பழைய பெயர். இந்த மண்டபம் அமைத்த இராசசிங்கனின் மனைவி கண்ணன் அருஞ்சிகைப்பிராட்டி என்பவர், இந்தக் கோவிலுக்கு விளக்கு எரிப்பதற்காக ஆடுகளைத் தானம் செய்திருக்கிறார். ''இவ்வூர்க் கடம்புழான் புத்தன் இராசசிங்கன் அகமுடையாள் கண்ணன் அருஞ்சிகைப் பிராட்டி வைத்த நந்தா விளக்கு இரண்டினுக்கு விட்ட சாவாமூவாப் பேராடு நூற்றெண்பது'' என்று இக்கோவிலுள்ள இன்னொரு சாசனம் கூறுகிறது. *(No. 836. S.I.I. Vol. VII.)*

நரேந்திரப் போத்தரையன்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம். திண்டிவனம் தாலுகா, தளவானூர். இவ்வூரில் உள்ள பாறைக் குன்றில் அமைக்கப்பட்ட குகைக்கோயிலின் தூணில் உள்ள செய்யுள்.

பதிப்பு: இந்திய சாசனங்கள், தொகுதி 12. பக்கம் 225 - 26. *(Epigraphia Indica Vol. XII. P. 225 - 26.)*

விளக்கம்: நரேந்திரப் போத்தரையன் என்பது மகேந்திரவர்மன் 1 உடைய சிறப்புப் பெயர். இவன் கி.பி. 600 முதல் 630 வரையில் அரசாண்ட பல்லவ அரசன். முதன் முதலாகத்

தமிழ்நாட்டிலே பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை அமைத்தவன் இவனே. வெண்பேடு - இப்போதுள்ள தளவா னூருக்குப் பழைய பெயர். சத்துரு மல்லன் என்பதும் முதலாம் மகேந்திர வர்மனுடைய பெயர்.

சாசனச் செய்யுள்

தொண்டையந் தார்வேந்தன் நரேந்திரப் போத்தரையன்
வெண்பேட்டின் தென்பால் மிகமகிழ்ந்து - கண்டான்
சரமிக்க வெஞ்சிலையான் சத்துருமல் லேஸ்வராலயமென்
றரனுக் கிடமாக வாங்கு.

இவ்வூர் பிரம மங்கலவன் செல்லன் சிவதாசன் சொல்லியது.

குறிப்பு:- இதுவரையில் நமக்குக் கிடைத்துள்ள சாசனத் செய்யுட்களில் இதுவே காலத்தினால் முற்பட்டது. நரேந்திரப் போத் தரையன் என்பவன், இக் குகைக்கோயிலை அமைத்து இதற்குச் சத்துருமல்லேஸ்வராலயம் என்று பெயரிட்டதை இச்செய்யுள் கூறுகிறது. இச்செய்யுளைப் பாடியவர் பிரமமங்கலவன் செல்லன் சிவதாசன் என்பவர். கி.பி.7ஆம் நூற்றாண்டு.

காடவராயர்கள்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம் தாலுகா, விருத்தாசலம். வேதகிரீசுவரர் கோவிலின் இரண்டாவது கோபுர வாயில். இவ்வாயிலின் வலப்புறத்தில் உள்ள சாசனம்.

பதிப்பு: எண் 263. தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு. (No. 263, S.I.I.Vol.XII.)

விளக்கம்: கீழ்க்கண்ட செய்யுட்கள் காடவராயர் சிலரைப் புகழ்கின்றன. காடவராயர் என்பவர் பல்லவ அரசர்கள். வளந்தானா ரான காடவராயரையும், அவர் மகன் ஆட்கொள்ளியாரான காடவரா யரையும், அவர் மகன் நாலுதிக்கும் வென்றாரான ஏழிசை மோகன் காடவராயரையும், அவர் தம்பி அரசநாராயணன் கச்சிராயரான காடவராயரையும் புகழ்கின்றன.

இந்தச் செய்யுட்கள் எழுதப்பட்டுள்ள கோபுரவாயிலுக்குக் கண்டராதித்தன் வாசல் என்று பண்டைக் காலத்தில் பெயர் வழங்கப்பட்டது.

சாசனச் செய்யுள்

அரசநாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரனான காடவராயன் கண்டராதித்தன் வாசலில் கல்வெட்டுவித்தபடி.

வரிவளை பொலம்பூண் கொடுத்த மங்கையர்
மயலுற மனந்தான் துடக்கு கின்றன
மதிகதி ரிரண்டாங் கெனச் சிறந்தொளிர்
வயிரமு மிசைத்தாங் கிடப் பிசைந்தன

பரிமள தளந்தான் சமைத்த குங்கும
பரிவொடு பசுஞ்சாந் தெழக் கமழ்ந்தன
பலிகொள விரந்தாங் குமிக்க சிங்களர்
பரவையில் விழுந்தாங் கெடத் துடர்ந்தன

கரிபரி உடன்சேர்ந் தெடுத்த கங்கர்கள்
கருவரை யிடந்தான் புகக் கடந்தன
கனலென வுகந்தான் சுடத் துடங்கிய
கலிவலி பெலந்தான் புகத் துரந்தன

வரிபெற விரந்தான் தடக்கை ஒன்றினி
லகலிட முகந்தாம் புனற் சொரிந்தன
வரசரை நெடுஞ்சரங் கிடக்கை கொண்டன
அழகிய வளந்தான் திருப்பு யங்களே. 1

இது வளந்தானாரான காடவராயர் கவி.

அங்குலவும் வயற்பெறுகை ஆட்கொள்ளி காடவர்கோன்
பங்குலவு மதசானை பதநிகளம் விடுகின்றா
னிலங்குமணி முடியரசர் யார்கொலோ விணையடியில்
விலங்கு கலின் கலினென்ன வீதிதொறும் வருவாரே. 2

இது இவர் மகனார் ஆட்கொள்ளியாரான காடவராயர் கவி.

பொருகாம னம்பு புகுந்துயிர்மே லன்றிச்
செருகா விடையாமஞ் செல்லா - தொருகாலும்
பாகாகா மாலியானைக் கண்டு பணிந்தானை
மோகாகா வந்திபடா முன். 3

இது இவர் மகனார் நாலுதிக்கும் வென்றாரான ஏழிசை மோகன் காடவராயர் கவி.

துடக்கு மாரன் சொரிசரப் பாயல்மேற்
கிடக்கு மிவ்வுல கென்பதுங் கேட்டுமே
வடக்கு மேருவுந் தெற்கு மலையமுங்
கடக்கு மாணையான் கச்சிய ராயனே. 4

மும்மலை முன்பெறிந்தாய் பின்பு முரணிரட்டர்
தெம்மலை வாதாபி சென்றெறிந்தாய் - மெய்ம்மைச்
செருவரசே பின்னிச் சிலம்பா வெறிந்த
தொருவரைசே மேனா ளுடன்று 5

இது இவர் தம்பியார் அரசநாராயணன் கச்சியராயரான காடவராயர் கவி.

இவர் மகன் சகரையாண்டு ஆயிரத்தொரு நூற்றெட்டினால் ஆடி மாசத்துப் பிறபத்தில் கண்டராதித்தன் வாசலுக்கு மேற்கே புறப்பட்டுக் கற்கடக மாராயன் கூடலும் அதியமானாடும் அழித்து வெற்றிக்கொடி உயர்த்த அனுமனும் பொறித்தான் ஆளப்பிறந்தான் வீரசேகரனான காடவராயன்.

பாரள வல்ல பணைத்தோ ளளவு பகலவன்போந்
தேரள வல்லநின் செங்கோ லளலு திகிரிச் செங்கை
காரள வல்ல பரவீர சேகர காடவநின்
போரள வெவ்வள வாம்பர வேந்தர் புறத்தளவே. 6

தாரார் மணிப்புயந் தண்ணந் துழாய்மண நாறுஞ்சந்தக்
காரார் திருநிறஞ் செய்யாள் திருமண நாறுங்கச்சி

யாரார் திகிரிக்கை யாளப் பிறந்தாற் கசஞ்சலற்குப்
பாராள் வடமன்னர் பொன்முடி நாறும் பதாம்புயமே. 7

விடையள விட்ட கொடிவீர சேகர காடவநின்
நடையள விட்டது ஞாலங்க ளேழையும்
வாழிநின்போர்ப்
படையள விட்டது பத்துத் திசையும் பரியமுத்தக்
குடையள விட்ட திரிசுடர் சூழண்ட கூடத்தையே. 8

ஸ்வஸ்திஸ்ரீ. இக் கல்வெட் டழிப்பான் வல்லவரையன் சத்தியம்.

குறிப்பு:- செய்யுள் 1. இது வளந்தானார் ஆன காடவராயரின் புயத்தை (தோள்வலியைப்) புகழ்கிறது. செய்யுள் 2. இதில் இரண்டாம் அடியில் மதசானை என்றிருப்பது மதயானை என்றிருக்க வேண்டும். வீரசேகர காடவராயன் அதிகமான் நாட்டையும் கூடலையும் அழித்தது சக ஆண்டு 1108 என்று கூறுகிறபடியால் அது நிகழ்ந்தது. கி.பி. 1186-இல் ஆகும். அதிகமான்நாடு என்பது தகடூர் என்னும் தர்மாபுரி. கற்கடக மாராயன் என்பவன் யார் என்பது தெரியவில்லை.

அடையவளைந்தான் வீரர்.

இடம்: தென் ஆர்க்காடு மாவட்டம், கூடலூர் தாலுகா திருவேந்திபுரம் (திருவயிந்திபுரம்). தேவநாயகப் பெருமாள் கோவில், மேலைக் கோபுரவாயிலின் இடதுபுறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு; எண் 771. (No. 771. S.I.I.Vol. VII.)

விளக்கம்: தொண்டையர் கோமான் அடையவளைந்தான் என்னும் அரசனின் படைவீரர் சிறப்பைக் கூறுகிறது. இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

அருள்புனை தொண்டையர் கோமா னடைய
வளைந்தபிரான்
பொருபடை மன்னவர் வீரமொன்றே; பொரும்போர்
தொலைந்தும்

வருகதிர் முந்து குணதிசை ஆள்வர், வடக்கிருப்பர்
வெருவருதென்திசைகொள்வர், செல்லாநிற்பர்
மேற்றிசைக்கே.

அறவுறை

இடம்: திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே பன்னிரண்டு மைலில் உள்ள திருவெள்ளறை என்னும் ஊரில் உள்ள, நாலுமூலைக்கேணி என்னும் மாறபிடுகு பெருங்கிணற்றுச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: இந்திய சாசனங்கள், தொகுதி பதினொன்று: பக்கம் 154 - 158. (Epigraphia Indica Vol. XI. Page 154 - 158.)

விளக்கம்: இந்தக் கிணறு, பல்லவ அரசனான தந்திவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது. இக்கிணற்றை அமைத்தவன், கம்பன் அரையன் என்பவன். இந்தச் சாசனச் செய்யுளுக்கு மேலே, கீழ்க்கண்ட செய்தி எழுதப்பட்டிருக்கிறது:

ஸ்வஸ்திஸ்ரீ. பாரத்துவாஜ கோத்திரத்தின் வழித் தோன்றிய பல்லவ திலக குலோத்பவன் தந்திவர்மற்குயாண்டு நான்காவ தெடுத்துக்கொண்டு ஐந்தாவது முற்றுவித்தான். ஆலம்பாக்க விசைய நல்லூழான் தம்பி கம்பன் அரையன் திருவெள்ளரைத் தென்னூர்ப் பெருங்கிணறு. இதன்பியர் மார்ப்பிடுகு பெருங்கிணறென்பது. இது ரட்சிப்பார் இவ்வூர் மூவாயிரத் தெழுநூற்றுவரும்.''

சாசனச் செய்யுள்

கண்டார் காணா வுலகத்திற் காதல் செய்து நில்லாதேய்
பண்டேய் பரமன் படைத்தநாள் பார்த்து நின்று
நையாதேய்
தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்
னுண்டடேல் லுண்டு மிக்கது உலகம் மறிய
வைம்மினேய்.

குறிப்பு:- இச்செய்யுளில் ஏகார ஈற்றுச் சொற்கள் யகர மெய் பெற்று நில்லாதேய், பண்டேய், நையாதேய், வைம்மினேய் என்று வந்திருப்பது கருதத்தக்கது. பண்டைக்காலத்துச் சாசனப் பாடல்களில் பெரும்பாலும் இவ்வாறே உள்ளன.

குருகூர் நம்பி

இடம்: திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி தாலுகா, அன்பில் கிராமம், சுந்தரராசப் பெருமாள் கோவில் வடக்குப்புறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள். தொகுதி எட்டு; எண் 187. *(No. 187. S.I.I. Vol. VIII.)*

விளக்கம்: இந்தக் கோவிலில் அழகியபெருமாள், இளையாழ்வார், மலர்மகள் அனுமார் இவர்களின் உருவங்களைக் குருகூர்நம்பி என்பவர் அமைத்ததைக் கூறுகிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

அன்னவயல் சூழ்அன்பி லவர்கள்நீடி
அழகெய்தி முப்பொழுதுங் கண்டுபோற்ற
மன்னும் அழகிய பெருமாள் இளையகோவை
மலர்மகளை மாருதியை எழுந்தருள வித்தோன்
கன்னநய குடைத்தடக்கைப் பாருண்நிதி
காண்டகுசீர்க் கிளைதாங்கி கலைகள்ஓதி
செந்நெல்வயல் சூழ்வீரை சிங்கம்எங்கள்
சீகுருகூர் நம்பிஎனுஞ் செழுமறையோன் தானே.

குறிப்பு:- சுந்தரராசப் பெருமாள் என்று இப்போது வழங்குகிற பெயர் பண்டைக்காலத்தில் அழகிய பெருமாள் என்று வழங்கியது.

சிராமலையந்தாதி

இடம்: திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மலையின்மேல் உள்ள மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோவில் சுவர்களில் எழுதப்பட்டுள்ள செய்யுட்கள்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு; எண் 167. (No.167. S.I.I.Vol IV.)

விளக்கம்: இந்தச் செய்யுட்கள், சிராமலைச் சிவபெருமான் மீது பாடப்பட்ட அந்தாதிச் செய்யுட்கள். கலித்துறைப் பாவினால் இயற்றப்பட்டவை. இதனைப் பாடிய புலவர் பெயர் நாராயணன் என்பது. இவர் கி.பி.9 அல்லது 10-ஆம் நூற்றாண்டில் இருந்தவ ராவர். சில செய்யுட்களில் இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்து விட்டன.

சாசனச் செய்யுள்

உலக மடந்தை நுதலுறந்தைப் பதி யந்நுதற்குத்
திலதம் பரம னமருஞ் சிராமலை யம்மலைவா
யலகின் னிறைந்த கதிர்மணி பாய....மேல் வந்ததந்தாதி
..ப் பொன்னி பரன் கழுத்திற் கொண்ட வெள்வடமே. 1

வடகயிலாயமுந் தென்மான் மலையப் பொருப்பு
மென்னுந்
தடவரை தாமிதன் றன்மைய வாவது தாமுணர்ந்துங்
கடவரை மேக முழக்குஞ் சிராமலை கண்டகண்
முடவரை யொக்கு மறுசான் றெண்ணி
மொழிகின்றதே. 2

மொழிந்திடுமெய்ம்மை முனிந்திடும் பொய்ம்மை
முயன்றிடுமின்
கழிந்திடும் யாக்கையைக் கைப்பணி கொடல்
கருமுகில்வான்

பொழிந்திடு மெல்லருவிச் சிராமலை புகுத்திடுமி
னிழந்திடு நும்வினை யீச னங்கேவந் தெதிர்ப்படுமே. 3

படும்பொழு தாயிற்று வெங்கதிர் கூர்றுவன் பற்றிநம்மை
யடும்பொழுதா வஞ்சலென்பான் சிராமலையர் எரிவந்
திடும்பொழு தாயிற் றெதிர்கண்டிடி லெமருங் கொடியர்
நெடும்பொழுதா லென்கொலோ வன்பர்நீர் வந்து
நிற்கின்றதே. 4

நிற்குந் துயர்கொண் டிருக்கும் பொழுதின்றி
நெஞ்சனுங்கித்
தெற்கும் வடக்குந் திரிந்தே வருந்திச் சிராமலைமேற்
பொற்குன்றனைக் கண்டுகொண்டே னினிப்புறம்
போகலொட்டேன்
கற்குன்றனைய நெஞ்சிற் செல்வரா லில்லை காரியமே.
(டேன் 5

காரிக் குதவார் கடவுட் கிறைச்சியுங் கள்ளுநல்கு
மோரிக் குரற்பெண்க ளொன்றறியீ ரொருபால் குறவர்
சேரிக் கொடுமுடித் தெய்வச் சிராமலைத் தெண்மணிநீர்
வாரிக் குளிக்க வொளிக்குமெய்ந் நோயி மடவரற்கே. 6

மடக்கோல் வளையிடத் தான்றன் சிராமலை
வாழ்த்திலர்போல்
படக்கோ நிலமன்னர் பாவையைப் பேசிப் பரிசமிட்டார்
விடக்கோ கிடந்தன வெளர்வரையார் கொள்
வாளளைந்தார்
தடக்கோ வெளிப்படுத்தார் மறவீர் நுங்கள் சுற்றத்தையே.
7

சுற்றத்தை நியத்தி நின்றருள் புணையாகச் சுரம்படர்ந்த
நற்றத்தை பெரலிக்கு நல்குகண்டாய் பண்டு நாடறியப்
பெற்றத்தை யேறும் பெருமான் சிராமலை மேலோர்சேர்
குற்றத்தை நீங்குங் குணத்துர வோர்தங்கள் கோளரியேய். 8

கோளரி யேறு போலக்கொல் யானையைக் கொன்றுதிங்கள்
வாளரி யேறு கண்ணா யிருந்தவன் மால்கடல்வா
யாளரி யோறிடத் தாண்டான் சிராமலை ஐவனமாந்
தோளரி யேறு தஞ்சமா ரிதற்குந் தலைமகளே. 9

தலைமக.... பர னொருவன் னவன் றம்பி கொம்பார்
குலைமுக யானைத் தலையின்னவர் தாயலை மலையாள்
முலைமுக நியமயங்கி மயங்கிற்றுன் முன்மையென்னோ
சிலைமுக நீடு திருமலை மேய திகம்பரனே. 10

பரந்தெரி...ன் றுகளாகிப் பகையுறனைச்
சரந்தெரி கானவர் தன்னய.க தடமலரோன்
சிரந்தோயா வொள்வலி சதித்த விரன் சிராமலை போலுந்
.....வானுடன் போன வெள்வளைக்கே. 11

வளைவர.... ய வந்துகாண மணி நாளில்வந்த
முளைவா யெயிற்று முதவச் சிராமலை முடியிலவிள்
சுளைவாய் சொரிந்த பெருந்தேன் சுடர்தோய் நறுங்கமலத்
தளைவாய்த் தேனருந்தச் சுரும் பார்க்கின்ற தண்பரணியே. 12

பரணித் தடையா வலர்கள்பெறு குருரம்பைக் கிணைமல்லமுத்தங்
கரணத் தடங்கண்மலர் காதளவும் முன் காரதிருந்
திரணைத் தடஞ்சாரற் பரமன் சிராமலை சூழ்சுளை
திரணைத் தாங்கப் பிடித்துடி யறுகேநின்ற பாயமயிற்கே. 13

மயிலார்....க.....மென்று பேரகில் வஞ்சியென்று
பயிலாக் கிளியும் மயிலும் படைக்குணகன் பார்த்துழைமா
னயிலா தொழிகி லவை வளங்காவ லெவ்வா றமைத்தார்
வெயிலார் மழுவன் சிராமலை வாழ்நர் தம் மெல்லியற்கே. 14

மெல்லிய .... த....மாலைக்கு மெய்ப்பொருள்
வேண்டுமெனச்
சொல்லிய கோவிற் கருள் செய்தவன் சூழலும் முகிலை
வல்லிய மால் களிறென்று தன் வாளுகிராற் கதுவச்
செல்விழி சாரற் சிராமலை மேய திருவடியே. 15

வடிக்குங் கருங்குழல் மேலுமைத்
தாள்மொய்த்த வண்டகற்றிக்
கொடிக்குங் குமக்கொங்கை மேலுங்
கொண்டாள் கொண்ட லந்திமந்தி
பிடிக்குஞ் சிராமலை யாதிதன்
பேரருள் போலநன்றுந்
தடிக்குங் கலையல்கு லாளின்ப
நீதந்த தண்டழையே. 16

தழைகொண்ட கையர் கதிர்கொண்ட
மெய்யர் தளர்வுகண்டு
பிழைகொண்டு பொய்யென்று பேசிவிட்
டேற்கவர் பேரருளான்
மழைகொண்ட கண்டர்தம் மானிர்ச்
சிராமலை வந்துநின்றா
ருழைகொண்ட நோக்கியின் றென்னுரைக் 17
கேனவ ருற்றிடிலே.

உற்றார் தலையிட வொன்னார் முகந்த உண்டுமிக்க
துற்றா ரிடுவ ரெனத்தொழு தோங்குந் தொழார்புரங்கள்
செற்றார் சிராமலை சேரவல்லார் திருநாம மெல்லாங்
கற்றார் களைகழல் கண்டிறைஞ் சாதவர் கைத்தலமே. 18

கைத்தலைக் கராமலை நெல்லிக் கனிபோல்
கலைகளெல்லா
மெத்தலைப் பாடு விதியுணர்ந்தோர் தங்கள்
விதியெங்குஞ்

செய்த்தலை நிலமலருஞ் செழுநீர் சிராமலையான்
பைத்தலைப் பாம்புகண்டீ ரைமேற் கொண்ட
பட்டிகையே. 19

பட்டிப் பசுமுள் படரத் துடர்ந்துநின் பாடுசெல்லின்
முட்டித் திரியு முகில்போ லதிரு முரட்கயிற்றாற்
கட்டிக்கொடாளுங் கருமஞ்சொன்னோங்கன்னி
யாரமெங்குங்
மட்டிக் கமழுஞ் சிராமலையீர் நுமதவிடையே. 20

மதவிடைப் பாகன் மதியிடைப் பாகன் மழைநிறத்தோர்க்
குதவிடப் பாக னுமையிட பாக னுயர்கலிங்கு
கதவிடப் பாகு கமுகெழக் காமர் கடிநகர்வாய்ப்
புதமடப் பாய்புனற் பொன்னிச் சிராமலைப்
பொன்வண்ணனே. 21

பொன்வண்ண மாளிகைப் பூந்தண்
சிராமலைப் பள்ளிகொண்ட
மன்வண்ண மால்கடனஞ் சம்மிருந்த
மறைமிடற் றான்றன்.
வண்ணந்தி வண்ணங் கண்டுதளிர்
வண்ணம் வாடிச் சென்றான்
மின்வண்ண நுண்ணிடை யாளெங்ங
னேசெய்யு மெய்ப்பணியே. 22

பணியா வதுநஞ் சிராமலை மேய பரமற்கென்று
துணியாடையு மணிவாய் நன்றுந் துவ ரூட்டிக்கொங்கை
பிணியாதொழிந்தனை யோர்மனத் தேய்பிணிப்
பான்றுடையா
யணியா ரடிகள் பழந்தவஞ் சால வயிர்ப்புடைத்தேய்.
23

அயிர்ப்புடையாய் நெஞ்சமே யினித் தேறர
மங்கையல்லள்
செயிர்ப்புடை யார்தந் திரிபுரஞ் சென்றான் சிராமலைவாய்
பயிர்ப்புடை யாளடிப் பார்தோய்ந்தன
படைக்கணிமைக்கு
முயிர்ப்புடை யாளிவ் வுலகுடை யார்பெற்ற
வொல்கிடையே. 24

கிடைவாய் மடந்தையு மைந்தனுங் கேட்கிற் சிராமலையா
னடைவா யவரை யனையார் கிளைபோ லழிந்துபட்டார்
கடைவாய் நிணந்தின்ற பாவிதன் காதற் கரும்பெடையின்
முடைவாய் புகச்சொரி முண்மாக் காளத்து முன்பினரே. 25

முன்வந்து நின்றனை யென்றுரைக் கேன்முகிழ்
மென்முலைக்கீழ்
மின்வந்து நின்றனன் நுண்ணிடையாய் விதியே வலிந்த
பொன்வந்த கொன்றையர் பூந்தண் சிராமலை
போற்றலர்போல்
பின்வந்து வனகா னவர்கைப் பாடும் பெருஞ்சுரத்தே. 26

பெருஞ்சிலை யாற்புர மூன்றெறித்
தோன்பிறைக் கோட்டுக்கைம்மா
வுரிஞ்சிலை தேங்கமழ் பாங்கற்
சிராமலை யுள்ளவர்போல்
வருஞ்சிலை யோர் நுமராகின்
மறைவன் வன்கானவரேற்
கருஞ்சிலை யாலழிப் பன்கலங்
காதுநிற் காரிகையே. 27

காரிகத் தாழ்பொழிற் கண்ணார் சிராமலைக்
காமர்கொன்றைத்
தாரிகத் தாழ்சடைச் சங்கரனே சதிரொப்பனகொ

பாரிகத் தாழுநின் பாதம் பணிந்தவ ரேதமஞ்ச
வோரிகத் தாவருங் கானகத் தாடி யுரைகின்றதே 28

உறைவாய் சிராமலை யுள்ளுமென் சிந்தை
யுள்ளுமென்றும்
பிறைவாய் மழுவாட் பெரியவனே நுன் பியற்கணிந்த
கறைவா யரவங் கடியா வகையடியே னறியே
னறைவா யழலுமிழும் புரிந்தாடி யலமருமே. 29

அலமரு நெஞ்சத் தரிவைகண் டாற்றுங்கொல்
போற்றலர்தங்
குலமரு முப்புரங் கொன்றவன் கோலச் சிராமலைசூழ்
நிலமரு தென்றுளி நித்திலங் கோப்ப நெடும்பொழில்கள்
சலமரு வெள்வடம் பூணத்தண் கானெடுந் தாழ்பனியே. 30

பனிப்படம் போர்த்தனள் பார்மகள்
யானும் பசலையென்னுந்
துனிப்படம் போர்த்திங்குத் தேனங்குத்
தாரன்பர் துங்கக்கைம்மா
முனிப்படம் போர்த்தபிரான் சிராப்
பள்ளியு மூரிக்கொண்மூத்
தனிப்படம் போர்க்கும் பருவமன்றோ
வந்து சந்தித்ததே. 31

வந்து சந்தித்திலர் காதலர் பேதையை வாதைசெய்வா
னந்திசந்திப்ப வெழுந்த தரன்றன் சிராமலைவாய்க்
கொந்து சந்தித்த செங்காந்தண் முகைகொண்டு
கொண்டிடுவான்
மந்தி சந்திப்ப வரவென் றுள்வாடு மதிப்பகையே. 32

மதியும்பகை முன்னைவாயும் பகை மனையும் மனைசூழ்
பதியும் பகை பகையன்றில் என்றும் பகை பான்மைதந்த

விதியும் பகையெனிலும் மன்ப ரன்பினர் வெள்ளக்கங்கை
பொதியுஞ் சடையன் சிராமலை போலுமெம்
பூங்குழற்கே. 33

குழனெறி காட்டிய கொம்பனையா ரொடுங்
கொண்டசுற்ற
மழனெறி காட்டு மிடத்தெனக்குத் தனக் கன்பர் சென்ற
பழனெறி காட்டும் பரன் சிராப்பள்ளி பரவக் கற்றேன்
முழுநெறி யாகிலுஞ் செல்லே னினிச்செல்வர்
முன்கடைக்கே. 34

இனிச்செல்வர் முன்கடைக் கென்செயச்
செறுமினைய னெஞ்சேய்
கனிச்செல்வ மாம்பொழிற் காவிரித்
தென்கரைப் பூவிரிக்கும்
முனிச்செல்வர் சேருஞ் சிராப்பள்ளி
மேய முக்கட் சுடரைத்
தனிச்செல்வனைப் பணிந் துள்ளமிர் 35
தூரித் தடித்தனமே.

தடித்த சுறதங் கமழ்சாரற்
சிராமலைச் சங்கரன்றன்
கொடிக்கண்ட வள்ளேறன்ன வெற்றிணைக்
கரங்கொடிழைத் தரண்சூழ்
படிக்கன் விட்டார்த்தன ராயர்
தளைப் பருவலியாற்
பிடித்த மொய்ம்பர்க் கின்றெளிய ளன்றோ 36
வெங்கள் பெண்ணமிர்தே.

பெண்ணமிர்தைப் பார்பெருந்தே னமிர்தைப்
பிறைநுதலை
வண்ணப் பயலை தணிவித்திரேல் வம்மின் செம்மனத்துக்

கண்ணப்பனுக் கருள் செய்த சிராமலையானைக் கண்டு
விண்ணப்பமுஞ் செய்து வேட்கையுங் கூறுமின்
வேறிடத்தே. 37

வேறு கண்டாய் நெஞ்சமே தளரேல் விளை மாங்கனியின்
சேறு கண்டாருண் சிராமலை யாதிதன்
செல்வஞ்சொன்னால்
யாறு கண்டா யவன் றேவியில் லம்பல மேற்பதைய
மேறு கண்டா யவனேறிப் பல்காலம் மியங்குவதே. 38

காலால் வலஞ்செய்து கையாற் றொழுது கண்ணாறக்
கண்டு
மேலா னவருடன் வீற்றிருப்பா னெண்ணில்
மெய்ப்புலவீர்
சேலார் கழனிச் சிராமலை மேயசெம் பொற்சுடரைப்
பாலா னறுநெய்யோ டாடியைப் பாடிப் பணிமின்களே.
39

பணிமின்கள் பாதம் பகர்மின்க
ணாமங்கள் பாரகத்தீர்
தணிமின்கள் சீற்றம் தவிர்மின்கள்
மொய்ம்மை தவம்புகுநாள்
கணிமின்க ளேனற் கிளிகடி
மாதர்தங் கைவிசைத்த
மணிமின்கள் போலொளிர் வான்றோய்
சிராமலைப் பள்ளி வள்ளலுக்கே. 40

வள்ளலுக்கும் மலை மாதர்தங் கோனுக்கு வார்சடைமேல்
வெள்ளெருக்கும் மதியும் பொதிந்தானுக்கு
வெண்பளிங்கு
தெள்ளலைக்கும் மருவிச் சிராப்பள்ளிச் சிவனுக் கன்பா
யுள்ளலுக்கு நன்று நோற்றதன்றோ வென்றுணர்
நெஞ்சமே. 41

நெஞ்சம் துணையுண்டு நீர்நிலத் துண்டு நிழலுமுண்டு
தஞ்சப் பெருக்குளதா னஞ்சிராமலைச் சாரலுண்டு
துஞ்சுந் துணையுஞ் சிவனைத் தொழுது துறக்கமெய்தார்
பஞ்சந் நலியப் பலிதிரிவார் சிலர் பாவியரே. 42

பாவிய ராக புரத்திற்பட்டார் பசுஞ் சந்தனத்தி
னாலி யராவு சிராமலை யானையு நல்லனென்னோ
மோவியராலு மெழுதப்படா வுருவத் தசுரர் தேவிய
ராவியுங் கொண்ட தன்றோ வவன் செஞ்சரமே. 43

சரங்கலந்தோரைப் புணர்விக்க வேயார் மேன்றார்க்
கணவன்
னிரங்கலந்தோ டெரிசேர்கின்ற வாறென் சிராமலையா
யிரங்கலந்தோ விலையால் வினையேற்கென்
நிரதிமண்மேற்
கரங் கலந்தோலிடக் கண்டதன்றோ நின்றன் கண்மலரே.
44

கண்மலர் நீலங் கனிவாய்
பவழங் கருங்குழல்கார்
எண்மலர் மூக்கிளங் கொங்கைகள்
கோங்கிடை யென்வடிவென்
னுண்மல ராசையி னொப்புடைத்
தல்கிலொண் பொன்மலையான்
றண்மலர் சேர்தனிச் சங்கிடுவா
ளொரு பெண்கொடிக்கேய். 45

பெண்கொடி யாரிற் பிறர்கொடியா ரில்லை பேரிடவத்
திண்கொடி யாரைச் சிராமலை யாரைத் திருநுதன்மேற்
கண்கொடியாரைக் கனவிற் கண்டு கலைகொடுத்த
வொண்கொடியாரை யுணர்வழிந் தாரென்
றுரைப்பர்களேய். 46

கள்ளும் முருகுந் தருமலரான் மிக்க சந்திறைஞ்சி
யுள்ளும் புறமும் மொருக்க வல்லார்கட் குலகறியக்

கொள்ளும் மடிமை கொடுக்குந் துறக்கம் பிறப்பறுக்குந்
தெள்ளும் மருவிச் சிராமலை மேய சிவக்கொழுந்தே. 47

கொழுந்தார் துழாய்முடிக் கொற்ற கருடக் கொடித்தேவுஞ்
செழுந் தாமரையிற் றிசைமுகத் தாதியுஞ் சேவடிக்கீழ்த்
தொழுந் தாரியர்தந் துணிவைப்பணியச் சுடர்ப்பிழம்பா
யெழுந்தான் சிராமலைக் கேறநம் பாவம் மிழிந்தனவே. 48

இழியும் நரகமு மேறுந் துறக்கமு மிவ்விரண்டும்
பழியும் புகழுந் தரவந்தன வினைப் பற்றறுத்துக்
கழியும் முடம்பு கழிந்தவர் காணுங் கழலன்கண்டீர்
பொழியுங் கருமுகில் போர்க்குந் திருமலைப்
புண்ணியனேய். 49

புண்ணியன் வேதம் முதல்வன் புரமூன் றெரித்தவன்று
திண்ணியன் றேவர் பிரானென்ன நின்றான்
சிராமலைவாய்க்
கண்ணியன் றண்ணந் தழையன் கனைபொற்
கழலனம்பாற்
றண்ணியன் இன்றும் வரும் மன்று போன தனிவில்லியே.
50

வில்லியின் பின்செல்ல முன்செல்லா
வரிவையு மென்கிளிப்போல்
சொல்லிபின் செல்லமுன் செல்லா
விடலையுட் சொல்லிம்மான்
வல்லிபின் செல்லமுன் செல்லா
திடங்கொண்ட மாதவர் போ
லெல்லிபின் செல்லமுன் செல்லார்
சிராப்பள்ளி யெய்துவரேய். 51

எய்துவ ராயமுந் தாமும் இரும்பொழி லென்னைமையல்
செய்தவர் வாழ்வுஞ் சிராமலை யென்பது சென்று
கண்டால்

மெய்தவர் மான்விழி மென்முலை தண்ணிய
வம்முலைக்கீ
ழைதவர் நுண்ணிடை யல்கிலுஞ் சால வளவுடைத்தேய். 52

உடைத்தேய் வருதுன்ப வெம்பகை நீக்கி உலகளிக்குஞ்
சடைத்தேவர் முடித் தேவருந் தாடொழத் தானவரைப்
புடைத்தேய் கெடுத்த பரமன் சிராமலைப் பாடிருந்துங்
கடைத் தேவனைத் தொழுமோ வினையேனென்
கரதலமேய். 53

கரம்பற்றிய வில்லி கைப்பற்றிய வல்லி காலலைக்குஞ்
சுரம்பற்றிய செழுமம் பொன்சுடர்க் கமலத் தயன்றன்
சிரம்பற்றிய மழு வாளிதன் சாரற் சிராமலைசேர்
வரம்பற்றிய பெரியோரிற் சென் றேகின வாழ்பதியே. 54

பதியிலந் நாடிலம் பைம்பொற் குடைபெறப்
பண்டுசெய்த
விதியிலம்........இலம்வியன் கங்கையென்னு
நதியிலங்குஞ் சடை நாதன் சிராமலை நண்ணவெண்ணும்
மதியிலம் வாழ்வா னிருத்துமென் னோநம்
மனக்கருத்தேய். 55

மனக்கருத் தாகிய. ரவலை கண்செ.... பற்றின
...க்கருத்து.... இருந் தென்......
.....கெலாம்..... ....
......கொட்டிற் றளைக்கு...... சிராமலையே. 56

மலையாள் மடந்தையோர் பாகத்தன் மாகத்து மானதஞ்
சிலையா லழிவித்த நாதன் சிராமலை தேவர்.... வ
முலையா யொருவர்.... குயிர்க......
மிலையா.... ழி ருணர்ந்தெமை வினாவி யியங்குவரேய். 57

இயங்கிய காலு நிலனும் எரியு மிருவிசும்பும்
மயங்கிய நீரும் மறையும் பிறவு மருவியரந்
தயங்கிய சோதியுந் தானாந் திருமலைத் தத்துவன்றாள்
முயங்கிய சிந்தையி னார்க ளெந்நாளு முடிவிலரே. 58

முடியரை சாளு முந்நீரகன் ஞாலந்தன் முனணிந்த
வடியரையாள் விடுவான் சிராமலை ஐய நிலயிற்
பிடியரை சாளி பிடிப்ப நடுக்குறும் பெய்புனத்தேய்
குடியரை சாளுங் குறவருஞ் சாலக் கொடுமையரே. 59

கொடும்பற் றுயங்கிக் குழிகண் ணிடுங்கிக் குரனடுங்கி
இடும்பைக் கொதுங்கி யிருமற் பகைகொல்ல
இல்லிபட்ட
நெடும்பற் களைய நிலையா வுடலை நிலையுமென்னார்
திடும்பற் கலுழிச் சிராமலை யாளியைச் சேர்ந்தவரேய். 60

ஆளியைச் சேர்ந்த வகலத் தவனுக் கிளையவம்மென்
றோளியைச் சேர்ந்த பிரான்றன் சிராமலை துன்னலர்போல்
மீளியைச்சேர் நாதனம் செய்தளையெய் வினையேன்
பயந்த
வாளியைச் சேர்ந்த சிலைபோல் லுருவத்து வாணுதலே.
61

நுதன்மிசைச் செங்கண் மலர்ந்தனங்
கொடையின் மன்மதவேள்
மதனுகட் போந்தழற் சிந்துவித்தான்
வண் சிராமலைவெற்
பிதன்மிசை சாரலில் யாமா
டிடமிள வண்டுறங்கும்
புதன்மிசைத் தோன்றியுங் காந்தளும்
பூக்கும் பொழிலிடமே. 62

பொழிலுடையார் பணி பொன்னடி வானவர் முன்முடிசேர்
கழலுடையா னது காமர் சிராமலைக் காரனைய

குழலுடையாணசையராற் குறவர்கொல்லியானைக்
கொள்ளித்
தழலுடையா நெறி யம்பொறி போர்க்குத் தயங்கிருளே.
63

இருளின் படலம் மிவை கார்முகி லில்லைவென்னின்
மருளும் மயர்வும் பெரிதுடையா ரில்லை வல்லி.
ருணோய்தெரும் மனத்தார்க்கருளும் பிரான்றன்
சிராமலைபோ
பொருளும் மவிரும் பொன்னகர் வீதி புகுந்தாரேய். 64

வீதி வந்தாருடன் வெள் களந்தான் விளராலிவடன்
சோதி சேர்ந்தான் சிந்தை... ல்லி..வுண்ணா...ரதருவின்
...சிந்தா மந்தி யாடுஞ் சிராமலைப் பொன்மலைபோ
லாதி செந்தாமரை வண்ணங் கண்டா னங்கள் இழையே.
65

இழையிடங் கொண்ட தடமுரண்....திளங் கோமதலை
விழையிடங் கொண்டவெண். ரனாறிர் தன்றின்னி...ழவி
மழையிடங் கொண்ட சிராமலையா ரளி மிறந்தவர்போல்
பிழையிடங் கண்டது...ள் பெண்கொடிக்கே. 66

கொடிக்கட்டிய மணி மாளிகைத் தில்லையுட்
கொற்றமன்னர்
முடிக்கட்டிய முகை சேர்கழல் மூவாயிரவர் முன்னின்
றடிக்கட்டிய கழலார்க்கநின் றம்பலத் தாடுமைய்யொர்
வடிக்கட்டிய பொழில் வான்றோய் சிராமலை
மாணிக்கமே. 67

வான்றோய் சிராமலை வந்திறைஞ்
சாதவர் மையல்வைகுந்
தேன்றோய் மொழியவர் செவ்வாய்
நினைந்து வெள்வாய் புலர்ந்து

மீன்றோய் கடலன்ன வேட்கைய
ராகத்தம் மெய்ம்மைகுன்றி
ஊன்றோ யுடலிங் கொழித்துயிர்
போக்கும் உறைப்பினரே. 68

உறைப்புடைக் கூற்றை யுதைத்துயிர்
மாற்றி யுலகறிய
மறைப்புடை மார்க்கண் டயற்கருள்
செய்தவன் வானெரிவாய்க்
கறைப்புடைப் பாம்புறை திங்கட்
கரைக்கங்கை நீரலைக்குஞ்
சிறைப்புடைச் செஞ்சடையன் உறை
கோயில் சிராப்பள்ளியே. 69

பள்ளியம் மாதுயிலெற் கின்றிலை பாவிப் பிழைத்தாய்
வள்ளிதம்...சிலைவேடன் உட்கா....
வெள்ளியம் மாமலை யாளன் சிராமலை மேன்மலையன்
உள்ளியம்மா விரந்தா லுகந்திய பத`முன் மத்தமே. 70

மத்தமமைத்தான் சென்னிப் பொன்னிமவான் பெற்ற
மாதுதன்
ெ...... ....முழுதும்
பித்தமைத்தாய் சிந்தைநொந்து குலமந்து பேர் மாக்கண்
முத்தமைத்தாய்க் கங்கை..ாகில்... நின் முதிர்ச்சியையே. 71

முதிரும் பாவை முகந்த கொண்மூ முகடேறி முன்னி
யதிரும்மா...ப்பது...வ்வமுங்
கதிருங் கலந்த சிராமலை யாளி கழனோம்பு
கதிர்த் திருவருள் போலினியானை யின் றெய்துவனே. 72

யானையின் றெய்த பிடியாமட....
....யன்பர்தம் வாழ்நாளை....றென்றுவிட்டார் சிந்தை

....னெறுங் கொன்ற வீரன் சிராமலை யெவினப்பாற்
பூனை நின்றெங்கும் பெரியதிர் தினம் புகுந்தனரே. 73

தினம்புகு கின்றது தண்பணை யாகத்தன்... மா
வினம்புகு தேர் நின்றிழிந்து புக்கா ரன்பரென்று...வுஞ்
சினம்புகு திண்விடைப் பாகன் சிராமலைத்
தெய்வமன்னான்
மனம்புகு வெம்பிணிக்கொ....ணந்திட்ட மாமருந்தேய். 74

மருந்தேய் சிராமலை மாமணியே மருதா டமர்ந்தாய்
குறுந்தோய் நறும்பொழிற் கற்குடி மேய கொழுஞ்சுடரேய்
முருந்தேய் முறுவ லுமைகணவா முதல்வா வெனநின்
திருந்தேய் நிறையழிந்தேன் வினையேன் பட்ட
வேழைமையே. 75

ஏழைப் புதல்வன் னெனக்குத்
துணையுமக் கெங்கையையுங்
கோழைக் குரற்பெரும் பாணனையு
கொளக் குன்றர்கொன்ற
வாழைக் குலைமண நாறுஞ்
சிராமலை வாழ்த்தலர்போல்
மோழைப் பெரும்பேய் செல்லேலு
நில்லெனுமென் முன்கடையே. 76

கடையகத்துச் சென்று கானிமித்து நின்று கைவிரித்து
நடையகத்துப் பெரி தென்னத் திரிவர் நகுமதிசேர்
சடையகத்துக் கங்கை வைத்தான் சிராமலை சார்வொழிந்து
படையகத்துச் செல்வராய் நல்லாரான... ரே. 77

களகன் னிவனெனப் பாரோர்நகப் பணையின் மடன்மே
லளகந் நுதலி யொருவர்வந் நாட லியானைக்கன்று
மிளகு மடமையின் முளையும் மிளகமென் றேன்பருகிக்
குளகுந் நுகருஞ் சிராமலை சூழ்ந்த குலப்பதிக்கேய். 78

பதியொற் றிடராற் படுதலையிற் பலி கொள்வதெங்குங்
கதியொற்றி ஊர்வது காசின் மால்விடை காதலியுந்
நதியொற்றி யூர்நகர் நஞ்சுண்பன தந்தலை..ஞ்ச
மதியொற்றி யூருஞ் சிராமலை மாதவர் வாழ்வகையே. 79

மாதவர் வாழுஞ் சிராமலை மாமணி கண்டாங்கேய்
போதுவ ராகிலும் போமடவா யென்ன நிலநடுவே
யீதவர் விதியன் றென்பர்போ லிருந்தோங் குணத்தோய்
...யாவிசொல் லாயவர்பாற் சென்று சொல்லுதற்கேய். 80

சொல்லும் பொருளுஞ் சுவையும் பயனு மிலவெனிலும்
அல்லும் பகலு மிகதா மெனக்குப் புரமெரிப்பான்
வில்லுங் கணையுந் தெரிந்த பிரான்றன் சிராமலைமே
லெல்லுங் கனைகழலின் குணம் பாரித்த வென்கவியே. 81

கவியலைத் தண்ணுங் கலைஞர்தங் காமரறு
கார்க்களிற்றின்
செவியலைத் துண்ணுஞ் சிராமலை வாழ்நனைச்
சேரகில்லார்
புவியலைத் துண்ணும் போர்வண்...வலராய்
நவியலைத் துண்ணு மங்காடு நங்கை..ராடு நண்ணுவரே. 82

நண்ணுதலர் காநற்படு மலரு நறுங் குடுமி
விண்ணுதல் போழுஞ் சிராமலை வெற்பனை வேறிருந்து
மண்ணுதல ரடிப்பணிந்த னாமமதை...டக்கயென்
....வல்லார்க் கெளிதிமை யோர்த மிரும்பொழிலே. 83

இரும்பிடைச் சேர்ந்த தெண்ணீர் வளன்மை
பெற்றிமை யோரிருக்கப்
பொரும்படைக் கூரெய்த பொன்மலை
யாயைப் புணர்ந்தபின்னைக்

கரும்பா... .....
மிர்துங் களிவளனுஞ்
சுரும்பிடைத் தேனுநன் பாலுநின்
போலச் சுவையில்லையே. 84

இல்லையென்பார் பொரு ளுண்டெனப் பரிவ விரதிபழஞ்
சொல்லுந்தளை யாலவர் இரணங்கள் முன்றின்
சுடர்விளக்காத்
தில்லையென்பர் தென் சிராமலையா யென்று
சென்றிறைஞ்சி
வல்லையன்பர்க நெஞ்செயடு. னியின வன்பழிக்கே. 85

பழிக்கும் இருட்படலம் பேரருளன் கையு மஞ்செழுதயு
விழிக்கும் இமையவ ரேறும் மிடத்தெதிர் வந்தருவி
தெழிக்குஞ் சிராமலைச் சித்தரைத் தீர்த்த.... யக்
கழிக்கும்மிது மெய்ம்மை கைகண்ட யோகங்
கடலிடத்தே. 86

இடங்கொண்ட வேலையு மெழுமலையுந்
திசை யானையெட்டும்
படங்கொண்ட நாகஞ் சுமந்தவிப்
பாருமே படருங்கொல்லோ
திடங்கொண்ட சாரனற் சிராமலைக்
கூத்தன்செம் பொற்கழல்சேர்
நடங்கொண்ட சேவடிக் குஞ்சித்
தருள் செய்த நானகத்தே. 87

அருள் செய்வதும் படையென் மெய்ம்மையே
யடியேனுக் கிம்மை
பொருள்செய் துதவும் புதல்வரைத் தந்தென்
பொல்லாத சொல்லால்
மருள்செய்த மாலை கொண்டானை
வண்டாருஞ் சிராமலைவா
யிருள் செய்த கண்டனையே தொண்டர்காள்
வந் திறைஞ்சுமினே. 88

வந்திறைஞ்சித் தளர்ந்தேன் செல்லுமோ சிந்தை
மாதவர்மேற்
சந்திறைஞ்சிப் படர் சாரற் சிராமலைத்
தாழ்பொழில்வாய்க்
கொந்திறைஞ்சிக் கமழ் கோதை சூலாவிக் குழலவிழப்
பந்திறைஞ்சிப் பிடிப்பா ளிடைக்கே சென்று
பற்றுண்டதே. 89

தேறு சொல்லாத தமிழ்த்தென் வேம்பய ரண்ணற்
செங்குவளை
நாறு மல்லாகத்து நாராயணன் பண்டை நான் மறையும்
ஏறு மல்லோனைச் சிராமலை யாளியை யிங்கு... த்த
னீறுமல்லோர் தம்மை நோக்கவல்லார்க்கென்று
நோயில்லையே. 90

நோயிலங் காதலுடைய நெஞ்சேய் நுரைவெண் கடலுட்
போயிலங் காபுரஞ் செற்றபொற் றேர்வன் போந்திருந்து
வாயிலங் கார்தரு மந்திரத்தால் வணங்கிப் பணிந்த
சேயிலங் கார்கழற் றீர்த்தன் சிராமலை சென்றடைந்தே. 91

அடைக்குங் கதிர்மணி யாரம் முலைக்கணிந்
தல்கின்மெல்லம்
புடைக்குங் கலைபுனைந் தோதியிற் போது
புனைந்துவிட்டார்
விடைக்கும் முமைக்கு நற்பாகன் சிராமலை மெல்லியலி
ரிடைக்குங் இளையவர்க்கும் பகையோ நும்மை
யீன்றவரேய். 92

ஈன்றாள் வருந்த விம்மைப்பிறந் தம்மைக்
கிரங்கிநைய்யு
மூன்றா முடிகொண் டொளிப்போ மெளிப்பட்
டொருங்கிநின்றோம்
தேன்றாழ் சிராமலை வாரியின் மூரித் தெய்வக்களிறேய்
தோன்றா யெமக்கொரு நாள்வினைப் பாசத் துடரறவே. 93

துடரிடை யாத்த ஞமலியைப்
போலிருந்தேனிச் சுற்றத்
திடரிடை யாப்பவிழ்த் தென்னைப்
பணிகொள் பொன்னைப் புரையுஞ்
சுடரிடை யாத்தபைங் கொன்றையு
மத்தமுஞ் சூழ்சடையின்
படரிடை யாத்த பரமன்
சிராமலைப் பால்வண்ணனே. 94

பால்வண்ண நீற றெம்பரன்
சிராப்பள்ளிப் பரஞ்சுடர்தன்
பால்வணங் கண்டுநம் பல்வண்ண
நீங்கிப் பக்கத் திடஞ்சேர்
மால்வண்ணங் கண்டுதம் மால்வண்ணங்
கொண்ட வளைசரிந்து
மால்வண்ணங் கொண்டுவந்தார் சென்று
காண்மின்கள் மங்கையிரே. 95

மங்கை யம்பார் கண்ணி பெண்ணுக்
கரைசி மலைமடந்தை
கொங்கையம் பாரங்கள் போல்வா
னெழுந்து குவிந்தழிந்து
பங்கயம் பாதங்கள் பொன்மலர்
பெறாதவர்ப் பொன்மலைமேற்
புங்கவன் பாதந் தொழுதொழிப்போ
மெங்கள் பொய்யுடம்பே. 96

பொய்யினைப் பேசிப் பொருளினைத் தேடிப்
புழுப்பொதிந்த
மெய்யினைக் காத்து வெறுத்தொழிந்தேன
வியன்பொன்மலைமே

லையனைத் தேவர்தங் கோனை யெம்மானை யம்மான்
மறிசேர்
கையனைக் காலனைக் காய்ந்த பிரானைக் கழல்பணிந்தே.
97

கழலும் மருளுநஞ் சென்னி வைத்தோன் கனகச் சிலம்பிற்
சுழலும் மலரும் மசோகும் பலாசுந் துடரா தெழிந்திட்
டழலின் புறத்து வெண்ணீ றொத்தனநம் மணிவளையார்
குழலும் அளகமும் பெய்யக் கொய்யாத குராமலரே. 98

குராமலை கொண்ட உலகொளி மதியமுங் கோளரவும்
இராமலை வான்பகை யென்பது பொய்மெய்ம்மை
யோர்க்கருளுஞ்
சிராமலை வானவன் சென்னியின் மேற்கொண்ட
சீர்மையினாற்
கராமலை நீர்க்கங்கை பாலுடன் வாழ்கின்ற கண்டனரே.
99

கண்டன கேட்டன வுற்றன காம ரறுசுவையா
லுண்டன மோந்தன வைம்பொறி யுள்ளு முயிர்தழைப்பக்
கண்டன கேட்டன வுற்றன காம ரறுசுவையா
லுண்டன மோந்தன பொன்மலையாளை கயர்க்
கோக்கினவே. 100

ஒக்கிய கையோ டொருக்கிய வுள்ளத்தி யோக்கியர்தம்
வாக்குயர் மந்திரம் வானரங் கற்று மந்திக் குரைக்குந்
தேக்குயர் சாரற் சிராமலைக் கூத்தன்செம் பொற்கழல்மே
லாக்கிய சிந்தை யடியர்க் கென்னோ வின்றரியனவே 101

அரியன சால வெளிய கண்டீ ரருவித் திரள்கள்
பரியன நேர்மணி சிந்துஞ் சிராமலைப் பால்வண்ணனைக்
கரியன செய்யன நுண்புகர்ப் பைங்கட் கடாக்களிற்றி
னுரியனை நாழிகை யேத்தவல் லார்க்கிவ் வுலகத்துளே.
102

மற்பந்த மார்வன் மணியன் மகன் மதிள் வேம்பையர்கோ
னற்பந்தமார் தமிழ் நாராயணஞ் சிராமலைமேற்
கற்பந்த னீழலில் வைத்த கலித்துறை நூறுங் கற்பார்
பொற்பந்த னீழ லரன்றிருப் பாதம் பொருந்துவரே. 103

மாட மதிரை மணலூர் மதிள்வேம்பை
யோடமர் சேஞலூர் குண்டூர்இந் - நீடிய
நற்பதிக் கோனா ராயணஞ் சிராமலைமேற்
கற்பதித்தான் சொன்ன கவி. 104

குறிப்பு: - இவ்வந்தாதியைத் தருமபுர ஆதீனத்தார் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். சாசனச் செய்யுளில் மறைந்து போன சொற்களுக்கு அவர்கள், தமது யூகம்போலச் சொற்களை அமைத்து அச்சிட்டிருக்கிறார்கள். நாம் இங்கு அச்சிட்டிருப்பது, அரசாங்கத்தார் பதிப்பித்துள்ள வாசகம். மறைந்த எழுத்துக்களும் சொற்களும் விடுபட்டுள்ளன. பிழைகளும் திருத்தப்படவில்லை

இக் கட்டளைக்கலித்துறைச் செய்யுட்களிற் சில இலக்கண வரம்புக்கு மாறுபட்டுள்ளன. 13 - வது செய்யுளின் முதல் அடியில் 20 எழுத்துக்கள் உள்ளன. இவ்வாறே சில செய்யுட்கள் கட்டளைக் கலித்துறை இலக்கணத்துக்கு மாறுபட்டு எழுத்துக்கள் குறைந்தும் அதிகப்பட்டும் உள்ளன. இது சாசனச் செய்யுளைச் செதுக்கிய சிற்பியின் தவறு என்று தோன்றுகிறது.

திருச்சிராப்பள்ளி மலைமேல், மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோவிலின் சுவரில் இச் சாசனக் கவிகள் எழுதப்பட்டுள்ளன. இக்காலத்துத் ''தொடர்'' என்று வழங்கும் சொல் இச் செய்யுள்களில் ''துடர்'' என்று பயின்றிருக்கின்றது.

23/1-105

நக்கன் திருவேகம்பன்

இடம்: திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி தாலுகா, உய்யக்கொண்டான் திருமலை. இவ்வூர் உஜ்ஜீவ நாத சுவாமி கோவிலின் முதல் பிராகாரத்து வெளிப்புறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு; எண் 545. (No. 545. S.I.I. Vol. IV.)

விளக்கம்: ''வீரமே துணையாகவும் தியாகமே அணியாகவும்'' என்று தொடங்குகிற சாசனத்தின் இறுதியில் இந்தச் செய்யுள் எழுதப்பட்டுள்ளது. இந்தச் சாசனமும் செய்யுளும், கோவிராஜ கேசரி பன்மரான வீர ராஜேந்திர தேவரின் 5-ஆவது ஆண்டில் எழுதப்பட்டன. கருப்பூர் கம்பன் மகனான நக்கன் என்பவர். இக் கோவிலுக்கு விளக்கு ஏற்றுவதற்காகத் தொண்ணூறு ஆடுகளைத் தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது. கோவில்களில் ஆட்டு நெய்யினால் விளக்கெரிப்பது அக்காலத்து வழக்கம்.

சாசனச் செய்யுள்

கருப்பூர்மன் கம்பனுக்குக் காதலன்சீர் நக்கன்
விருப்பூர் விழுமிய தேவர்க்கு - திருப்பூர்
விளக்குவைத்துத் தொண்ணூறா டாங்களித்தான் மெய்யே
உளக்கருத்தால் சால உகந்து.

குறிப்பு: - கருப்பூர் - இது சோழநாட்டு உறையூர்க் கூற்றத்துக் கருப்பூர். கம்பன் - கருப்பூர் உடையான் ஏகம்பன். காதலன் - மகன். நக்கன் - இவன், கருப்பூருடையான் ஏகம்பனின் மகனான நக்கன் திருவேகம்பமுடையான். இவனுக்குக் கேரளாந்தக விழுப்பரையன் என்னும் பெயரும் உண்டு. விழுமிய தேவர் - திருக்கற்குடி

விழுமியதேவர் என்னும் பெயருள்ள சிவபெருமான். கற்குடி விழுமி யார் கோவில், இப்போது உஜ்ஜீவநாத சுவாமி கோவில் என்று வழங்குகிறது.

பத்மநாப நாராயணன்

இடம்: திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி தாலுகா, அன்பில் கிராமம், சுந்தரராஜப் பெருமாள் கோவில் மேற்குப்புறத்துச் சுவரில் உள்ள சாசனச் செய்யுள்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி எட்டு; எண் 186. *(No. 186, S.I.I.Vol. VIII.)*

விளக்கம்: பற்நாப நாராயணன் என்பவர் இந்தக் கோவிலுக்கு எண்பது கலம் நெல் விளையக்கூடிய மும்மாநிலத்தைத் தானம் செய்ததையும் அதனைக் கோவிலின் சார்பாக அரும்பாளூரார் ஏற்றுக் கொண்டதையும் இந்தச் செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

இற்புகலோடை மும்மாச் செய்க் கெண்பதின்கல
னெல்லுப் பொலிசைச் கொத்துக் கல்நிலைக்க -
பற்பனாப
னாராயணன் வைத்தானாங் கரும்பா ளூரோங்கொண்
டோயிறை யிறுப்போ முற்று.

குறிப்பு: - செய் - வயல். பொலிசை - பலிசை, வட்டி.

பட்டினப்பாலை மண்டபம்

இடம்: திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே 12 மைலில் உள்ள திருவெள்றைக் கிராமம்.

பதிப்பு: ''செந்தமிழ்'' நாற்பத்தொன்றாந் தொகுதி.

விளக்கம்: பாண்டியன் சோழநாட்டின்மேல் படையெடுத்துச் சென்று, சோழ அரசரின் கட்டடங்களை எல்லாம் தகர்த்து அழித்தான்

என்றும், பட்டினப்பாலை என்னும் செய்யுளைப் பண்டைக்காலத்தில் கரிகாற்சோழன்மேல் உருத்திரன் கண்ணனார் பாடி யரங்கேற்றிய நினைவுக்காக அமைக்கப்பட்ட பதினாறுகால் மண்டபத்தை மட்டும் அழிக்காமல் விட்டு வைத்தான் என்றும் இந்தச் சாசனச் செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

வெறியார் தளவத்தொடைச் செயமாறன்
வெகுண்டதொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டி லரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப்
பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறுமே யங்கு நின்றனவே.

குறிப்பு: - மாறன் - மாறவர்மன் சுந்தரபாண்டியன். அரமியம் - அரண்மனை. கண்ணன் செய் பட்டினப்பாலை - கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன்மீது பாடிய பட்டினப்பாலை என்னும் செய்யுள். அச்செய்யுகளைப் பாடிப் பெற்ற பரிசில், பதினாறு நூறாயிரம் பொன் என்று கலிங்கத்துப் பரணி (இராச பாரம்பரியம் 22) கூறுகிறது. பட்டினப்பாலையை அரங்கேற்றியதன் நினைவுக் குறியாகச் சோழ நாட்டில் பதினாறுகால் மண்டபம் ஒன்று இருந்ததையும், மற்றக் கட்டடங்களை அழித்த பாண்டியன் இதனை மட்டும் அழிக்காமல் விட்டுவைத்ததையும் இச்செய்யுள் கூறுகிறது.

இவ்வாறு செய்த பாண்டியன், மாறவர்மன் சுந்தரபாண்டியன் (முதலாமவன்). இவனைச் சோணாடு வழங்கியருளிய ஸ்ரீ சுந்தர பாண்டியதேவர் என்றும் கூறுவர். இவன் கி.பி. 1216 முதல் 1238 வரையில் அரசாண்டான். இவனால் தோல்வியடைந்த சோழன் மூன்றாம் இராசராசன் ஆவான். மாறவர்மன் சுந்தரபாண்டியன், சோழ நாட்டுக் கட்டடங்களை அழித்த செய்தி அவனுடை சாசனத்திலும் கூறப்படுகிறது. *(No. 372. S.I.I. Vol. IV.)* திருப்பரங்குன்றத்து

உமையாண்டான் கோவில் என்னும் குகைக்கோவிலில் உள்ள சாசனம் இச்செய்தியைக் கூறுகிறது. அப்பகுதி வருமாறு:

''....தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திக் காவியும் நீலமும் நின்று கவினிழப்ப வாவியு மாறுமணி நீர் நலனழித்துக் **கூடமு மாமதிளுங் கோபுரமு மாடரங்கு மாடமு மாளிகையு மண்டபமும் பலவிடித்துத்** தொழுதுவந் தடையார் நிருபர்தந் தோகையர் அழுத கண்ணீராறு பரப்பிக் கழுதை கொண்டுழுது கவடி வித்திச் செம்பியனைச் சினமிரியப் பொருது சுரம்புக வோட்டி.....''

இவ்வாறு மாளிகையும் மண்டபமும் பல இடிக்கப்பட்ட போது, பட்டினப்பாலைப் பதினாறுகால் மண்டபத்தை மட்டும் அழிக்காமல் விட்டான், அது புலவரின் நினைவுக்குரி யாகலின்.

சுவரன் மாறன்

இடம்: தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளிக்குக் கிழக்கே இரண்டு மைலில் உள்ள செந்தலை. இவ்வூர் சுந்தரேசுவரர் கோவிலின் முன்புறமுள்ள மண்டபத்தின் நான்கு தூண்களில் உள்ளவை.

பதிப்பு: இந்திய சாசனங்கள், தொகுதி 13; பக்கம் 134 - 149; ''செந்தமிழ்'' ஆறாந் தொகுதி; பக்கம் 6-18. *(I.S.I.A. Vol II. P. 1-21. Epigraphia Indica Vol. XIII. PP. 134 - 149)*

விளக்கம்: சந்திரலேகை சதுர்வேதி மங்கலம் என்னும் பெயர் சுருங்கிச் செந்தலை என்று வழங்குகிறது. செந்தலைக்கு நான்கு மைல் தூரத்தில் உள்ள நியமம் என்னும் கிராமத்தில் உள்ள பிடாரிகோவில் மண்டபத்தில் இந்தத் தூண்கள் ஆதியில் இருந்தன. பிற்காலத்தில், இந்தப் பிடாரிகோவில் இடிந்துபோன பிறகு. அங்கிருந்த இத்தூண் களைச் செந்தலைக்குக் கொண்டுவந்து இந்த மண்டபங்கட்ட உபயோகித்துக் கொண்டார்கள். மண்டபங் கட்டும் போது இந்தத் தூண்களின் மேல்பகுதிகளைச் சிறிது குறைத்துவிட்டார்கள். குறைத்த போது அதில் இருந்த எழுத்துக்களில் சில வரிகள் அழிந்துவிட்டன.

ஆகவே, செய்யுள்கள் முழுவதும் கிடைக்காமல் முதலிலும் கடைசியிலும் அழிந்து காணப்படுகின்றன.

நியமம் என்னும் ஊரில் பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறன் என்பவன் மாகாளி கோவிலை அமைத்ததையும். அவன் வென்ற போர்களையும், அவனைப் பாடிய புலவர்களின் பெயர் களையும் இந்தத் தூண்களில் உள்ள செய்யுள்களும் வசனங்களும் கூறு கின்றன. இந்தச் சாசனத்தின் எழுத்துக்கள் வெகு அழகாக எழுதப்பட்டுள்ளன.

சாசனச் செய்யுள்

"......டுத்த பெரும்பிடுகு முத்தரையனாயின குவாவன் மாற னவன்மக னிளங்கோ வதியரைய னாயின மாறன் பரமேஸ்வர னவன்மகன் பெரும்பிடுகு முத்தரைய னாயின சுவரன்மாற னவனெடுப்பித்த படாரி கோயிலவனெறிந்த வூர்களுமவன் பேர்களு மவனைப் பாடினார் பேர்களுமித் தூண்மேலெழுதின இவை."

வெங்கட் பொரும...சேர் வேல்கொடியான் வாண்மாறன்
செங்கட் கரும்பகடு சென்றுழக்க - வங்குலந்தார்
தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த
ஊரழுந்தி யூரென்னு மூர். 1

... .ப்ப ஓடிக்
கழுகு கொழுங்குடற் கவ்வ - விழிகட்பேய்
புண்ணளைந்து கையூம்பப் போர்மணலூர் வென்றதே
மண்ணளைந்த சீர்மாறன் வாள். 2

பாச்சில்வேள் நம்பன் பாடின.

நிற்கின்ற தண்பணை தோறுந் தஞ்சைத் திறம்
பாடிநின்றார்
விற்கின்ற வீரர் களூர்கின்ற விப்பிணக் குன்றுகண்
ணெற்குன்ற யானை...ன்ம....
- -. 3

பால்கொண்ட செவ்வாய் விளையா மொழிப்
பருவத்துமுன்னம்
வேல்கொண்ட ....
....
.... 4

மறப்படை மீனவன் வல்லரண் பல்லவன் சேனைக்கன்று
புறப்படுமாறு பொருகளிற்று... ....
....
.... 5

எங்கை யளவிற்றேய் பாண விகல்விக்கு
மங்கைச் செருவே லமர்வல்ல....
....
.... 6

.... ர்க்கே யல்லையா யக்காலந்தான்
முல்லைக்கேய் முற்படுமோ என்றென்று - வல்லக்கோன்
காரைவாய்ப் போர்வென்ற வேன்மாறன் கைபோலுங்
காரைவாய்க் கேளேனேய் கண்டு. 7

கோட்டாற் றிளம்பெருமானார் பாடியது.

....வாளமருள் வாகைப்பூக்
குஞ்சிக் கமழ்கண்ணிக் கோமாறன் - நஞ்சைக்கோன்
கோளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர் காய்ந்தெரித்தான்
றோளா லுலகளிக்குந் தோள். 8

....லாத் தோய்ந்தனவா லெங்கும்
வருபுனல்சூழ் வல்லக்கோ மாறன் - செருவில்
மறங்கூர்வாய்ப் பட்டா ருடல்குடைந்து மாந்திப்
புறங்கூர்வாய்க் கொண்டெழுந்த புள். 9

பாச்சில்வேள் நம்பன் பாடின.

பேரிலைப் பங்கயங் கூம்பப் பிறையின்
குறுமுளைப்போந்
தீரிலைக் கொள்ளும் பதமி.. ணி யரண மூட்ட

கூரிலை... ......கழன்ம....
....வ்வ..... . 10

சொற்புகு தொண்டைக் கனிபுகு தூமதிபோன் முகத்தாள்
பொற்புக வெற்புப் பகுதிகண்டாய் புகழிப் பொருதார்
கற்புக விற்புக கண் வன் கள்வர கள்வன் றஞ்சை
நற்புக ழாளன் 11

சேட்டிணர் பூந்தண் பொழிற் செம்பொன் மாரிக்கடி
அரணம்
மூட்டின சீற்றம் முன் சென்றது பின்பு பகட்டினத்தோர்
கே.... மாறன் கடிநக.... ....
.... 12

பனையைப் பகடுகூடா யன்று பல்லவன் வெல்லத்
தென்னன்
முனையைக் கெடச்சென்ற மாறன் முகில்வளர் பீலிஉந்தச்
சுனையைச் சுனைமணிப்பாறை அப்பாறை
சொல்லென்விளைந்த
வினையைப் பாரமு விருக்கி... 13

எண்கி னிருங்கிளையு மேறற் கரியவேய்
வண்கைச் செருமாறன் வாள்காய்த்தி - விண்படர்
வான்செய்நாடு தாமூர்ந்த மாநாடக் கண்ணனூர்க்
கோனாடர் புக்கொளித்த குன்று. 14

எரிவிசும்பு மிருநிலமாய்த் தென்பவான் மாறன்
செருவேன் மறங்கனன்று சீறக்
கொடிமாடத் தன்கொடும்பைக் கூடாத மன்னர்
நெடுமா மதிலிடித்த நீறு. 15

கிழார்க் கூற்றத்துப் பவதாயமங்கலத்து அமருண்ணிலை ஆயின குவாவங் காஞ்சன் பாடினபட் டித்தூண்கள் மேலன எல்லாம்

நாகங் கண்டஞ்ச வென்னெஞ்சங்
கல்லென்ன வொல்லன் கடனீர்

மாகங்கொண் டெறிவர் சாத்தன்
மாறனெங்கோன் றுடர்க்கண்
மேகங் கொண்டான் வ.....
....ப்பக........
.... கொண்.... .....
.மரு............ 16

...பாண் மகனேய் பண்டெல்லாம்
யாமறிது மேங்கயர்க்கேய் சொல்லுநீய் - மாமறங்கைத்
தென்னாடர் காதலியர் தீய்நாட வாய்சிவந்த
மின்னாடர் வேண்மாறன் மெய். 17

... .
..... போலரைசு பிறவா பிறநெடு மேருநெற்றிப்
பொன்போல் பசுங்கதி ராயிரம் வீசும்பொற் றேர்ப்பருதிக்
கென்போ தரவிடுமோ இணைச்சோதி இருவிசும்பேய்.
18

ஆசார்யர் அநிருத்தர் பாடியது

....ற்ற
தீதுகண்டான் றஞ்சைச்செம்புல நாட்டுவெண்
கோடல்விண்ட
போதுகண்டாயர் மலையப் புதுமணன் மீதுசெந்தீத்
தாதுகண்டா லன்ன கோவங்களூர்கின்ற தாழ்புறவேய். 19

தன்முதலாயமும் பூவையுந்தன் கைக்கிளியு முன்பிட்
டென்முத லன்பு மென்னாகச் செய்தா னியக்கத்தை
விண்டார்
வன்முதல் ச. க்கருங்கைப் பகடுய்த்த மாறன் றெவ்வற்
கன்முத.... ங்கடத் தேகினான் பின்... ரி... கயே. 20

அமருண்ணிலை பாடின

குறிப்பு:- செய்யுள் 1. மாறன் - பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறன். சுவரன் மாறன் அழுந்தியூரில் போர் வென்றதை

இச்செய்யுள் கூறுகிறது. செய்யுள் 2. கையூம்ப - கையைச் சப்ப. சுவரன் மாறன் மணலூரில் போர் வென்றதை இச்செய்யுள் கூறுகிறது. செய்யுள் 5 புறப்படுமாறு - புறங்கொடுக்கும்படி; போரில் பின்னடையும்படி. செய்யுள் 7. வல்லக்கோன் - வல்லத்து அரசனாகிய சுவரன் மாறன். செய்யுள். 11. கள்வர கள்வன் - இது சுவரன் மாறனுடைய சிறப்புப் பெயர்.

சிவலோகநாதன்

இடம்: தஞ்சாவூர் மாவட்டம், சீகாழி தாலுகா, திருவெண்காடு. இவ்வூர் சிவன்கோயில் முதல் பிராகாரத்தின் வடக்குப்பக்கச் சுவரில் உள்ளது.

பதிப்பு: ''செந்தமிழ்'', தொகுதி பதினான்கு; பக்கம் 355.

விளக்கம்: வீரராஜேந்திர சோழன் காலத்தில் எழுதப்பட்டது இந்தச் சாசனம். இக்கோயில் சிவபெருமானுக்கு இந்த அரசன் பெயரால், அபிஷேகம் செய்யத் தேன், பால், பஞ்சகௌவ்யம் முதலிய பொருள்களைச் சிவலோகநாதன் என்பவர் அமைத்த தருமத்தை இச்செய்யுள் கூறுகிறது:

சாசனச் செய்யுள்

பூப்பாவை கோன் வீரராஜேந்திரர்க்காப் புராரிகல
நாப்பால் நவிற்றுஞ் சிவலோக நாதனென நறுதேன்
ஆப்போ லோடைதொடம் வெண்காட்டரற்
கமைப்பித்தவறங்
காப்பா னவனென்னை ஆளுடை யானிக் கடலிடத்தே.

கச்சியர்கோன்

இடம்: தஞ்சாவூர் மாவட்டம், மாயவரம் தாலுகா, கடையூர். அமர்தகடேசுவரர் கோவில் வாயிலின் வலது புறத்துச் சுவரில் எழுதப்பட்டுள்ள சாசனம்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு; எண் 265. (*No. 265. S.I.I. Vol XII.*)

விளக்கம்: பல்லவ அரசன் ஒருவன் சோழனை வென்று அரசாண்டதை இச்செய்யுட்கள் கூறுகின்றன.

சாசனச் செய்யுள்

வார்மன்னு வெல்கழல் மானவன் பாலுங்கள் மாமரபிற்
தார்மன்னர் பெற்ற தனுமக் கொடியித் தலம்புரக்கும்
கார்மன்னு செம்பொற் கனகொடை மோகதென் கச்சிநற்
போர்மன்னு வேள்பெற்ற தாரும் பெறாத புலிக்கொடியே. 1

சிவனன்று நல்கிய செஞ்சின வேற்றுக் கொடியுயர்த்த
தவனந் தருபரிக் கச்சியர் கோன்பச்சை யேயுயர்வித்
தவனங் குலபதி தன்னுடன் போந்துதண் காவிரிநீர்ப் (யே
புவனங் கொடுத்துக் கொண்டான் வன்பால்
வெம்புலிக்கொடி 2

கந்தன் மாதவன்

இடம்: தஞ்சாவூர் மாவட்டம், மாயவரம் தாலுகா, நீடூர் இவ்வூர் சிவன்கோவிலின் தென்புறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: இந்திய சாசனங்கள், தொகுதி பதினெட்டு; பக்கம் 64 - 69. (*Epigraphia Indica, Vol. XVIII. PP. 64-69.*)

விளக்கம்: மிழலைநாட்டு வேள் கந்தன் மாதவன் என்பவர் நீடூர் சிவாலயத்தில் செய்த திருப்பணிகளைக் கூறுகின்றன இச்செய்யுள்கள். கந்தன் மாதவனுடைய முன்னோர் அமிதசாகர முனிவரைக் கொண்டு யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் என்னும் நூல்கள் இயற்று வித்தனர் என்பதையும் இச்செய்யுள்கள் கூறுகின்றன.

சாசனச் செய்யுள்

கூரிய வுல கனைத்துங் குடைக்கீ
ழாக்கிய குலோத்துங்க சோழர்க்

காண்டொரு நாற்பத்தா றதனிடைத் தில்லை
யம்பலத்தே வட கீழ்ப்பால்

போரியல் மதத்துச் சொன்னவர ரறிவார்
கோயிலும் புராணநூல் விரிக்கும்
புரிசை மாளிகையும் வரிசையால் விளங்கப்
பொருப்பினால் விருப்புறச் செய்தோன்

நேரியற் காண்டே ழைஞ்சுடன் மூன்றினில்
நிகரிலாக் கற்றளி நீடூர்
நிலவினாற் கமைத்த நிலாவினா னமுத
சாகர னெடுத்த...தொகுத்த

காரிகைக் குளத்தூர் மன்னவன் தொண்டை
காவலன் சிறுகுன்ற நாட்டுக்
கற்பகம் மிழலை நாட்டுவே ளாண்
டவன் கந்தன் மாதவனே. 1

எண்டிசை யுலகை ஒருகுடை நிழற்கீழ்
இருத்திய குலோத்துங்க சோழற்
கியாண்டொரு முப்பத் தெட்டினிற் சோணாட்
டிசைவளர் திருவிந்தளூர் நாட்டுண்

....டை நீடிய நீடூர் உமையோடு
நிலாவின பெருமாற் குவந்து
....லை மலையெனச் சிலையா
லுத்தம விமானமிங் கமைத்தான்

தண்டமி ழமித சாகர முனியை
சயங்கொண்ட சோழ மண்டலத்துத்
தண்சிறு குன்ற நாட்டகத் திருத்தி
....நூற் காரிகை அவனாற்

கண்டவன் மருமான் காரிகைக் குளத்தூர்
காவல் நிலாவினான் எவர்க்குங்

கருணையுந் தியாகமுங் காட்டிய மிழலை
நாட்டுவேள் கந்தன் மாதவனே. 2

குறிப்பு: - செய்யுள். 1. குலோத்துங்க சோழன் - இவன் முதலாங் குலோத்துங்க சோழன் ஆவன். இவன். கி.பி. 1070 முதல் 1119 வரையில் அரசாண்டான் என்பர். நேரியன் - சோழன்; குலோத்துங்க சோழன். கற்றளி. கல் + தளி. கருங்கல்லால் அமைத்த கோயில் என்பது பொருள். செய்யுள் 2. இச்செய்யுளின் இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன. சிலையால் - கருங்கல்லினால். அமித சாகர முனிவர் - இவர், யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம் என்னும் செய்யுளிலக்கண நூல்களை இயற்றியவர். சயங்கொண்ட சோழ மண்டலம் - தொண்டமண்டலம். இதற்கு அருவாநாடு என்பது பழைய பெயர். காரிகைக் குளத்தூர் தொண்டமண்டலத்தில், செங்கற்பட்டு மாவட்டம், செங்கற்பட்டு தாலுகாவில் இருக்கிறது. அமிதசாகர முனிவர் இவ்வூரில் தங்கியிருந்து யாப்பருங்கலக்காரிகையை இயற்றியபடியால் இவ்வூருக்கு இப்பெயர் வந்தது.

வேதவனமுடையான்

இடம்: புதுக்கோட்டை, திருமய்யம் தாலுகா, நாங்குபட்டி வட்டம், மடத்துக் கோவில் முதல் பிராகாரத்து வாசற்படிக்கு வலது பக்கச் சுவரில் உள்ளது.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 129. *(No. 129.I.P.S.)*

விளக்கம்: ஜயங்கொண்ட சோழ மண்டலத்து (தொண்டை நாட்டுக் களத்தூர்க் கோட்டத்து மருதத்தூர், மருதத்து ருடையான் குன்றன் திருச்சிற்றம்பல முடையான் என்னும் புலவர். இரட்டைபாடி கொண்ட சோழவளநாட்டு வடகோ நாட்டு உறத்தூர்க் கூற்றத்துப் பையூர், பையூருடையான் திருசிற்றம்பல முடையான் வேதவன முடையான்மீது கவிபாடி, பாடின கவிக்குப் பரிசாகக் குடிக்காடு இரும்பூதி என்னும் நிலத்தைப் பெற்றார். பரிசு பெற்ற நிலத்தை அவ்வூர்ச் சிவன் கோவிலுக்கு தானம் செய்தார். கீழ்க்கண்ட செய்யுள்

பரிசு கொடுத்தவரின் பையூரைச் சிறப்பித்துப் பாடுகிறது. இதன் கீழுள்ள வசனம் பரிசு பெற்ற நிலத்தின் எல்லையைக் கூறுகிறது.

சாசன செய்யுள்

வாளை வயிறு நிறைய மடற்கமுகம்
பாளைபசுந் தேனொழுகும் பையூரே - நாளையென்று
செப்பாத வாய்மையான் வேதன் திருமனுநா
லொப்பானெங் கோமான்ற னூர்.

ஸ்வஸ்ஸ்ரீ. கோவிராஜகேசரி பன்மரான திரிபுவனச் சக்கர வர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 13 - ஆவது இரட்டை பாடி கொண்ட சோழ வளநாட்டு வடகோ நாட்டு உறத்தூர்க் கூற்றத்து உடையார் திருப்பெருமானாண்டார்க்கு, ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூர்க் கோட்டத்து மருதத்தூருடையான் குன்றன் திருச்சிற்றம்பலமுடையானேன் கன்னி நாயற்று ஏழாந் தியதியுந் திங்கட்கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் இத் திருப் பெருமா னாண்டார் திருக்கை மலரிலேய் நான் நீர்வார்த்த குடிக்காடு இரட்டைப்பாடி கொண்ட சோழ வளநாட்டு வடகோ நாட்டு உறத் தூர்க் கூற்றத்துப் பையூருடையான் திருச்சிற்றம்பல முடையான் வேதவன முடையானை நான் கவி பாடி பாடின கவிக்கு எனக்கு பரிசில் தந்த தன் காணியான குடிக்காடு இரும்பூதிக்கு வடபாற் கெல்லை நெடுங்கீரைக்குடி எல்லைக்குத் தெற்கும் மேல்பாற் கெல்லை ஷியூர் எல்லைக்கு கிழக்குந் தென்பாற்கெல்லை பையூர் சுடுகாட்டுக் குள......''

குறிப்பு: இதற்குமேல் இந்தச் சாசனம் மறைந்து கிடக்கிறது. திருச்சிற்றம்பலமுடையான் வேதவனமுடையான் மேல் பாடின கவியின் (பிரபந்தத்தின்) பெயர் தெரியவில்லை.

உமையாள் நகைப்பு

இடம்: புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியாமலை. அகிலாண்டேசுவரி அம்மன் கோவில், இரண்டாவது கோபுர வாசலுக்கு இடதுபுறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 1092. *(No. 1092. I.P.S.)*

விளக்கம்: உமையாளை இடதுபுறத்தில் வைத்திருக்கும் சிவபெருமான், அவ்வம்மையார் அறியாதபடி கங்கை என்பவளைத் தமது அடர்த்தியான சடாமுடியில் மறைத்து வைத்திருக்கிறார் என்பது புராணக்கதை. குடுமியாமலையில் உள்ள சிவபெருமானுக்குச் சடா முடி குறைந்து சிறுகுடுமியாய்விட்டதாம். அதைக்கண்டு உமையம் மையார், ''அடர்த்தியான சடை போய்விட்டபடியால், இனிக் கங்கை யாளை இவன் எங்கே மறைத்து வைக்கப் போகிறார்!'' என்று கூறி நகைப்பதாக இச்செய்யுள் நயம்படக் கூறுகிறது. இந்தச் செய்யுளை இயற்றியவர் ஆதிநாதர் என்பவர்.

சாசனச் செய்யுள்

எங்கள்நலக் குன்றைப்பார்த் தேழுலகு மீன்றவுமை
நங்கை பலகாலும் நகைசெயுமே - கங்கையுறை
கொங்கேய் கமழ்செடிலம் போய்க்குடுமி யாய்விட்ட
தெங்கே யினிமறைப்பா ரென்று.

உ ஆதிநாதர் உ

பங்கள ராயர்

இடம்: புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, காரையூர் கிராமம். மாரியம்மன் கோவிலுக்கு முன்புறமுள்ள ஒரு கல்லில் எழுதப்பட்டுள்ள சாசனம்.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 998. *(No. 998. I.P.S.)*

விளக்கம்: பங்களராயர் என்னும் தமிழ்ப் புலவரின் வீட்டுப் பெயரைக் கூறுகிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

பாரார் தமிட்புலவன் பங்களராயன் பைம்பொற்
சீரா ரகத்தின்பேர் செப்புங்கால் - ஏராருங்

காராளர் கானார் வருங்கற்பக வீரரெனும்
பேராளர் தம்முடைய பேர்.

குறிப்பு: - தமிட் புலவன் என்பது தமிழ்ப் புலவன் என்றிருத்தல் வேண்டும்

மாதை வீரன்

இடம்: புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, தூர்வாசபுரம். இவ்வூர் சுப்பிரமணியசுவாமி கோவிலில் உள்ளது.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 795. (No. 795. I.P.S.)

விளக்கம்: தனபாலன் மாதை வீரன் என்பவர் இந்தக் கோவிலைக் கட்டி முருகன், வள்ளி, தெய்வயானை திருவுருவங்களை அதில் அமைத்ததை இந்தச் செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

இனமேவு சகன்கலி யாயிரத்து முந்நூற்
றெழுபதுட னேழின்மே லிசைந்த தாது
மனமேவு வைகாசி யிருபத்தேழில்
மன்னுதுறு மாவீசற் கிடப மற்றுஞ்
சினமேவு வேல்முருகன் னாச்சி மாருந்
திருக்கோயிலுங் கண்டு மெய்யன் செல்வத்
தனபாலன் பேரிந்தை மாதை வீரன்
தன்னுடனே கிளைவாழத் தாபித் தானே.

குறிப்பு: - இத்திருப்பணிகள் செய்தது சக ஆண்டு 1377 என்று கூறுகிறது இச்செய்யுள். எனவே கி.பி. 1455-இல் இவை நிகழ்ந்தன.

ஆதி வானவதரையன்

இடம்: புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, இடையாத்தூர். சுயம்பிரகாசமூர்த்தி கோவில் வடபுறத்துச்சுவரில் உள்ளது.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 994. (*No. 994. I.P.S.*)

விளக்கம்: சுயம்பிரகாசமூர்த்தி கோவிலின் பழைய பெயர் தான்தோன்றி ஈசர் கோவில் என்பது. இந்தக் கோவிலின் நந்த வனத்தைத் திருத்தி நெல்விளையும் கழனியாக்கிக் கொடுத்த ஆதிவானவதரையன் என்பவரைப் புகழ்கிறது இந்தச் செய்யுள்.

சாசனச் செய்யுள்

திருத்திகழும் பொழிலாறைத் தான்தோன்றி
யீச்சுரற்குத் தன்மையான
அருத்தியொடுந் தருவத்த சாமமதனில்
அமுதுசெய்ய அழகார்பூவை
மருத்திகழும் புயத்தனகன் ஆதிவா
னவதரையன் காதலொடுந்
திருத்தியநந் தாவனத்தைச் செழுங்கழனி
யாய்விளையச் செய்திட்டாதனேய்.

சொக்கநாத இலக்கயன்

இடம்: புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, அம்மன் குறிச்சி, சுந்தரேசுவரர் கோவில் முன் மண்டபத்தில் உள்ள செய்யுள்.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 992. (*No. 992. I.P.S.*)

விளக்கம்: இந்தக் கோவிலின் முன்மண்டபத்தை, மாவை பாலகிருட்டிணன் சொக்கநாத இலக்கயன் என்பவர் கட்டியதை இச்செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

திசைவாச ரம்மன் குறிச்சியில்வாழ் சொக்கர்
செம்பொன்முடி
அசைவாக மெச்சிட விசுவ கன்மாவு மதிசயிப்ப
விசைவாடை வீச மணிமண்டபங் கட்டி வீறுபெற்றான்
இசைமாவை வால கிட்டணன் சொக்கநாத இலக்கயனே.

இளங்கோமான் வாணன்

இடம்: புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியா மலை. இம்மலையில் தம்பிக்கிணற்றுக்குப் போகும் வழியில் ஒரு பாறையில் எழுதப்பட்டுள்ள செய்யுள்.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 676 (*No. 676. I.P.S.*)

விளக்கம்: வாணன் தம்பி, வடுகரைப் போரில் வென்றதைக் கூறுகிறது இச்செய்யுள். இதற்கு மேலே பதினாறு வரிகளில் வேறு செய்யுள் எழுதப்பட்டிருக்கிறது. அதில் எழுத்துக்கள் பெரிதும் அழிந்துவிட்டபடியால் அச்செய்யுளை இங்குத் தரவில்லை.

சாசனச் செய்யுள்

மன்னாடு பூங்கழலான் வாணற் கிளங்கோமா
னன்னாள் வடுகெறிந்த ஆர்வத்தால் - இன்ன
மறங்கால் வேலண்ணல் வரும்வரு மென்றேங்கி
உறங்கா வடவேந்த ரூர்

சோளிவீரராயன்

இடம்: புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியாமலை. சிகாமணிநாத சுவாமி கோவில் இரண்டாங்கோபுர வாயிலின் இடது புறம் உள்ள சாசனம்.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 679. (*No. 679. I.P.S.*)

விளக்கம்: சோளி வீரரயான் என்பவரைப் புகழ்கிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

வன்படையார் தேவியர் தம் மங்கலநாண் தட்டாணிக்
கன்புரிய வோடாணி யாகுமே - இன்பப்
பரராசர் கோபாலன் பல்லவர்கோன் சோளி
வீரராயன் சிங்கார வாள்.

மாவலிவாணன்

இடம்: புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியா மலை. ஐயனார் கோவிலுக்குப் பின்புறத்தில் உள்ள பாறையில் எழுதப் பட்டுள்ளவை.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள். எண் 678. *(No. 678. I.P.S.)*

விளக்கம்: பாண்டியனை வென்ற வாணனைப் புகழ்கிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

இழைத்த படியிதுவோ வெங்கணா வென்
றழைத்த குரலே யான்தழைத்த - குடை
மன்னவர்கோன் வாணன் வடிவேலால் தோற்றுடைந்த
தென்னவர்கோன் போன திசை.

மாவலிவாணன்

இடம்: புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியாமலை. இவ்வூர் மேலைக் கோவில் என்கிற குடபோகக் கோவிலுக்குத் தென்புறம் உள்ள பாறையில் இந்தச் சாசனம் உள்ளது.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 673. *(No. 673. I.P.S.)*

விளக்கம்: வாணன் என்னும் அரசனுடைய வீரத்தைப் புகழ்கிறது.

சாசனச் செய்யுள்

பாரோங்கு கொற்றக் குடைவாணன் பல்புவித்
தேரோன் திருவுத்திராட நாள் - பேருவமைக்
குன்றடர் மாலியானைக் கோவேந்தர் வீற்றிருப்ப
ரின்றெடான் இன்றெடான் என்று.

குறிப்பு: - முதல் அடி ஈற்றில் பல்புவி என்றிருப்பது, பல்புரவி என்றிருக்க வேண்டும்.

மாவலி வாணன்

இடம்: புதுக் கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியா மலை சிகாமணிநாத கோவில் இரண்டாம் கோபுர வாயிலின் வலது புறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள். எண் 674. *(No. 674. I.P.S.)*

விளக்கம்: மாவலிவாணனின் வெற்றிச் சிறப்பைக் கூறுகிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

சென்னி புலிக்கொடியும் தென்னன் கயல்கொடியும்
மின்னும் கழல்பிறையோன் விற்கொடியும் - மன்னும்
வருசைக் கொடைத்திருமால் மாவாலி வாணன்தன்
கருடக் கொடிக்கொடியாம் காண்.

குறிப்பு: - மூன்றாம்மடியில், வருசை என்பது வரிசை என்றும், மாவாலி என்பது மாவலி என்றும் இருத்தல் வேண்டும். இங்குள்ள இன்னொரு செய்யுள் சிதைந்து காணப்படுகிறபடியால் இங்கு அதை எழுதவில்லை.

பாண்டியன் புகழ்

இடம்: புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியாமலை. இம்மலைமேலுள்ள சிகாமணிநாத சுவாமி கோவில் இரண்டாங் கோபுர வாயிலின் வலதுபுறச் சுவரில் உள்ளது இந்தச் சாசனம்.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 651, 652. *(No. 651, 652. I.P.S.)*

விளக்கம்: பாண்டியன், சோழனை வென்று அரசாண்டதைக் கூறுகின்றன இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

தென்னவன் செய்ய பெருமான் திருமதுரை
மன்னவன்றன் மால்களிற்று வல்லிக்கும் -
பொன்னிநாட்

டாலிக்குந் தானை அபையன் குலமகளிர்
தாலிக்கு மொன்றே தலை.

பொன்னி வளநாடு பாணன் பெறப்புரந்தான்
சென்னி திருமார்பிற் செயல்தீட்டினான் - முன்னே
புரமெறிவார் மண்சுமக்கப் பூபாரங் காத்தான்
தரமறியான் மீனவர்கோன் தான்.

குறிப்பு:- இரண்டாவது செய்யுளில் இரண்டாம் வரியில் செயல் தீட்டினான் என்பது சேல் தீட்டினான் என்றிருக்க வேண்டும். பாண்டியன், சோழ அரசனை வென்று அவனுடைய மார்பில் தன்னுடைய முத்திரையாகிய சேல்மீன் உருவத்தைப் பச்சை குத்தினான். வென்ற அரசர், தமது அடையாள முத்திரையைத் தோல்வியுற்ற அரசரின் மார்பிலும் தோளிலும் பொறித்துவைப்பது அக்காலத்து வழக்கம்.

பாண்டியன் வெற்றி

இடம்: புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியாமலை. சிகாமணிநாத சுவாமி கோவில் கோபுரவாயிலின் இடதுபுறச் சுவரில் உள்ளவை.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண்கள் 653. 654, 655 *(No. 653, 654, 655. I.P.S.)*

விளக்கம்: பாண்டியனுடைய வீரத்தையும் வெற்றியையும் கூறுகின்றன.

சாசனச் செய்யுள்

மால்விட்ட படைதுரந்து வடுகெறிந்து
மகதேசன் வடிவேல் வாங்க
கால்விட்ட கதிர்முடிமே லிந்திரனைப்
புடைத்ததுமுன் கடல்போய் வற்ற
வேல்விட்ட தொருதிறலு முகிலிட்ட
தனிவிலங்கும் வெற்பி லேறச்

சேல்விட்ட பெருவலியு மாங்கேவிட்டு
நடந்தான் தென்னர் கோவே.

வெற்றுறமுன் வேற்செய்ய கொற்கையர்கோ மாறன்
பரிக்குத்தோற்ற கழல்வளவன் சோணாட்டி - லெற்றும்
புகையாற் குவளையாம் பூங்குமுதம் புண்ணீர்
கயாற்றிற் சேர்கழு நீராம்.

கன்னி வளநாடன் காவேரி நாடாளச்
சென்னி விழுந்தோடுஞ் சேவடிகள் - பொன்இரை
யெரிகாலுங் கான நடந்திச் சென்னியையுங்
கரிகால னாக்கிடவோ காண்.

கோனார் குறிச்சி

இடம்: புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, பரம்பூர். இவ்வூர் சிவன் கோவில் தென்புறச் சுவரில் உள்ள செய்யுள்.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 1115 (No. 1115. I.P.S.)

விளக்கம்: பரம்பூர் வேளாளர் இவ்வூர் சிவன் கோவிலுக்குக் கோனார் குறிச்சி என்னும் ஊரைத் தானமாக வழங்கியதைக் கூறுகிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

தேனார் பொழில்சூழுந் தென்பரம்பை வேளாளர்
கோனார் குறிச்சியைக் கொண்டளித்தார் - மானேய்
மழுவின் படையானும் மாதுமையும் போதும்
விழவின் படியாக விட்டு.

மாகதன் பொன்பரப்பினான்

இடம்: புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, பொன்னமராவதி. இவ்வூர் சோமேசுவரர் கோவில் கிழக்குச் சுவரில், வாயிலுக்கு வலதுபுறத்தில் உள்ளது.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 677, (No. 677. I.P.S.)

விளக்கம்: மகதேசன் பொன்பரப்பினான் என்னும் அரசனுடய ஆட்சியின் சிறப்பைக் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஶ்ரீ வீரமாகதன் பொன்பரப்பினான்.

மடலளவு நிறைந்தொழுகு மதுமலர்த்தார்
மகதேசன் வையங்காக்கும்
அடலளவு மணிநெடுந்தோ ளாயுத
ராமனை வணங்காதவரியாவர்
கடலளவு கடந்தவன் கனைகுரகதம்
கதிர்வேல் மன்ன
ருடலளலவு நடந்தது மாற்றா ருலகளவு
நடந்தவன் ஒரு செங்கோலே.

சேதுபதி தானம்

இடம்: புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, ராங்கியம் மறவணியேந்தல் கரையிலிருக்கும் பிள்ளையார் கோவிலுக்கு முன்பு நட்டிருக்கும் ஒரு கல்லில் எழுதப்பட்டுள்ள செய்யுள்.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 1010. (No. 1010. I.P.S.)

விளக்கம்: விசய ரகுநாத சேதுபதி அரசர், மறவணியேந்தல் என்னும் நிலத்தைச் சிவன் கோவிலுக்குத் தானஞ் செய்ததை இந்தச் சாசனம் கூறுகிறது. இச்செய்யுள்களின் கீழே வேறு ஒரு செய்யுளும் எழுதப்பட்டிருக்கிறது. அச்செய்யுள் சிதைந்து அழிந்து விட்டபடியால் அதை இங்கு எழுதவில்லை.

சாசனச் செய்யுள்

தென்னன் விசைய ரெகுநாத சேதுபதி
மன்னன் கனகசபை வாணருக்கு - நன்னிலமேல்
இந்திரவி யுள்ளவுமே நடக்கக் கற்போட்டு
தந்தான் மறவணியேந் தல்.

பூதானமாக மறவணியேந்தல் எப்போதும் மடை
மீதான வம்பல வாணர்தம் பூசை விளங்கச் செய்தோர்
ஏதாகிலுந் தடை வந்தாலு...திறல் வாழுங்குரு
மாதா பிதாப் பசுவை... ....

குறிப்பு: இரண்டாம் செய்யுளில் சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

இராமநாத முனிவர்

இடம்: இராமநாதபுரம் மாவட்டம். இராமேசுவரம். இக்கோவிலின் திருவுண்ணாழிகை வாயிலுக்குத் தென்புறச் சுவரில் உள்ளது

பதிப்பு: தமிழ் - வடமொழிச் சாசனங்கள், பக்கம் 58. (Tamil and Sanskrit Inscriptions. P.58.)

விளக்கம்: இராமேசுவரக் கோவிலின் ஆடல் மண்டபத்தைச் சக ஆண்டு 1520-இல் (கி.பி.1598-இல்) இராமநாத முனிவர் கட்டி முடித்ததைக் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

சேல்கண்ட வாரி யிலங்கேசன் வெம்பழிதீர முன்னாள்
மால்கண்ட கோயி லிராமீச ராடல்செய் மண்டபத்தை
நூல்கண்ட நற்சக னாயிரத்தோ டைந்து நூற்றிருபான்
மேல்கொண்ட நாளின் முனி ராமநாதன் விதித்தனனே.

குறிப்பு:- சகன் - சாலிவாகன சகாப்தம். முனிராமநாதன் - இராமநாத பண்டாரம் அவர்கள். இந்தத் திருப்பணி, கூத்தன் சேதுபதி காத்ததேவர் என்னும் இராமநாதபுரத்து அரசர் காலத்தில் நிகழ்ந்தது.

இராமநாத முனிவர்

இடம்: இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், முதல் பிராகாரம், பிள்ளையார் கோவிலுக்குத் தெற்கில், மேற்குச் சுவரில் உள்ளது.

பதிப்பு: தமிழ் - வடமொழிச் சாசனங்கள், பக்கம் 59. *(Tamil and Sanskrit Inscriptions. P. 59)*

விளக்கம்: சக அண்டு 1530-இல் (கி.பி. 1608-இல்) இராமேசுவரக் கோவில் திருப்பணியை இராமநாத முனிவர் செய்து முடித்ததைக் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

பற்றுஞ் சகனிற் பதினைந்து நூற்று முப்பான் மருவ
நற்றும் புவியினையாள் வீசுபூபதி நாளிற் றொண்டர்
குற்றங் கடிந்த வரராம நாயகர் கோயிலன்பான்
முற்றுந் தவங்கள் புரி ராமநாதன் முடித்தனனே.

குறிப்பு:- பதினைந்து நூற்று முப்பால் - ஆயிரத்து ஐந்நூற்று முப்பது. ராமநாதன் - இராமநாத பண்டாரம் என்னும் இராமநாத முனிவர்.

இராமநாத முனிவர்

இடம்: இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் கோவில், இரண்டாம் பிராகாரம், கோடிதீர்த்தத்தின் மேற்குப்புறத்துச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: தமிழ் - வடமொழி சாசனங்கள், பக்கம் 59. *(Tamil and Sanskrit Inscriptions. P. 59.)*

விளக்கம்: சகஆண்டு 1530-இல் (கி.பி. 1608-இல்) இராமநாத முனிவர் இந்தக் கோவிலைக் கற்றளியாகக் கட்டியதைக் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

திருமா லரனுக் கபிடேகஞ் செய்யச் சிலையதனால்
வருமாறு கண்ட வண்கோடிப் புனற்கு மகாலயத்தைத்
தருமாயிரத் தைஞ்ஞூற்று முப்பான் செல்சகன் வருடத்
தருமா தவஞ்செய் முனிராம நாத னமைத்தனனே.

குறிப்பு:- இரண்டாம் அடியில், 'கோடிப் புனற்கு மகாலை யத்தை'' என்றிருப்பதை ''கோடிப் புனற்கண் மகாலையத்தை'' என்றும் படிக்கலாம்.

அதிவீரராமனின் தருமம்

இடம்: திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, விசுவநாத சுவாமி கோவில், பெரிய கோபுரத்தின் வடக்குச் சுவரில் உள்ள சாசனச் செய்யுள்.

பதிப்பு: ''செந்தமிழ்'', தொகுதி நான்கு பக்கம் 120.

விளக்கம்: அதிவீரராம பாண்டியன் இக்கோவிலுக்கு வழங்கிய தானங்களைக் கூறுகிறது இச் செய்யுள்.

சாசனச் செய்யுள்

அத்தர் தென்காசி கண்டோன் கண்ட வாலையமு
மடியாரும் வாழ்வுபெற வந்
தழக னதிவீர ராமன் சறுவமானிய
மதாகக் கொடுத்த படிதான்

சித்திரைப் பரணியூர்த் தெண்ட கோஷப் பொன்
திரும்பக் கொடுத்தவ் வூரிற்
செங்கோட்டையார் கொண்ட பகுதியு நிறுத்தித்
திருக்கோயிற் பகுதியாய்

வைத்ததை யறக்கழித் தாயங் கணக்குடன்
மகாநவமி திருநாளிடை

வந்த காணிக்கை பாட்டப் பகுதி காணம்பல்
வரியிவை யெலாங் கழித்துப்

பத்திரமாய்க் குண ராமநாதற்கு மேற்படி
பணங்கழித் தடியர் வீட்டுப்
பணமுங் கழி..த்திப்படிச் சருவமானியப்
பட்டையமு மருளி னானே.

குலசேகர பாண்டியன்

இடம்: திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, விசுவநாத சுவாமி கோவில் தென்புறச் சுவரில் உள்ள செய்யுள்கள்.

பதிப்பு: திருவாங்கூர் சாசனங்கள், முதல் தொகுதி, பக்கம் 105. (T.A.S. Vol. I. Page 105.)

விளக்கம்: நெல்வேலி மாறன் என்னும் வீரவேற் குலசேகர பாண்டியன் முடிசூடியதையும். அவன்மேல் வீர வெண்பாமாலை பாடப்பட்டதையும் இச்செய்யுள் கூறுகின்றன. சகஆண்டு 1474-இல் (கி.பி.1552-இல்) இவன் முடிசூடினான்.

சாசனச் செய்யுள்

ஏறிய சகாத்த மாயிரத்து நானூற்றெழுபதின்
னாலில் வரிழ்சம் பரிதாபிதனில் மாதம்
தேறிய சித்திரை யிருபத் தொன்பதாகுந் தேதி
யிரண்டாம் பகந் திங்க ளுரோகணிநாள்
வீறுயர்ந்த மிதுனத்து நெல்வேலி மாறன்
வீரவேள் குலசேகரச் செழியனென்று சுர
ராறுபுனை யகிலேசர் காசியிலே விளங்கவணி
மவுலி தரித்தனன் பரராசர் பணிந்தனரே. 1

ஏடியல் மாலையணிந் தாலும் வாடு மெனப்புலவோர்
பாடியவீரவெண்பா மாலையைப் பொன்னின்
பாண்டியன்போர்

தேடிய வேற்செழியன் குல சேகரத் தென்னனைப்போற்
சூடிய வேந்தருண்டோ வொரு வேந்தரைச் சொல்லுகிலே. 2

நன்றாக.

குறிப்பு:- செய்யுள் 1. வரிழ்சம் என்பது வருஷம் என்றிருக்க வேண்டும். வீர வெண்பாமாலையைப் பாடிய புலவர் பெயர் தெரியவில்லை. அந்நூல் இப்போது இருக்கிறதா என்பதும் தெரியவில்லை.

குலசேகர பாண்டியன்

இடம்: திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, விசுவநாத சுவாமி கோவிலின் முன்மண்டபத்தின் வடபுறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: திருவாங்கூர் சாசனங்கள், முதல் தொகுதி, பக்கம் 103. *(T..A.S. Vol. I.Page 103.)*

விளக்கம்: தென்காசி விசுவநாதர் கோவில் கோபுரத்தைக் கட்டத் தொடங்கி அது முடிவுபெறுவதற்கு முன்னர் இறந்துபோன அரிகேசரி பராக்கிரம பாண்டியனுடைய தம்பி குலசேகர பாண்டியன், அக் கோபுர வேலையைத் தொடர்ந்து செய்து முடித்ததை இச்செய்யுள் கூறுகிறது

சாசனச் செய்யுள்

விண்ணாடர் போற்றுந் தென்காசி பொற்கோபுர
மீதிலெங்க
ளண்ணாழ்வி செய்தபணி யிப்படி குறையாய்க் கிடக்க
வொண்ணா தெனக்கண் டுயர்ந்ததட் டோடெங்கு
மூன்றுவித்தான்
மண்ணாளு மாலழகன் குலசேகர மன்னவனே.

குறிப்பு:- அண்ணாழ்வி - தமையன்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் கோபுரம்

இடம்: பாண்டிநாட்டு ஸ்ரீவில்லிபுத்தூர், வடபெருங்கோவிலுடையான் ஆலயத்தின் கிழக்குப்புறம் உள்ள உயரமான கோபுரத்தின் நிலைக்கால் ஒன்றில் உள்ள சாசனச் செய்யுள்.

பதிப்பு: ''செந்தமிழ்'', தொகுதி ஐந்து, பக்கம் 438.

விளக்கம்: இந்தக் கோபுரத்தை மேருமலைக்கு ஒப்பிடுகிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

இருக்கோது மந்தணர்சூழ் புதுவாபுரி யெங்கள்பிரான்
மருக்கோதை வாழும் வடபெருங்கோயில்
மணிவண்ணனார்
திருக்கோபுரத் துக்கிணை யாம்பொன் மேருச்
சிகரமென்றே
பருக்கோதலா மன்றிவே றுபமானப் பணிப்பில்லையே.

பராக்கிரம பாண்டியன்

இடம்: திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, விசுவநாத சுவாமி கோவிலின் முன்புறம் இடிந்துள்ள கோபுரச் சுவரில் எழுதியுள்ள சாசனச் செய்யுள்கள்.

பதிப்பு: திருவாங்கூர் சாசனங்கள், முதல் தொகுதி, பக்கம் 96, 97. *(T.A.S.Vol. I. Page 96, 97.)*

விளக்கம்: அரிகேசரி பராக்கிரம பாண்டியன் இக்கோவிலைக் கட்டியதையும், பிறகு இக்கோவிலின் கோபுரத்தைக் கட்டத் தொடங்கியதையும், அவனுடைய சிறப்புக்களையும் இச்செய்யுட்கள் கூறுகின்றன.

சாசனச் செய்யுள்

அன்பினுடன் சகாத்த மாயிரத்து முந்நூற்
றறுபத் தெட்டின்மேல் வைய்காசித் திங்கள்

மன்தியதி யீரைந்திற் பூருவ பக்க
மருவு தெசமியில் வெள்ளி வாரந்தன்னில்
மின்திக ழுத்தரநாள் மீனத்தில் வாகைவே
லரிகேசரி பராக்கிரம மகிபன்
தென்திசையிற் காசிநகர் கோயில் காணச்
சென்றுநின்று தரிழ்சணைதான் செய்வித்தானே. 1

பன்னு கலியுக நாலாயிரத் தைஞ்னூற் றைம்பத்
தெட்டின் மேலெவரும் பணிந்து போற்றச்
சென்னெல்வயற் றென்காசி நகரில் நற்கார்த்திகைத்
திங்கள் தியதியைந்திற் செம்பொன் வார
மன்னிய மார்கழிநாளில் மதுரை வேந்தன்
வடிவெழு தொணாத பராக்கிரம மகிபன்
சொன்ன வரைபோற் றிருக்கோபுரமுங் காணத்
துடியிடையா யுபானமுதல் துடங்கி னானே. 2

சேலேறிய வயற் றென்காசி யாலையந் தெய்வச்செய
லாலே சமைத்த திங்கென் செயலல்ல வதனையின்ன
மேலே விரிவு செய்தே புரப்பாரடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்கிரம பாண்டியனே. 3

மனத்தால் வகுக்கவு மெட்டாத கோயில் வருக்கமுன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன் தென்காசி
யென்றுமண் மேல்
நினைத்தா தரஞ்செய்து தங்காவல் பூண்ட நிருபர்பதந்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீ தியானுந் தரித்தனனே.
4

பூந்தண் பொழில்புடை சூழந்தென் காசியைப் பூதலத்தில்
தாங்கிளை யுடனே புரப்பார்கள் செந்தா மரையாள்
காந்தன் பராக்கிரமக் கைதவன் மான கவசன்கொற்கை
வேந்தன் பணிபவ ராகி யெந்நாளும் விளங்குவரே. 5

காண்டகு சீர்புனை தென்காசிக் கோபுரக் கற்பணியா
றாண்டில் முடித்துக் கயிலை சென்றா னகிலேசர் பதம்

பூண்டுறை சிந்தை யரிகேசரி விந்தைப் போர்கடந்த
பாண்டியன் பொன்னின் பெருமாள் பராக்கிரம
பாண்டியனே. 6

ஆரா யினுமிந்தத் தென்காசி மேவுபொன் னாலயத்து
வாராதோர் குற்றம் வந்தாலப் போதங்கு தந்ததனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே. 7

அரிகே சரிமன் பராக்கிரம மாற னரனருளால்
வரிசேர் பொழிலணி தென்காசிக் கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத் தேனன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்பொற் பாதமென்
சென்னியதே. 8

சாத்திரம் பார்த்திங் கியான்கண்ட பூசைகள் தாம்நடாத்தி
யேத்தியவன் பால் விசுவநாதன் பொற்கோயி
லென்றும்புரக்கப்
பாத்திபன் கொற்கைப் பராக்கிரம மாறன் பரிவுடனல்
கோத்திரந் தன்னிலுள்ளார்க்கு மடைக்கலங் கூறினனே. 9

மென்காசை மாமல ரன்ன மெய்யோற்கும்
விரிஞ்சனுக்கும்
வன்காசு தீர்த்திடும் விச்சுவ நாதன் மகிழ்ந்திருக்கப்
பொன்காசை மெய்யென்று தொட்ட கைக்குப் பூதலத்துத்
தென்காசி கண்ட பெருமாள் பராக்கிரமத் தென்னவனே.
10

ஏரார் சகாத்த முந்நூற்றுட னாயிரத் தெண்பத்தஞ்சிற்
சீராரு மார்கழி சித்திரை நாளிற் சிறந்துகுற்றம்
வாராத பூரணையினிற் பராக்கிரம மாற......
...கயிலாயந்தான்.... ....கண்டனனே. 11

கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலம்பகத்தோ செம்பொன்
னம்பலத்தோ

வேதத்திலோ சிவ லோகத்திலோ விசுவ நாதனிரு
பாதத்திலோ சென்று புக்கான் பராக்கிரம பாண்டியனே. 12

ஓங்குநிலை யொன்பது துற்றதிருக் கோபுரமும்
பாங்கு பதினொன்று பயில்தூணுந் - தேங்குபுகழ்
மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்காசி
தன்னிலன்றி யுண்டோ தலத்து. 13

அணிகொண்ட விந்த வணங்குமொன் றேயடி
யேற்குனக்கு
மணிகொண்ட வாசல் மணியும்ஒன் றேபகை மன்னரையும்
பிணிகொண்ட காரையு முந்நீரை யும்பெரும் பூதத்தையும்
பணிகொண்ட செண்பகத் தென்னா பராக்கிரம
பாண்டியனே. 14

குறிப்பு:- செய்யுள் 1. சகாத்தம் - சாலிவாகன சகாப்தம். சகாத்தம் 1368 என்பது கி.பி. 1446 ஆம் ஆண்டு. செய்யுள் 2. கலியுகம் 4558 என்பது சக ஆண்டு 1379 ஆகும்; கி.பி. 1457-ஆம் ஆண்டு. உபானம் என்பது கோவில் கட்டடத்தின் அடிப்பகுதிக்குப் பெயர். செய்யுள் 12. சகாத்தம் முந்நூற்றுடன் ஆயிரத்தெண்பத் தைந்து என்பது 1385. இது கி.பி. 1463-ஆம் அண்டு. முதலாவது செய்யுளுக்குக் கீழே ''அடைவு திகழ் சகாத்த மாயிரத்து முந்நூற்றறுபத் தொன்பதின் மேற்செல்'' என்று தொடங்கும் செய்யுள் சிதைந்து அழிந்துவிட்டது. ஆதலின் அச்செய்யுள் இங்கு எழுதப்படவில்லை.

அய்யனம்பி

இடம்: கன்னியாகுமரி மாவட்டம். கன்னியாகுமரி கிராமத் துக்கு அருகில் உள்ள குகாநாத சுவாமி கோவிலில் உள்ள கல்வெட்டெழுத்து.

பதிப்பு: திருவாங்கூர் சாசனங்கள், பக்கம் 169. (T.A.S.Page 169.)

விளக்கம்: குகாநாத சுவாமி கோவில் என்னும் பெயருடன் இப்போது இடிந்து கிடக்கிற இந்தக் கோவிலின் பழைய பெயர்

இராஜ இராஜேசுவரம் என்பது. இது, சோழ மன்னன் இராஜராஜன் காலத்தில் கட்டப்பட்டது. சோழ மன்னனுடைய அமைச்சன் மங்கலக்கால கிழான் ஆன அய்யனம்பி என்பவர். கன்னியாகுமரியில் தண்ணீர்ப் பந்தல் அமைத்ததை இச்செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

தெண்டிரைநீர்த் தென்குமரி மானகர்த்தண் ணீர்ப்பந்தல்
எண்டிசையும் ஏத்த வினிதமைத்தான் - விண்டிவரும்
ஐந்தெரியலான் அய்யனம்பி அடல்வளவன் மந்திரி
தென்மங் கலக்கால மன்.

ஐயனம்பி

இடம்: கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி கிராமம், குகாநாத சுவாமி கோவிலில் உள்ள சாசனம்.

பதிப்பு: திருவாங்கூர் சாசனங்கள், பக்கம் 170. (T.A.S. Page 170.)

விளக்கம்: கன்னியாகுமரியில் தண்ணீர்ப்பந்தல் அமைத்த மங்கலக்கால கிழான் அய்யனம்பி, ஷ தண்ணீர்ப் பந்தல் நடைபெறு வதற்காக மணற்குடி என்னும் ஊரில் நிலம் தானங் கொடுத்ததைக் கூறுகிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

மானமிக்க வேல்ஐயன் மங்கலக்கா லமன்குமரித்
தானமைத்த பந்தலிற்றண் ணீரட்ட - தேனரைத்த
மயத்தங்கு சோலை மணற்குடியிலே வைத்தா
னித்தம் பதினாழி நெல்.

திருவிக்கிரமன்

இடம்: திருவாங்கூரைச் சேர்ந்த வாழ்விச்ச கோட்டம். இவ்வூர்ப் பகவதி கோவிலின் முகமண்டபத்தில் உள்ள வட்டெழுத்துச் சாசனம்.

பதிப்பு: திருவாங்கூர் சாசனங்கள்; ஆறாந் தொகுதி, எண் 125. *(No. 125. T.A.S. Vol. VI. Part II.)*

விளக்கம்: இந்தக் கிராமத்தின் பெயராகிய வாழ்விச்சகோட்டம் என்பது வாள்வைத்த கோட்டம் என்பதன் திரிபு. கோட்டம் - கோவில். இவ்வூர்ப் பகவதி கோவிலில் உள்ள உருவம் கொற்றவையின் (மகிடா சுரமர்த்தனியின்) உருவம். கொற்றவை, போர்வீரர்களின் வெற்றித் தெய்வம். ஆகையினாலே, போரை வென்ற அரசன் தனது வெற்றிவாளைக் கொண்டுவந்து, கொற்றவையின் முன்பாக இரத்தத்தைக் கழுவிக் கறைபோக்கி வைப்பது வழக்கம். அந்த வழக்கப்படி முன் ஒரு காலத்தில் திருவாங்கூரை அரசாண்ட அரசன் ஒருவன் தன் வெற்றிவாளின் இரத்தக் கறையைக் கழுவி வைத்த கோவில் ஆகையால், இக்கோவிலுக்கு வாள்வைத்த கோட்டம் என்று பெயர் உண்டாயிற்று. பிறகு, இந்தக் கோவிலின் பெயரே இந்த ஊருக்கும் பெயராக அமைந்தது.

கொல்லம் ஆண்டு 795-இல் (கி.பி. 1620-இல்) இரவிவர்மன் காலத்தில் இந்தக் கோவிலின் முன்மண்டபத்தைத் திருவிக்கிரமன் என்பவர் ஒரே கல்லினால் கட்டியமைத்ததை இந்தச் செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

ஆதியெழு நூற்றுடன்தொண் ணூற்றையா மாண்டி
லற்பசியேழ் முற்றசமி யவிட்டம் வெள்ளி
மாதிசைசே ரின்னாளி லிரளி வேந்தன்
மனமகிழப் பகவதிவாள் வைத்த கோட்டத்
தோதிலுறு மிறைவிருயிருப் பதற்கு மேன்மை
யுறும் முகமண்டப மாமதற்கு நாப்பண்
மூதறிவா லொருகலின் மண்டபஞ் செய்வித்தான்
முல்லை மங்கலவன் திருவிக்கிரமன் தானே.

குறிப்பு:- பழந் தமிழரின் போர் முறையிலே, உழிஞைத் திணையில் வாண்மண்ணுநிலை என்னும் ஒரு துறை உண்டு. அது,

புறப்பொருள் வெண்பாமாலையில் (உழிஞைப் படலம், வாண் மண்ணு நிலையில்) இவ்வாறு கூறப்படுகிறது

''புண்ணிய நீரிற் புரையோ ரேத்த
மண்ணிய வாளின் மறங்கிளர்ந் தன்று.''

'உயர்ந்தோர் துதிப்பத் தீர்த்த நீராலே மஞ்சனமாட்டிய வாளினது வீரத்தைச் சொல்லியது.'' (பழைய உரை)

''தீர்த்தநீர் பூவொடு பெய்துதிசை விளங்கக்
கூர்த்தவாள் மண்ணிக் கொடித்தேரான் - போர்த்து
மிடியார் பணைதுவைப்ப இம்மதிலுள் வேட்டான்
புடையா ரறையப் புகழ்.''

'தீர்த்த நீரும் மலருஞ் சொரிந்து திக்கு விளங்கக் கூரியவாளினை மஞ்சனமாட்டிப் பதாகையாற் சிறந்த தேரினை யுடையான் இரண்டா வது உருமேற்றையொக்கும் வீரமுரசு ஆர்ப்ப இந்த அரணிடத்தே களவேள்வி வேட்டான், பக்கத்துள்ள மன்னரெல்லாம் தன் கீர்த்தியைச் சொல்ல.' (பழைய உரை)

தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், 68-ஆம் சூத்திரத்தில் கூறப்படுகிற வாள்மண்ணுதல், வாண்மங்கலம் என்பதையும் காண்க. கீழ்க்கண்ட ஆங்கில வெளியீடுகளில் உள்ள ஆங்கிலக் கட்டுரைகளையும் காண்க. *Balgalchchu, Epigraphia Indica Vol. VI. Page 55; A note on the word Balgalchchu. The Indian Antiquary Vol. XL (1911) P. 98.*

தாமோதரன்

இடம்: திருவாங்கூரைச் சேர்ந்த வாழ்விச்ச கோட்டம் என்னும் ஊரில் உள்ள பகவதிகோவில் வட்டெழுத்துச் சாசனம்.

பதிப்பு: திருவாங்கூர் சாசனங்கள், தொகுதி ஆறு, எண் 126 *(No. 126. T.A.S.Vol. VI Part II.)*

விளக்கம்: இவ்வூர்ப் பகவதி கோவிலில், முல்லை மங்கலத்துத் தரணிதரன் என்னும் தாமோதரன் திருப்பணிகள் செய்து கொல்லம் ஆண்டு 798-இல் (கி.பி. 1623-இல்) காலஞ்சென்றதை இச்செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

எத்திசையும் புகழ்பெறவே மருவு கொல்லம்
எழுநூற்றுத் தொண்ணூற்றோ டெட்டா மாண்டில்
ஒத்துவளர் பங்குனி நாலாறோ டொன்றில்
லொத்துநிற்குங் கார்த்திகைமுன் மூன்றாம் பக்கம்
சத்திய வாசகன் முல்ல மங்கலத்து
தரணிதர னெனும் தாமோதர னன்பாக
பக்தியினால் திருப்பணிகள் பலவும் செய்தே
பரலோகமடைந்து அரன்பொற் பாதம்பெற்றானே.

இராசகண்ட கோபாலன்

இடம்: சித்தூர் மாவட்டம், திருமலை திருப்பதியில் உள்ள மேளம் மண்டபத்தின் தெற்குப்புறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: திருப்பதி தேவஸ்தானத்துச் சாசனங்கள்; எண் 80 (No. 80. T.D.I.Vol.I.)

விளக்கம்: இராசகண்ட கோபாலன் என்னும் சிற்றரசனின் கைவண்மையைப் புகழ்கிறது. இச் சாசனச் செய்யுள். இராசகண்ட கோபாலன் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தொண்டை நாட்டின் வடபகுதியை அரசாண்டான்.

சாசனச் செய்யுள்

எத்தலமும் ஏத்து மிராசகண்ட கோபாலன்
கைத்தலத்தின் கீழோர்க் கையில்லை - இத்தலத்தி
லுண்ணாதா ரில்லைஇவன் சோறுணு மிவன்புகழை
எண்ணாதா ரில்லை யினி.

ஒபளநாதன்

இடம்: சித்தூர் மாவட்டம், சந்திரகிரி தாலுகா, திருப்பதி திருமலையில் உள்ள ஸ்ரீநிவாசப்பெருமாள் கோவில் முதல் பிராகாரம் தென்புறச் சுவரில் உள்ளது இச்செய்யுள்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு; எண் 297. *(No. 297. S.I.I.Vol. IV.)*

திருப்பதி தேவஸ்தானத்துச் சாசனங்கள்; முதல் தொகுதி, எண் 117. *(No.117. T.D.I. Vol. I.)*

விளக்கம்: ஒபளநாதன் என்பவர், திருவேங்கடப் பெருமாளுக்குத் திருக்கைமலர் (கைக்கவசம்) தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

ஓதவளர் வண்மை யொபளநாதன் தஞ்சை
யாதவர்கோன் வாழ வினிதூழி - போத
மருக்குலவுஞ் சோலை வடவேங்கட வாணர்க்குத்
திருக்கைமலர் தந்தான் சிறந்து.

குறிப்பு: - இரண்டாம் அடியில், வாழவினிதூழி என்றிருப்பது வாழ்க வினிதூழி என்றிருத்தல் வேண்டும். மரு - மணம். இதில் கூறப்படுகிற ஒபளநாதன் ஹொபள யாதவன் ஆவான். இவன் யாதவராயர் என்னும் அரச பரம்பரையைச் சேர்ந்தவன் போலும்.

புடோலி அரசன்

இடம்: சித்தூர் மாவட்டம், சித்தூர் தாலுகா, மேல் பாடி கிராமத்துச் சோமநாதேசுவரர் கோவில் மகாமண்டபத்தின் தெற்குச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள்; தொகுதி நான்கு. எண் 317. *(No. 317. S.I.I.Vol. IV.)*

விளக்கம்: இந்தச் சோமநாதர் கோவில், முற்காலத்தில் சோளேந்திரசிங்கர் கோவில் என்று பெயர் பெற்றிருந்தது என்பது இந்தச் செய்யுளினால் தெரிகிறது. இந்தச் செய்யுளுக்கு மேலே இவ்வாக்கியம் எழுதப்பட்டிருக்கிறது:

''இராஜராஜ தேவற்கு யாண்டு எட்டாவது. சிறைமீட்டபெரு மாளான சீயகங்க தேவர் மாமன் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் புடொலி அரசன் இத் திருமண்டபம் செய்வித்தேன்.''

சாசனச் செய்யுள்

பொத்தப்பிச் சோழன் புடொலி அரசன் புவிமே
லெத்திசையுஞ் செல்லும்எழில் மேற்பாடி -
மெய்த்தவத்தாற்
சோளேந்திர சிங்க நாயகற்குத் துகவமணி
வாளேந்து மண்டபஞ் செய்தான்.

குறிப்பு:- மூன்றாம் அடியில் 'துகவமணி' என்றிருப்பது 'துங்கமணி' என்றிருக்க வேண்டும்.

நம்பி அப்பி

இடம்: சித்தூர் மாவட்டம், திருத்தணி டிவிஷன், திருத்தணி. இவ்வூரில் உள்ள வீரட்டானேசுவரர் கோவிலின் தென்புறச் சுவரில் உள்ளது இச் சாசனச் செய்யுள்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு. எண் 94. (No. 94. S.I.I.Vol. XII.)

விளக்கம்: திருத்தணிகை வீரட்டானேசுவரர் கோவில், யானைக்கோவில் (கஜபிருஷ்ட விமானம்) ஆக அமைந்திருக்கிறது. இக் கற்றளி, அடிமுதல் முடிவரையில் கருங்கல்லினால் கட்டப் பட்டது. இதனைக் கட்டியவர் நம்பி அப்பி என்பவர். இது, பல்லவ மன்னன் அபராஜித வர்மன் காலத்தில் கட்டப்பட்ட கோவில். இந்தச் சாசன வெண்பாவைப் பாடியவன் அபராஜித வர்மனே.

அபராஜிதவர்மன் பல்லவ அரசர்களில் கடைசி அரசன். பல நூற்றாண்டுகளாகப் பல்லவ அரசர்களுக்குக் கீழடங்கியிருந்த சோழ அரசர், அபராஜித வர்மனை வென்று சோழப் பேரரசை நிறுவினார்கள்.

சாசனச் செய்யுள்

''திருந்து திருத்தணியில் செஞ்சடை யீசர்க்குக்
கருங்கல்லால் கற்றளியா நிற்க - விரும்பியே

நற்கலைக ளெல்லாம் நவின்றசீர் நம்பிஅப்பி
பொற்பமைய செய்தான் புரிந்து.

இ வெண்பா பெருமா னடிகள்தாம் பாடி அருளுத்து."

குறிப்பு: வெண்பாவின் கீழுள்ள வாக்கியத்தில், பெருமானடிகள் என்பது அபராஜீத வர்மன் என்னும் பல்லவ அரசனைக் குறிக்கிறது. 'பாடி அருளுத்து' என்றிருப்பது 'பாடி அருளியது' என்றிருக்கவேண்டும்.

இந்தச் சாசனம் உள்ள வீரட்டானேசுவரர் கோவில், பல்லவ அரசர்கள் கட்டிய கடைசி கோவில் என்பதையும், இக் கட்டடத்தின் சிறப்பியல்புகளையும் வெளிப்படுத்தியவர், பிரெஞ்சுக்காரராகிய மூவோ தூப்ராய் ஆவார். இவர் எழுதிய *Pallava Antiquities Vol. II.* என்னும் நூலில் இக்கோவிலைப் பற்றிக் காணலாம்.

காமவில்லி

இடம்: சித்தூர் மாவட்டம், கீழ்த் திருப்பதியில் அலிபிரி என்னும் இடத்தில் உள்ள பெரியாழ்வார் கோவிலின் மேற்குப்புறச் சுவரின் உட்பக்கத்தில் உள்ள சாசனம்.

பதிப்பு: திருப்பதி தேவஸ்தானத்துச் சாசனங்கள்; முதல் தொகுதி, எண் 177. *(No. 177.T.D.I. Vol. I.)*

விளக்கம்: பூவை நகரத்துக் காமவில்லி என்பவர், அம்மை ஏரி என்னும் ஏரியைத் திருவேங்கடப்பெருமாளுக்குத் தானமாகக் கொடுத்ததைக் கூறுகிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

கைப்பயலாம் பூவைநகர்க் காமவில்லி சர்ப்பகிரி
யப்பனுக்கு நற்பொலியூட் டாக்கினான் - ஒப்பாவா
லென்னம்மை முப்பத் திரண்டறமுங் கற்பித்த
தன்னம்மை ஏரி தனை.

குறிப்பு: 'கைப்பயலாம்' என்றிருப்பது 'கைப்புயலாம்' என்றிருக்க வேண்டும். சர்ப்பகிரியப்பன் - சேஷாத்திரிநாதன், வேங்கடேசப் பெருமாள். வேங்கடமலைக்குச் சேஷாத்திரி என்னும் பெயரும் உண்டு.

நின்றாடுவான்

இடம்: ஆந்திர தேசத்துக் கோதாவரி மாவட்டம், இராமச்சந்திர புரம் தாலுகா திராட்சாராமம் என்னும் ஊரில் உள்ள பீமேசுவரர் கோவில்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள்; தொகுதி நான்கு எண் 1026. *(No. 1026. S.I.I.Vol. IV.)*

விளக்கம்: திராட்சாராமத்தின் பெயர் தமிழில் இடர்க்கரம்பை என்று கூறப்படுகிறது. வீமேச்சரர் கோவிலில் நந்தாவிளக்கு எரிப்பதற்காக நின்றாடுவான் என்பவர் தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது. இந்தச் செய்யுளின் கீழே, தெலுங்கு எழுத்தில், ''லிகித: வீரராஜேந்த்ர ஆசரிய்யன்''என்று எழுதப்பட்டுள்ளது. இதனால், இந்தக் கல்வெட்டெழுத்தைச் செதுக்கியவன் பெயர் வீரராஜேந்திர ஆசாரியன் என்பது தெரிகிறது.

சாசனச் செய்யுள்

இம்பர் நிகழ விளக்கிட்டான் இடர்க்கரம்பைச்
செம்பொனணி வீமேச்சரந் தன்னில் - உம்பர்தொழ
விண்ணுய்ய நின்றாடு வானுக்கு வேலைசூழ்
மண்ணுய்ய நின்றாடு வான்.

குறிப்பு:- இதே இடத்தில் உள்ள 1027 எண்ணுள்ள சாசனமும் தமிழ்ச் செய்யுளே. இதில், இடையிடையே எழுத்துக்கள் மறைந்து விட்டபடியால் அச்செய்யுளை இங்குத் தரவில்லை.

பஞ்சநதி முடிகொண்டான்

இடம்: ஆந்திர தேசத்துக் கோதாவரி மாவட்டம் இராமச்சந்திர புரம் தாலுகா. திராட்சாராமம், பீமேசுவரர் கோவிலில் உள்ள சாசனம்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள்: தொகுதி நான்கு, எண் 1338. *(No. 1338. S.I.I.Vol. IV.)*

விளக்கம்: திராட்சாராமம் என்னும் ஊர் தமிழில் இடர்க் கரம்பை என்று கூறப்படுகிறது. பீமேசுவரர் கோவிலில் நந்தாவிளக்கு எரிப்பதற்குத் தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

புயல்மேவு பொழிற்றஞ்சை முதல்பஞ்ச
நதிவாணன் புதல்வன் பூண்ட
வயல்மேவு களியானை முடிகொண்டான்
மாநெடுவேல் வத்தர் வேந்தன்
இயல்மேவு தோளபயற் கிருபத்தை
யாண்டில் இடர்க் கரம்பைச்
செயல்மேவு மீசர்க்குத் திருநந்தா
விளக்கொன்று திருத்தி னானே.

குறிப்பு:- முடிகொண்டான் - பஞ்சநதி முடிகொண்டான். வத்தர்வேந்தன் - வத்தராசன். இவனுடைய முழுப்பெயர், "திருவிந் தளூர் நாட்டுக்கஞ்சாதன் பஞ்சநதி முடிகொண்டானான வத்தராயன்" என்று சாசனத்தில் காணப்படுகிறது. இவன் சோழ அரசனின் உத்தியோகஸ்தன். இடர்க்கரம்பை ஈசர் - இடர்க்கரம்பையில் கோயில் கொண்டுள்ள பீமேசுவரர்.

கங்கப் பெருமாள்

இடம்: மைசூர், கோலார் தாலுகா, விபூதிபுரம். இவ்வூரில் இடிந்துகிடக்கும் ஜலகண்டேசுவரர் கோவிலில் உள்ள சாசனம்.

பதிப்பு: கர்னாடக சாசனங்கள், பத்தாந் தொகுதி; கிரந்த - தமிழ் சாசனங்கள். கோலார் தாலுகா, எண் 132. (*Epigraphia Carnatica Vol. X. Inscriptions in Grantha and Tamil, Kolar Taluk. No. 132.*)

விளக்கம்: சகரஆண்டு 1101-இல் (கி.பி. 1179-இல்) கங்கப்பெருமாள் என்னும் சிற்றரசன் இங்குக் கோவில் அமைத்து அதற்குத் தானங்களை வழங்கினதைக் கூறுகிறது. இந்தச் செய்யுள்.

சாசனச் செய்யுள்

திருமகள் துணைவன் ஜயமகள் நாயகன்
இருநிலங் காவல னிளங்கோன் தழைசைமன்
வடதிசை மேருவில் வாரணம் பொறித்தோன்
குடதிசை யிந்துவின் குலமுதற் சிறந்தோன்.

தென்திசைக் காவிரிச் செழுநீர் கடந்தோன்
வந்திசைப் புரிந்தான் வானவன் கோன்றன்
சென்னியிற் கையவன் கத்தவன் திருக்கிர
பொன்னி னாரமு மீரமும் புனைந்தோன்
எண்டிசை யமரரு மியமனு நடுங்கிப்
பண்டுவெங் காளி பரிகலம் பறித்தோன்
நீணெடுங் குன்றகந் துணித்து நாகர்
கீணிலை யாலக மேபச யாண்மையி
லரசுப் பெடியத் தாக்கி யாங்கவர்
முரைசம் கவர்ந்து மாடகலத்தம ராயன்
முத்திட பருணிதன் முசுகுந்த கிரிநாதன்
வண்டர் பாவன் விக்கண்டனடன வாத்தன்
புரவா தீசன் செல்வன் பெயரால்
மற்றவன் திருமகள் பலவழங்கு கற்பின்
மாதேவி யென்பாள் பஞ்சவர் தூதன்
பானாரி புத்திரன் வெஞ்சிலைத் தடக்கை
வீர கங்கன் நடுற்ற சிற்றநதனர்
சாரமன் தொடுகடற் றானைத் தோன்றற்
கிளையவள் வெங்கணான் விக்கிரமா திற்தற்குத்
தங்கை கூத்தற்குத் தான்முன் சிறந்தவள்.
ஓடக் கொற்றத் தோங்கிய முக்கடக
வாதங் கோன் கச்சி காவலன் நறு
தென்னனை யடுகளத் தட்டு வென்ற
மாகடந்த பன விரியுர வேந்தன்
பொன்பன பொன்புண் கெடுவெபங் காக்கு
மெழிற்கங்கப் பெருமாள் அத்தை வாழி
யகலிடத் தெல்லாச் செல்வமும் தோற்றமும்
யாவையு நில்லா வென்னும் நிலமை யோதி
அருந்தவம் புரிந்த சிந்தைய ளாகி
யிருந்தருஞ் செயிவர தியால் பென்ன யெண்ணி

சுற்றும் புரிசையுந் தோரணவா யதலுங்
கற்றளி யதுவுங் கவின் பெற வமைத்து
நந்தன வனமுந் திருமடைப் பள்ளியு
மமைந்தனிக் குளமும் மடைவிளாகமும் பாகுத்து
ஒற்றைச் சங்கும் இரட்டை தாரையும்
மற்றும் பலபல வாச்சியங்களும் பட்டமு
மணிபூம் பாரிகல் பகருமடெ புற்றகட்டும்
பலபடி நிமந்த பரிசுநு கருளியன்
றெழிற்சகரிற் றாயிரத் தொருநூற் றொன்றென
அறிஞரும் உரைத்த நாளில் அணியுஞ்
சந்தமு மகிலு மாரமு மணியும்
பொன்னும் வருபுனற் சாரற் கொங்கலர்
கூவளை கூநறிடை யுமையொடு
சங்கரன் றன்னை தாபித் தனனே.

குறிப்பு: - இந்த அகவற்பாவைக் கல்லில் வெட்டின சிற்பியின் தவறுதலால் இடையிடையே எழுத்துக்கள் பிறழ்ந்துள்ளன. இதனைப் பாடிய புலவர் இச்செய்யுளை நன்கு இயற்றியிருக்கிறார். ஆனால், தமிழறியாத கற்றச்சனால் இச்செய்யுளில் பிழைகள் காணப்படுகின்றன.

பிரமராயன்

இடம்: மைசூர், சிட்லகட்ட தாலுகா, ஜங்கம கோட்டை, கொல்ல ஹள்ளி கிராமத்தின் வடக்கில் உள்ள பைரண்ணன் நிலத்தில் உள்ள தமிழ்ச் சாசனம்.

பதிப்பு: கர்னாடக சாசனங்கள், பத்தாந் தொகுதி; கிரந்த - தமிழ் எழுத்துச் சாசனங்கள், சிட்லகட்ட தாலுகா, எண் 9. (*Epigraphia Carnatica, Vol. X. (Inscriptions in Grantha and Tamil) Sidlaghatta Taluk, No. 9.*)

விளக்கம்: உதயமார்த்தாண்ட பிரமராயன் என்பவர், சோமீச்சுரக் கோவிலைக் கட்டி அதற்கு வேண்டிய நிலபுலங்களைத் தானம் செய்ததை இந்தச் செய்யுள் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஸ்ரீ சக வருஷம் ஆயிரத்து நாற்பத்திரண்டு.

பூமகள் புணரப் புகழது வளரப்
புவியோர் போற்ற வெங்கலி கடிந்து
செங்கோ லோச்சிப் பூழி வேந்தன்
கோழியர் குலபதி ஸ்ரீராஜ ராஜன்
ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்
கியாண்டிரண் டதனில் நாரா நிகரிலி
சோழமண் டலத்துக் காரார் வயல்சூழ்
கைய்வர நாட்டுள் மாட மாளிகை
மண்டப மோங்கிய் கூட... கொற்ற
வாயதல் பாகட்டூர்... ம்
பாவையர் நடம்பயில் சூகுட் டூரில்
தொன்னில நிகழ்த் தருமொரு நல்குந்
தன்ம... னருமொழிச் சதுப்பேதி மங்கலத்துப்
பல்லோர் புகழும் நல்லோர் முதல்வன்
மாத்திரை யதனில் மாநெதி நல்கும்
மாத்திரை யர்கோன் னாதுலர் சாலை
பாண மாத்தும் பார்ப்பனப் பெருமாள்
சாமுண் டையன் றன்பெருந் தேவி
பூச்செறி குழலாள் விச்சமை பயந்த
தண்டமி ழாலையன் தாரணி ஏத்து
மெண்டிசை நிகழு மிருபிறப் பாளன்
கொண்ட லன்ன குவலய தந்திரனான
வோங்கு புகழான் உதையமார்த் தாண்ட
பிரம்ம ராயன் தேன்கமழ் தாரோன்
செழுமறை வாணன் தன்றிருத் தமையன்
றன்பெய ராலே பொன்புரி சடையணிப்
புண்ணியன் விண்ணவர் நாமீச்சர....
...னி தேத்திய சோமீச்சரந் திருக்கோயி
லெடுப்பித் .... சிறந்து

....லாண மிசைப்ப திருப்பிர திஷ்டை
நிகழப் பண்ணி திருவடி நிலையுஞ்
செம்பொனா லமைத் துருவது வளர
உமாசகிதன் திருமேனி யிருநிலம் போற்ற
வெழுந்தரு ளுவித்துக் கேதகை மல்லிகை
கிஞ்சக மஞ்சரி பாதரி புன்னை
பராரை யாரமகிழ் சிதலை மௌவல்
செருத்தி செண்பக மாதவி என்றிவை
வளம்பெற வமைத்துச் செங்கண் விடையோன்
சென்னி மன்னுங் கங்கை நீரு
மண்ணுங் குணர்ந்து குருக்கள் குளிரக்
கோயில் மேற்பாற் றிருக்குள மாகத்
தீர்த்தங் கண்டு செழுநில மேத்தக்
கொட்டுந் தட்டுங் குலவி நிலவ
விருப்புறு மடியார் மேவிமுன் சிறக்கத்
திருப்படி மாற்றுக்குத் தேவர் தானமாகப்
பெரிஏரியில் நிலமோ ராயிரமுஞ்
சிற்றேரியில் நிலமோ ராயிரமுஞ்
சீரார் செந்தமி ழோர்களிப் பார
வீரா யிரங்குழி... னிற் றிகழக்
குணபதி யாயெங் குற்றங் கடியுங்
கணவதியார் குமரர்க் கிருநூறு குழியு
மாராய னான பிரா... ன
சூரிய தேவர்க் கிருநூறு குழியு
மஞ்சொல்லா.... ததவ.... செய்வான்
றிருக்களத்து மேல்பாற் பாலை நன்நில
மொருவே லியுநற் பண்ணையும். ழிந.
பெண்ணை மேல்பாற் பசுவூர் நாற்பா
லெல்லை யுட்பட நன்செய் புஞ்சை
நன்னில நிகழு நான்மறை யவர்பாற்

பொன்னற விட்டு மண்ணறக் கொண்டு
தாரணி நிகழத் தன்கிளை வளரச்
சந்திரா தித்தர் தாமுள் ளளவும்
ஊழி ஊழி யுரவுபெற வமைத்தனன்
வாழி வாழி வையத் தினிதே.

குறிப்பு:- இச்செய்யுளின் இடையிடையே எழுத்துக்கள் மறைந்துவிட்டபடியால், சில சொற்களின் உருவங்கள் தெரிய வில்லை. சாசனத்தைக் கல்லில் வெட்டியவரின் கைப்பிழையால் சில சொற்கள் பொருள் விளங்காமலிருக்கின்றன.

வரி 15. மாநெதி - மாநிதி. வரி 33. உமாசகிதன் திருமேனி - உமாமகேசுவர மூர்த்தம். உமையும் மகேசுவரனும் ஒரே ஆசனத்தில் சுகாசன மூர்த்தமாக எழுந்தருளிய உருவம். வரி 40. குணர்ந்து - கொணர்ந்து, கொண்டுவந்து. வரி 60. ''பொன்னறவிட்டு மண்ணறக் கொண்டு'' இத்தொடர் மொழி வேறு பழைய சாசனங்களிலும் காணப்படுகிறது. 'பொன்னறக் கொண்டு மண்ணறக் கொடுத்தோம்,' 'பொன்னற இட்டு மண்ணறக் கொண்டேன்,' 'பொருளற இட்டு விலையறக் கொண்டு' என்று சாசனங்களில் காணப்படுகின்றன. வரி 20, 61. தாரணி என்பது தரணி என்றிருத்தல் வேண்டும். தரணி - நிலம், பூமி.

பெரியான்

இடம்: மைசூர், கோலார் தாலுகா, விபூதிபுரத்திலுள்ள ஜலகண்டேசுவரர் கோவிலில் உள்ள சாசனக் கவி.

பதிப்பு: கர்னாடக சாசனங்கள், பத்தாந் தொகுதி. கிரந்த - தமிழ் சாசனங்கள் கோலார் தாலுகா, எண் 131. (Epigraphia Carnatica Vol. X. Part II. Kolar Taluk No. 131.)

விளக்கம்: குவளாலபுரத்து (கோலார்) ஏரியின் கீழ் உள்ள நிலங்களைத் தானம் செய்த பெரியான் என்பவரைப் புகழ்கிறது. இச்செய்யுள். இந்தத் தானம், சகரை யாண்டு 1120-இல் (கி.பி. 1198-இல்). விக்கிரம கங்கன் என்னும் அரசன் காலத்தில் செய்யப் பட்டது.

சாசனச் செய்யுள்

அலைகடல் உடுத்த மலர்தலை யுலகத்
தெண்ணருங் கீர்த்தி இசையா ரதிபன்
அண்ணலெங் குளந்தை யமரன் காதலன்
கோதில் புகட்குவ ளாலமா நகரங்
குடியேற்றிய ஆதிவணி கேசன்
அளகைப் பதியுந் தானுடை யோன்....
திரைலோக்ய பட்டண ஸ்வாமி ஐய்யனருட்
சீராசைத் தேச னுடனவ தரித்த
ஆயிழை யாளுய்ய... ண்டை
அருந்ததியே யனையாள் தந்தாய்
திருவயிற் றுதித்த துளங்குமணித் திருமார்பன்
செங்கமலப் புனல் புடைசூழ் செழுந்
தொண்டை வளநாடன் எங்கள் பெரியாற்
கிளைய பெரியான் மற்றீண் டுலகில்
ஒப்பரிய சகரையாண் டோரா யிரத்துமேற்
செப்பரிய நூறு கடந் திருபதுதான்
சென்றதற்பின் வென்றிபுனை கடாக் களிற்று
விக்கிரம கங்கன் குன்றெறிந்த கூரிலைவேற்
கொற்றவனை யிடுவித்துக் கொத்தலரும்
பூம்புனல்சூழ்
குவளாலத் தேரிதனில் உத்தமத்தே
நீர்நில மற்றொரு வெலயு மாளு
சோலை யதனுக்கு வடமேற்கே விடுவித்துத்
திருச்செல்வம் பல பெருக்கிச்
சி...லியு முப்பொழுதுங் கருத்தமைய
வெழுந் தருளும்படி நிமந்தங் கட்டுவித்துச்
சந்திரா தித்தவரை திருப்புகழ் நிறுத்தி
நிந்த ளூரிலத் தினிதுவாழ் கெனவே.

ஸ்ரீ மாஹேஸ்வரரும் ஐந்நூற்றுவரும் ரக்ஷை.

குறிப்பு:- வரி 4. குவளாலமாநகரம், இப்போது கோலார் என்று வழங்கப்படுகிறது. வரி 21. வெலயுமாளுசோலை என்னும் சொல்லின் சரியான உருவம் தெரியவில்லை. கடைசிவரியில், நிந்தளுரிலத்தினிது என்றிருப்பது, 'இந்த நானிலத்தினிது' என்றிருக்க வேண்டும்.

செட்டி தேவன்

இடம்: மைசூர், சிந்தாமணி தாலுகா, உபாரபேட்டைக் கிராமத்தில் உள்ள சாசனச் செய்யுள்.

பதிப்பு: கர்னாடக சாசனங்கள், பத்தாந் தொகுதி. கிரந்த - தமிழ் சாசனங்கள், சிந்தாமணி தாலுகா, எண் 83. *(Epigraphia Carnatica Vol X. Inscriptions in Grantha and Tamil. No. 83.)*

விளக்கம்: சக ஆண்டு 1101-இல் (கி.பி. 1179-இல்) செட்டி தேவன் என்பவர் தம் பெயரால் செட்டிச்சரம் என்னும் கோவில் அமைத்து அதில் சிவபெருமானை எழுந்தருளுவித்து அக் கோவிலுக்கு நிலபுலங்களைத் தானம் செய்ததைக் கூறுகிறது இந்தச் சாசனம்.

சாசனச் செய்யுள்

தேனாருஞ் செங்கமல மாதுபுணருந் தோளான்
கானரும் விந்தைமகன் காதலாம் பூநாடும்
வண்டறியாத் தாமரையோன் தன்மரபில் வந்துதித்த
கண்டன் கவுண்டல்லிய கோத்திரத்தான்
எண்டிசையும்
சாலிவயல் புகுந்து சண்பகப்பூஞ் சோலைதொறும்
பாலிமணி சிந்திப் பரந்தோங்கி யால....துச்
செய்யார் கு....புழக்கிச் செங்கமலப்
பொய்கைபுகுங்
கைய்வார நாடன் மிகுங்கார்மே பொய்யாத
கைய்வார நாடன் மிகுங்கார்மே பொய்யாத
கங்கையிலுங் தூயபிரான் கண்டார் வல்லவனாம்
அங்கைமுகில் அமுதன் தன்புதல்வ...ங்களுக்கு
மாதர் மறையோன் மநுநெறிஇம் மாநிலத்தின்
தாதாதயர் வளர்க்குந் தண்ண..ஞ்சி...ராக்கிரம

.....ன .....ருடி.....கு.... தாமரைப்பூ.....ழ
துட்டராதித்தன் துர்க்குல நகுலன் செட்டிதேவன்
..ன்மாதாரு மட்டுலவு நாகஞ் சுமந்திட
ஞாலமெலாந் தானிகழு..ன் பிரமாதிராயன்
மிகவோகை யோடு மாதவியேமுல்லை வருக்கைகமழ்
சந்தனமே சூதவனமேதா புன்னை போதலரும்
சோலைவயல் தோறுஞ் சுரும்பினங்கள் பண்பாட
வேலையது போலும் விதிர்ச்செட்டில் ஆலிலைமேற்
பள்ளிகொண்ட மாலும் பதுமத்தோனுங் காணா
வெள்ளிமலை நாதன் மிகவிரும்ப வொள்ளுதிருக்
கற்றளியு முகமண்டபமு முருப்பெறச்செய் தூழிபல
வாழப்பெருக்கும் சகவருஷம் ஆயிரத் தொருநூற்
றொன்று மிகநல்ல வருவிகாரி புகலுமிடப ஞாயிற்றுப்
பிற்பக்கம் பொன்... திடமான திதிகை திரு...ழ.....
பன்னுக.... ங்கை பாசத் திருமகளு (மூர்த்தம்
முன்னு கமல மெனவுகப்பப் பன்மறையோர்
பாதத்திற்.... தி....வெ....ளும் வீற்றிருப்ப மாதவர்கள்
செட்டீச்சர மென்று சி...ட்டுத் திசைக்கு
மெழில் விளக்காய்ச் சிட்டர் தொழ
மண்ணும் வளஞ்சுரப்ப மாமறைகள் தாந்தழைப்ப
விண்ணு மழைபொழிய வெங்கலிபோய் எண்ணிய
சீராருங் கௌசி..ன் ராஜராஜபட்டன் வல்லைப்பூமன்
சீரார் சிவ....றையோன் தனக்கு நீராறப்
பாணியிலே வார்த்துப் பசுபதியைப் பூசித்துங்

காணியதுவுங் கொடுத்து கல்வெட்டி நீணிலத்துக்
கொங்காளுஞ் சோலைசூழ சோழன்.... பொரான
கொங்கர் கோடி மங்கலமுடை..ந்தாங்கு
கழதில்லைப் பிரான் அரிவாட்டத்தா யாண்டாரற்கு
கோயில் மல்லைனெதிமாடா பத்தியங்கொடுத்து சொல்லிய
பாரசிவன் பம்மனுக்குப் பல்லியங்கள் வாசிக்கப்
பேராப் பெருங்காணி தான்குடுத்து சீரார்
திருவாபரணம் பொன் ஐங்கழற்சாற் பட்டம்
பொருமால் விடையோற்கு....ரும்
வேற்றுப் படாத பரிகல பரிச்சின்னம்
நூற்றப்பல வெண்கலம் அளித்துத் தோற்றிய
நற்சந்தி மூன்றினுக்கு நல்விளக்கோர் பக்தாக்கிக்
கற்செக் கிரண்டில்...யாண்ணை தாங் கொடுத்துக்
கோங்கி....ங்கோலப் பொழில் புடைசூழ்கொத்த
நூருங் கிறையுந் தாலவ....துச் சாலநல்
சொக்க சமுத்திரத்திற் சோமபாதியுங் கொடுத்து
...க்கும்விதற செட்டில் ஆமுதகட்டும் மாதகட்டும் நீக்கியபின்
கொல்லை யிருகண்டகமுந் தானங் கொடுத்து
எல்லையலாத் தன்ம மியற்றியபின் பல்லவையோர்
சொல்லார் புகட்தன்ம...லையிது சோரா பேய்கள்
மேலெழுதுங் கணக...... சொல்லார்ந்த முத்தமிழோர்
தாம்புகழு மூன்றுநாட்டு மண்டலிகன் அத்தநெறி
...க்கோ ராகரமாம் நித்தந்தருவார் கொடைத்தடக்கைத்
தூயிந் துட்டர்கண்டன் திருவாய் மொழிந்தருளக் கேட்டு
இருமா.ஞ் சொற்புலவோர் தாம் பு....தலூர்

மன்மறையோன வித்தகநற் பூந்துழாய் மார்பனுக்குச்
சித்தந் தளராதவன் பி...செம்பொனருள் நம்பெருமாள்
அளவிலி அறிஞன்ற னெழுத்து பின்னும்
பிழையாத வாய்மைப் பிரமதராயன் செட்டி
மழையார் முகில் அங்கை மாதானி பழைய
மறையாலுங் காணவொண்ணாப் பாதன் அரன்
திருமேனி கோயில் குறையா திலக்கணங்களாற்
சமைத்த அறிஞன் அருள்கூர்ந்த நெஞ்சினோன்
...கிம...த்தனமா பொன்பெருகு புகட்சங்கர
செட்டிப்பெயர் இராயாசாரி யென்னு பெயர்
சிட்டர் பலர் செப்பச் சிறப்பித்து மட்டுலவு
சீரார் பொழிற்..ான்ற கிறைக்குத் தெற்கிற்
கிலேரி சிட்டங் கிறையுங் கொடுத்தான்
இத்தன்மங்கள் சந்த்ரா தித்தியவ.....
....

குறிப்பு: இச்செய்யுளின் இடையிடையே எழுத்துக்கள் மறைந்துவிட்டபடியால் சில இடங்களில் செய்யுளடியைச் சரியாக அமைக்க இயலவில்லை. இறுதியிலும் எழுத்துக்கள் மறைந்து விட்டன.

ஆரியச் சக்கரவர்த்தி

இடம்: இலங்கை, கொழும்பு நகரத்துப் பொருட்காட்சி சாலையில் உள்ள ஒரு கல்லெழுத்துச் சாசனம்

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு; எண் 1413. *(No. 1413. S.I.I.Vol. IV.)*

விளக்கம்: இலங்கையை அரசாண்ட சிங்கை ஆரியச் சக்கர வர்த்திகளில் ஒருவனை இந்தச் செய்யுள் புகழ்கிறது சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழர் ஆவர். ‘சேது’ என்பது இவர்களுடைய ஆணைப்பெயர். இவர்களுடைய காசுகளில், படுத்திருப்பது போன்ற எருது உருவமும், ‘சேது’ என்னும் எழுத்தும் பொறிக்கப்

பட்டிருந்தன. இந்த அரசர்கள் இடைக்காலத்திலே, இலங்கையின் சில பகுதிகளை அரசாண்டார்கள்.

சாசனச் செய்யுள்

சேது.

கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார்
காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார் - பொங்கொலிநீர்
சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்
தங்கள் மடமாதர் தாம்.

குறிப்பு:- மூன்றாம் அடியில், சிங்கை நகர் ஆரியன் என்பது சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியை. அனுரேசர் - அனுரை நகரின் அரசர். அனுரை என்பது அநுராதபுரம். இது இலங்கைத் தீவின் பழைய தலைநகரம். இந்நகரில் இலங்கை அரசர்கள் அரசாண்டார்கள்.

தன்மபாலன்

இடம்: இலங்கைத் தீவின் பழையகாலத்துத் தலைநகரமான அநுராதபுரத்தில், ஆர்க்கியாலஜி சர்வே அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள பழைய கல்லெழுத்துச் சாசனம்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு; எண் 1405. *(No. 1405. S.I.I.Vol. IV.)*

விளக்கம்: இந்தச் சாசனச் செய்யுளின் மேலே ஒரு வடமொழிச் செய்யுளும், அதற்குமேலே, இடையிடையே எழுத்துக்கள் மறைந்து போன ஒரு தமிழ்ச் செய்யுளும், அதற்குமேலே சாசன வாசகமும் எழுதப்பட்டுள்ளன. எழுத்துக்கள் மறைந்து சிதைந்துள்ள செய்யுளை இங்கு எழுதவில்லை.

சாசனச் செய்யுள்

போதி நிழலமர்ந்த புண்ணியன்போ லெவ்வுயிர்க்குந்
தீதி லருள்சுரக்குஞ் சிந்தையா - னாதி
வருதன்மங் குன்றாத மாதவன் மாக்கோதை
ஒருதன்ம பால னுளன்.

குறிப்பு:- இந்தச் செய்யுள், மாக்கோதை தன்மபாலர் என்னும் பௌத்த பிக்குவைப் புகழ்ந்து கூறுகிறது. போதி நிழல் அமர்ந்த புண்ணியன் - அரசமரத்தின் கீழே எழுந்தருளியுள்ள புத்தர்பெருமான்.

இணைப்பு:

பராந்தகன் வீரநாராயணன்

இடம்: திருநெல்வேலி மாவட்டத்தில் கிடைத்த செப்பேட்டுச் சாசனம்.

பதிப்பு: இந்தச் செப்பேட்டுச் சாசனம் இதற்கு முன்பு வெளியிடப்படவில்லை. முதல்தடவையாக இப்போது வெளியிடப் படுகிறது. இந்தச் சாசனத்தை அன்புகூர்ந்து கொடுத்தருளியவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளரும், சாசன ஆராய்ச்சிப் பேரறிஞருமாகிய **உயர்திரு. T.V. சதாசிவ பண்டாரத்தார்** அவர்கள்.

விளக்கம்: இந்தச் செப்பேட்டுச் சாசனம் வடமொழியிலும் தமிழ்மொழியிலும் எழுதப்பட்டுள்ளது. முழுவதும் செய்யுளால் ஆனது. வட்டெழுத்தினால் எழுதப்பட்டது. சடையவர்மன் பாண்டி யன் பராந்தகன் வீரநாராயணன் என்னும் பாண்டியனின் ஆட்சியில் ஆறாவது ஆண்டில் எழுதப்பட்டது.

களபரரை வென்று பாண்டியர் ஆட்சியை மீண்டும் நிறுவிய பாண்டியன் கடுங்கோன், காடக சோமயாஜி என்பவருக்குச் சோமாசி குறிச்சி என்னும் ஊரை யாகபோகமாகக் கொடுத்தான். அவன் வழங்கிய செப்பேடு காடக சோமயாஜியின் பரம்பரையார் வசம் இருந்தது. அது பிற்காலத்தில் காணமற்போக, அப் பரம்பரையில் வந்த நாராயணன் கேசவன் என்பவர் ஷெ சோமாசிகுறிச்சிக்கு எல்லை குறிப்பிட்டுப் புதிய செப்பேடு எழுதித்தரவேண்டுமென்று ஸ்ரீ பராந்தக மகாராசனைக் கேட்டுக்கொள்ள, அவ்வரசன், சோமாசிகுறிச்சிக்கு மதுரகரநல்லூரெனப் பெயர் சூட்டி இச்செப்பேட்டுச் சாசனத்தை அளித்தான்.

இந்தச் சாசனம், பிற்காலத்துப் பாண்டியர் பரம்பரையைக் கூறுகிறது. கோச்சடையன் என்னும் ஸ்ரீ வரகுண மகாராசன் (முதலாம்

வரகுணன்) அவன் மகன் ஸ்ரீவல்லபன், அவன் மகன் வரகுண பாண்டியன் (இரண்டாம் வரகுணன்) ஆகியவர்களைக் கூறுகிறது. இரண்டாம் வரகுண பாண்டியனின் மகன் இச் சாசனம் வழங்கிய பாண்டியன் பராந்தகன் வீரநாராயணன் ஆவன். இவன் கி.பி. 800 முதல் 900 வரையில் அரசாண்டான். இவனைப் பராந்தக மகாராசன், மகரகேதனன், கோச்சடையன், ஸ்ரீ நிகேதனன் என்று இச்சாசனம் கூறுகிறது.

சாசனச் செய்யுள்

ஓங்குதிரை வியன்பரப்பில் உததிஆ லயமாகத்
தேங்கமழு மலர்நெடுங்கட் டிசைமகளிர்
மெய்காப்ப
விண்ணென்பெய ரேயணிய மேகதாலி
விதானத்தின்
றண்ணிழற்கீழ் ஸஹஸ்ரபண மணிகிரணம்
விளக்கிமைப்ப
புஜங்கம புரஸ்ஸர போகி என்னும் பொங்
கணை மீய்மிசைப்
பயந்தருதும் புருநாரதர் பனுவனரப் பிசை
செவிஉறப்
பூதலமக ளொடுபூமகள் பாதஸ்பர் ஸனைசெய்யக்
கண்படுத்த கார்வண்ணன் றிண்படைமால் ஸ்ரீபூபதி
ஆதிபுருஷன் அமரநாயகன் அழகமைநா
பிமண்டலத்துச்
சோதிமர கததுளைத்தாட் சுடர்பொற்றா
மரைமலர்மிசை
விளைவுறுகளங் கமணியின்மேன் மிளிர்ந்திலங்கு
(சடைமுடிஒ
டளவியன்ற கமண்டலுவோ டக்ஷமாலை
ஒடுதோன்றின
சதுர்ப்புஜன்சதுர் வ்வக்த்ரந் சதுர்வ்வேதி
சதுர்த்வயாக்ஷந்

மதுக்கமழ் மலர்க் கமல யோனி மனந்தந்த மாமுனி
அத்ரி
அருமரவிற் பலகாலந் தவஞ்செய்வுழி
அவன்கண்ணி
லிருள்பருகும் பெருஞ்சோதி இந்துகிரணந்
வெளிப்பட்டனன்
மற்றவற்கு மகனாகிய மணிநீள்முடிப் புதனுக்கு
கற்றைச்செங் கதிர்க்கடவுள் வழிவந்த
கழல்வேந்தன்
ஏந்தெழிற்றோள் இளனொருநா ளீசனது
சாபமெய்தி
பூந்தளவ மணிமுறுவற் பொன்னாகிய
பொன்வயிற்றுள்
போர்வேந்தர் தலைபனிப்ப வந்துதோன்றிய
புரூரவர்ப்பின்
பார்வேந்த ரெனைப்பலரும் பார்காவல்
பூண்டுய்த்தபின்
திசையானையின் கும்பகூடத் துலவியசெழு
மகரக்குலம்
விசைஒடுவின் மீன்னொடுபோர் மிக்கெழுந்த
கடற்றிரைகள்
சென்றுதன்சே வடிப்பணிய அன்றுநின்ற
ஒருவன்பின்
விஞ்சத்தின் விக்ஞாபனை யும்பெறலரு நகுஷந்மத
விலாசமும்
வஞ்சத்தொழில் வாதாபி சீராவியு மஹோததிகளின்
சுருங்காத பெருந்தன்மையும் சுநேதுசுதை
சுந்தரதையு
மொருங்குமுன்ன மடிநண்ண சியோமேனி
உயுதலத்தோன்

மடலவீழ்ஆ மலுய்த்து மாமுனிபுரோ கிதன்னாகக்
கடல்கடைந் தமிர்துண் ணவுங் கயலிணைவட
(வரைப்பொறித்தும்
ஹரிஹயந தாரம்பூண்டு மவன்முடிஒடு
வளைஉடைத்தும்
விரிகடலைவே லின்மீட்டும் தேவாசுரச்
செருவென்றும்
அகததியனொடு தமிழாய்ந்தும் மிகத்திறனுடை
(வேந்தழித்துந்
திசவதனன்.... நினுக்குச் சந்துசெய்துந்
தார்த்தராஷ்டிரர்
படைமுழுதுங் களத்தவிய பாரதத்துப்
பகடோட்டியும்
மடைமிகுவேல் வாணர் அநுஜன் வசுசாப
மகல்வித்தும்
...தொன் னகரழித்தும் பரிச்சந்தம் பலகவர்ந்தும்
நாற்கடலொரு பகலாடியும் கோடிபொன்
னியதிநல்கிக்
கலைக்கடலைக் கரைகண்டு பொன் பகடாயிரம்
பரனுக்கீயும்
உரம்போந்ததிண் டோளரைசுக சுரம்போகித்
(துறக்கமெய்தியும்
பொன்னிமயப் பொருப்பதனில் தன்னிலையிற்
கயலெழுதியும்
வாயல்மீ மிசைநிமிர்ந்து பலவேண்டி விருப்புற்றுங்
ஙயல்வாய் கடல்போலக் குளம்பலவின்
கரையுயரியும்
மண்ணதிரா வகைவென்று தென்மதுரா
புரஞ்செய்தும்
அங்கதனில் லருந்தமிழ்நீற் சங்கம்இரீ
இத்தமிழ்வளர்த்தும்

ஆலங்கானத் தமர்வென்று ஞாலங்காவல் நன்கெய்தியும்
கடிநாறு கவினலங்கற் களப்பாழர் குலங்களைந்தும்
முடிசூடி முரண்மன்னர் எனைப்பலரு முனிகந்தபின்
இடையாரையும் எழில்பேணவைக் கூட்டியினிய (வெல்கொடி எடுத்த
குடைவேந்தர் திருக்குலத்துக் கோமன்னர் பலரொழிந்தபின்
காடவனைக் கருவூரில் கால்கலங்கக் களிறுகைத்த
கூடலார்கோன் ஸ்ரீவரகுணன் குரைகழற்கோச் சடையற்குச்
சேயாகி வெளிப்பட்ட செங்கண்மால் ஸ்ரீவல்லபன்
மெய்போயந் தோளியர்கள் வித்யா தர ஹிரண்ய (கர்ப்ப)
குண்ணவல மாவென்றுங் கரைகடலீ ழங்கொண்டும்
விண்ணாள வில்லவற்கு விழிஞத்து விடைகொடுத்தும்
காடவருக் கடலாணூர்ப் பீடழியப் பின்னின்றுங்
குடகுட்டுவர் குணசோழர் தென்கொங்கர் வடபுலவர்
அடலழிந்து களஞ்சேர அமர்வல்லான் மகன்படத்தன்
களிறொன்று வண்குடையதைக் கதி... காட்டியமபுரசீலன்
ஒளிறிலைவே லதுபாய பகு...லன் உம்பர்வான் (உலகணைந்தபின்
மற்றவற்கு மகனாகிய கொற்றவனங் கோவரகுணன்

பிள்ளைபிறை சண்டைக்கணிந்த விடையேறி
எம்பெருமானை
உள்ளத்தி லினிதிருவி உலகங்காக் கின்றநாளில்
அரவரைசன் பல்லூழி ஆயிரமா யிருந்தலையால்
பெரிதரிதின்பொறுக்கின்ற பெரும்போஹ
மண்மகளைத்தன்
தொடித்தோளில் லெளிதாங்கிய தொண்டியர்கோன்
(றுளக்கில்லி
யடிப்படைமா னாபரணன் திருமருகன்
மயிலையர்கோன்
பொத்தப்பிக் குலச்சோழன் புகழ்தருசிரீ
கண்டராசன்
மத்தமா மலைவலவன் மதிமகளக் களநிம்மடி
திருவயிறு கருவுயிர்த்த ஸ்ரீபராந்தக மஹாராஜன்
விரைநாமத் தேர்வீரகர்ணன் முன்பிறந்தவேல்
வேந்தனைச்
செந்தாமரைமலர்ப்பழனச் செழுநிலத்தைச்
செருவென்றுங்
கொந்தகபூம் பொழிற்குன்றறையுங்
குடகொங்கினும் பொக்கரணியும்
தென்மாயனுஞ் செழுவெண்கையு பராந்தகன்னுஞ்
சிலைக்கணீர்ந்த
மன்மாய மாமிகுத்தவர் வஸ்துவா
ஹனங்கொண்டும்
ஆறுபல தான்கண்டும் அமராலையம் பலசெய்துஞ்
சேறுபடு வியன்கழனித் தென்விழிஞ
நகர்கொண்டுங்
கொங்கினின்று தேனூரளவும் குடகொங்க
ருடல்மடிய
வெங்கதிர்வேல் வலங்கொண்டும் வீரதுங்கனைக்
(குசைகொண்டும்

எண்ணிறந்த பிரமதேயமும் எண்ணிறத்த தேவதானமும்
எண்ணிறந்த தடாகங்களும் இருநிலத்தி லியற்றுவித்தும்
நிலமோங்கும் புகழாலுந் நிதிவழங்கு கொடையாலும்
வென்றிப்போர்த் திருவாலும் வேல்வேந்தரில் மேம்பட்ட
கதிரார்கடுஞ் சுடரிலைவேல் கலிப்பகைகண் (டகோன் (கண்டன்)
மதுராபுர பரமேஸ்வரன் மாநிநீமகர கேதநன்மன்
செங்கோல்யாண்டு ஆறாவதின் மேல்நின்ற தொடர்யாண்டில்
பொன்சிறுகா மணிமாடப் புரந்தரனது நகர்போன்ற
களக்குடிநா டதனிற்படுங் களக்குடிவீற் றிருந்தருள
ஆசிநா டதனிற்படும் பிரமதேய மகன் கிடக்கைத்
தேசமலிதிரு மங்கலமிது பண்டுபெரு நலனுட்
படுவதனைப் பாங்கமைந்த குடிகளது காராண்மை
யொடெழுந்த முதுகொம்பர்க் கொடைமுந்து கிடந்ததனைக்
கற்றிற்தோர் திறல்பரவக் களப்பாழரைக் களைகட்ட
மற்றிரடோண் மாக்கடுங்கோன் மான்பேர்த் தளியகோன்
ஒன்றுமொழிந் திரண்டோம்பி ஒருமுத்தீ யுள்பட்டு
நன்றுநான் மறைபெணி ஐய்வேள்வி நலம்படுத்து
அறுதொழிற்கள் மேம்பட்டு மறைஓர்பந் நிருவர்க்குக்
காராண்மை மீயாட்சி உள்ளடங்கக் கண்டமைத்துச்
செப்பேடு செய்து குடுத்தருளினன் தேர்வேந்தநின் (குலமுதல்வன்

மைப்படுகண் மடமகளிர் மணவேள்மனு ஸமானன்
வழுவாத செங்கோனடவி மண்மகட்கொரு கோவாகிக்
கழுதூரில் சித்தி செய்த கடிக்கூட னகர்காவலன்
சோமாசி குறிச்சியிது தொல்லைமேற்படி கிடந்ததனை
ஸோமபான மநோசுத்தராகிய காடகசோம யாஜியார்க்கு
யாகபோக மதுவாக எழிற்செப்பேட் டொடுகுடுத்தனன்
ஆகியஇவ் ஊரிரண்டின் செப்பேடு மறக்கேட்டில்
இழந்துபோ யினவென்றும் ஏதமில்சோ மாசிகுறிச்சிச்
செழுந்தரைய நிலத்துப்படும் நிலத்தைக் கடன்றிருக்கைய
கீழ்வன மணிதருபெரு நான்கெல்லை இட்டுக்கொண்டு
மற்றதனை மதுரகர நல்லூரென்று பேரிட்டுக்
குடிநிலனா கக்கொண்ட நிலமதுவும் அவகூடி
நிலனாகேய்ந் தவிரயிது தொண்டுசோ மாசிகுறிச்சி
மேலைபுரவேற்ப (பெ(று)வதென்றும் சொல்லியவூ ரிரண்டுந்தம்மி
லெல்லைகலந்து கிடக்குமாதலில் ஒன்றாக வுதவுமென்றும்
வாசநாள் மலர்கமழ்பொழில் லாசிநாட்டுள்....மாகிய
கருவமைந்த கனகமாளிகைத் திருமங்கல நகர்த்தோன்றல்
சோமாசி குறிச்சி என்னுங் காமர்வண் பதிகாவலன்
வடிவமைவான கோத்திரத்து பௌதாயன சூத்திரத்துக்

குடியினனாக வெளிப்பட்டு குணகணங்கட்
கிடமாகி
மறைநான்கின் துறைபோகிய மாயானமவி
பட்டற்குச்
சிறுவனாகிய பெருந்தகைஓன் றிசைமுகன் வெளிப்
பட்டனையன்

தர்மம் வத்சலன்.

மாயநாரா யணபட்டர் மஹாபந்தி வயிறுயிர்த்த
சேயான திருத்தகைஓன் ஸ்ரீநாராயணங் கேசவன்
கல்விக்கடல் கரைகண்டு மக்ஷத்தியான
மதமுணர்ந்து
சொல்வித்தகந் தனதாக்கி சத்சீலா சாரனாகி
மீனவன்வீர நாரணற்கு விஸ்வாச குணங்கட்
கானதன்மைய னாதலில்லரு ளறிந்துவிண்
ப்பஞ்செய
மதுரதர தரநாணு எனும் வளம்பதிசோ மாசிகுறிச்சி
அதன்மேலே புரவேற்றி ஆங்கதுந்திரு மங்கலமும்
உடன்கூடப் பிடிசூழ்வித் துலகறியக்
குடுத்தருளினன்
வடங்கூடு முலைமகளிர் மன்மதவேள் மனுசரிதன்.
மற்றிதனுக் காணத்தி வண்டமிழ்க் கோன்திக்கி
பொற்றடம்பூண்மணிமார்பன் பொழிற்புல்லூ
ரெழிற்பூசுரன்
செய்யுந்து புனற்செறுவிற் செங்கழுநீர் மலர்படுகர்
வைகுந்த வளநாடன் வத்ஸகோத்ர சூடாமணி
ஹரிசரண கமலசேகரன் ஆயிரத்தஞ் ஞூற்றுவன்
திருமகிழி ளையனக்கன் திசைநிறைபெரும்
புகழாளன்
அவனிதலம் புழழுநிதி அவனாசூர் குலதிலகன்

தத்தலர்பூம் பொழிறமுவிச் சாலைவிளை
வயல்வளத்தால்
மேதகுபுகழ் பேணவுணாட்டு பெருநலூர் வெள்ளி
(எனப் பெயரிய
திருந்துபதிக் குடித்தலைவன் தென்னவன் திரு
வருள்சூடிய
பெருநலூர் வெள்ளி கிழவனாகிய பெருந்தகைசேந்
தனுகிழவன்
நலமலிசீர் நடுவுநிலை நன்குநா யகனாகவும்
அலர்கமழும் பொனலளித்து நாட்டுக்கக் கிரமாகிய
முகி(ல்) தோய்பொழில் முகக்குறிச்சி முற்கூடிப்
(பினோர்கார்முளைய
அகனிலத்தோர் புகழளத்து நாட்டுக்கோன்
னருந்தமிழின்
பாத்தொகுதெருள் பயன்தருவோன் கொடைபயில்
கற் பகசீலன்
சாத்தம்படர் தென்பெயரிய தக்கோன் மிக்கோங்கு
கார்வயல்சூழ் களாத்திருக்கைப் பேரரண்சூழ்
(பெருங்காக்கூர்த்
தலைவனாகிய குலக்குரிசில் தகுதேய மாணிக்கம்
கலைபயில் கிழவகோனும் கணக்கு (நருமேறயில்)
(கணக்கராகவும்
மாசில்வான் குடித்தோன்றிய ஆசிநாட்டு
நாட்டாரும்
மச்சுறுபர மன்னுவந்த நெச்சுறநாட்டு நாட்டாரும்
உடனாகிநின் றெல்லைகாட்டப் பிடிசூழ்ந்த
(பெருநான் கெல்லை
கீழெல்லை புனல்புவனி புத்தேள்மா ருதம்கனல்
இருசுடர் எஜமானன் ஆகியதிற லக்ஷ்டமூர்த்தி
அமரர்க்கு மறிவரிஒன் வேகவெள் விடைபாரதி

பீஷ்மலோ சனன்மகிழ்ந்து(ங் கோல்)பெய்வான்
(திருவிருப்பூர்
முழுநின்று தென்கிழக்கு நோக்கிப் போயின
(வெள்ளாற்றுக்கும்
ஆயினபெரு நல்லூர்ச் சிறைக்கும் பன்கள்ளி
முரம்புக்கும்
வண்ணத்தார் வளாகத்தின் நன்குயர்பரம்
பீட்டுக்கும்
நலமிகுகள் ளிக்குறிச்சி மேலைக்கள்ளி
முரம்புக்கும்
மேற்குநடை யாட்டிகுளத்தில் சாலநீர் கோளுக்கும்
இக்குளத் தின்தென் கொம்பின் மறுவாக்கும்
பாங்கமைவடு பாறைக்கும் பயந்தருகுடி நடைஏரி
ஓங்கியவன குளத்தகம் பாலலையொழுகிய
வனபெருப்புக்கும்
இப்பெருப்பை,
ஊடறுத்துச் செவ்வடு செழுங்கிழக்கு நோக்கி
வாரிக்கொள்ளிக் கேய்போயின வழியதற்கும்
வயல்மலிந்த
வாரிக்கொள்ளிக் குளத்தினீர் கோளுக்கும்
அடிகுழிக்கும் மேக்கும்
தென்னெல்லை
திருமரு நிலப்பாறைக்கும் செஞ்சாலி விளைகழனி
ஏரியணை.
வடகடைக் கொம்பிற்கும் ஒழுகுகள்ளி
முரம்புக்கும்
நீருடை அரைய்ச்சுனைக்கும் ஊருடையான்
(குழித்தென்கடைக் கொம்புக்கும்
நெடுமதிற்கற் றாழ்வுக்கும் நீர்மாற்றுந் திடலுக்கும்
கடிகமழ்பூந் தார்க்கணத்தார் குழிக்கும்
வடமேலெல்லை

கூற்றன்குழி மீழ்குழியேய் போயினபடு காலுக்கும்
போற்றரு மாருதமாணிக் குளத்துக்கரைப்
பெருப்புக்கும்
நாடறிநங் கையார் குழியின்மீய் குழியேய்
காடதேரிக்கேய் போயின வழிக்கு மேதமில்
லெறிச்சில் வழிக்கும் எழிலமை நெச்சுறநாட்
டோலைகுளத் தெல்லைக்கும் கிழக்குமன்
வடவெல்லை
வளமிக்க மருதலி இளநெச்சுறத் தெல்லைக்கும்
வெள்ளாற்றுக்கும் தெற்கும் இவ்விசைத்த
பெருநான்கெல்லை உண்ணிலமொன்
றொழியாமல்
காராண்மை மீயாட்சி உள்ளடங்கக் கண்டமைத்துச்
சீர்சான்ற திசையனைத்தின் னெல்லைவாய்க்
கன்னாட்டித்
தருமங்களி ரொன்றுபயில் திருமங்கலத்துச்
சபையார்க்கும்
தொல்லைவண் சோமாசி குறிச்சிமல்லன்
(மாமறையோர்க்கும்
பிரமதேய ஸ்திதிவழாவகைய்ப் ப்ருதுவியின்கண்
(ணிலைபெறுத்து
தர்ம்மப ராயணனாகிய தராபதிகொடுத் தருளிப்பின்
ஈண்டியபெரும் புகழேயுங் சாண்டில்ய கோத்திரத்து
எண்ணார்புகழ் ஏகசந்தி காத்யாயன கோத்திரத்து
வரிவண்டு மதுநுகர்பொழிற் சிரீவல்லப மங்கலத்து
செப்பரிய செழுஞ்செல்வத்துப் பமவிரால் மேதக்க
கலைபயில் கணஸ்வாமி பட்டற்கு தற்பெருமா
மதலை
உலவுகீர்த்தி யோகேஸ்வர பட்டற்கு
விசிஷ்டனாகிய
திருவடிச் சோமாசி யென்னுஞ் சீர்மறையோன்
(மகள்பயந்த

திருமருசீர்ச் சிரீமாதவ ஸ்ரீமாதவ சரணேஸ்வரன்
வேதவே தாந்தங்களும் விவிதாசாரமும் தன்னோடுபிற
ரோதிக்கேட்டு தரம்பெய்த நீரைக்காமா சால்யனாகி
பெருந்தகைப் பிரமதேய மிதற்கு பிரஸஸ்தி செய்தோற்கு
திருந்தியநன் பெருவயக்கலும் செழும்புனற் (பருத்திவயக்கலும்
இவ்வயல்களிக் கிணறிரண்டும் அக்கிணற்றால் விளைநிலனும்
மற்றவ்வூர் மாசபைஓர் பெற்றபரிசேய் கொடுத்தபின்
சீரியசெழும் பணி இதற்குச் செப்பேடு வாசகத்தை
ஆரியம்விராயத் தமிழ்தொடத்த மதிஓற்கும் அது எழுதிய
கற்பமைந்த கரதலத்துச் சிற்பமார்த் தாண்டற்கும்
மண்ணெங்கும் நிறைந்தவான் புகழ்கண்ணங் கீரன்வயக்கல்
திருவுலகு நற்சிங்க குளவளால் மருவியசோ
மாசிவயக்கல் லென்னும் வயல்களிற் கிணறுகள்ளொரு
மூன்றும் எக்காலமும் மன்னுக்கிணற்றில் வயலனைத்தும்
இறையிலி யாகவும் சொல்லிய இக்கிணறு
மூன்றின் னிடைக் கிடந்ததொன் னிலமுழுவதும்
இல்லவளா லதுவாகவும் எழின்மிக்க தோட்டமாகவும்
பால்லெருமை பெருவராலுகள் புனற்பதி இதனிற்
கோல்லூரிமையிற்.
செம்பாகமும் மஹாசபை குறிப்பொடு கொடுத்துப்
பகல்செய்யும் பருதிஞாயிறும் இரவுச் செய்யும் பனிமதிஉம்

அகல்ஞாலமும் உளவளவும் செப்பேடு செய்து
(கொடுத்தருளினன்
மணிநீழ்முடி மன்பணிகழல் வசுழாதிப வாசுதேவன்
அணிநீள வுய்த்தஹிதாகனி அசலாசலன் நவர்ஜ்யன்
கொந்தலர்தார் கோச்சடையன் கூடற்கோன்
குருசரிதன்
செந்தமிழ்க்கோன் ஸ்ரீநிகேதனன் ஸ்ரீபராந்தக
மகராஜன்
தேர்மிகுமாக் கடற்றானைத் தென்னவர்கோன்
திருவருளாற்
சீர்மிகுசெப் பேட்டுக்குச் செந்தமிழ்ப்பாத்
(தொடைசெய்தோன்
கிர்தஉகமெனும் ஊழிக்கண் அவிர்சடை முடி
(அரன்வேண்ட
நற்பரசு நிர்ம்மித்தவ னளிர்சடைமே
லலங்கல்பெற்ற
மாமுனிவன் வழிவந்தோன் பாமருபண் டிதராசன்
பொன்வரன்றி மணிவரன்றி அகில்வரன்றிக்
(கரைபொருபுனற்
றென்வைய்கை வளநாடன் செழுங்குண்டூர்
(நகர்த்தோன்றல்
பாண்டித்தமி ழாபரண னென்னும்பல
(சிறப்புப்பெயரெய்திய
பாண்டிமா ராயப்பெருங் கொல்லனாகிய
சிரீவல்லவன்.
தென்னவர்தந் திறலாணைச் சிலைஒடுபுலி
கயலிணைமன்
பொன்னிமையச் சிமையத்து விறற்கருவி
இற்றைக்குந்
தொழில் செய்து வந்தவர் பின் னோன்செயல்பல
(பயின்றோர் முன்னோன்

திருமலிசாசன மிதற்குச் செழுந்தமிழ்பா
டினோனற்றை
நிருபசேகரப் பெருங்கொல்லன் நீள்புகழ்
நக்கனெழுத்து.

குறிப்பு:- அடி 48. களப்பாழர் என்பது களப்பாளர் என்பதன் திரிபு போலும். களப்பாழர் அல்லது களப்பாளர் என்பவர் களப்பரர் (களபரர்) என்னும் அரசரைக் குறிக்கிறது. கடைச்சங்க காலத்துக்குப் பின்னர், களபரர் என்னும் அரசர் வடக்கிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து சேர, சோழ, பாண்டியர்களை வென்று அரசாட்சியைக் கைக்கொண்டனர். சிலகாலத்துக்குப் பிறகு, கடுங்கோன் என்னும் பாண்டிய அரசன் வெளிப்பட்டுக் களபர அரசனை வென்று மீண்டும் பாண்டியர் ஆட்சியை நிறுவினான். இதைத்தான், ''கடிநாறு கவினலங்கற் களப்பாழர் குலங் களைந்தும்'' என்று இச் சாசன அடி கூறுகிறது. இச்செய்தியையே 95, 96-ஆம் வரிகளில், ''களப் பாழரைக் களைகட்ட மல்திரள்தோள் மாக்கடுங்கோன்'' என்று மீண்டும் இச் சாசனம் கூறுகிறது.

அடி 51. இதில் கூறப்படுகிற காடவன் என்பவன் பல்லவ அரசன் ஆவன்; இவன் இரண்டாம் நந்திவர்மனான பல்லவ மல்லன். இவனை வென்ற பாண்டியன் வரகுண மகாராசன் முதலாம் வரகுணன்.)

இச் சாசனச் செய்யுளைப் பாடியவன் பண்டிதராசன், பாண்டித் தமிழாபரணன், பாண்டிமாராயப் பெருங்கொல்லன் என்னும் சிறப்புப் பெயர்களையுடைய சிரீவல்லபன் என்றும், அவன் வைகையாற்றங் கரையில் இருந்த குண்டூர் நகரத்தில் இருந்தவன் என்றும் 229 - 233 - ஆம் அடிகள் தெரிவிக்கின்றன.

இச் செப்பேட்டைச் செதுக்கியவன், நக்கன் என்னும் இயற் பெயரையுடைய நிருபசேகரப் பெருங்கொல்லன் என்னும் சிறப்புப் பெயரையுடையவன் என்று 238-ஆம் வரியினால் அறிகிறோம்.

124, 126, 161, 205, 234- ஆம் வரிகளில் பெருந்தகை ஓன், திருத்தகை ஓன், அறிவறிஓன், மாசபைஓர், சிலைஓடு என்று எழுதப் பட்டிருத்தல் காண்க. இது சாசனம் எழுதியவரின் பிழைபோலும்.

***

O31,1A:8
906

BIBLIOGRAPHY

2B
1-105

Epigraphia Carnatica Vol. X
Epigraphia Indica Vols. V, XI, XII, XVIII, XXIII
Inscriptions (Texts) of Pudukkottai State (I.P.S)
Journal of South Indian Association Vol II.
South Indian Inscriptions (S.I.I.) Vols. I, IV, VI, VII, VIII, XII.
Tamil and Sanskrit inscriptions.
Tiruppathi Devasthanam Inscriptions (T.D.I.) Vol. I
Travancore Archaeological Series (T.A.S.) Vols. I, VI
செந்தமிழ், தொகுதி: 4, 5, 6, 14, 41.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227313
சென்னை-600 008
...லகம்



சங்ககால வரலாற்று ஆய்வுகள்

2

மயிலை சீனி. வேங்கடசாமி